

திருமந்திரக் கதைகள் - 7
கே.வி.குணசேகரம்

# என்னுரை

முதல் ஆறு தந்திரங்களும் வெளியாகின. இப்போது ஏழாவது தந்திரம் வெளியாகிறது. உடலைப் பற்றியும், உலகைப் பற்றியும், மறு உலகைப்பற்றியும், வாழும் முறைகளைப் பற்றியும் கூறும் நூல் திரு மந்திரம். மேற்கூறியவற்றைப் பகுதி பகுதியாகக் கூறி வருகிறது. சுமார் ஆறாயிரம் வருடங்கள் தத்துவமாக இருந்த திருமந்திரப் பாடல்களைக் கதையாக்கியுள்ளேன். பாடலைப்புரிதல் வேண்டும். தத்துவங்களை உணரல் வேண்டும். அவற்றிற்குப் பொருத்தமான கதைகளை எழுதல் வேண்டும். இதற்கு அவ்வப் போது சிவன் உதவினார். சிவனது உதவியில்லாவிட்டால் என்னால் தத்துவங்களைப் புரிந்து கொள்ள முடியாது. பொருத்தமான கதைகளை எழுத முடியாது. தடுமாறும் போதும், இயலாமையின் போதும் என்னுள் ஒரு சக்தியை உருவாக்கி எழுதப்பண்ணியது சிவன் தான். நாம் எவ்வளவு காலமாக மூடக்கொள்கையில் இருக்கிறோம் என்பதைத் திருமந்திரத்தைப் படித்த பின்பு தான் உணர்ந்து கொண்டேன். அதனால் வாசகர்களாகிய நீங்களும் இதைப்படித்து அதன்படி நடவுங்கள். இதைக் கணனி மயப்படுத்தி தந்த குமார் மல்ரி சென்ரர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

**அன்புடன்**

**கே. வி. குணசேகரம்.**

# ஏழாம் தந்திரம்

## (காலோத்தராகமம்)

## 1.ஆறாதாரம்

1676. **நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறுங்**
**கோலிமேல் நின்ற குறிகள் பதினாறும்**
**மூலங்கண் டாங்கே முடிந்து முதல்இரண்டுங்**
**கூலங்கண் டானடி காணலு மாமே.**

“ சிவனடியார்களே, அகநிலைகள் நான்கு. அவை நான்கு இதழ்களையுடைய மூலாதாரம். ஆறு இதழ்கள் உள்ள கொப்பூழ், பத்து இதழ்கள் உள்ள மேல் வயிறு, பன்னிரண்டு இதழ்கள் உள்ள நெஞ்சு, பதினாறு இதழ்களை உடைய மிடறு, இரண்டு இதழ்களையுடைய புருவநடு. ஆகிய ஆறு இடங்களும் ஆறு ஆதாரங்கள் எனப்படும். இவற்றுக்குரிய எழுத்துக்கள் ஆராய்ந்து அமைக்கப்பட்டவை. இந்நிலைக்களங்களில் வழிபடத்தக்க காலங்களைத் தோற்றுவித்துத் தொழிற்படுத்தும் சிவபெருமானின் திருவடியைக் காணலாம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1677. ஈராறு நாதத்தில் ஈரெட்டாம் அந்தத்தின்**
**மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தி**
**போதா லயத்த விகாரந் தனிபோத**
**மேதாதி யாதார மீதான உண்மையே.**

“ சிவனடியார்களே, ஓசைமெய்யாகிய நாததத்துவத்தின் கண் பன்னிரு கலைகளோடு கூடியது சூரிய மண்டலம். அது போலப் பதினாறு கலைகளோடு கூடியது சந்திரமண்டலம். நிலமுதல் நாதம் ஈறாகச் சொல்லப்படும் முப்பத்தாறு மெய்களுக்கும் மேலாகத் திருவருளம்மை வீற்றிருந்து அருள்வாள். தனிப் பெரும் கடவுளாகிய சிவன் அதற்கு மேல் காணப்படுவான். எல்லாவற்றிற்கும் காரணமானவன் சிவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1678. மேலென்றுங் கீழென் றிரண்டறக் காணுங்கால்**
**தானென்றும் நானென்றுந் தன்மைகள் ஓராறும்**
**பாரெங்கு மாகிப் பரந்த பராபரங்**
**காரொன்று கற்பக மாகிநின் றானே.**

“ சிவனடியார்களே, மேலானது கீழானது என்ற பாகுபாட்டை நீக்கி ஆராயுமிடத்துத் தான், யான், நீ என்றும் மூவிடப் பெயர்களும் அவன், அவள், அது என்றும் திணை பாற்பெயர்களும் கூடிப்பெயர்த்தன்மை ஆறாகும். நிலவுலகெங்கும் பரந்து நிற்கும் முழு முதற் பரம்பொருளான சிவன் வேண்டாமைக் கொடுத்தலில் வேண்டாமல் கொடுத்தலிற்காகும், வேண்டிக் கொடுத்தலில் கற்பக முகமாக நின்று அருளுகிறான். ”

“ சிவனடியார்களே, ரவீந்திரன் சொல்வான்,“சிவன் அடியார்கள் வேண்டும் என்று கேட்கும் பொருட்களையும் கொடுப்பான். அடியார்க்கு வேண்டப்படும் பொருட்களைத் தானாக உணர்ந்தும் கொடுப்பான். நான் எதையும் கேட்டுப் பெறுவதில்லை. நான் நிர்வாகச் சேவைப் பரீட்சைக்குச் சென்ற போது சிவனை வணங்கிவிட்டுச் சென்றேன். நான் அவருக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. ஒரு தாய்க்குத் தனது கைக் குழந்தைக்கு என்ன தேவை என்பது தெரியும். பேச முடியாத அக்குழந்தை வாய்விட்டுக் கேட்காது. அதன் தேவைகளைத் தாய் உணர்வாள். நான் சிவனது கைக்குழந்தை என்றே நினைப்பேன். அதனால் எனக்கு எது தேவையென்று உணர்ந்து சிவன் தந்தருள்வார். ஆனால் கதிரேசன் அப்படியானவரல்ல. அவர் தனக்காக எதுவும் கேட்கமாட்டார். சிவன் தேவையறிந்து கொடுத்தருள்வார். ஆனால் மக்களுக்காக அவர் பலவற்றைக் கேட்பார். எனக்கு நிர்வாக சேவை அதிகாரப் பதவியைக் கொடு என்று வேண்டியவர். ஏழையான கெங்காதரனின் மகன் இருதய நோய் காரணமாக அவதிப்பட்ட போது அவனைச் சுகப்படுத்தும் படி வேண்டியவர். வேண்டாது கொடுப்பதில் மழையைப் போன்ற சிவன் வேண்டிக் கேட்கும் போது கொடுப்பதில் கற்பகமான காமதேறுவைப் போன்றவனாக இருக்கிறான் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1679. மேதாதி யாலே விடாதோ மெனத்தூண்டி**
**ஆதார சோதனை அத்துவ சோதனை**
**தாதார மாகவே தானெழச் சாதித்தால்**
**ஆதாரஞ் செய்போக மாவது காயமே.**

“ சிவனடியார்களே, பதினாறு கலைப் பிரசாதத்தாலே இடையறாது ஓமெனத் தூண்டி ஆறு நிலைக் களங்களையும் ஆறு வழிகளையும் சிவகுருவின் திருவருளின் துணையால் முழுமையாகத் திருந்தினால் உடம்பின் கண் வழிபடுவதற்குரிய தன்மை உண்டாகும். மூலாதாரம் முதல் வழிபாடு செய்தால் வழிபடுபவர்களுக்கு வரும் பயன் சிவனை அடைதலாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1680. ஆறந்த முங்கூடி யாகும் உடம்பினிற்**
**கூறிய வாதார மற்றுங் குறிக்கொண்மின்**
**ஆறிய அக்கரம் ஐம்பதின் மேலாக**
**ஊறிய வாதாரத் தோரெழுத் தாமே.**

‘‘ சிவனடியார்களே, சொல்லும் பொருளுமாகிய வழிகள் ஆறு. அவை எழுத்து மொழி மறை எனவும் உலகு தத்துவம் கலை எனவும் கூறப்படும். இவற்றால் இயங்குவது உடம்பு. வழிபடும் போது மூலமுதல் ஆறு நிலைக்களங்களிலும் வழிபடும் முறைகளைப் பின்பற்றி வழிபடுங்கள். அமைந்த எழுத்துக்கள் ஐம்பதின் மேல் அமுதூறும் மூலாதாரத்து எழுத்து ஒன்று உள்ளது. அது ஓ மொழியாகும். ’’

‘‘ சிவனடியார்களே, ரவீந்திரனை ஆச்சிரம மாணவர்களுக்கு அடிக்கடி பேசுமாறு அழைப்போம். அவர் கல்வியில் மட்டுமல்ல சமய தத்துவங்களிலும் மேதாவி. அன்று பேசும் போது சொன்னார்,‘‘அன்பான மாணவர்களே வழிபாடென்பது பல முறைகளைக் கொண்டது. ஒவ்வொரு வரும் ஒவ்வொரு வழியைப் பின்பற்றுகின்றனர். விபரம் எதுவும் தெரியாத ஓர் ஊருக்குச் செல்லு முன் அவ்வூருக்குச் சென்று வந்த ஒருவரை விசாரித்து விட்டுச் சென்றால் பிரச்சினைகள் இன்றி உடனே அவ்வூரைச் சென்று அடையலாம். செல்லும் போது விசாரித்து விசாரித்துச் செல்வோம் என்று புறப்பட்டால் வழிப்போக்கர்களுக்கு அவ்வூரைத் தெரியாதிருக்கும். சிலர் நல்ல பாதையைக் காண்பிக்க இது பெருந்துன்பத்தைக் கொடுக்கும். நீங்கள் மாணவர்கள். உங்களுக்குக் கென்று குரு இருக்கிறார். அவரிடம் வழிபடும் முறைகளைக் கேட்டறிந்து விட்டு வழிபடுவீர்களானால் ஊருக்குச் செல்லு முன் பாதையை விசாரித்து விட்டுச் செல்பவனைப் போல இலகுவாகச் சிவனைக் காணலாம் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1681. ஆகும் உடம்பும் அழிக்கின்ற அவ்வுடல்**
**போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்**
**ஆகிய அக்கரம் ஐம்பது தத்துவம்**
**ஆகும் உடம்புக்கும் ஆறந்த மாமே.**

‘‘ சிவனடியார்களே, கண்ணுக்குத் தோன்றுகின்ற இந்த அழகான பருவுடம்பு அழியப்போகின்ற உடம்பாகும். தோன்றாத நுண்ணுடல் உயிருடன் சேர்ந்து சிவனை அடையும் உடம்பாகும். இவற்றுக்குரிய எழுத்துக்கள் ஐம்பதாகும். தத்துவமாகிய உடம்புக்கு வழிகள் ஆறும் உறுப்புக்களாகும். அடியார்களே, எமது கண்ணுக்குத் தோன்றும் உடம்பு அழகானது. பலமானது. உறுதியானது என்று நினைக்கிறோம். அது வருடங்கள் கழியக் கழிய பலமிழந்து, அழகிழந்து, உறுதியிழந்து தட்டுத் தடுமாறித் துன்பப்பட்டு அழிந்து விடுகிறது. அது தூயசரீரம். எமது உயிருக்குள் உயிராக இருக்கும் சிவபெருமான் தங்கியிருக்கும் உடம்பு சூக்குமசரீரம். அதைத் தான் நாம் பேணிக்காத்தல் வேண்டும். அதற்கான வழிகள் அறுவகைப்படும். அவற்றை முறையாகப் பேணி வந்தால் சிவன் குடியிருக்கும் சூக்கும உடம்புடன் உயிர் சிவனது திருவடியை அடையும். அதன்

பின் அதற்கு வேறு உடம்புகள் கிடைக்காது. அதனால் உயிர் சூக்கும உடம்புடன் திருவடியில் இருக்கும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1682. ஆயு மலரின் அணிமலர் மேலது**
**வாய இதழும் பதினாறும் அங்குள**
**தூய அறிவு சிவானந்த மாகிப்போய்**
**மேய அறிவாய் விளைந்தது தானே.**

'' சிவனடியார்களே, மூலாதாரங்களில் வைத்து ஆராய்வதற்குரிய ஆதார மலர்களை விட மேலானது பதினாறு இதழ்களையுடைய மிடறில் இருக்கும் மலராகும். அங்கு வழிபடும் தூய அறிவு சிவப்பேரின்பமாய்த் திகழும். அவ்வறிவு சிவ அறிவினில் அடங்கிச் சிவ அறிவாக விளங்கும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 1. அண்டலிங்கம்
## (உலக சிவம்)

**1683. இலிங்கம தாவ தியாரும் அறியார்**
**இலிங்கம தாவ தெண்டிசை யெல்லாம்**
**இலிங்கம தாவ தென்ணெண் கலையும்**
**இலிங்கம தாவ தாக எடுத்த துலகே.**

'' சிவனடியார்களே, ஒரு முறை நாம் அயலூரில் உள்ள சிவன் கோவிலைத் தரிசிக்கச் சென்றோம். அன்று பெரு மழை பெய்தது. சூறாவளியும் சேர்ந்து கொண்டது. அதனால் நாம் வழியில் உள்ள ஒரு பிரமுகரது வீட்டுக்குச் சென்றோம். நள்ளிரவாகியதால் கடும்பசி எல்லோர்க்கும். வீட்டுக்காரன் வெளியே வந்தான். அவனுக்கு எம்மைத் தெரிந்திருந்தது. வாருங்கள், வாருங்கள் என உள்ளே அழைத்துச் சென்றான். உடனடியாக உணவு தயாரிக்கும் படி வேலையாட்களுக்குச் சொன்னான். பின்பு சொன்னான்,''நான் உங்களது ஆச்சிரமத்திற்கு ஒரு முறை வந்துள்ளேன். உங்களையும் அடியவர் கதிரேசனையும் எனக்குத் தெரியும். நீங்கள் எனது வீட்டுக்கு வந்தது சிவனருளால். அதனால் இரவு இங்கு தங்கி இளைப்பாறிச் செல்லுங்கள் என்றான். நாம் குளித்து விட்டு வந்தோம். நாம் எங்கு சென்றாலும் சிவலிங்கத்தைக் கொண்டு செல்வது வழக்கம். பூசைப்பொருட்களையும் கொண்டு செல்வோம். கதிரேசன் சிவலிங்கத்தை வைத்துப் பூசை செய்தார். அப்போது அந்த வீட்டுக் காரணான சந்திரலிங்கம் என்பவர் வந்து சொன்னார்,''சுவாமி தாங்கள் அனைவரும் தென்திசையான யமனின் திசையைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சிவபூசை தொடங்கிய பின் மாற்றம் செய்தல் கூடாது. என்னைக் கேட்டிருந்தால்

திசையைச் சொல்லியிருப்பேன்'' என்றார். பூசை முடிந்த பின்பு சந்திரலிங்கத்தை அழைத்துக் கதிரேசன் சொன்னார்,''அடியவரே, அம்மை அப்பரின் அடையாளமான சிவலிங்கம் எல்லாத் திசைகளையும், எல்லா உலகையும் அடக்கியதாகும். அதற்காகத் தான் சிவன் சிவலிங்க உருவில் இருக்கிறார். இவ்வுண்மையை நுண்ணுணர்வினர் தான் அறிவார்கள். ஏனையோர் அறியமாட்டார்கள். அம்மை ஆற்றலாகவும் அப்பன் பொருளாகவும் திகழ்பவர்கள். அதனால் எப்பொருளை எடுத்துக் கொண்டாலும் ஆற்றலும், ஆற்றலின் நிலைக்களமுமாக ஒவ்வொன்றும் இரு வகைப்படும். இது கதிரும் கதிரவனும் போன்ற நிலையாகும். எங்கும் நிறைந்து நீக்கமற நிற்கின்ற சிவனும் சக்தியும் எல்லாப் பொருட்களிலும் கலந்து நின்று இயக்குவதால் அவர்கள் எல்லாத் திசைகளையும் பார்க்கின்றனர். அதனால் எங்கு நின்றும் சிவனையும் சக்தியையும் வணங்கலாம். சக்தி சத்தன் என்பது ஆற்றல் ஆற்றலி என்றும் கூறப்படுகிறது. அதனால் கவலை கொள்ளத் தேவையில்லை என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1684. உலகில் எடுத்தது சத்தி முதலா**
**உலகில் எடுத்தது சத்தி வடிவாய்**
**உலகில் எடுத்தது சத்தி குணமாய்**
**உலகம் எடுத்த சதாசிவன் தானே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சந்தரலிங்கத்திற்குச் சொன்னார்,''அடியவரே, திசைகள் பத்திலும் வாழும் மக்களை ஆட்கொள்வதற்காகவே சிவனும் திருவருளம்மையும் வட்ட வடிவமான லிங்க வடிவில் இருக்கின்றனர். அதனால் அவர்கள் எல்லோரையும் பார்க்கலாம். அது போல எல்லோரும் எத்திசையில் இருந்தும் அவர்களைப் பார்க்கலாம். உலகம் வட்ட வடிவானது. அது போலச் சிவலிங்கமும் வட்ட வடிவமானது. சதாசிவனாகிய சிவன் சக்தியை வினை முதற் காரணமாகக் கொண்டு உலகினைப் படைக்கின்றான். அதனால் சக்தியே உலகின் காரணம், உலகின் வடிவம், உலகின் குணம் எனப் போற்றிக் கூறுவர் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1685. போகமும் முத்தியும் புத்தியுஞ் சித்தியும்**
**ஆகமும் ஆறாறு தத்துவத் தப்பாலாம்**
**ஏகமும் நல்கி யிருக்குஞ் சதாசிவம்**
**ஆகம வத்துவா வாறுஞ் சிவமே.**

'' சிவனடியார்களே, அன்பியல் வாழ்க்கையில் வரும் போகங்களும், அருளியல் வாழ்வால் வரும் முத்தியும், அவற்றின் பயனாகிய புத்தியும், சித்தியும், சித்திக்குரிய வழிவகைகளைக் கூறும் செந்தமிழ் ஆகமங்களும், அவற்றில் காணப்படும் அருஞ்சைவத்

தத்துவம் முப்பத்தாறும், அதற்கு அப்பால் இருக்கும் ஒப்பில்லாத முழுமுதற் கடவுளான சதாசிவமும், ஆகம நூல்களில் காணப்படும் அத்துலாக்களாகிய வழிகள் ஆறும் சிவபெருமானே. அவரின் ஆணையால் தான் யாவும் நடைபெறுகின்றனர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1686. ஏத்தினர் எண்ணிலி தேவரெம் ஈசனை**
**வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல் வள்ளலென்று**
**ஆர்த்தனர் அண்டங் கடந்தப் புறநின்று**
**காத்தனன் என்னுங் கருத்தறி யாரே.**

“ சிவனடியார்களே, சிவனின் பெருமைகளைக் கூறி முடிக்க முடியாது. அப்படியான பெருமைகளை உடைய சிவனைத் தேவர்கள் எல்லோரும் போற்றிப் புகழ்கின்றனர். காற்றும் ஏனைய நான்கு பூதங்களும் திருவுருவில் வைத்து வழிபடுகின்றனர். அத்தேவர்கள் மேலான அருவுருவத் திருமேனியையும், அருவத் திருமேனியையும் அறியமாட்டார்கள். சிவன் இம் மூவகைத் திருமேனிகளையும் கடந்து இயற்கை உண்மை உணர்வுத் திருமேனியை தேவர்கள் எவ்வாறு உணருவர்.”

“ சிவனடியார்களே, சிவனை உணர விரும்புவோர் பூமிக்கு வந்தால் தான் உணர முடியும். அதனால் தான் இந்திரன் முதலிய தேவர்களும், அம்மையோடு சேர்ந்த பெண் தெய்வங்களும் பூமிக்கு வந்து சிவனை நோக்கித் தவம் செய்கின்றனர். அதனால் பெறுதற்கரிய பெரும்பேற்றைப் பெற்ற மனிதர்கள் இதை உணர்ந்து சிவனை அடைதல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1687. ஒண்சுட ரோன்அயன் மால்பிர சாபதி**
**ஓண்சுட ரான இரவியோ டிந்திரன்**
**கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்**
**தண்சுட ராயெங்கும் தற்பர மாமே.**

“ சிவனடியார்களே, அக்கினியையும், அயன், மால், அரன், அரி, பிரசாபதி, சூரியன், சந்திரன், இந்திரன் முதலாகிய வானவர்களின் உள்நின்று அவர்களை இயக்குபவன் சிவபெருமான். அவனது சுடர் ஒளி உலகெங்கும் பரந்து நின்று குளிர்மையை அளிக்கின்றது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1688. தாபரத் துண்ணின் றருளவல் லான்சிவன்**
**மாபரத் துண்மை வழிபடு வாரில்லை**
**மாபரத் துண்மை வழிபடு வாளர்க்கும்**
**பூவகத் துள்நின்ற பொற்கொடி யாகுமே.**

“ சிவனடியார்களே, அறிவில்லாத பொருளான மண்ணிலிருந்தும் வழிபடுவோருக்குச் சிவபெருமான் அருள்புரிவான். அவனே முழுமுதற் கடவுளாவன். அத்தகைய மெய்ப்பொருளை வழிபடுவாரில்லை. அந்த உண்மையை உணர்ந்து வழிபடுவோருக்கு உச்சியின் மேல் காணப்படும் ஆயிரம் இதழ்த் தாமரையின் கண் வீற்றிருந்தருளும் திருவருளம்மையின் பேரருள் கிடைக்கும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1689. தூய விமானமுந் தூலம தாகுமால்**
**ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்**
**பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்**
**ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே.**

“ சிவனடியார்களே, கருவறையின் மேல் தோன்றுவது உச்சியாகிய விமானம். அது தூய்மையும் பருமையும் வாய்ந்த சிவக்குறியாகும். அவ் விமானத்தின் கீழ் இருக்கும் கருவறையில் அமர்ந்திருக்கும் சதாசிவன் நுண்ணிய சிவக்குறியாவன். பரந்த பலிபீடம், ஆனேறு இவையும் சிவலிங்கமாகும். மெய்யடியார்க்கு இவ்வுண்மை புலப்படும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1690. முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமுங்**
**கொத்துமக் கொம்பு சிலைநீறு கோமளம்**
**அத்தன்றன் னாகம மன்ன மரிசியாம்**
**உய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே.**

“ சிவனடியார்களே, முத்து, மாணிக்கம், பவழம், திருஉருச் செதுக்கிய மரக்கொம்பு,பளிங்கு முதலிய வெண்கற்கள், திருவெண்ணீறு, மரகதம் சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டு செந்தமிழால் வரையப்பட்ட திருமந்திரம் போன்ற மெய்ப்பொருளை விளக்கும் நூல்கள், திருவமுது, அமுது செய்ய உதவும் அரிசி ஆகிய பத்துப் பொருட்களும் சிவலிங்க வழிபாட்டிற்குரிய இலிங்கம் அமைக்கும் துணைப்பொருட்களாகும். இவற்றால் இலிங்கம் செய்து வழிபடலாம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1691. துன்றுந் தயிர்நெய்பால் துய்ய மெழுகுடன்**
**கன்றிய செம்பு கனலிர தஞ்சலம்**
**வன்திறல் செங்கல் வடிவுடை வில்லம்பொன்**
**தென்றியங் கொன்றை தெளிசிவ லிங்கமே.**

“ சிவனடியார்களே, நன்கு இறுகிய தயிர், தூய நெய், பால், மெழுகுவதற்குப் பயன்படும் பசுவின் சாணம், துரிசில்லாத செம்பு, தழல், பாதரசம், சங்குகள், சுடப்பட்ட செங்கல், பசுமையான வில்வம், பொன் ஆகிய பதினொரு பொருட்களுள் ஒன்றைச் சிவலிங்கமாக்கி வழிபடலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1692. அதுவுணர்ந் தோனொரு தன்மையை நாடி**
**எதுவுண ராவகை நின்றனன் ஈசன்**
**புதுவுணர் வான புவனங்கள் எட்டும்**
**இதுவுணர்ந் தென்னுடல் கோயில்கொண் டானே.**

“ சிவனடியார்களே, திருவருளின் துணையால் சிவனை உணர்ந்தவனின் ஆருயிர் சிவனுடன் புணர்ப்பினால் ஒரு தன்மையாக நிற்கும். அந்நிலைமையினை நாடி, எவ்வகையாலும் உணர முடியாதபடி நின்றவன் சிவன் என்று தெளிவடைவன். தெளிந்தவுடன் சிவனது முற்றுணர்வாகிய திருவடியுணர்வும் யான் எனது என்னும் செருக்காகிய தன்முனைப்பும் அகலும். சிவபெருமான் விளங்கும் எட்டு இடங்களையும் எண்பேருலகமாகக் கொள்ளப்படும். அவை பூதங்கள் ஐந்து, சூரியன், சந்திரன், உயிர். இதனால் தான் சிவபெருமான் அடியேனின் உடம்பினையும் கோவிலாகக் கொண்டு அங்கு அமர்ந்திருக்கிறான் என்று சொல்லும் கதிரேசன் பறைமேள மடிக்கும் வரதனின் உள்ளத்தில் சிவன் விரும்பிக் கோவில் கொண்டிருப்பதை அறிந்து தான் அவரை வணங்கினார். கூடச் சென்ற நாமும் வணங்கினோம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1693. அகலிட மாயறி யாமல் அடங்கும்**
**உகலிட மாய்நின்ற வூனத னுள்ளே**
**பகலிட மாமுனம் பாவ வினாசன்**
**புகலிட மாய்நின்ற புண்ணியன் றானே.**

“ சிவனடியார்களே, சிவனை உணர்ந்தவனின் ஆருயிர் சிவனோடு புணர்ப்பில் ஒரு தன்மையாக நிற்பதோடு அனைத்திலும் கலந்து அதற்கு அப்பாலுமாய் மலப்பிணி உள்ளவர்களால் அறிய முடியாதவனாகவும், அனைத்தும் ஒடுங்கும் ஒடுக்க நிலையமாகவும் நிற்பவன். உயிர்கள் அனைத்தினதும் உடம்பில் சூரியனை இடமாகக் கொண்டு எழுந்தருளி எஞ்சுவினையான துஞ்சித வினையை எரிக்கப்பட்ட வித்துப் போல அழித்து விடுபவன். அனைத்துலகங்களுக்கும், அனைத்து உயிர்களுக்கும் புகலிடமாக உள்ள புண்ணியவான் சிவன். ”

‘‘ சிவனடியார்களே, கதிரேசனும் சிவனடியார்களும் கோவிலை விட்டு வெளியே வந்த போது வரதன் அடிகாயங்களுடன் அங்கு வந்ததைக் கண்டு கதிரேசன் பதறி போனார். அவ்வூர்ச் சிவன் கோவில் அடியார்கள் தன்னைத் தாக்கி விட்டதாக வரதன் கூறியதைக் கேட்டு அவர் அங்கு நின்ற அடியவர்களுக்குச் சொன்னார், ‘‘சிவன் எல்லா உயிர்களின் இதயத்திலும் இருக்கிறார். ஆனால் மெய்யடியார்களின் உள்ளத்தில் கோவில் கொண்டு விருப்புடன் இருக்கிறார். மெய்யடியவர்கள் எப்போதும் சிவனது திருவடி நிழலில் இருப்பதையே விரும்புவர். அவர் மெய்யடியார்களின் எஞ்சு வினையை எரிப்பதற்காகவே இருக்கிறார். சிவன் அனைத்துயிர்களுக்கும் புகலிடமானவன். அதனால் அவன் தகுதி பார்ப்பதில்லை. இதை உணராதவர்கள் தான் எஞ்சு வினையை அதிகரிப்பதற்கான செயல்களில் ஈடுபடுகின்றனர். வரதா, கவலைப்படாதே. இதுவும் ஒரு வகையில் வினையின் கழிவு என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1694. போது புனைகழல் பூமிய தாவது**
**மாது புனைமுடி வானக மாவது**
**நீதியுள் ஈசன் உடல்விசும் பாய்நிற்கும்**
**ஆதி யுறநின்ற தப்பரி சாமே.**

‘‘ சிவனடியார்களே, மெய்யடியார்கள் பாடிப்பணிந்து திருமுறைகளை ஓதி வழிபடும் நறுமலர்கள் நிறைந்துள்ள திருவடிகள் சலமகள் வீற்றிருக்கும் சிவனது திருமுடியாகும். அத்திருமுடி வானகத்திற்கு அப்பால் உள்ளது. அதனால் தான் சிவனது திருமுடிவானமாகத் திகழ்கிறது. ஆதியாகிய சிவபெருமான் உலகத்தை உருவமாகக் கொண்ட திருக்கோலம் இதுவாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1695. தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாந்**
**திரைபொரு நீரது மஞ்சன சாலை**
**வரைதவழ் மஞ்சுநீர் வானுடு மாலை**
**கரையற்ற நந்தி கலையுந் திக்காமே.**

‘‘ சிவனடியார்களே, பூமியின் கண் அமைந்த சக்தியின் மேல் விண்ணாக இருப்பது சிவலிங்கமாகும். பொங்கும் அலைகளை உடைய கடல் சிவபெருமான் திருமுழுக்குச் செய்யும் திருமஞ்சன சாலையாகும். அவர் முழுகும் தீர்த்த நீர்மலையில் தவழும் மேகங்களாகும். திருமேனியில் சூடும் மாலை விண்ணில் காணப்படும் எண்ணிக்கையில்லாத விண்மீன்களாகும். அவரது ஆடை எட்டுப் புலன்களாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 3. பிண்டலிங்கம்
## (உடற்சிவம்)

**1696. மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுட ராக்கை வடிவு சிதம்பரம்**
**மானுட ராக்கை வடிவு சதாசிவம்**
**மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே.**

“ சிவனடியார்களே, முழுமுதற் கடவுளாகிய சிவன் மக்களோடு மக்களாகக் கலந்திருக்கிறான். இதை மெய்யடியார்களைத் தவிர்ந்த வேறு எவரும் அறிந்ததில்லை. மக்களது சரீரத்தின் அமைப்புத் தான் சிவலிங்கம். மக்களது வடிவம் திருச்சிற்றம்பலமாகும். மக்களின் வடிவானவன் சதாசிவன். மக்களின் நலனுக்காகவே அம்பலவானர் திருநடனம் புரிகிறார். சிவபெருமான் மக்களின் உடலை நடமாடும் திருக்கோவிலாகக் கொண்டு வடிவாய் அரங்காய் வகுப்பாய் வாழ்வாய்ப் பயணித்தருளுகின்றான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1697. உலந்திலர் பின்னும் உளரென நிற்பர்**
**நிலந்தரு நீர்தெளி யூனவை செய்யப்**
**புலந்தரு பூதங்கள் ஐந்தும்ஒன் றாக**
**வலந்தரு தேவரை வந்திசெய் யீரே.**

“ சிவனடியார்களே, இறந்தவர் இறந்துவிட்டார் என்று எண்ணுதல் கூடாது. அவர் வினைக்கீடாக மீண்டும் பிறக்கிறார். அவரின் உடம்பு தோற்றமுறையில் நீரிலிருந்து நிலம் தோன்றும் என்பதைக் குறிக்கவே ஐம்பூதங்களின் சேர்க்கையால் உடம்பு ஆகியது என்பது விளங்கும். இப்பிறப்பினை வெல்ல வேண்டுமாயின் சிவபெருமானின் திருவடியை வணங்குதல் வேண்டும். ”

“ சிவனடியார்களே, சிவபெருமானால் படைக்கப்பட்ட உயிர்கள் இரண்டு நிலைக்குட்படுகின்றன. ஒன்று திரும்பத் திரும்பப் பிறக்கும் நிலை. அடுத்தது ஒரு போதும் பிறவாத நிலை. விதைகளை எடுத்துப் பாருங்கள். அவை அழியும் போது இன்னொன்றை உற்பத்தியாக்கி விட்டே அழிகின்றன. அது போன்றது தான் பிறப்பு. வினைகள் முற்றுப் பெறாவிட்டால் பிறப்பேற்படும். எமது ஆச்சிரமத்திற்கு வரும் சிவஞானம் என்ற அடியவருக்கு பல நோய்கள். கண் சரியாகத் தெரியாது. அவர் சொன்னார்,“சுவாமி விருத்தெரிந்த நாளிலிருந்து நான் பாவச் செயல்களைச் செய்வதில்லை. அதற்குக் காரணம் எனது பேரனார். அவர் சொல்வார், “ பேரா, எமது குடும்பம் ஏதோ பெரிய

பாவத்தைச் செய்துள்ளது. அதனால் தான் தொடர்ந்து துன்பங்கள் வருகின்றன. நான் பல பாவங்களைச் செய்துள்ளேன். அதனால் நீ எந்தப் பாவத்தையும் செய்யாதே'' என்றவர். அதனால் நான் அறிந்து பாவம் செய்யவில்லை. அப்போ துன்பங்கள் வருகின்றன என்றால் நான் முன்பு பாவம் செய்திருத்தல் வேண்டும். அந்தப் பாவம் தீர்த்தான் சிவனை வழிபடுகிறேன் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1698. கோயில்கொண் டன்றே குடிகொண்ட ஐவரும்**
**வாயில்கொண் டாங்கே வழிநின் றருளுவர்**
**தாயில்கொண் டாற்போல் தலைவனென் னுட்புக**
**வாயில்கொண் டீசனு மாளவந் தானே.**

'' சிவனடியார்களே, ஆருயிர்களின் உடம்பின் உள்ளே உறுப்புக்களை இயக்குவதற்காக உயிர்கள் தோன்றிய காலத்தில் இருந்தே ஆண்டான், அரன், அரி, அயன், அருளோன் என்றும் ஐவரும் உடம்பில் குடி கொண்டுள்ளனர். உடம்பினை இடமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். மேய்ச்சலுக்குச் சென்ற பசு , கன்றை நினைத்து வீடு திரும்புவது போன்று சிவபெருமான் அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக அவர்கள் செய்யும் பேரன்புக் கீடாக சிவமாக்கி ஆண்டருள்வான். ''

'' சிவனடியார்களே, எதையும் இயக்க இன்னொரு பொருள் வேண்டும். மரம் பூத்துக் காய்க்க நீர்தேவை. மழை அதற்கு உதவுகிறது. அதை இயக்குகிறது. இயந்திரங்களை இயக்க எரிபொருள் வேண்டும். அதைப் பூமி கொடுக்கிறது. குழந்தையை இயக்கத்தாய் தேவை. அது போல எம்மை இயக்கக் கடவுள் தேவை. '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1699. கோயில்கொண் டானடி கொல்லைப் பெருமறை**
**வாயில்கொண் டானடி நாடிகள் பத்துள**
**பூசைகொண் டான்புல னைந்தும் பிறகிட்டு**
**வாயில்கொண் டானெங்கள் மாநந்தி தானே.**

'' சிவனடியார்களே,மக்களின் உடலைத் திருக்கோவிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான் சிவன். மறை நூல்கள் அவனை அடைய வழிகாட்டியாக இருக்கின்றன. திருவடியைச் சேர்வோரது நாடிகள் பத்தினையும் தூய்மை செய்தல் வேண்டும். புலனைந்தும் அடங்கிச் சிவனை வழிபட வேண்டும். அவ்வாறு வழிபடும் போது சிவன் நாடிகளைச் சுத்தம் செய்து அதனை இடமாகக் கொண்டு அருள் புரிவான்.

“ மக்களது உடல் தான் திருக்கோவில் என்று நினைத்துச் சிவன் அதைத் தனது கோவிலாக்கிக் கொண்டான். இதைத் தெரிந்த கதிரேசன் பறைமேளம் அடிப்பவனைச் சிவனது திருக்கோவில் என்று நினைத்து வணங்கினார். சிவன் சாதிகளைப் படைக்கவில்லை. உயிர்களைத் தான் படைத்தான். அந்நாளில் நாட்டை ஆண்ட மன்னர்கள் தொழில் செய்வதற்காகத் தொழிலாளர்களை அமர்த்தினர். அதன் பலன் தான் சாதி. வேளாண்மை செய்பவன் வேளாளன், கல்வி கற்பிப்பவன் பிராமணன். இன்று எல்லோரும் வேளாண்மை செய்கிறார்கள். அது போல எல்லோரும் ஆசிரியர்களாக இருக்கின்றனர். தொழில் சாதியல்ல. சாதி ஒரு தொழிலைக் குறிப்பிடுவதல்ல என்று உணர்பவர்கள் தான் சிவன் எல்லோருடைய உடலிலும் இருந்து இயக்குகிறார் என்பதைப் புரிந்து உண்மைச் சைவர்களாக வாழ்கின்றனர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 4. சதாசிவலிங்கம்
## (உலக முதற் சிவம்)

**1700. கூடிய பாதம் இரண்டும் படிமிசை**
**பாடிய கையிரண் டெட்டும் பரந்தெழுந்**
**தேடு முகம்ஐந்து செங்கணின் மூவைந்து**
**நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே.**

“ சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்கள் இன்பம் பெறவேண்டும் என்பதற்காகவே தனது கோலத்தை அமைத்துள்ளார். ஆருயிர்கள் அன்பினால் வந்து கூடி இன்புறுவதற்காக அமைத்த திருவடிகள் இரண்டு. புகழ்ந்து கூறப்பட்ட திருக்கைகள் பத்து. அருளை அள்ளித் தரும் முகங்கள் ஐந்து. ஒளியைத் தரும் கண்கள் பதினைந்து. இத்தனையும் கொண்டு விளங்கும் அருளோனாகிய சதாசிவக் கடவுள் திருவருளை ஒளியாகக் கொண்டவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1701. வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்**
**மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்**
**ஆதார சத்தியு மந்தச் சிவனொடுஞ்**
**சாதா ரணமாஞ் சதாசிவந் தானே.**

“ சிவனடியார்களே, அயன், அரி, அரன், ஆண்டான், ஐம்முகன், விந்து நாதம் இவற்றை இயைந்து இயக்குவது திருவருள். அத்திருவருளாற்றல் மரமும் காழ்ப்பும் போல விட்டு நீங்காது இருக்கும் சிவனைச் சதாசிவன் என்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1702. ஆகின்ற சத்தியின் உள்ளே கலைநிலை**
**ஆகின்ற சத்தியின் உள்ளே கதிரெழ**
**ஆகின்ற சத்தியின் உள்ளே அமர்ந்தபின்**
**ஆகின்ற சத்தியுள் அத்திசை பத்தே.**

“ சிவனடியார்களே, திருவருட் சக்தியினுள் விடுவித்தல் முதலிய ஐந்து கலைகளும் உண்டு. அச் சக்தியின் அருளால் சூரியனிடமிருந்து கதிர்கள் உண்டாகும். அக்கதிர்களுள்ச் சிவன் அமர்ந்திருந்து சக்தியை வழங்குகிறான். அதனால் அத்திருவருள் பத்துத் திசைகளும் பரவி உயிர்களுக்கு அருள்கிறது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1703. அத்திசைக் குள்ளே அமர்ந்தன ஆறங்கம்**
**அத்திசைக் குள்ளே அமர்ந்தன நால்வேதம்**
**அத்திசைக் குள்ளே அமர்ந்த சரியையோடு**
**அத்திசைக் குள்ளே அமர்ந்த சமயமே.**

“ சிவனடியார்களே, பத்துத் திசைகளை உடைய இந்த உலகத்தில் அவ்வுலகம் நல்லமுறையில் நடைபெறுவதற்காக ஆறு அங்கங்களையும், நான்கு வேதங்களையும், சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறிகள் நான்கையும் அளித்துள்ளான் சிவன். அவற்றை சிறப்பாகக் கொண்டு திகழும் செந்நெறியும் சித்தாந்த சைவமும் திருவருளால் நிலைப்பன. சித்தாந்த சைவம் ஐம்பெரும் தூண்களால் தாங்கப்பட்டு நிலைத்து நிற்கின்றது. அத்தூண்களாகத் திருமந்திரமும் தேவாரங்களும் திருவாசகமும், திருக்கோவையாரும் சிவபுராணமும் ஆகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1704. சமயத் தெழுந்த அவத்தையீ ரைந்துள**
**சமயத் தெழுந்த இராசிஈ ராறுள**
**சமயத் தெழுந்த சரீரமா றெட்டுள**
**சமயத் தெழுந்த சதாசிவந் தானே.**

“ சிவனடியார்களே, சித்தாந்த சைவத்தில் கூறப்படும் நிலைகள் பத்தாகும். இவை ஐந்து அவத்தைகள். மேல் நோக்கியும் ஐந்து அவத்தைகள். கீழ் நோக்கியும் உயிர் சென்று வரும் போது நிகழ்வன. மேலும்உயிர்ப்புக் கலைகள் பன்னிரண்டு. அயன், அரி, அரன், ஆண்டான், அருளேசன், அன்னை என்னும் திருமேனிகள் ஆறு. பூதம் ஐந்து. ஞாயிறு, திங்கள், ஆருயிர் மூன்று ஆகிய வடிவங்கள் எட்டு. இவை அனைத்தும் பூண்டருள்வோன் சதாசிவனே. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1705. நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு**
**நடுவு படிகநற் குங்கும வன்னம்**
**அடைவள அஞ்சனஞ் செவ்வரத் தம்பால்**
**அடியேற் கருளிய முகமிவை அஞ்சே.**

“ சிவனடியார்களே, சதாசிவனுக்கு முகங்கள் ஐந்து. அவ் ஐந்து முகங்களும் முறையே உச்சி, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் ஐந்து திசைகளை நோக்கியிருக்கின்றன. இவ் ஐந்து திருமுகங்களின் நிறங்கள் முறையே இவ்வாறு அமைந்துள்ளன. உச்சி முகம் பளிங்கு நிறம். கிழக்கு முகம் குங்கும நிறம். தெற்கு முகம் நீலநிறம். வடக்கு முகம் சென்நிறம். மேற்கு முகம் பால் போன்ற வெண்மை நிறமானது. இத்திருமுகங்கள் ஐந்தும் அடியவர்களுக்கு அருளை வாரி வழங்குபவை. இவ் ஐந்து திருமுகங்களும் ‘சிவயநம’ என்பதைக் குறிக்கும். ”

“ சிவனடியார்களே, சிவபெருமான் உலகம் பூராவும் வாழும் அடியவர்களுக்கு அருள் செய்வதற்காக ஐந்து முகங்களைக் கொண்டிருக்கிறார். அவர் அருளுவதோடு எல்லாத் திசைகளையும் பார்ப்பதால் எங்கும் நடைபெறுபவற்றையும் அறிகிறார். அதனால் வினை அதிகரிக்கும். வினை அழிந்தும் போகும். மக்கள் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும் என்று கதிரேசன் அடிக்கடி கூறுவார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1706. அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள**
**அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள**
**அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்**
**நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே.**

“ சிவனடியார்களே, வரதன் சொல்வான்,“சுவாமி, ஐந்து திருமுகங்களுடனும், பதினைந்து திருக்கண்களுடனும், பத்துத் திருக்கைகளுடனும், பத்துத் திருப்படைகளுடனும் சதாசிவன் என் நெஞ்சில் புகுந்து கோவில் கொண்டருளியிருப்பதால் எனக்கு யாராலும் தீங்கு செய்ய முடியாது. அவனது பத்துக் கண்களும் பத்துத் திசைகளால் வரும் துன்பங்களை இனங்கண்டு அகற்றிவிடுவதால் எனக்குத் துன்பங்கள் இல்லை. எதிரிகள் இல்லை. என்னை எதிர்க்கப் பயப்படுவார்கள். கோவில் தலைவர் அறியாமையால் என்னைத் தாக்கிவிட்டார் என்று சிவனுக்குச் சொன்னேன். நான் சொன்ன மறுநாள் கோவில் தலைவர் என்னைத் தேடி வந்து பலரின் முன்னிலையில் மன்னிப்புக் கேட்டார். உயர்ந்த சாதிமான் என்றும் பணக்காரன் என்றும் கருதி என்னை ஓர் அற்பபுழுவாகத் தன்னும் மதிக்காத அவரும் அவரின் கூட்டமும் மிகுந்த பயம் கொண்டதாலேயே என்னிடம் வந்து மன்னிப்புக் கோரினர். சதாசிவன் எனக்குத் துன்பம் வரவிடான் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1707. சத்தி தராதல மண்டஞ் சதாசிவஞ்**
**சத்தி சிவமிக்க தாபர சங்கமஞ்**
**சத்தி யுருவம் அருவஞ் சதாசிவஞ்**
**சத்தி சிவதத் துவமுப்பத் தாறே.**

“ சிவனடியார்களே, அருளோன் நிலமண்டிலம் சக்தியாகவும், வான் மண்டிலம் சதாசிவனாகவும் விளங்கி வீற்றிருக்கின்றான். சக்தியும் சிவனும் நிலத்திணை இயங்கி திணையாகிய இரண்டிலும் கலந்துள்ளனர். சக்தி உருவமாகும். சதாசிவம் அருவுருவமாகும். நிலம் முதல் சக்தி சிவம் ஈறாகத் தத்துவம் முப்பத்தாறாகும். இவ் முப்பத்தாறு மெய்களும் அருஞ்சைவர்களுக்குரிய பொருண்மையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1708. தத்துவ மாவ தருவஞ் சராசரந்**
**தத்துவ மாவ துருவஞ் சுகோதயந்**
**தத்துவ எல்லாஞ் சகலமு மாய்நிற்குந்**
**தத்துவ மாகுஞ் சதாசிவன் தானே**

“ சிவனடியார்களே, சதாசிவ மெய்கள் உருவமும் உள்ளுறை அருவமும் ஆகத் திகழும். இயங்கு திணை நிலைத்திணை உலகங்கள் முற்றும் விரிந்து விளங்கும். இன்பத்தோற்ற ஊற்றாக பாய்வது சக்தியும் சிவமுமாகும். எல்லா மெய்களும் சக்தி சிவம் இரண்டின் கலப்பியக்கத்தால் இயங்குபவை. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1709. கூறுமி னூறு சதாசிவன் எம்மிறை**
**வேறோர் உரைசெய்து மிகைப்பொரு ளாய்நிற்கும்**
**ஏறுரை செய்தொழில் வானவர் தம்மொடு**
**மாறுசெய் வானென் மனம்புகுந் தானே.**

“ சிவனடியார்களே, அருளோன் என்று அழைக்கப்படும் சதாசிவனே எமது முழுமுதற் கடவுளாவான். அவனது திருவடியைப் போற்றிப் பதிகங்கள் பாடி மலர்கள் தூவி எந்நாளும் முழு அன்போடு பற்றின்றி வழிபடுங்கள். செந்தமிழ் மறைக்கு முரனான குற்றமுள்ள நூல்களின் கருத்தைத் தவிருங்கள். அயன்மால் உள்ளிட்ட தேவர்கள் அறியாமையால் தம்மைத் தாமே உயர்த்தி செருக்குற்றுச் சொன்ன சொற்கள் ஏற்றுரை எனப்படும். அங்ஙனம் சொல்லித் திரிவதையே வழக்கமாகக் கொண்ட அத்தேவர்களுக்குச் சிவபெருமான் மாறுபட்டு நிற்பன். அத்தகைய சிவபெருமான் அடியார்களின் உள்ளத்துள்ப் புகுந்து அவர்களை ஆட்கொள்வான். ”

‘‘ சிவனடியார்களே, தற்பொழுது சைவசமயத்தைப் பழித்துத் தமது சமயம் தான் உண்மையானது என்று ஒருவர் வந்து ஆச்சிரமத்திற்கு அருகில் இருந்து மக்களுக்கு உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த சைவர்கள் சிலர் அவரைத் தாக்கிக் காயப்படுத்தினர். அதை அறிந்த கதிரேசன் அவர்களை அழைத்துச் சொன்னார், ‘‘ பிள்ளைகளே, யாருக்கும் எதையும் சொல்ல உரிமை இருக்கிறது. அதைக் கேட்பவர்கள் தான் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். யாரோ ஒருவன் பைத்தியக்காரனைப் போல உழற அதைக் கேட்ட மக்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றனர். கெங்காதரன் என்ற அடியவர் சொன்னார், ‘‘ சிவனது திருவடிக்கு மலர்கள் தூவிப் பதிகங்கள் பாடி வழிபடுகிறோம். சிவன் எல்லா உதவிகளையும் செய்கிறார். அதை உணராத சிலர் தேவரைப் போல்க் கீழ்த்தரமாகப் பேசி தம்மை உயர்த்தி வருகின்றனர். அது அவர்களின் அறியாமை. சிவனை மதியாத தேவர்கள் யாபேரும் அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட போது அவர்கள் தமது செயலை மறந்து சிவனிடம் தான் சென்று முறையிட்டனர். அது போல நாமும் சிவனிடம் முறையிடுவோம். அவர் எல்லாவற்றையும் கவனிப்பார் என்றவர். படிக்காத அவருக்கு வந்த ஞானம் உங்களுக்கு ஏன் வரவில்லை என்று கேட்டவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1710. இருளார்ந்த கண்டமும் ஏந்து மழுவுஞ்**
**சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்**
**அருளார்ந்த சிந்தையெம் ஆதிப் பிரானைத்**
**தெருளார்ந்தென் உள்ளே தெளிந்திருந் தேனே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ‘‘ தேவர்கள் மயக்கத்தால் சிவனை மறந்து தாம் தாம் பெரியவர்கள் என்று நினைத்து அமிழ்தை எடுக்க முயன்றனர். அப்போது அமிழ்திற்குப் பதிலாக நஞ்சு வெளிப்பட்டது. தேவர்கள் அஞ்சி ஓடிச் சிவனிடம் சென்று முறையிட்டனர். சிவன் அவர்களை மன்னித்து அந்த நஞ்சை உண்டமையால் அவரது கண்டம் கறுத்தது. அவன் இயற்கை உணர்வுள்ளவன் என்று இச்செயலாலும், மழுவினைக் கையில் ஏந்தியிருப்பதாலும் விளங்கும். அதன் பேரொளி எல்லாப் பக்கங்களிலும் காணப்படுவதால் அவன் முற்றுணர்வினன் என்று எல்லோருக்கும் புரியும். அவனது திருமேனி போன்று செம்மையுடையதாகவே இருக்கும். அதில் வளரும் பிறைச்சந்திரன் ஒளிர்ந்து கொண்டிருப்பான். இது விளக்க விளங்கும் ஆருயிரைக் குறிக்கும். இவை தான் ஆதிபிரானான சிவனது திருவடையாளங்கள். அவனது திருவருளினால் உயிர்களின் மருளான மலம் அகலும். திருவருள் நிறையும். அதனால் மெய்ப்பொருளை உணர்ந்து கொள்ளலாம். ஆதிபிரான் அம்மையோடு கூடியிருக்கும் அருள் நிலையைப் புரிந்து கொள்ளலாம். இதையறியாதவர்கள் தான் தாம் பெரியவர்கள் என்று நினைக்கின்றனர். எம்மை விட எத்தனை பங்கு அருளும் பலமும் மிக்க தேவர்கள் தாம் தாம் பெரியவர்கள் என்று நினைத்தமையால் பட்ட துன்பங்களை மக்கள் அறிந்தும்

திருந்துகிறார்கள் இல்லை. அதனால் நீ கவலைப்படுவதால் பயனில்லை. கவலைகளையும் எதிர்காலச் செயல்களையும் சிவனிடம் விட்டு விட்டு நாளாந்தக் கடமைகளைச் செய்யுங்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1711. சத்திதான் நிற்கின்ற ஐம்முகஞ் சாற்றிடில்**
**உத்திரம் வாமம் உரைத்திடும் சத்தி**
**பச்சிமம் பூருவம் தற்புரு டன்னுரை**
**தெற்கி லகோரம் வடகிழக் கீசனே.**

“ சிவனடியார்களே, திருவருளாற்றல் விளங்கி நிற்கும் ஐந்து திருமுகங்களில் வடக்கு நோக்கியிருக்கும் திருமுகம் வாமதேவத்திருமுகமாகும். இது விளக்கத்தைக் கொடுக்கும் முகம். மேற்கு நோக்கியிருக்கும் திருமுகம் சத்தியோசாதம். இது தோற்றுவிக்கும் முகமாகும். கிழக்கு நோக்கியிருக்கும் திருமுகம் தற்புருடம் என்றும் திருமுகமாகும். இது ஆட்சியைக் குறிக்கும் திருமுகம். தெற்கு நோக்கியிருக்கும் திருமுகம் அகோரத் திருமுகம். இது நடுக்கத்தைக் கொடுக்கும் திருமுகமாகும். வடகிழக்கை நோக்கியிருக்கும் திருமுகம் ஈசானம் என்றும் திருமுகமாகும். இது இயக்கத்தைக் குறிக்கும் திருமுகமாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1712. நாணுநல் லீசான நடுவுச்சி தானாகுந்**
**தாணுவின் றன்முகந் தற்புருட மாகுங்**
**காணும் அகோரம் இருதயங் குய்யமா**
**மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே.**

“ சிவனடியார்களே, இந்த ஐம்முகங்களுக்கும் ஐம்பெரும் மந்திரங்கள் குறிக்கும் முறை வருமாறு பூவும் நீரும் கண்டு நாணும் தன்மை வடிவாகிய ஈசான மறையை உச்சியில் கட்டவும். தற்புருடன் என ஓதிமுகத்தில் சுட்டுக. அகோரம் என ஓதி நெஞ்சிற் சுட்டுக. வாமதேவம் என ஓதி குறியிற் கட்டுக. சத்தியோ சாதம் என ஓதி பாதத்தில் சுட்டுக. இம் மந்திரங்கள் ஐந்திற்கும் ஓம் என முதற்கண் ஓதிய பின்பே ஐந்தையும் தனித்தனியாக ஓதுதல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1713. நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவ சங்கண்ணாம்**
**வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாஞ்**
**செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னாகுஞ்**
**செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே.**

‘‘ சிவனடியார்களே, நெஞ்சு, தலை, தலைமுடி, கவசம், கண், கருவி ஆகியவை உறுப்புக்கள் எனப்படும். மல கன்மம், விரவுதலாய குற்றம் நீங்கிய தூமாயை விந்து எனப்படும். அதனுடைய பெருக்க நிறம் பச்சை. நிறைவான தலையணி போலச் சிறந்த வனப்பாற்றல் உள்ளவள் திருவருள் அம்மை. அவளது ஒளி பொருந்திய திருக்கைகள் பத்திலும் பத்துப் படைக் கருவிகள் உள்ளன. மேற்சொல்லப்பட்ட பெருமறைகள் ஐந்தும் இதற்கண் ஓதிய உறுப்புக்கள் ஆறும் சைவக் கட்டு மந்திரங்களாகும். இம் ஆறு அங்க மந்திரங்களைக் கூறுகிறது. இவை கரு அங்க மந்திரம் அல்லது சட் அங்க மந்திரம் எனப்படும். அவை யாவன நெஞ்சு, இருதயாய நம, சிரம்- சிரசாய நம, சிகை. சிகாயநம, கவசம் கவசாய நம கண் நேத்திரப்யோ நம. அம்பு அத்திராய நம. பஞ்சப் பிரம மந்திரங்களும், இவ் ஆறு மந்திரங்களுமே சைவ மந்திரங்களாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1714. எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்**
**விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி**
**வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்**
**பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே.**

‘‘ சிவனடியார்களே, அருளோனான சதாசிவக் கடவுளுக்கு திருவருளின் துணை கொண்டு ஆராயுமிடத்து நெஞ்சில் அறிவாற்றல் உண்டாகும். அறிவுப் பெரு வெளியாகிய வனப்பாற்றல் பரை எனப்படும். அது தலையாகும். நடப்பாற்றாகிய ஆதி தலை முடியாகிய சிகையாகும். அழகிய கவசமான போர்வை திருவளர் அன்பாகும். தொழிலாற்றல் கண் ஆகும். இம்முறையால் சிவபெருமானுடைய திருவுறுப்புக்கள் யாவும் திருவருள் ஆற்றல் என்று தெரியவரும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1715. சத்திநாற் கோணஞ் சலமுற்று நின்றிடும்**
**சத்தி அறுகோணஞ் சயனத்தை யுற்றிடுஞ்**
**சத்திநல் வட்டஞ் சலமுற் றிருந்திடுஞ்**
**சத்திநல் யுருவாஞ் சதாசிவன் தானே.**

‘‘ சிவனடியார்களே, திருவருளாற்றல் நாற்கோணமாகிய மூலத்திலிருந்து நீர் போல இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும். அத்திருவருள் கொப்பூழின் கண் மால் போலக் கிடந்து உற்றுழி இயக்கும். இந்நிலை அறுங்கோணமாகும். இத்திருவருளே நெற்றிப் புருவ நடுவில் வட்ட நிலையத்தில் நின்று கட்டளையிட்டுக் கொண்டிருக்கும். இக் குறிப்புத் தோன்றியமையால் தான் செந்தமிழ் ஆன்றோர் தொன்று தொட்டு நெற்றிப் புருவ நடுவில் வட்டமாகப் பொட்டு வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். திருவருளாற்றல் சிவவடிவானது. சந்தனம், குங்குமம், சாந்து ஆகிய மூன்றாலும் இடும் பொட்டு

முப்பண்புகளின் அடையாளமாகும். திருநீற்றுப் பூச்சு சிவனின் எண்குண அடையாளமாகும். ’’

‘‘ சிவனடியார்களே, அன்று நல்லைநாதன் நீறு அணியாமலும் பொட்டிடாமலும் கதிரேசனின் வீட்டுக்கு வந்தார். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார்,‘‘உனக்கு எத்தனை முறை சொன்னாலும் உணர்கிறாய் இல்லை. உனது இரத்த உறவினர் இறந்ததற்காகப் பொட்டு வைக்காமலும் நீறணியாமலும் இருக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறேன். திருவருள் நெற்றிப் பொட்டில் தங்கியிருந்து தான் ஒவ்வொரு வரையும் இயக்குகிறது. பொட்டு மூப்பன் பின் அடையாளம். திருநீறு சிவனின் எண்குண அடையாளம். தான் ஆதியில் இருந்தே சைவர் நீறணிந்து பொட்டு வைக்கின்றனர். உடல் லிங்க அமைப்பானது. உயிர் சென்றதும் சவமான அவ்வுடலுக்குச் சிவனுக்குச் செய்யும் கிரியைகள் செய்யப்படுகின்றன. கிராமத்தவர் சவம் சிவமாகி விட்டதென்பர். நெற்றிப் பொட்டில் இருக்கும் திருவருளம்மையை சிவத்துடன் இணைப்பது திருநீறு. அதனால் அதை எவ்வேளைகளிலும் அணிதல் வேண்டும். அதனால் எந்தத் துர்த்தேவதைகளும் அணுகாது. ஒரு பாதுகாப்பு அரண் போல அது செயற்படும். இதைப்பலர் உணர்வதில்லை. ஆச்சிரமத்தில் பலமுறை கூறியும் பலர் அதைப் பின்பற்றாதது வேதனையைத் தருகிறது என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1716. மானந்தி எத்தனை காலம் அழைக்கினுந்**
**தானந்தி யஞ்சின் தனிச்சுட ராய்நிற்குங்**
**கானந்தி யுந்தி கடந்து கமலத்தின்**
**மேனந்தி ஒன்பதின் மேவிநின் றானே.**

‘‘ சிவனடியார்களே, சிவனின் மீது கொண்ட மெய்யடியார்களின் அன்பான அழைப்பை ஏற்று எழுந்தருளும் சிவபெருமானுக்கு அன்பு, அறிவு, ஆற்றல், வனப்பு, நடப்பு ஆகிய ஐந்து திருவருளாற்றல்கள் உண்டு. அவை ஒப்புயர்வில்லாதவை. அவை பெருஞ்சுடராகப் பொலியும். அச்சுடரின் நடுவே சிவன் பிரிப்பின்றி நின்றருள்வான். மாநந்தி உயிர்ப்பினைக் கொண்டு சென்று உச்சியின் மேலுள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் அமர்ந்து வேண்டும் திருவுருவங்களை எடுப்பன். அத்திருவுரு ஒன்பது வகைப்படும். அவை அறிவு, ஆற்றல், ஒலி, ஒளி ஆகிய திருவுருக்கள் நான்கும் அருவத் திருவுருக்களாகும். அருளோன் ஆகிய சதாசிவன் அருவுருவத் திருவுருவாகும். ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் நான்கும் உருவத் திருவுருவாகும். இவற்றை முறையே சிவன், சக்தி, சதாசிவன்,ஈசன், உருத்திரன், மால் அயன் என்று அழைப்பர். இத்திருவங்களில் பொருந்தி நின்று சிவன் உலகினை இயைந்து இயக்கி அருள்கிறான். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1717. ஒன்றிய வாறும் உடலி னுடன்கிடந்து**
**என்றுமெம் மீச னடக்கும் இயல்பது**
**தென்றலைக் கேறத் திருந்து சிவனடி**
**நின்று தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே.**

“ சிவனடியார்களே, சிவபெருமான் முதற்பாடலில் குறிப்பிட்டது போல உலகத்துடன் பொருந்தி அவ்வுலகினை இயக்குகிறான். அது போல உயிருடனும் உடலுடனும் பொருந்தி அவ்வுயிரையும் உடலையும் இயைந்து இயக்குகின்றான். இது அவனது பெரும் கருணையாகும். அத்தகைய பெருமைமிக்க சிவனது திருவடி நம் தலை மீது சூட்டப்படுவதால், அது அழகிய தலை எனப்படும். ஆருயிர்களை திருத்தி ஆட்கொள்ளும் சிவனது திருவடி இயல்பாகவே புனிதமானது. அத்திருவடியை நெஞ்சத்துள்ளே இருத்தி தொழுங்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1718. உணர்ந்தே உலகினில் ஒண்பொரு ளானைக்**
**கொணர்ந்தேன் குவலயங் கோயிலென் நெஞ்சம்**
**புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே**
**பணிந்தேன் பகலவன் பாட்டும் மொலியே.**

“ சிவனடியார்களே, உலகம் முழுவதும் நிறைந்து நிற்கும் ஒண் பொருளான சிவனை அவனின் அருளால் தான் உணர முடியும். உலகங்களில் திருக்கோவில் கொண்டருளிக் கொண்டிருக்கும் சிவனை எமது உள்ளத்திலும் கோவில் கொண்டருளும் படி திருமுறைகளைப் பாடிப்பணிந்து வேண்டினால் அவன் மிக்க மகிழ்வுடன் வந்து உள்ளத்தில் கோவில் கொள்வான். இது உண்மை. நான் இதை உணர்ந்து அதன்படி நடந்தமையால் எனது உள்ளத்தைத் தனது கோவிலாக்கிக் கொண்டான். என்னைப் போலக் கதிரேசனது உள்ளத்தையும் தனது கோவிலாக்கிக் கொண்டான். அதனால் கதிரேசன் நல்லைநாதனுக்குச் சொன்னார், “நல்லை, உண்மையான மெய்யடியானாக இருத்தியிருந்தால் உனது உள்ளத்தில் வந்து கோவில் கொள்ளுமாறு சிவனைத் திருமுறைகளால் பாடி இரந்து வேண்டியிருப்பாய். அவர் வந்து மகிழ்வுடன் உனது உள்ளத்தைத் தனது கோவிலாக்கியிருப்பார். அதற்கடையாளமாகத் தான் நீறணிந்து பொட்டு வைப்பது. நீ உள்ளன்போடு சிவனை வணங்கியிருந்தால் யார் இறந்தாலும் நீறு அணிந்திருப்பாய். இறந்துபோன பிணத்திற்கும் பொட்டும் நீறும் அணியப்படுவது உனது மறுமை வாழ்விலும் உன்னுடன் சிவன் இருப்பார் என்பதை உலகத்தினருக்குத் தெரிவிப்பதற்காகவே என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1719. ஆங்கவை மூன்றினும் ஆரழல் வீசிடத்**
**தாங்கிடும் ஈரேழு தானடு வானதில்**
**ஓங்கிய ஆதியும் அந்தமு மாமென**
**ஈங்கிவை தம்முடல் இந்தவு மாமே.**

“ சிவனடியார்களே, மூவகை உலகிலும் சிவச்சுடர் வீசுகின்றது. அதன் மேலுள்ள ஈரேழு உலகிலும் சிவன் அறிவுப் பெருவெளியாக நின்றருள்கிறான். அவனே உலகைப் படைத்ததால் ஆதியாகவும் பின் அவனுள் உலகங்கள் ஒடுங்குவதால் அந்தமாகவும் விளங்குகின்றான். மேலும் ஆருயிர்களின் உடம்பின் உள்ளே உயிரோடு உயிராகக் கலந்தும் நின்றருள்கின்றான். ”

“ சிவனடியார்களே, சிவன் தான் சூரியன். அவன் தான் சந்திரன். இரவும் பகலும் எல்லா உலகங்களிலும் ஒளியாக நிற்பவன் அவன். சூரிய ஒளி அறிவையும் ஆற்றலையும் கொடுப்பது. உணவையும் நீரையும் கொடுப்பது. எல்லாம் சிவனே என்ற நிலையில் அவனே உலகம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1720. தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்**
**தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்**
**தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாந்**
**தன்மேனி தானாகுந் தற்பரந் தானே.**

“ சிவனடியார்களே, வழக்கமாகச் சிவன் கோவில் குருக்கள் திடீரென்று பூசை செய்ய மறுத்து விட்டார். காரணம் எதுவென்று சொல்லவும் மறுத்து விட்டார். அதனால் சிவபூசை செய்வதற்காக ஒரு பிராமணரைத் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது. மக்கள் துடிதுடித்துப் போனார்கள். கதிரேசன் சொன்னார்,“சிவன் ஆருயிர்களின் உடம்பில் சிவலிங்க வடிவில் இருக்கிறான். அச்சிவலிங்கத்திற்கு உள்ளும் புறமுமாய் நிறைந்து நிற்பது சதாசிவமாகும். உடம்பே தனிமுதற்சிவன். உடம்பே சிவனடிப் பேரின்பம். உடம்பே சிவ மெய். உடம்பே ஒப்பில்லாத முழுமுதல். இந்த வகையில் ஆருயிர் இடையில்லாத சிவனின் நினைப்பால் அவ்வுடம்பு, உள்ளம், உணர்வு, உணர்விலுள்ள இன்பம் எல்லாம் சிவனேயாகும் என்பதை உணராத அந்தணர் மனமாறுபாட்டால் மெய்யுணர்வை இழந்து விட்டார். நான் சொல்வது உண்மையானால் சிவன் இதற்கு ஒரு தீர்வை முன்வைப்பார் என்றார். அவர் கூறிய சில நிமிடங்களில் வழமையாகப் பூசை செய்யும் அந்தணரின் சகோதரன் பதை பதைத்து ஓடி வந்து அண்ணன் சில நாட்களாக மனத் தாக்கத்தால் அவதிப்படுகிறார். நான் பூசை செய்கிறேன் ” என்று கூற வழமையாகப் பூசை செய்யும் அந்தணர் சொன்னார், “ மனக்குழப்பம் காரணமாகச் சிவனுக்கு நிபந்தனை வைத்தேன். கதிரேசன் சொன்ன பின்

யாவும் விளங்கியது. நான் பூசை செய்கிறேன் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1721. ஆரும் அறியார் அகார மவனென்று**
**பாரு முகாரம் பரந்திட்ட நாயகி**
**தாரம் இரண்டுந் தரணி முழுதுமாய்**
**மாறி யெழுந்திடும் ஓசைய தாமே.**

“ சிவனடியார்களே,மெய்யுணர்வு இல்லாத எவரும் அகரம் போன்று சிவபெருமான் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று இருக்கும் தன்மையை அறியமாட்டார்கள். அகரமாகிய ‘அ’ என்ற எழுத்து எல்லா எழுத்துக்களுள்ளும் கலந்திருப்பதைப் போல உயிர்கள் எல்லாவற்றுள்ளும் சிவன் கலந்துள்ளான். உயிர்களின் பொருட்டு உடல் உலகு உண் பொருள்களாக விரிந்து மாயைக்கு நிலைக் களமாக நிற்பது திருவருள் ஆற்றல். அ∴து உகரமாகும். தாரம் என்பது எல்லா உலகினையும் தாங்கும் ஓமொழியாகும். அதன் கண் விரவி நிற்பது அகரம், உகரம், மகரம் என்பனவாகும். இவற்றுள் அகர உகர விரிவாகும் மகரம் ஒடுக்கமாகும். எனவே எழுந்திடும் ஓசை அகர உகரமாகும். ”

“ சிவனடியார்களே, சிவன் கோவில் குருக்கள் சொன்னார், “ கதிரேசு, மெய்யுணர்வில்லாத எவரும் சிவபெருமான் உலகிலும் உயிரிலும் உண் பொருள்களிலும் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பதை உணரமாட்டார்கள். அதனால் தான் நான் சிவனின் வியாபகத்தன்மையை அறியாது அப்படியான ஒரு முடிவை எடுத்தேன். எனது மகன் பிராமண சமூகத்தைச் சேராத ஒரு பெண்ணைத் திருமணம் செய்யப்போவதாக முடிவெடுத்தான். அதைச் சிவன் தடுக்கவில்லை என்ற கோபம் தான் என்னை இந்த முடிவை எடுக்கச் செய்தது. வினைப்படி உயிர்கள் செயலாற்றும் என்பதையும், அவ்வினைப் பயனை அறுக்கச் சிவனைப் பிரார்த்தித்து அகத்தவம் செய்ய வேண்டும் என்பதையும் அறியாமையால் மறந்து விட்டேன். அதைக் கதிரேசன் நினைவுபடுத்தினதால் எனது மயக்கம் தீர்ந்தது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1722. இலிங்கநற் பீடம் இசையும்ஓங் காரம்**
**இலிங்கநற் கண்ட நிறையு மகாரம்**
**இலிங்கத்துள் வட்ட நிறையும் உகாரம்**
**இலிங்க மகார நிறைவிந்து நாதமே**

“ சிவனடியார்களே, சிவலிங்கத்தின் அடிப்பகுதியாகிய பீடம் ஓங்கார வடிவமாகும். அப்பீடத்தில் மறைந்திருக்கும் நடுப்பகுதிக் கண்டம் எனப்படும். சிவலிங்கத்துடன்

பொருந்தியிருக்கும் வட்டமான பகுதி உகாரமாகும். சிவலிங்கத்தின் மேற்பகுதி மூன்று வகைப்படும். அவை முறையே கீழிருந்து அகரம் விந்து நாதம் என்பனவாகும். இலிங்க உருவின் அடிப்பீடம் பிரணவ உருவம். இலிங்கத்தின் கண்டம் அ∴தாவது அதோமுகம் பிரணவ எழுத்துக்களில் மகரத்தைக் குறிக்கும். இலிங்கத்தின் நடுவட்டம் அதாவது உள்வட்டம் உகாரத்தைக் குறிக்கும். மேல் இலிங்கப்பாகம் ஆகாரத்தைக் குறிக்கும். இவ்வாறு இம்மந்திரம் சொல்கிறது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 5. ஆத்தும லிங்கம்
## (உயிர்ச்சிவம்)

**1723. அகார முதலா யனைத்துமாய் நிற்கும்**
**உகார முதலா யுயிர்ப்பெய்து நிற்கும்**
**அகரா வுகாரம் இரண்டு மறியில்**
**அகார வுகாரம் இலிங்கம தாமே.**

“ சிவனடியார்களே, உலகம் உடல் உயிர்கள் ஆகிய மூன்றையும் தாங்கும் நிலைக்களனாக நிற்பவன் சிவன். அதை அகரத்தால் அறிந்து கொள்ளலாம். அவற்றை இயங்குமாறு இயைந்து இயக்கும். திருவருளாற்றல் சிவை என்ற திருவருளம்மை. அவ் இயக்கம் உயிர்ப்பு எனப்படும். இவ் அடையாளம் உகரமாகும். அகர உகரமாகிய இவ்விரண்டுமே சக்தியும் சிவமுமாகும். இவற்றை உணர்வோர் அகரவுகரமே சிவலிங்கம் என உணர்ந்து கொள்வர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1724. ஆதார மாதேய மாகின்ற விந்துவு**
**மேதாதி நாதமு மீதே விரிந்தன**
**ஆதார விந்து அதிபீட நாதமே**
**போதாவி லிங்கப் புணர்ச்சிய தாமே.**

“ சிவனடியார்களே, தூமாயையின் கண் தோன்றும் விந்து தாங்குவதாகிய ஆதாரமாகும். அதனால் தாங்கப்படுவதாகிய நாதம் ஆதாரத்தில் நிலைத்துள்ளது. இவ்விரண்டும் திருவருளால் உலகமாய் விரிந்தன. ஆதாரவிந்து சிறந்த பீடமாகும். நாதமே சிவலிங்கமாகும். இவற்றின் புணர்ச்சியே மனமணி இலிங்கமாக ஆருயிர் இலிங்கமாகும். இதுவே ஆத்மலிங்கமாகும். சிவபெருமான் இரண்டுமாக நிற்பன். ஆனேற்றால் தாங்கப்படுவோன், பிறையினால் தான் தாங்குவோன் சிவன் தான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1725. சத்தி சிவமாம் இலிங்கமே தாபரஞ்**
**சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமஞ்**
**சத்தி சிவமாம் இலிங்கஞ் சதாசிவஞ்**
**சத்தி சிவமாகுந் தாபரந் தானே.**

“ சிவனடியார்களே, கோவில்களில் நிலைபெற்ற இலிங்கம் நிலைப்பு இலிங்கமான தாபாரலிங்கமாகும். இவ் இலிங்கம் சக்தியும் சிவமுமாகும். அடியாராகத் திருக்கோவில் இயங்குவதால் அதைச் சங்கமென்பர். மெய்யடியார்களின் திருக்கோலங்களும் சத்தியும் சிவமுமாகும். சத்தியையும் சிவனையும் இணைத்து வணங்கும் போது அது சதாசிவம் எனப்பெயர்பெறும். தானே தனிமுழு முதலாக விளங்குவது சத்தியும் சிவமும். இரண்டும் இணைவதால் சதாசிவம் எனப்பெயர்பெறும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1726. தானே ரெழுகின்ற சோதியைக் காணலாம்**
**வானே ரெழுகின்ற ஐம்ப தமர்ந்திடம்**
**பூநே ரெழுகின்ற பொற்கொடி தன்னுடன்**
**தானே ரெழுகின்ற அகாரம தாமே.**

“ சிவனடியார்களே, மூலத்திடத்து என்றும் அழகோடு தானாக எழுந்தருளி ஒளி வீசுகின்ற சிவச்சுடரைக் காணலாம். தூயமாயையின் கூறாக அம்மூலத்திடத்து எழுகின்ற ஐம்பது எழுத்துக்களின் தொகையாகிய ஓங்காரமும் அம்மூலத்தேயாம். ஆயிரம் இதழ்களை உடைய தாமரையின் நிலைக்களமாகிய உச்சித்துளை மேல் சிவசத்தியுடன் விளங்குவது ஆகார முதல்வனாகிய சிவபெருமானாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1727. விந்துவும் நாதமும் மேவு மிலிங்கமாம்**
**விந்துவ தேபீட நாத மிலிங்கமாம்**
**அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்**
**வந்த கருவைந்துஞ் செய்யு மவையைந்தே.**

“ சிவனடியார்களே, ஒளியும், ஒலியுமாகிய விந்து நாதங்கள் பொருந்தும் சிவலிங்கம், விந்து பீடமாகும். நாதம் இலிங்கமாகும். இவ்விரண்டையும் சார்புக் கடவுளாகக் கொண்டு அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்றும் ஐம்பெரும் தெய்வநிலைகள் தோன்றின. இவ்வைந்தையும் ஐந்தொழிலுக்கு வேண்டும் கரு என்பர். இவ் ஐவரின் வாயிலாக ஐந்து தொழில்களும் நிகழ்த்தப்படுகின்றன. அத்தொழில்கள் முறையே அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் என்பதாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1728. சத்திநற் பீடற் தகுநல்ல ஆன்மா**
**சத்திநற் கண்டந் தகுவித்தை தானாகுஞ்**
**சத்திநல் லிங்கந் தகுஞ்சிவ தத்துவஞ்**
**சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே.**

“ சிவனடியார்களே, சக்தி வடிவாக இருக்கும் சிவலிங்கத்தின் பீடம் ஆவி நிலையாகும். கழுத்தினை ஒத்த பீடத்தின் குழி திருவடி நினைவாகிய சிவஞானமாகும். மேல்தோன்றும் இலிங்கம் சிவமெய்யாகும். எல்லாவற்றிற்கும் உயிர்க்குயிராக இருப்பது சதாசிவமாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1729. மனம்புகுந் தென்னுயிர் மின்னிய வாழ்க்கை**
**மனம்புகுந் தின்பம் பொழிகின்ற போது**
**நலம்புகுந் தென்னொடு நாதனை நாடும்**
**இலம்புகுந் தாதியு மேற்கொண்ட வாறே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்களின் உள்ளத்தின் உள்ளே திருவருளால் சிவபெருமான் புகுந்து நிலை பெற்ற திருவடி வாழ்க்கையை அருளுவான். அதனால் பேரின்பப் பெருவாழ்வு வரும். அந்த இன்பத்தின் மகிழ்வுடன் ஆருயிரையும் சிவனையும் மெய்யடியார்கள் நாடுவர். அந்நாட்டத்தின் பயனாக உடம்பாகிய வீட்டினுள் ஆதியாகிய சிவன் புகுந்து ஆட்கொண்டதனால் நான் பெருவாழ்வு பெற்றுப் பெருமையுடன் வாழ்கிறேன். எனக்குத் துன்பங்கள் வரச் சிவன் விடமாட்டான். அதனால் எல்லோரும் சிவனை முழு அன்புடன் வணங்குங்கள் என்று கதிரேசன் கூறுவார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1730. பராபரன் எந்தை பனிமதி சூடி**
**தராபரன் தன்னடி யார்மனக் கோயிற்**
**சிராபரன் தேவர்கள் சென்னியின் மன்னு**
**மராமரன் மன்னி மனத்துறைந் தானே.**

“ சிவனடியார்களே, மெய்யறிவுள்ள பெரும் இன்பப் பொருளைப் பராபரன் என்று அழைக்கப்படுகிறது. அத்தகைய பெருந்தகையனான சிவபெருமான் பிறைச் சந்திரனைத் தனது தலையில் சூடியவன். எல்லா உலகங்களுக்கும் அவன் தான் இறைவன். மெய்யடியார்களின் அன்புக்கு ஆட்பட்டு அவர்களின் மனத்தினைத் திருக்கோவிலாகக் கொண்டிருப்பவன். அவன் ஆயிரம் இதழ்த் தாமரையாகிய உச்சியில் இருப்பவன். தேவர்களுடைய முடியின் கண் வீற்றிருக்கும் மலரும் மணமும் போன்ற புணர்ப்புள்ள புண்ணியன். அவன் அடியவர்களின் உள்ளத்தில் நிறைந்திருக்கிறான். ”

“ சிவனடியார்களே, கதிரேசன் சொல்வார், “ எத்தனையோ ஆயிரமாயிரம் இடங்கள் இருக்கச் சிவபெருமான் விரும்பி மகிழ்வுடன் இருப்பது அடியவர்களின் உள்ளத்தில் தான். இவ்வளவு இடம் இருக்கும் போது அடியவர்களின் உள்ளத்தில் ஏன் அவர் இருக்கிறார் என்று யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. உள்ளமான மனம் அலை பாய்வது. கட்டுப்பாடு இல்லாதது. அதைக் கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்தி எதிர்காலத்தில் பேரின்பங்களைக் கொடுப்பதற்காகவே அவர் தங்கியிருக்கிறார். அவர் தங்கியிருப்பதால் என்னால் தீயவற்றை நினைக்க கூட முடிவதில்லை. தீயவற்றைச் செய்ய முடியவில்லை. மனச்சாட்சியாக இருந்து அவர் தீயவற்றைச் செய்யவிடாது தடுக்கிறார் என்பார் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1731. பிரானல்ல நாமெனிற் பேதை யுலகங்**
**குராலென்னு மென்மனங் கோயில்கொள் ஈசன்**
**அராநின்ற செஞ்சடை இங்கியும் நீரும்**
**பொராநின் றவர்செயப் புண்ணியன் தானே.**

“ சிவனடியார்களே, என்னிடம் பணமிருக்கிறது. செல்வாக்கிருக்கிறது. அதனால் என்னால் எதையும் செய்ய முடியுமென்று முனைப்புடன் கூறுவோர் அறியாமையாகிய குழியில் வீழ்ந்து துன்புறுவர். மலப்பிணிப்பு உள்ளமையால் அதைப் பசுப்பிணிப்பு என்று அழைப்பர். அதைக் குரால் என்பர். அத்தகைய மாசுள்ள மனத்தில் சிவன் குடி கொண்டுள்ளான். பாம்பை அணிந்தவர். செம்மையான திருச்சடையை உடையவர். தீயினையும் நீரினையும் போல மாறுபடுகின்றவர். அவ்வாறு மாறுபட நிற்பதும் ஆருயிர்களுக்கு அருள் செய்வதற்காகவே. இத்தகைய மாறாத அருளுடையவன் சிவன். அதனால் அவனைப் புண்ணியன் என்று அழைக்கிறோம். ”

“ சிவனடியார்களே, நாகராசா பெரும் வணிகன். பணம் பொருட்கள் மலை போல அவனிடம் குவிந்திருந்தது. அதனால் அவன் தன்னால் எதையும் செய்ய முடியும் என்று நம்புவான். அவனுக்குக் கடவுளில் நம்பிக்கை இல்லை. ஒரு முறை கதிரேசன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஐங்கரன் என்ற ஏழை மாணவனுக்கு உதவி செய்யுமாறு சொன்னார், “ ஐயா, உங்கள் சிவன் கேட்பதையெல்லாம் கொடுப்பதாகக் கூறுகிறீர்கள். அவரிடம் கேட்பது தானே. அவர் கேட்டதைக் கொடுப்பாரென்றால் ஊரில் உள்ள வறியவர்கள் ஏன் கேட்டு பெரும் பணக்காரனாக முடியாது? கடவுள் என்பது முயற்சி. முயற்சி செய்யச் செய்யப் பணம் குவியும் ” என்று சொல்லுத் போது கதிரேசன் எழுந்து சென்று விட்டார். நாகராசாவிடம் ஒரு பொருட்களின் நகரம் இருந்தது. அங்கு இல்லாத பொருட்கள் எவையும் இல்லை. திடீரென்று ஒரு நாள் நள்ளிரவு மின் ஒழுக்குக் காரணமாக அக்கட்டிடத்தில் தீ பிடித்தது. தீயணைப்புப்

படையினரும் மக்களும் போராடிய போதும் அதை அணைக்க முடியவில்லை. ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடம் இடிந்து விழுந்து விட்டது. அதைக் கேள்விப்பட்ட கதரேசன் நாகராசாவின் வீட்டுக்குச் சென்றார். நாகராசா பித்துப் பிடித்தவன் போல இருந்தான். கதிரேசன் சிறிது நேரம் இருந்து கதைத்து விட்டு வந்தவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1732. அன்றுநின் றான்கிடந் தானவன் என்று**
**சென்றுநின் றெண்டிசை ஏத்துவர் தேவர்கள்**
**என்றுநின் றேத்துவன் எம்பெரு மான்தனை**
**ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் வந்து ஆறுதல் கூறிச் சென்ற பின்பு தான் கதிரேசனது குணம் அவனுக்குத் தெரிந்தது. தான் நண்பர்கள் என்று நம்பியிருந்த பல வர்த்தகர்கள் தொலைபேசியில் விசாரித்தனர். ஆனால் கதிரேசன் நேரில் வந்தது அவனுக்கு ஆறுதலைக் கொடுத்தது. அவர் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ‘‘ நாகராசா, சிவன் தான் பெரியவன். அவனது கட்டளைப்படி தான் உலகம் இயங்குகிறது. உயிர்கள் படைக்கப்பட்ட காலத்தில் இருந்தே தன்னால் படைக்கப்பட்ட ஆருயிர்கள் உய்தற்பொருட்டு திருவருளால் அவ்வுயிர்கள் காணும் பொருட்டு ஆங்காங்கே தோன்றியிருப்பவன் சிவன். அது போல வீற்றிருந்து அருள்பவனும் சிவன். இதையுணர்ந்த விண்ணவர்களும் அவனைப் போற்றிப் புகழ்ந்து துதித்து இன்பம் பெறுகின்றனர். நான் ஒரு போதும் சிவனை மறந்ததில்லை. அது போலச் சிவனும் எனது உள்ளத்தில் கோவில் கொண்டிருந்து முத்நிறத்தால் என்னை ஆட்கொண்டுள்ளான். அவன் ஒன்றாய் வேறாய் உடனாய் என்னுள்ளத்தில் இருப்பதால் எனக்குத் தீமைகள் வருவதில்லை. தவறி வந்தாலும் அவன் அதை நீக்கி விடுவான் என்றவர். அவனது மனைவியான காமாட்சி சொல்வாள்,‘‘கதிரேசன் பெரும் பணக்காரர். பிள்ளைகள் எல்லாம் ஒழுக்க சீலர்கள். எங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உலகத்தை உணர்த்தாததால் அவர்களும் உங்களைப் போலவே வளர்கிறார்கள். இது நல்லதற்கல்ல. கடவுளை வணங்குபவன் எல்லாப் பொறுப்புக்களையும் கடவுளிடம் ஒப்படைத்து விடுவதால் அவன் மகிழ்வுடன் இருக்கிறான். உங்களால் மகிழ்வுடன் இருக்க முடிகிறதா? ’’ என்று கேட்டவள். பழைய சம்பவங்கள் பலவும் அவனது மனதில் எழுந்து அவனைக் குழப்பின. ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 6. ஞானலிங்கம்
## (உணர்வுச் சிவம்)

**1733. உருவும் அருவும் உருவோ டருவும்**
**மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்குங்**
**குருவு மெனநிற்குங் கொள்கைய னாகுந்**
**தருவென நல்குஞ் சதாசிவன் தானே.**

“ சிவனடியார்களே, நாகராசாவும் காமாட்சியும் கதிரேசனின் வீட்டுக்கு வந்தனர். நாகராசா ஒரு வழியில் கதிரேசனது உறவினன். நல்ல கெட்ட நிகழ்வுகளுக்குக் கூடச் சொன்னாலும் அவன் சொல்வதில்லை. காமாட்சி தான் செல்வாள். சென்று அவன் வராததற்கான காரணத்தைச் சொல்வாள். தயங்கித் தயங்கி வந்த நாகராசா கூச்சத்துடன் கதிரேசனைப் பார்த்தார். ஆனால் கதிரேசன் மிக்க மகிழ்வுடன் அவனை வரவேற்றார். ஆசனத்தில் அமர்ந்த நாகராசா சொன்னான்,“ஐயா, ஓரிரு மணித்தியாலத்தில் பல கோடி ரூபாவை இழந்து விட்டேன். தொழில் செய்ய முடியாமையால் கடன்காரர்களின் தொந்தரவைத் தாங்க முடியவில்லை. நான் கடையைக் காப்புறுதி செய்தமையால் நட்ட ஈடாகக் கொஞ்சப் பணம் தருவார்கள். அதைத் தரச் சில மாதங்களாகலாம். அதனால் தங்களிடம் உதவி கோரி வந்துள்ளேன்” என்றான். அதற்குக் கதிரேசன் சொன்னார்,“வினையின் படி தான் செயல்கள் நடைபெறுகின்றன. நல்வினையால் நன்மையும் தீவினையால் தீமைகளும் வருவது இயல்பு. அதை நீக்கக் கடவுளை வணங்க வேண்டும். கண்களுக்குப் புலனாகும் திணை பால் வேறுபாட்டு உருவும், கட்புலனாகாத அருவுருவவும், கட்புலனாயினும் வேறுபாடு தெரியாத அருவுருவம் ஆகிய முந்திறப்பு பிழம்புகளிலும் அருளால் பொருந்தியிருப்பவன் பரமசிவன். பண்பட்ட ஆருயிருக்கு முதல் குருவாகத் தோன்றி அருபவனும் சிவன். இது சிவனது இயல்பு. வேண்டுபவர்களுக்கு வேண்டியதை அள்ளிக் கொடுக்கும் வள்ளல் அவன். தருக என்று வேண்டியதும் காலம் தாழ்த்தாது அப்பொழுதே வேண்டியவற்றைக் கொடுத்தருள்வான். அதனால் தான் அவனைச் சதாசிவன் என்பர். உனக்கு இவற்றில் நம்பிக்கை இல்லை. நம்பியிருந்தால் தலைக்கு வருவது தலைப்பாகையுடன் சென்றிருக்கும். என்னால் இயன்றதைக் கொடுக்கிறேன் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1734. நாலான கீழ துரவ நடுநிற்க**
**மேலான நான்கு மருவு மிகநாப்பண்**
**நாலான ஒன்று மருவுரு நண்ணலாற்**
**பாலா மிவையாம் பரசிவன் தானே.**

‘‘ சிவனடியார்களே, நாகராசா சொன்னான், ‘‘ ஐயா, தாங்கள் என்னைத் தேடி வந்த போது நான் உதவிகள் செய்யவில்லை. கடவுளையும் நம்பவில்லை. முயற்சியையும் நண்பர்களையும் நம்பினேன். அதைவிடக் கடவுளை நம்ப வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. எனது வர்த்தக நிலையத்திற்கு அருகில் மாசிலாமணியின் வர்த்தக நிலையம் இருக்கிறது. அவர் பெரும் சிவபக்தர். சிவபூசை செய்யாமல் எதுவும் செய்யமாட்டார். நான் அவரைக் கேலி செய்வேன். இன்று என்னவென்றால் அவரது வர்த்தக நிலையத்திற்கு ஒரு சதத்திற்கான நட்டம் கூட ஏற்படவில்லை. என்னைச் சிவன் காப்பாற்றி விட்டார் ’’ என்று அழுதவர். தீயணைக்க வந்த வீரர்கள் ஏனைய கடைகளைப் பாதுகாப்பதில் தீவிரம் காட்டினர். அது சிவனது செயல் என்கிறார்’’ என்று கலங்கினான் நாகராசா. அதற்குக் கதிரேசன் சொன்னார்,‘‘வரும் துன்பங்களை நீக்கியருள்பவன் சிவன். மாசிலாமணி பெரும் சிவபக்தர். சிவனை நம்பி அவனையே தஞ்சமடைந்திருப்பவர். சிவனான சதாசிவன் ஒன்பது திருமேனிகளை உடையவன். உருவத் திருமேனி நான்கு. இதைக் கீழ்ப்படி என்பர். அருவம் நான்கு. இவை மேற்படி என்பர். அருவுருவத் திருமேனி ஒன்று. இதை நடுப்படி என்பர். இவை பரமசிவன் அருளால் கொள்ளும் நினைப்புருவங்களாகும். இவை முறையே அயன், அரி, அரன், ஆண்டான் எனவும் அருளோன் எனவும், ஒளி ஓசை அன்னை அந்தன் எனவும் கூறப்படுகிறது. இவையெல்லாம் ஆருயிர்களுக்கு வரும் துன்பங்களை அகற்றி இன்பங் கொடுப்பதற்காகவே எடுக்கப்படுகின்றன. இவற்றை தர்க்க ரீதியாக நிறுவ முடியாது. மெய்யுணர்வினால் அவன் தந்த ஞானக் கண்ணினால் தான் உணர முடியும். அதற்கு நம்பிக்கை வேண்டும். சிவன் இருக்கிறான். அவன் என்னைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையுடன் இருந்த மாசிலாமணியின் நம்பிக்கை தான் அவனைக் காப்பாற்றியது என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1735. தேவர் பிரானைத் திசைமுக நாதனை**
**நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை**
**ஏவர் பிரானென் றிறைஞ்சுவா ரவ்வழி**
**யாவர் பிரானடி அண்ணலு மாமே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசனது வீட்டில் நாகராசா இருந்த போது மாசிலாமணி வந்து கதிரேசனின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டுச் சொன்னார்,‘‘எம்மக்களுக்கெல்லாம் சிவனைப் போல இருந்து நன்மைகள் செய்கிறீர்கள். உங்களது ஆசியும் அனுக்கிரகமும் சிவனது ஆசியையும் அனுக்கிரகத்தையும் போன்றது. சென்ற வாரம் காரணமின்றி எனது மனதில் ஏதோ ஒரு இனம் புரியாத கவலை இருந்தது. அதைச் சொன்ன போது என்னைப் பூசை அறைக்கு அழைத்துச் சென்று சிவபூசையைப் பார்க்கச் சொல்லிச் சிவபூசை செய்து விட்டு, ‘‘ கவலைப்படாதே. சில துன்பங்கள் வரப்போவதை மனதில் இருக்கும்

சிவன் உணர்த்துவார். சிவனிருக்கப் பயமில்லை என்று சிவனடியார்கள் எண்ண வேண்டுமே தவிரக் கவலைப்படக் கூடாதென்றீர்கள். அதன்படி எனது வர்த்தக நிலையம் சிவனால் காப்பாற்றப்பட்டு விட்டது. ஒற்றை ரூபாவுக்குக் கூட நட்ட மேற்படவில்லை'' என்றார். அதைக் கேட்ட கதிரேசன் சொன்னார், '' ஒன்பது திருப்பெரும் வடிவங்களுள் நடுவே வீற்றிருக்கும் சதாசிவப்பெருமான் தேவர்களால் வணங்கப்படும் முதல்வனாவார். எண்திசைகளிலும் உள்ள காவல் தெய்வங்கள் அவரை கைகூப்பி வணங்குவர். அயன், அரி, அரன், ஆண்டான் ஆகிய நால்வரும் வணங்கும் சிறப்பு வாய்ந்த தெய்வம் அவன். உயிர்கள் எல்லாம் சிவனை முழுமுதலாக வழிபடுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் அவன் தன்னைத் தொழுபவர்களுக்குத் துன்பம் வரவிடாமையும் கேட்பதைக் கொடுப்பதும் தான் என்று கதிரேசன் கூறிய போது நாகராசா எதுவும் பேசாது தலையைக் குனிந்து கொண்டிருந்தார். அடிக்கடி அவரது வலது கை கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தது. '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1736. வேண்டிநின் றேதொழு தேன்வினை போயற**
**ஆண்டொரு திங்களும் நாளும் அளக்கின்ற**
**காண்டகை யானொடுங் கன்னி யுணரினும்**
**மூண்டகை மாறினும் ஒன்றது வாமே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்,''இருவினைகளும் நீங்கி சதாசிவக் கடவுளின் திருவடியை வேண்டி நிற்போர் எத்துன்பத்தையும் அடையமாட்டார். சூரியனையும், சந்திரனையும் கொண்டே உலகம் அளக்கப்படுகிறது. சூரியனும் சந்திரனும் தான் சதாசிவக் கடவுளின் திருக்கண்கள். அதனால் அவர் உலக நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்கிறார். அவருடன் பிரிப்பின்றி நிற்கும் திருவருளாற்றல் மனோன்மணி எனப்படும். இவ் அன்னை அத்தன் எடுக்கும் எல்லாத்திருவுருவங்களிலும் கலந்திருக்கிறாள். அவர் எடுக்கும் எந்த உருவை வணங்கினாலும் மனோன்மணி அம்மை அவ்வுருவில் கலந்திருப்பதால் அதுவும் சதாசிவ வழிபாடாகும். இதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. புரிந்து கொள்பவர்களுக்குத் துன்பம் இல்லை என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1737. ஆதி பரந்தெய்வம் அண்டத்து நற்றெய்வஞ்**
**சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வம்**
**நீதியுள் மாதெய்வ நின்மலன் எம்மிறை**
**பாதியுள் மன்னும் பராசத்தி யாமே.**

'' சிவனடியார்களே, அதைக் கேட்டுக் கொண்டிருந்த நாகராசாவுக்குக் கவலையைத் தாங்க முடியவில்லை. அவரையும் மீறி விம்மி விம்மி அழுதார். அதைப் பார்த்த கதிரேசன்

சொன்னார்,‘‘துன்பம் வருமுன் காக்க வேண்டும். காக்கத் தவறினால் வரும் துன்பத்தை எதிர்க்க வேண்டும். அழுவதாலோ கவலைப்படுவதாலோ வந்த துன்பங்கள் நீங்க மாட்டாது. அதை நீக்க வேண்டுமானால் சிவபெருமானை வணங்குதல் வேண்டும். ஆதியாகிய அம்மையோடு சேர்ந்திருந்து எல்லா அண்டங்களுக்கும் நன்மை செய்யும் பெரும் சிவத்தெய்வம் அவன். சோதி வடிவாக இருக்கும். அவனை திருவருளின் துணையுடன் மாறாத காதல் கொண்டு இடையறாது ‘நமசிவய’ என்று கூறும் அடியார்களைக் கரை சேர்க்கும் பெருந்தெய்வம். நீதி நிறைந்த தெய்வம். இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கிய தேசநிறை தெய்வம். அவனே எம்தலைவன். அவன் தனது உடம்பில் ஒரு பாதியைத் தனதாக்கிய வனப்பாற்றலாகிய அம்மை பராசக்தியுடன் கூட இருந்து அருள்புரிபவன். அதனால் செய்த தவறுகளை மன்னிக்குமாறு கேட்டு அவனை முழு அன்போடு வணங்கு. உனது அழிந்த தொழில் மேம்படும் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1738. சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே**
**சத்த சிவபதந் தோயாத தூவொளி**
**அத்தன் திருவடிக் கப்பாலைக் கப்பாலாம்**
**ஒத்தல் ஆமீசன் தானான வுண்மையே.**

‘‘ சிவனடியார்களே, மாசிலாமணி சொன்னார், ‘‘ அன்று நான் வெளியூருக்குச் சென்றிருந்தேன். எனது வர்த்தக நிலைய முகாமையாளர் எமக்கு அருகில் இருக்கும் நாகராசாவின் வர்த்தக நிலையம் தீப்பிடித்து விட்டதாகவும் அதை அணைக்க முடியவில்லை என்று கூறியதும் ஒருகணம் சிவன் மீதும் எனக்கு வெறுப்புண்டானது. ஒருகணம் தான் பின் அது நம்பிக்கையாக மாறியது. முகாமையாளர் தீப்பிடித்த நேரத்தில் இருந்து என்னுடன் தொடர்பில் இருந்தார். எனது மனக்கண்ணுக்குள் சிவன் எனது வர்த்தக நிலையக் கூரையில் நிற்பது போன்ற ஒரு பிரமை. நீங்கள் சொல்வீர்கள், ‘‘ சக்தி தத்துவத்திற்கு மேல் இருப்பது அறிவுப் பேராற்றலாகிய பராசக்தி. அப்பேராற்றலுள் இருப்பது சிவன். அதற்குமேல் அறிவுப் பெருவெளி இருக்கிறது. சிவபெருமானாகிய அத்தனின் திருவடி எல்லாம் கடந்த இன்ப நிலையம். அந்த நிலையத்தில் சிவனும் சக்தியும் வீற்றிருந்து அருள்வர் என்றீர்கள். அது தான் எனக்கு நினைவுக்கு வந்தது. அதனால் தான் எனது மனக்கண்ணுள் சிவப் பேரின்ப நிலையம் தோன்றியது. அதனால் தான் எனது வர்த்தக நிலையக் கூரையில் சிவன் அமர்ந்திருக்கும் காட்சி தெரிந்தது என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1739. கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும்**
**எழுந்திடங் காணில் இருக்கலு மாகும்**
**பரந்திடங் காணிற் பார்ப்பதி மேலே**
**திரண்டெழக் கண்டவன் சிந்தையு ளானே.**

“ சிவனடியார்களே, அதைக் கேட்டுக் கதிரேசன் சொன்னார், “ சிவனது சுடர்க் கொழுந்தினைக் கண்டால் உலகத்தில் நடப்பவற்றைத் தெரிந்து கொள்ளலாம். சிவபெருமான் திருமேனி கொண்டு எழுமிடம் திருவருள். இதை உணர்ந்தவரது மனதில் சிவனும் அம்மையும் தோன்றுவர். அப்படித் தோன்றும் சிவன் மெய்யடியார்களின் எண்ணமாகிய சிந்தையுள்த் தோன்றுவன். இது புதினமல்ல. வியப்பும் அல்ல. ஏனெனில் எல்லா உயிர்களிலும் கலந்து விளங்கும் சிவன் தன்னை உள்ளன்போடு தொழும் மெய்யடியார்களுக்குத் துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் அருளுவான் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1740. எந்தை பரமனும் என்னம்மை கூடமும்**
**முந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாஞ்**
**சந்தித் திருந்த விடம்பெருங் கண்ணியை**
**உந்தியின் மேல்வைத் துகந்திருந் தானே.**

“ சிவனடியார்களே, மிக்க மகிழ்வுடன் காணப்பட்ட மாசிலாமணி சொன்னார், “ உங்கள் சொற்படி தான் நான் சிவபக்தனானேன். நான் சிவபக்தனானதால் தான் எனது வர்த்தக நிலையம் காக்கப்பட்டது. எந்தந்தையாகிய சிவபெருமானும் என்தாயாகிய அம்மையாகிய பெருமாட்டியும் மணியொளி போலப் பிரிப்பின்றிக் கூடியிருப்பது ஆருயிர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பதற்காகவே. அது தான் திருவடி உணர்வாகிய சிவஞானம். இருவரும் கூடி இருக்கும் நிலைக்களம் கொப்பூழாகிய சுவா திட்டானமாகும்.அதற்கு மேல் இருக்கும் நெஞ்சில் பெரும் கண்ணியை உடன் வைத்து உவப்புடையவனாவான் என்றீர்கள். என் தந்தையான சிவனும் தாயான அம்மையும் தான் மகிழ்வோடு நெஞ்சில் கூடி இருந்து எனது நெஞ்சம் துன்பமடையாதிருக்க உதவினர். அதற்காகத் தான் அவர்கள் உயிர்களோடு பிரிப்பின்றிக் கலந்திருக்கிறார்கள். கைக்குழந்தை அழுதால் தான் தாய்ப் பால் கொடுப்பாள். ஆனால் அம்மையும் அப்பனும் நாம் எதுவும் கேளாமலே எமக்கு உதவுவர் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1741. சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி**
**சத்தி சிவமுமாஞ் சிவன்சத் தியுமாகுஞ்**
**சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை**
**சத்திதான் என்றுஞ் சமைந்துரு வாகுமே**

“ சிவனடியார்களே, மாசிலாமணி கூறுவதைக் கேட்ட நாகராசா மிகுந்த கவலையுடன் சொன்னான்,“இப்படியெல்லாம் நடக்குமென்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. பணம் தான் உலகை இயக்குவது என்று நினைத்தேன். முயற்சி செய்து பணத்தைத் தேடினால் தலை நிமிர்ந்து வாழலாம் என நினைத்தேன். மாசிலாமணி சொன்ன பின்பு தான் எனக்குப் புத்தி வந்தது ” என்று அழுதான். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார், “ அழுவதாலோ கவலைப்படுவதாலோ எதுவும் நடக்காது. முயற்சிக்கும் தெய்வத்தின் அனுக்கிரகம் வேண்டும். உலகமும் உடல்களும் மாயா காரியப் பொருட்கள். அவை சிவனுடனும் சக்தியுடனும் பொருந்தச் சக்தியின் திருவருளால் எளிதாகத் தோன்றிக் காரியப்படுகின்றன. அதனால் அவ் அருட்செயலை விளையாட்டு என்பர். சக்தி சிவமாகும். சிவம் சக்தியாகும். இவ்விரண்டும் பொருளால் ஒன்றே. அகங்கை, புறங்கை போன்று இரண்டு பெயரில் சொன்னாலும் அது கையையே குறிக்கும். சக்தியும் சிவமும் இல்லாமல் எப்பொருளும் தோற்றமுறாது. நிலைபெறாது. சக்தி தான் எல்லாப் பொருட்களையும் தாங்கும் நிலைக்களம். அதனால் சக்தியே உலகமாகச் அமைந்தது என்று அறிஞர் ஏற்றிச் சொல்வர். அதனால் நீ அம்மையை வழிபடு. உனக்குத் தேவையான பணத்தில் ஒரு பகுதியை நான் தருகிறேன். சிறிதாகத் தொழிலைத் தொடங்கினாலும் அதை வளர்த்து விடுவது அம்மையின் இயல்பு என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 7. சிவலிங்கம்
## (சிவகுரு)

**1742. குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்**
**பரக்கின்ற காற்றுப் பயில்கின்ற தீயும்**
**நிரைக்கின்ற வாறிவை நீண்டகன் றானை**
**வரைத்து வலஞ்செயு மாறறி யேனே.**

“ சிவனடியார்களே, நாகராசா சொன்னான்,“இரண்டு வருடங்களுக்கு முன்பு எனது தம்பிக்குத் திடீரென்று நெஞ்சுவலி வந்து விட்டது. வைத்தியசாலைக்குச் சென்ற பின் சுகமாகி விட்டது. அதைக் கேள்விப்பட்ட கதிரேசன் தம்பியின் வீட்டுக்கு வந்து சொன்னார், மகனே, இந்த இளம் வயதில் வரக் கூடாத வியாதி வந்து விட்டது. இதை இலகுவாகப் போக்கலாம். ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இவ் உலகமும், நீரும், தீயும், காற்றும் நிலைத்து விளங்குவதற்குக் காரணம் சிவனது அருளேயாகும். முழுமுதற் கடவுளாகிய சிவனை நாம் ஒரு குறியில் வைத்து வழிபடல் வேண்டும். அவ்வாறு வழிபட அவனது திருவருள் தேவை. இவ்வுண்மையைப் பலர் அறிவதில்லை. நீ ஆச்சிரமத்திற்கு வா உனக்கு அகத்தவப் பயிற்சி செய்யும் முறையையும் மூச்சுப் பயிற்சி செய்யும் முறையையும் சொல்லித் தருகிறேன். தொடர்ந்து செய். ஒருவருடத்தில் யாவும் சரிவரும்

என்றீர்கள். நான் அவனை வெளிநாட்டுக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு கூற அவன் மறுத்து விட்டு ஆச்சிரமத்திற்கு வந்தவன். ஒருவருடத்தின் பின் அவனது நோய் முழுமையாகக் குறைந்து விட்டது. மருந்துண்ணாமல் பிரார்த்தனை மூலமும் மூச்சுப் பயிற்சி மூலமும் அவனது நோய் குணமானது. அத்துடன் அவனுக்கு இருந்த வேறு சில நோய்களும் சுகமாயின. அதை அவன் சொல்லியும் நான் நம்பவில்லை. இப்போ மாசிலாமணியின் வியாபார நிலையம் எப்படித் தப்பியது என்று இப்போதும் நான் ஆச்சரியப்படுகிறேன். அதிலிருந்து எம்மை மீறிய ஒரு சக்தி இருக்கிறது என்று நான் சொல்ல எனது மனைவி அந்தச் சக்தி சிவம் என்று சொன்னவள். அதை நான் நம்புகிறேன். இனி நான் சிவனை ஒரு குறியில் வைத்து வணங்கப்போகிறேன் என்று நாகராசா சொன்னவன் ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1743. வரைத்து வலஞ்செய்யு மாறிங்கொன் றுண்டு**
**நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி**
**உரைத்தவன் நாமம் உணரவல் லார்க்குப்**
**புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே.**

‘‘ சிவனடியார்களே, எனது தம்பி கதிரேசனுடன் மிகவும் நெருக்கமாகி விட்டான். அவனைக் கேளாமல் அவன் எதையும் செய்யமாட்டான். அதனால் தனது மகளின் பிறந்த தின விழாவுக்கு அவரை அழைத்து அவரை வணங்கித் தனது மகளை ஆசீர்வதிக்குமாறு கேட்டான். அவர் ஆசீர்வதித்து விட்டுச் சொன்னார்,‘‘மகளே, உனது தந்தையைப் போல நீயும் சிவபத்தை. இன்னும் இரண்டு மாதங்களில் உயர்தரப் பரீட்சை எழுதவுள்ளாய். கட்டாயம் நீ மருத்துவப் பீடத்திற்குத் தெரிவாய். நீ சிவனை உள்ளன்போடு வழிபடுபவள். இருப்பினும் சிவபெருமானை ஒரு குறியின் கண் வைத்து வழிபடும் முறை ஒன்று உண்டு. அது திருவைந்தெழுத்தை ஓதும் முறை செம்பொற்குடத்தில் நீரை நிறைத்து வைத்து மலர்களை அதிலிட்டு அதை எடுத்து நந்தியின் நாமமான ‘நமசிவய’ என்று ஓதிச் சிவனின் திருவடியில் சமர்ப்பி. இவ்வாறு அன்போடு வழிபடுபவர்களுக்கு புரிசடை யோனாகிய சிவபெருமான் விட்டு நீங்காது உன்னுடனேயே இருப்பான் உள்ளன்போடு உருகி வழிபட்டால் சிவன் உடனிருந்து உதவிகளைச் செய்வான்’’ என்றவர். தம்பி சிவராசாவின் மகள் கௌரி. மாவட்டத்திலேயே முதல் மாணவி. அவர் அதை அறிந்து தான் சொல்கிறார் என நான் அங்கு கூறிச் சிரித்தேன். அப்போது பத்மநாதன் என்பவர் சொன்னார், ‘‘ நீங்கள் கடவுளை நம்பாவிட்டால் அதை உங்களோடு வைத்திருங்கள். மற்றவர்களைக் கெடுக்காதீர்கள். கதிரேசன் நடமாடும் சிவன். அவர் சொல்லமாட்டார். சொன்னால் நடக்கும். இது உங்களுக்கு அப்படியானதொரு நிலை வந்தால் தான் புரியும் என்றவர். அது உண்மை என்று நாகராசா கலங்கினவன். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1744. ஒன்றெனக் கண்டேயெம் ஈசன் ஒருவனை**
**நன்றென் றடியிணை நானவ னைத்தொழ**
**வென்றைம் புலனு மிகக்கிடந் தின்புற**
**அன்றென் றருள்செய்யும் ஆதிப் பிரானே.**

“ சிவனடியார்களே,நாகராசா கேலியாகக் கூறிப்பெரிதாகச் சிரித்த போது கூட இருந்த பலர் எழுந்து அவ்விடத்தை விட்டுசி சென்றனர். அப்போது சிவராசா சொன்னான், “அண்ணை, விழா நடைபெறும் இடங்களுக்குப் பலர் வருவார்கள். அதனால் நமக்குப் பிடிக்காதவற்றை மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாது. அது வினையை அதிகரிக்கும். மனத்தாபங்களை உண்டு பண்ணும். நானும் உங்களைப் போலத்தான் இருந்தேன். கதிரேசன் அண்ணையின் உபதேசம் என்னை மாற்றியதால் நான் பெரும் இன்பங்களை அனுபவிக்கிறேன். அதற்குக் காரணம் நான் வணங்கும் சிவபெருமானே உலகின் முதல்வன் என்று அருளால் உணர்ந்தமையே. ஆவனை நன்நெறி நான்கையும் அடைய தொழுதலே சிறந்த வழி. அவனது திருவடிகளை நீரும் மலரும் சமர்ப்பித்து தொழுது வந்தால் ஐம்பொறிகளும் அடங்கும். அப்படி அடங்கினால் ஆதிப்பிரானான சிவபெருமான் வெளிப்பட்டு அருளுவான். இதை அனுபவத்தால் தான் உணர முடியும். நீயும் சிவனை வணங்கு உனது குறைகள் யாவும் தீரும் என்றவன். அதையும் நான் கேலி செய்தேன் என்று கேலிக்குள்ளான மாகியாமாலி ஒரு நாள் மிகுந்த கோபத்துடன் சொன்னார், “ உனக்குப் பிடிக்காததை ஏன் மற்றவர்களுக்குச் சொல்கிறாய். வேறுயாராவது உனக்குத் தனக்குப் பிடிக்காதவற்றைச் சொல்கிறார்களா? கடவுளை வணங்கா விட்டால் விடு. அதை ஏன் அடுத்தவருக்குச் சொல்கிறாய். நான் எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கமாட்டேன். சில சமயம் சினம் அதிகரித்தால் கொலைகாரணாகவும் மாறுவன் என்றவன் இருந்தும் நான் திருந்தவில்லை என்று அழுதவர்’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1745. மலந்த வயன்மால் உருத்திரன் மகேசன்**
**பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்**
**நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்**
**பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே.**

“ சிவனடியார்களே, பிறந்த நாள் வைபவத்தில் குழப்பம் ஏற்படுவதைக் கண்ட கதிரேசன் வந்து மாகிலா மணிக்குச் சொன்னார், “மகனே, எல்லோரும் ஒரு மாதிரியாக இருக்கமாட்டார்கள். எல்லாம் சிவனின் அற்புதப்படைப்புக்கள். எத்தனை கோடி மக்கள் வாழ்கிறார்கள் அவர்களின் பெருவிரல் ரேகைகள் ஒருவருடையதைப் போல இன்னொருவருக்கு இல்லை. அப்படியிருக்க மனம் எப்படி ஒன்றாக இருக்கும். சிவநிந்தனை செய்பவன் அழிவைக் கைதட்டி அழைப்பவனாவான். ஆதனால் பேசாது இரு. மாலின் கொப்பூழில் தோன்றிய அயனும் மாலாகிய அரியும், அரனும் ஆண்டானும்,

அருளோனாகிய ஐம்முகனும் ஆமலான வித்தும் நாதங்களும் நன்மையைத் தரும். சக்தி சிவன் வடிவங்களும் குறைவில்லாத இன்பத்தை அள்ளித் தரும். இதை அடைய விரும்புவோர் சிவனைப்பணிய வேண்டும். மலர்களையும் நீரையும் படைத்து வணங்க வேண்டுமே தவிர வேறு எதுவும் செய்யக்கூடாது. கோபம் வினையை அதிகரிக்கும். சிவபக்தன் மௌனமாக இருத்தலே சிறப்பு. அதனால் நன்மைகளை நந்தியெம் பெருமான் தந்தருள்வார். நந்தியெம் பெருமான் தான் சிவபெருமான். அவன் யாவற்றையும் கவனிப்பான் என்றவர். அதைக் கூட நான் கேலி செய்தேன் என்று நாகராசா அழுதவன்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1746. மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்று**
**ஆவி எழுமள வன்றே உடலுற**
**மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்**
**பாவித் தடக்கிற் பரகதி தானே.**

'' சிவனடியார்களே, கேலியாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த நாகராசாவின் அருகில் வந்த கதிரேசன் சொன்னார்,''மகனே, கேலியும் கிண்டலும் ஒரு நாள் பெரும் ஆபத்தைத் தரும். அப்போது தான் உணர்வாய். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்ய முடியாது. அதனால் உனது போக்கைமாற்று. இது ஒரு மங்கல வைபவம். அதைக் காண மகிழ்வுடன் பலர் வந்திருக்கின்றனர். உனது பேச்சுப் பலரைப் புண்படுத்துகிறது. மற்றவர்களை மதிப்பவன் தான் சிறந்த மனிதன். சிறந்த கல்வியாளன் என்று நூல்கள் கூறுகின்றன. மனிதன் மூலத்திடமிருந்து நடுநாடி வழியாகச் செல்லும் மூல அனலை எழுப்பி அதனோடு சென்று உயிர் உச்சித் துளையின் வழி வெளியேறும் வரை அதாவது இறக்கும் வரை உயிர் உடலோடு இருக்கும் மட்டும் செய்ய வேண்டியவற்றை ஒருவன் நல்ல நூல்களைப் படித்தும் நுண்ணுணர்வாலும் அறிந்து கொள்ள வேண்டும். அப்படி உணர்ந்து உயிர்ப்பினை அடக்கிச் சிவனைத் தொழுவதால் சிவனது திருவடிப்பேறான பரகதி நிலை உருவாகும். அது உருவானால் உயிர்களில் காணப்படும் வேறுபாடுகள் தெரியாது. உலகம் புரியும். உலகத்தைப் புரிந்து கொள்பவன் மனிதரில் மாணிக்கமாவான். இவற்றைப் பல முறை சொல்லியும் உணர்கிறாய் இல்லை. நீ வேறு எதுவும் செய்ய வேண்டாம். சிவநிந்தனை செய்யாதே. அதைச் செய்யாது விட்டால் நீ அனைத்தையும் உணர்வாய் என்றவர். அதைக் கூட நான் கேட்கவில்லை என்று நாகராசா அழுதவன். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 8. சம்பிரதாயம்
## (பண்டை முறை)

**1747. உடல்பொருள் ஆவி உலகத்தாற் கொண்டு**
**படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து**
**நொடியின் அடிவைத்து நண்ணுணர் வாக்கிக்**
**கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே.**

“ சிவனடியார்களே,அன்று காலை ஆச்சிரமத்திற்கு வந்த பறைமேளம் அடிக்கும் வரதன் திக்குப் பிரமை பிடித்தவன் போல நின்று சொன்னான்,“சுவாமி, தென்நாடுடைய சிவன் ஆருயிர்களின் பேரின்பத்திற்காகச் சிவகுருவாகத் தோன்றி அவர் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அன்புடன் ஒப்புவித்தால் அவர் ஆட் கொண்டருள்வார் என்றும் அவரது எஞ்சு வினையான சஞ்சிதம் முற்றாக அற்றுப் போவதற்காக திருவுள்ளம் கொண்டு பார்த்தலாகிய திருக்கண் முடியில் வைத்தலும், திருவடியை முடியில் வைத்தலும், செந்தமிழ் மந்திரமான திருவைந்தெழுத்தை செவியறிவுறுத்தலும் செய்து தீக்கையைப் புரிந்தருள்வன். இச்சிவதீக்கையால் பிறப்பறும் திருவடிபேறும் கிடைக்கும் என்று சொல்வீர்கள். நேற்று இரவு என்னை நாடி எனது கோவிலுக்கு வந்த சிவகுரு எனது தலையில் தனது திருக்கையையும் திருவடியையும் வைத்து ஐந்தெழுத்து மந்திரத்தை முறைப்படி ஓதி தீக்கையும் வைத்தார். நெடுநேரம் அளவளாவினார். நீ கதிரேசனது ஊரில் இருக்கும் ஆச்சிரமத்திற்குப் போ. அங்கு வந்து உன்னைச் சந்திக்கிறேன் என்றவர். அதனால் தான் விடியுமுன் புறப்பட்டு வந்தேன் என்று வரதன் சொன்னவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1748. உயிருஞ் சரீரமும் ஒண்பொரு ளான**
**வியவார் பரமும்பின் மேவும் பிராணன்**
**செயலார் சிவமுஞ் சிற்சத்தி யாதிக்கு**
**உயலார் குருபரன் உய்யக்கொண் டானே.**

“ சிவனடியார்களே, வரதன் தன் நினைவில்லாது கூறிக்கொண்டிருக்கும் போது நாகராசா ஆச்சிரமத்திற்கு வந்தான். அவனுடன் கதிரேசனும் வந்தார். நாகராசாவைக் கண்டதும் வரதன் சொன்னான்,“நாகராசா, உனது கேலிக்கும் கிண்டலுக்கும் சிவனா கிடைத்தார்? அனுபவித்திருப்பாயே. சிவன் தந்த உயிரும் உடலும் பெருமைக்குரிய சிறந்த பொருட்கள். அதை உணர்ந்து மிக்க மகிழ்வுடன் அவற்றைப் பேணவேண்டும். அவற்றை நல்ல முறையில் பேணவேண்டுமானால் சிவனைப் போற்ற வேண்டும் அவற்றைப் பேணினால் தான் திருவடி இன்பம் உண்டாகும். நீ உனது உடலைப் பேணினாரே தவிர

நிலைத்திருக்கும் உயிரைப் பேணவில்லை. உயிரைப் பேணாதவர்கள் பிறவிகள் தோறும் துன்பப்படுவர். உடலினதும் உயிரினதும் இன்ப துன்பங்களை உயிர்க்குயிராகத் திகழும் சிவமும் சிற்சக்தியும் ஏற்றுக்கொள்ளும். அப்படி ஏற்கும் போது துன்பங்கள் யாவும் இன்பமாகும். அந்நிலை ஏற்படும் போது சிவன், சிவகுருவாக வந்து ஆட்கொள்வான். எனது குரு சற்று நேரத்தில் இங்கு வரப்போகிறார் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1749. பச்சிம திக்கிலே வைத்தஆ சாரியன்**
**நிச்சலும் என்னை நினையென்ற வப்பொருள்**
**உச்சிக்குங் கீழது வுண்ணாக்கு மேலது**
**வைச்ச பதமிது வாய்கிற வாதே.**

“ சிவனடியார்களே, வரதன் திடீரென்று குரு வந்து விட்டார் என்று பயங்கரமாகக் கத்தினான். நாம் திரும்பிப் பார்த்தோம். யாரையும் காணவில்லை. வரதன் வாருங்கள், வாருங்கள் என்று கூற வயது முதிர்ந்த ஒருவர் கமண்டலத்துடனும் கையில் ஊன்று கோலுடன் வந்தார். கதிரேசனும் நல்லைநாதனும் ஓடிச் சென்று அவரின் பாதத்தைப் பற்றி வணங்கினர். பின்பு அவரது பாதங்களைக் கழுவி இருக்கையில் இருத்தினர். வந்தவர் வடக்கு நோக்கி அமர்ந்தார். வரதன் கிழக்கு முகமாக அமர்ந்தான். சிவகுரு சிவசிவ என்று ஓதியபடி இருந்தார். சிவனுக்குப் பிடித்தமானது செந்தமிழ் மறையான சிவசிவ என்பதேயாகும். வரதனும் கூடியிருந்தவர்களும் முறைப்படி செந்தமிழ் மந்திரமான ‘சிவசிவ’ என்பதை முறைப்படி ஓதினர். சிவன் உறையும் இடம் உச்சிக்குக் கீழும் உண்ணாக்குக்கு மேலும் ஆகும். சிவனை விட்டு நீங்காத உயிருக்கும் நனவில் உயிர்ப்பு அடங்கும் தவநிலையில் பிறப்பு உண்டாகாது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1750. பொட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனைப்**
**பொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்**
**தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்**
**வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே.**

“ சிவனடியார்களே, சிவகுரு சொன்னார், “ மனம் போனபடி எல்லா இடங்களிலும் அலைந்து பிதற்றித் திரிந்த என்னை,மனம் விரும்பிய தீயவழிகளிற் செல்லாமல் தடுத்து, உயிரோடு ஒட்டி உறைந்து எனது மனதில் உள்ள தீயகுணங்களை அருளால் நீக்குபவன் சிவன். அவன் தன்னைப் போல என்னையும் செம்மையாக மாற்ற ‘ சிவயநம ’ என்ற தமிழ் மந்திரத்தை சிவசிவ என மாற்றியமைத்தருளினான். ‘நம’ என்ற பெயருடன் இருந்த என்னைச் ‘சிவ’ வொடு இருக்குமாறு மாற்றியவன் சிவன்”

“ அடியார்களே, இளமையில் நான் மனம் போனபோக்கிற்கே வாழ்ந்தேன். மதுபான வகைகளைக் குடித்தேன். பெண்கள் பின்னால் அலைந்தேன். தற்செயலாக நல்லவர் ஒருவரின் நட்புக்கிடைத்தமையால் சிவனது பெருமையை அறிய முடிந்தது. அந்தப் பெரியவர் சொல்வார். “ ஒருமுறை சிவனை அழைத்து அவர் உன்னை வந்தடைந்தால் உனது தீயகுணங்கள் யாவும் அற்றுவிடும் ” என்றார். அது உண்மை இப்போ சிவஉலகத்தில் சிவ நிழலில் நான் இருக்கிறேன் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1751. தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவன்**
**இருக்கின்ற தன்மையை யேதும் உணரார்**
**பிரிக்கின்ற விந்து பிணக்கறுத் தெல்லாங்**
**கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண் டேனே.**

“ சிவனடியார்களே,சிவகுரு சொன்னார், “ மெய்யடியார்களே, சிவனைக் காண்பதற்குச் சிவனின் அருள்தேவை. அவன் அருளால் தான் அவனைக் காணலாம். சார்ந்திருக்கின்ற உலகம் உடல் உயிர் அனைத்திற்கும் முழுமுதல்வன் சிவபெருமான். அவன் ஒன்றாய் வேறாய் உடனாய் என்றும் நின்றருளும் மெய்ப்புணர்பு நிலையின் உண்மையினை சிறிதளவு கூட உணரார். விந்துவாகிய மாயை, உடையானாகிய சிவனையும் அடைவானாகிய உயிரையும் இடை நின்று பிரிக்கின்றது. அங்ஙனம் பிரிப்பதாகிய மாறுபாட்டினை நீக்கி, எல்லாவற்றையும் தன் பெரு நிறைவில் கருக்கொள்வதாகிய அடக்குதலைச் செய்தருளும் சிவபெருமானைக் காண விரும்புவோர் அவனது திருவருளின் துணையாலே தான் காணமுடியும். நானும் அவனை அவனது திருவருளினாலே கண்டு கொண்டேன் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1752. கூடும் உடல்பொருள் ஆவி குறிக்கொண்டு**
**நாடி யடிவைத் தருண்ஞான சத்தியால்**
**பாடல் உடலினிற் பற்றற நீக்கியே**
**கூடிய தானவ னாங்குளிக் கொண்டே**

“ சிவனடியார்களே, சிவகுரு தொடர்ந்து சொன்னார், “ அடியார்களே, ஆருயிர்கள் வினைக்கீடாகச் சிவனால் கூட்டப்பட்ட மாயாகாரிய உடலுடன் கூடியிருக்கின்றன. அவ்வுடலையும், அதனால் ஈட்டிய பொருட்களையும், அவற்றால் வாழும் உயிர்களையும் தனது திருவடியில் சேர்த்துத் தூய்மையும் இன்பமும் சேர்ப்பித்தல் வேண்டும் என்றும் குறிப்பினைத் திருவுள்ளம் கொண்டு நாடியிருப்பவன் சிவன். காலம் கனிந்ததும் அவ்வுயிர்களுக்கு தனது திருவடியைச் சூட்டியருள்வன். தனது திருவருளாற்றலால்

அவ்வுயிர் உடலில் இருந்து அனுபவித்த துன்பங்களையெல்லாம் நீக்கியருள்வான். அவ்வாறு நீக்குவதால் உயிரினது பற்றுக்கள் யாவும் அற்றுப்போகும். இதுவரை உயிருடன் மறைந்து நின்ற அவன் வெளிப்பட்டு உயிரைத்தனதாக்கி விடுவன். இதுவே தானவனாகும் நிலை என்றார். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1753. கொண்டா னடியேன் அடிமை குறிக்கொள்ளக்**
**கொண்டான் உயிர்பொருள் காயக் குழாத்தினைக்**
**கொண்டான் பலமுற்றுந் தந்தவன் கோடலாற்**
**கொண்டா னெனவொன்றுங் கூறகி லேனே.**

‘‘ சிவனடியார்களே, சிவகுரு தனது மாணவர்களுக்குச் சொன்னார், ‘‘ அன்பான மாணவர்களே, சிவன் மீது கொண்ட அளவற்ற காதலால் நான் சிவனுக்கு அடிமையாக விரும்பினேன். அவனும் எனது அன்பைப் புரிந்து என்னைத் தனது அடிமையாக ஏற்றுக் கொண்டான். எனது உயிர், உடல், பொருட்கள் யாவும் அவனால் தரப்பட்டது. அனைத்தையும் நான் எனது பொருள் போலப் பாவிக்கலாம். அவற்றிலிருந்து பயனை அனுபவிக்கலாம். ஆனால் அதை அவன் தந்தது போல மீண்டும் அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும். இது ஒரு பொருளை இரவலாகப் பெற்றவன் அதன் பயனை அனுபவித்த பின் வாங்கிய பொருளை அவனிடம் ஒப்படைத்தல் போன்றது. நான் முன்பு கமம் செய்தேன். எனது இனத்தவர் ஒருவரின் வயல் நிலம் அது. ஐந்து வருடங்கள் நெல் விளைத்தேன். பின் அந்நிலத்தை மிகவும் மகிழ்வுடன் அவன் தந்த போது இருந்தபடி ஒப்படைத்தேன். இது போன்றது தான் அது என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1754. குறிக்கின்ற தேகமுந் தேகியுங் கூடி**
**நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்**
**பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை**
**பிறக்க அறியாதார் பேயுடன் ஒப்பரே.**

‘‘ சிவனடியார்களே, சிவகுரு தொடர்ந்து சொன்னார்,‘‘மாணவர்களே, சிவபெருமான் நன்மை செய்யுமாறு தந்த உடலும், உடலை உடமையாகக் கொண்ட உயிரும் அருள் நினைவுடன் இருந்தால் அவை செம்மையாக இருக்கும். உயிர்ப்புடன் கூடிய உயிர் நிலை பெற்று வாழ்கின்றது. அவ்வுயிர் காலவரைக்குட்பட்டது. காலம் முடிந்ததும் கூற்றுவனால் அவ்வுடல் பறிக்கப்படும். அப்போது அவ்வுயிரும் உடலும் சிவனது திருவடி நிழலை அடைதல் வேண்டும். இதையறியாதவர்கள் பயனிழந்து அலையும் பேயைப் போன்றவர்கள். எனது ஊரிலுள்ள ஆச்சிரமத்திற்கு ஒரு வர்த்தகர் வருவார். ஆச்சிரமத்திற்கு வந்து வழிபடுவாரே தவிர யாருக்கும் பொருட்களைக் கொடுக்கமாட்டார். ஒரு நாள் எமது ஆச்சிரம மாணவன் விபத்துக்குள்ளாகி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான்.

வைத்தியர்கள் அவசரமாக ஒரு மருந்து தேவையென்றனர். அந்த வர்த்தகனுக்கு நான் அப்பணத்தைக் கொடுக்கும்படி சொன்னேன். அவன் கொடுக்கவில்லை. ஆச்சிரமத்திற்கு வரும் ஒரு வறியவர் அப்பணத்தைக் கொடுத்தமையால் அவன் உயிர் பிழைத்தான். சில வருடங்கள் செல்ல அந்த வர்த்தகனின் மகளுக்கு அந்த வறியவனின் மகனுக்குத் திருமணம் பேசபட்டது. சீதனமாக பல கோடி ரூபா தருவதாக அந்த வர்த்தகன் கூறினான். ஆனால் அந்த வறியவர் மறுத்து விட்டார். பல கோடி ரூபா கொடுத்தும் அவர் தனது மகனுக்கு வர்த்தகரின் மகளைத் திருமணம் செய்யாததால் அவனுக்கு ஏதோ பெரிய குறை இருப்பதாக மக்கள் பேசிக் கொண்டனர். அதனால் யாரும் அவளைத் திருமணம் செய்ய முன் வரவில்லை. அந்த வர்த்தகன் இப்போ தனது மகளின் திருமணத்தை முடிக்கப் பேயாக அலைகிறார் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1755. உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்**
**உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை**
**உணர்வுடை யார்கள் உணர்ந்தவக் காலம்**
**உணர்வுடை யார்கள் உணர்ந்துகண் டாரே.**

“ சிவனடியார்களே, திருவருளின் வசப்பட்டவர்களான திருவடி உணர்வுடையவர்கள் உலகத்தின் உண்மையான இயல்பினை அறிவார்கள். ஒரு பொருளின் உண்மை நிலையை உணரும் முறைகள் மூன்றாகும். அவை திரியக் கண்டல், இரட்டுறக் கண்டல், தெளியக் கண்டல் என்பனவாகும். உலகினதும் உடல்களினதும் வடிவினை ஆராயாது தோற்றத்தளவில் காணுதல் திரியக் கண்டலாகும். அவை மலம் என்றும் அறிவில்லாதனவென்றும் தோன்றி மறைவன என்றும் உருவுள்ளனவென்றும் காண்பது இரண்டுறக் காண்டல் எனப்படும். அவை ஆண்டவனின் திருவடியை ஆருயிர் அடைவதற்கு அவனருளால் தரப்பட்ட இரவற்கருவிகள். அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு அவன் பால் ஒப்புவிப்பதே முறைமையும் கடமையும் என்று நெஞ்சில் நினைப்பதே தெளியக் கண்டல் ஆகும். இம்முறையால் உணர்வோரின் நெஞ்சில் உலகின் உண்மை தோன்றும். உலகின் உண்மை தோன்றியவர்களுக்கு பிறர் அனுபவிக்கும் மூவகையான துன்பங்களும் இல்லை. சிவகுருவின் அருளால் சிவனை உணர்ந்த மெய்யடியார்களுக்கு முப்பொருளின் உண்மையும், அப்பொருளின் தொடர்பினையும் திருவடியினையும் செப்பமாக உணர்வர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1756. காயப் பரப்பில் அலைந்து துரியத்துச்**
**சால விரிந்து குவிந்து சகலத்தில்**
**ஆயவவ் வாறா றடைந்து திரிந்தோர்க்குத்**
**தூய அருள்தந்த நந்திக்கென் சொல்வதே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்கள் எல்லையின்றி வரும் பிறப்புக்களை எடுத்து நபியாகிய கொப்பூழின் கண் உயிர்பென்னுடன், பேருறக்கமாகிய தூய நிலையினை எய்தும். அந்நிலையில் மிக விரிந்து உயிர் குவிந்து அடங்கி நிற்கும். இது கேவலமாகிய புலம்புடன் ஒக்கும். பின்பருவுடல், நுண்ணுடல், பண்புடல், போர்வையுடல், முதலுடல் என்னும் ஐவகை உடல்களுடனும், முப்பத்தைந்து கருவிகளுடனும் புணர்வினை எய்தும். இவற்றுடன் உழன்று செவ்விவாய்ந்தோருக்கு அருள் தந்து தூய்மை உண்டாகும். இத்தூய்மையானது உண்மையை உணர்ந்து அவற்றின் கண் பற்றி ஆண்டான் கண் பற்று வைத்து ஒழுகுதல் ஆகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1757. நானென நீயென வேறில்லை நண்ணுதல்**
**ஊனென வூனுயிர் என்ன வுடனின்று**
**வானென வானவர் நின்று மனிதர்கள்**
**தேனென இன்பந் திளைக்கின்ற வாறே.**

“ சிவனடியார்களே, சிவனும் உயிரும் தன்மை முன்னிலைகளால் பெறப்படும். நான் நீ என்பன போன்று பிரிந்து தோன்றும் பொருளல்ல. அவை உடல் உயிர்ப்போலக் கலப்பால் ஒன்றாய் நிற்பன. வானம் ஏனைய பூதங்களுடன் ஒன்றாய் உடன் நின்று இயங்குவது போல உடனாய் சிவன் நின்று அருள்வன். வானவர்கள் தொலைவாக அகல மனிதர்கள் சிவபெருமானின் திருவடியில் சேர்ந்து திருவடி இன்பத்தேனைப் பருகுவர். அந்நிலை ஒருசார் பொருள் தன்மையால் வேறாகும். இத்தகைய முப்புணர்ப்பால் இன்பத்தை அனுபவித்து மகிழ்கின்றவாறாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1758. அவனும் அவனும் அவனை யறியார்**
**அவனை யறியில் அறிவானும் இல்லை**
**அவனும் அவனும் அவனை யறியில்**
**அவனும் அவனும் அவனிவ னாமே.**

“ சிவனடியார்களே, உலகியலாகிய அன்பியலிலும் வீட்டியல்பாகிய அருளியலிலும் தனித்தனியாக ஒழுகுவோன் அவன் அவன் என இருமுறை ஓதப்பட்டுள்ளான். அவ்விருவரும் அவனாகிய சிவனை ஆராய்ந்து அறிவாரேயன்றி உண்மையை அறியார். அவனாகிய சிவனின் உண்மை நிலையை அறிந்தால் ஆருயிருக்குச் சிற்றுணர்வு இராது. அவ்வுயிருக்குச் சிவனது முற்றுணர்வே உண்டு. அதனால் சிற்றுணர்வு தான் நிலையானது. அதனால் அவனை அறிவார் இல்லை. அவனை அவனின் திருவருளால் உணர்வோர் பேரின்பத்தை அனுபவிப்பர். இவர்களே ஞானநெறியினராவர். இந்நெறியினரைப் போல அன்பியல் அருளியலாகிய இரு நெறியினரும் காண்பரேல் அவர்களும் அவனருளால்

அவனே யாவர். அதுவே அவன் இவனாம். அன்பியலாரைக் கன்மகாண்டி என்றும், அருளியலாளரைப் பத்தி காண்டி என்றும் கூறுவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1759. நானிது தானென நின்றவ னாடோறும்**
**ஊனிது தானுயிர் போலுணர் வானுளன்**
**வானிரு மாமுகில் போற்பொழி வானுளன்**
**நானிது வம்பர நாதனு மாமே.**

**1760. பெருந்தன்மை தானென யானென வேறாய்**
**இருந்தது மில்லைய தீசன் அறியும்**
**பொருந்தும் உடலுயிர் போலுமை மெய்யே**
**திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே.**

“ சிவனடியார்களே, பெருந்தன்மையாகிய தான் என்றும் சிவனும் உயிரும் இடத்தால் வேறுபட்டு இருந்ததில்லை. கலப்பால் ஒன்றாகவே இருக்கும். இவ்வுண்மை திருவடி உணர்வு பெற்றுச் சிவனாவரே அறிவர். ஆருயிர்களுக்கு மாயாகாரியமாகிய உடல் இருப்பது போல உடையானுக்கு திருவருளாகிய திருமேனி உள்ளது. அத்திருமேனி இயல்பாகவே அமைந்த திருமேனியாகும். அதனால் யாவரையும் திருந்தச் செய்கின்றவன் சிவன் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 9. திருவருள் வைப்பு

**1761. இருபத மாவ திரவும் பகலும்**
**உருவது வாவ துயிரும் உடலும்**
**அருளது வாவ தறமுந் தவமும்**
**பொருளது வுள்நின்ற போகம தாமே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு இருநிலைகள் உண்டு. அவை அறியாமையான இருள் நிலை. அடுத்தது அறிவான பகல் நிலை. ஆருயிருக்கு மாயாகாரியம் உடன் இருப்பது போன்று திருவருளுக்கு ஆருயிர் உடலாக இருக்கிறது. அருள் என்பது அன்பியலில் அறமும், அருளியலில் தவமும் ஆகும். பொருள் என்பது நீருள் வெப்பம் போல திருவருளில் உள்நிற்கும் சிவனாகும். பொருள் என்பது ஆருயிரின் நுகர்வான பேரின்பம். அதுவே சிவயோகம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1762. காண்டற் கரியன் கருத்திலன் நந்தியுந்**
**தீண்டற்குஞ் சார்தற்குஞ் சேயனாத் தோன்றிடும்**
**வேண்டிக் கிடந்து விளக்கொளி யானெஞ்சம்**
**ஈண்டிக் கிடந்தங் கிருளறு மாமே.**

“ சிவனடியார்களே, நந்தியாகிய சிவன் ஆருயிரின் சுட்டறிவினால் கண்டு கொள்ள முடியாதவன். திருவடியுணர்வு இல்லாதவர்களுக்கு நெடுந்தொலைவில் உள்ளவன் போலத் தோன்றுபவன். திருவருளைப் பெற்று அன்புடன் தொழுவோர்க்கு உள்ளுணர்வில் அவன் தென்படுவான். அவனைப் பேணலாகிய தவத்தைச் செய்வாருக்குச் சிவஞானம் தோன்ற ஆணவ வல்லிருள் அகலும். ”

“ சிவனடியார்களே, நாகராசாவின் மனம் பரபரப்புடனேயே இருந்தது. அவரால் நிம்மதியாக ஒரு நிமிடம் தன்னும் சிவனை வணங்க முடியவில்லை. அதை அவர் சொன்ன போது கதிரேசன் சொன்னார், “ நாகராசா, எல்லா நினைவுகளையும் சிவனிடம் ஒப்படை. அவர் என்னை வாழவைப்பார் என்று நினை. அந்த நினைவோடு மெய்யன்புடன் வேறு நினைவுகள் இன்றிச் சிவனை வணங்கு. கண்ணப்ப நாயனாருக்கு ஒரு சில நிமிடங்களில் சிவன் தோன்றியருளியவன். சிற்றறிவால் எதையும் உணர முடியாது. அறிய முடியாது. பரபரப்பான மனதுடன் உணவு உண்டால் அதன் சுவை தெரியாது. அந்த உணவின் சத்து உடலோடு சேரும். மனம் ஒரு நிலைப்படாவிட்டால் கைக்கு எட்டக்கூடிய இடத்தில் இருக்கும் கனியைக் கூடப் பறிக்க முடியாது. மனம் ஒரு நிலைப்படாதவிடத்து அருகில் இருக்கும் சிவன் நெடுந்தூரத்தில் இருப்பவன் போலாவன். மனதை ஒரு நிலைப்படுத்த மனதைச் சிவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1763. குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்**
**வெறுப்பிருள் நீங்கில் விகிர்தனும் நிற்குஞ்**
**செறிப்புறு சிந்தையைச் சிக்கென நாடில்**
**அறிப்புறு காட்சி அமரரு மாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்,“அடியவனுக்குச் சிவன் அடியவன். மெய்யடியார்களின் துன்பத்தைத் தீர்க்க அவன் எந்தச் செயலையும் செய்வான். அசுரர்களுக்குச் சாகாவரமளித்த அவன் அடியார்களுக்கு அசுரர்கள் துன்பம் செய்தமையால் வரத்தை மீறி அழித்தவன். தன்னை அன்போடு வழிபடும் மெய்யடியாரின் உள்ளத்துள் புகுந்து அவர்களின் அறியாமையை நீக்கி விளங்கி நிற்பான். உணர்வுகளை ஒடுக்கி மெய்யன்புடன் அவனை வணங்கினால் நாம்

நினைத்தவற்றையெல்லாம் முடித்து வைப்பன். அசுரர்கள் மெய்யன்புடன் தவம் செய்தமையால் அந்த அன்பில் மெய் மறந்து அவர்கள் கேட்ட வரங்களை ஆராயாது வழங்கியவன். பின் அவர்களை ஆணவத்தால் அழித்தனர். ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம் போலத் திருவருளுக்கு மனதின் பரபரப்பு விசமாகும். ஐம்புலன்களையும் ஒடுக்கு. உனது தொழிலகம் எரிந்ததை மற. எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படை. அதன் பின் கேள் கிடைக்கும் என்றவர் '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1764. தேர்ந்தறி யாமையின் சென்றன காலங்கள்**
**பேர்ந்தறி வானங்கள் பிஞ்ஞகன் எம்மிறை**
**ஆர்ந்தறி வாரறி வேதுணை யாமெனச்**
**சார்ந்தறி வான்பெருந் தன்மைவல் லானே.**

‘‘ சிவனடியார்களே, நாகராசா மிகவும் மனம் குழம்பியதால் அவன் கதிரேசன் சொல்வதை அக்கறையுடன் கேட்கவில்லை. கதிரேசன் சொன்னார்,‘‘உனது தம்பியான சிவராசாவுக்கு இருதயத்தில் தாக்கம் ஏற்பட்ட போது நீயும் உனது தம்பியும் என்ன சொன்னீர்கள். உன்னைப் போல உனது தம்பிக்கும் சிவன் மீது நம்பிக்கை இல்லை. நீ அவனைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டு செல்ல விரும்பினாய். உனது தம்பியின் மனைவிக்குச் சிவன் மீது அளவில்லாத நம்பிக்கை இருந்தமையால் எனது சொல்லைக் கேட்டு அதன்படி நடந்தாள். இப்போ பூரண சுகம். அதற்கும் ஒரு காலம் தேவை. நாம் ஒரு மரத்தை நட்டால் அது பலன் தர காலம் தேவை. உடனே பலன் தா என்று கேட்டால் அது தருமா? உனது மனம் பக்குவப்படவும் காலம் தேவை. முதலில் சிவனை நம்பு. வீணாகக் காலத்தைக் கழிக்காதே. ஐந்தெழுத்து மந்திரத்தை உளத்தூய்மையோடும் பக்தியோடும் நம்பிக்கையோடும் ஓதாவிட்டால் பல வருடங்கள் கழிந்தாலும் பயன் கிடைக்காது. மெய்மையை உணர்ந்தால் அறியாமை நீங்கும். அது நீங்கினால் நம்பிக்கை உண்டாகும். அந்த நம்பிக்கை தான் திருவடியுணர்வை உண்டாக்கும். அது வந்தால் சிவனின் அருள் கிடைக்கும். இல்லாவிட்டால் பயனில்லை என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1765. தானே யறியும் வினைகள் அழிந்தபின்**
**நானே யறிகிலன் நந்தி யறியுங்கொல்**
**ஊனே யுருதி யுணர்வை யுணர்ந்தபின்**
**தேனே யனையனந் தேவர் பிரானே.**

‘‘ சிவனடியார்களே, நாகராசாவுக்கு அப்போதும் நம்பிக்கை வரவில்லை. அப்போது ஆச்சிரமத்திற்கு வந்த நாகராசாவின் தம்பி சிவராசா சொன்னான், ‘‘அண்ணா, கதிரேசன் நடமாடும் சிவன். அவர் சொல்வது நடக்கும். நான் ஏதாவது வர்த்தகத்தில்

மாறுதல் செய்ய வேண்டும் என்று நினைத்தால் அவரிடம் கேட்டுத் தான் செய்வேன். பெரும்படிப்புப் படித்த கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கதிரேசனை மதிப்பதில்லை. ஒழுங்காகக் கையொப்பமிடத் தெரியாத அவரை எல்லாம் தெரிந்தவர் என்று எல்லோரும் போற்றிப் புகழ்கின்றனர். மடையர்கள் என்றவர். ஒரு விழாவுக்கு வந்த அமைச்சின் செயலாளர் கதிரேசனின் பாதங்களை அவர் பணிந்த போது கந்தசாமி திகைத்துவிட்டார். அவர் சொன்னார், கல்வி வேறு அறிவு வேறு. ஞானம் வேறு. ஞானம் உள்ளவன் உலகை அறிவான். கல்வியாளன் பல விடயங்களை அறியாமையால் செய்து துன்பப்படுவன். கதிரேசன் ஞானி. அவரிடம் இருந்த அறியாமையைச் சிவன் நீக்கியதால் அவர் முக்காலங்களையும் உணர்ந்தவர் என்றவர். நீ உனது பிடிவாதத்தால் அழிந்து போகாதே. ஒருவரின் இருவினையும் திருவருளால் அழிந்தால் அவர் தன்னைத் தானே திருவருளின் துணையால் அறிந்து கொள்வார். அதன் பின் அவரின் மலம் மாயை கன்மம் ஆகியவற்றை அகற்றி விடுவார். அதனால் அவர் ஞானியாகி முக்காலங்களையும் உணர்ந்து கொள்வார். உள்ளம் உருகித் தொழுது உணரப்படும் உணர்வாகிய சிவனை உணர்ந்த பின் அவர் தேனைப் போலச் சுவையான பேரின்பத்தை அனுபவிப்பர் என்று கதிரேசன் சொல்வது உண்மை. அதனால் நீ மெய்யுணர்வுடன் சிவனைத் தொழு என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1766. நானறிந் தன்றே யிருக்கின்ற வீசனை**
**வானறிந் தாரறி யாது மயங்கினர்**
**ஊனறிந் துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர்**
**தானறி யான்பின்னை யாரறி வாரே.**

“ சிவனடியார்களே, எஞ்சுவினை, ஏறுவினை ஆகிய இருவினைகளும் அற்றுப்போனதும் திருவருளால் நான் சிவனை அறிந்தேன். வினைக் கீடாகத் துறக்கவுலகம் சென்று நல்வினைப் பயனான இன்பத்தை அனுபவித்து மீண்டும் பிறக்கும் தன்மை இல்லாத தேவர் சிவனை அறியமாட்டார்கள். உடலை உயிருடன் பொருத்தி அவ்உயிர்க்கு உயிராக நின்று இயக்கும் சிவபெருமானை அவனருளால் மெய்யன்பு பூண்ட அடிமையாகிய அவனும் அறியாது விட்டால் வேறு யார் அறிவார்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1767. அருளெங்கு மான அளவை யறியார்**
**அருளை நுகரமு தானதுந் தேரார்**
**அருளைங் கருமத் ததிசூக்க முன்னார்**
**அருளெங்குங் கண்ணான தாரறி வாரே.**

“ சிவனடியார்களே, திருவருளாற்றல் பிரிப்பின்றி எங்கும் நிறைந்து நிற்கும் தன்மையை உணராதவர்கள். அதன் உண்மை நிலையினையும் உணரமாட்டார். அத்துடன் ஐந்தொழில்களையும் ஐவரைக் கொண்டு சிவனின் ஆணை செய்விப்பதையும் உணரமாட்டார்கள். இவற்றை அறிய வேண்டுமானால் திருவருளை அறிந்து அதன் அருளைப் பெறுதல் வேண்டும். இல்லாவிட்டால் எதையும் அறியாத பேதைகளாகத் தான் வாழ்வர். அப்படியானதொரு வாழ்வைத் தான் நாகராசா வாழ்ந்து கொண்டிருந்தான் என்பதை உணர்ந்த கதிரேசன் சொன்னார், “ நாகராசா, நீ பணத்தைத் தவிர வேறு எதையும் நம்பவில்லை. உனது மகள் வேணி தன்னுடன் வேலை செய்யும் காந்தரூபன் என்பவரோடு சிரித்துப் பேசுவதால் அது காதல் என்று நினைத்து அவளைத் தொழிலுக்குச் செல்லவிடாமையை அறிந்த காந்தரூபன் தான் காதலித்த பெண்ணை மணந்தவன். அவள் திரும்பித் திரும்பச் சொல்லியும் நீ நம்பவில்லை. பெற்ற பிள்ளையை நம்பாத நீயா திருவருளை நம்பப் போகிறாய். கடவுளை நம்பு முன் சமயத்தத்துவங்களையும் கதைகளையும் நம்ப வேண்டும். கதைகள் கட்டுக்கதைகள் என்று நினைப்பவனால் திருவருளை உணரமுடியாது. ஐந்தொழில்கள் நடைபெறுவதையும் நம்ப முடியாது. நம்பாதவன் வாழ்க்கையில் நடைபெறும் சிறு விடயங்களைக் கூட நம்பமாட்டான் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1768. அறிவில் அணுக அறிவது நல்கிப்**
**பொறிவழி யாசை புகுத்திப் புணர்ந்திட்டு**
**அறிவது வாக்கி அடியருள் நல்குஞ்**
**செறிவொடு நின்றார் சிவமாயி னாரே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் நாகராசாவுக்குச் சொன்னார்,“உனக்குச் சொல்வது ஓட்டைக் குடத்துக்குள் நீரை நிரப்புவது போன்றது. அந்நீர் சிறிது நேரம் தங்குவது போல நான் சொல்லும் அறிவுரைகளும் சிறிது நேரம் தான் உனது மனதில் நிற்கும். திருவருள் உணர்வாகிய அறிவில் நான் சொல்பவை பதிதல் வேண்டும். அப்படிப் பொருந்தினால் தான் சிவன் அறிவுக்கு அறியாக நின்று அறிவினை அருளுவன். அதற்காகத் தான் பொறிவழிப்புகுத்தித் தானும் சேர்ந்து நிற்கின்றான். இதை உணராதவர்கள் என்றும் துன்பப்படுவர். உணர்ந்தவர் திருவடி உணர்வு பெற்று திருவருள் நிறைவில் நிலைத்து நின்று சிவனோடு கலந்து சிவனாவர் என்று நூல்கள் கூறுகின்றன. உயிரோடு உயிராக நிற்கும் சிவனை உணர்ந்தால் தான் சிவனருள் கிட்டும். சிவனருள் கிடைத்தால் தான் சிவன் உயிரோடு கலந்து நிற்பது புரியும். சிவன் உயிரோடு புணர்ந்து திருவருள் நிறைவில் நிலைத்து நின்றால் தான் திருவடி உணர்வுண்டாகிச் சிவனைப் புரிந்து கொள்ள முடியும். சிவனைப் புரிந்தவர்கள் தான்

ஐம்பொறிகளையும் அடக்கிச் சிவஞானத்தை அடைய முயற்சிப்பர். காலகதியில் அது கைகூடும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1769. அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்டு**
**அருளில் அழிந்திளைப் பாறி மறைந்திட்டு**
**அருளான ஆனந்தத் தாரமு தூட்டி**
**அருளால்என் நந்தி யகம்புகுந் தானே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் திரும்பத் திரும்ப நாகராசாவுக்குச் சிவனைப் பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் கூறிய போதும் அவன் கேட்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட சிவராசா சொன்னான்,“அண்ணா, அறிவுள்ளவனுக்கு ஒரு முறை கூறினால் விளங்கும். அறிவு நம்பிக்கையால் உண்டாவது. அதாவது கடவுள் நம்பிக்கையால் உண்டாவது. எம்மால் எதுவும் செய்ய இயலாது நாம் வணங்கும் சிவன் மீது நம்பிக்கை வைத்தால் எல்லாம் நடக்கும் என்று எண்ண வைப்பது அறிவு. அண்ணா அண்ணியின் வற்புறுத்தலுக்காக வருகிறாரே தவிர உண்மையான பற்றுடன் வரவில்லை. பற்றுள்ளவன் ஒருமுறை சொன்னால் விளங்கிக் கொள்வான். உயிர்கள் அனைத்தும் வினைக்கீடாகவே உடல்களைப் பெறுகின்றன என்றும் அவை மலத்துடன் கூடியவை என்றும் அதனால் அவை தொடர்ந்து பிறப்பெடுக்கும் என்றும் கூறினீர்கள். இது தர்க்க ரீதியாக ஒத்துக் கொள்ளக் கூடிய தத்துவமல்ல என்று எனக்குத் தோன்றியது. எனினும் அந்த நினைவுடன் பெரியவரான நீங்கள் கூறிய கருத்துக்களை நம்பிச் சிவனைத் தொழத் தொழ எனது சந்தேகம் படிப்படியாக நீங்கியது. அதனால் திருவருள் என்னை ஆட்கொண்டது. அருளால் பிறந்தவன் வினைப் பயனை அருளால் அனுபவித்து ஒடுங்கி நின்று திருவருள் திருவடி இன்பத்தைக் கொடுக்க அனுபவித்துச் சிவநினைவாக இருக்கும் போது சிவபெருமான் சிவகுருவாக வந்து உள்ளத்தில் புகுந்து அதைப் பண்படுத்தி அருள்வார் என்பதை அண்ணா நம்பமாட்டார். அப்படியிருக்க எப்படித் திருவருளின் தன்மை புரியும். தெரியாதவனுக்குச் சொல்லலாம். தெரிந்து கொள்ள மறுப்பவனுக்கு எப்படிச் சொல்லி விளங்க வைப்பது என்றவன் என்றார். ” சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1770. அருளால் அமுதப் பொருங்கடல் ஆட்டி**
**அருளால் அடிபுனைந் தார்வமுந் தந்திட்டு**
**அருளான ஆனந்தத் தாரமு தூட்டி**
**அருளால்என் நந்தி யகம்புகுந் தானே.**

“ சிவனடியார்களே, சிவராசாவுக்கு நாகராசாவின் நிலையைப் பார்க்கக் கோபம் கோபமாக வந்தது. அவர் மனைவியையோ பிள்ளைகளையோ நம்புபவரல்ல. அவர்

தனது சம்பாத்தியம் முழுவதையும் தனது பெயரிலேயே வைத்திருப்பவர். மனைவியும் பிள்ளைகளும் தாம் விரும்பியபடி உடுபிடைவைகள் கூட எடுக்க அதுமதிக்காதவர். தான் எடுத்து வரும் உடைகளைத் தான் அவர்கள் அணிய வேண்டும். இந்த நிலையில் அவர் எப்படிச் சிவனை நம்புவார். திருவடியை மறவாத சீரிய நினைவு தான் அழியாத அமிழ்தப் பெருங்கடல். அக்கடலின் கண் திருவருளால் ஆட்டுவித்து, அத்திருவருளாலேயே திருவடியினை சூடி, மறவாத பேரன்புடன் அத்திருவருளின் பெருமையை உணர்ந்து அத்திருவருளை வளர்த்தால் சிவன் வளர்ப்பவரின் உள்ளத்தில் புகுந்திருப்பான் என்பீர்கள். மனைவியை நம்பாத இவர் எப்படித் திருவருளை நம்புவார். குடும்பத்தினரைக் கட்டுப்படுத்தக் கூடாது. உண்மையை உரைத்தால் அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதன் பின் தவறுகள் ஏற்படமாட்டா. தவறு செய்யாதவர்களைத் தவறு செய்பவர்கள் என்று நினைப்பவர்கள் உண்மை நிலையை ஒருபோதும் உணரமாட்டார்கள் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1771. பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தின்**
**நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்**
**கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்**
**நேசத்துத் தோன்றா நிலையரு ளாமே.**

“ சிவனடியார்களே, பண்டுதொட்டு தொடர்ந்து வரும் மலஇருளைத் திருவருள் பாசத்தில் இருந்து விடுவித்து அவ்வருளே முற்றுணர்வு பெற்ற உயிர்களை சிவனது திருவடியில் சேர்த்து வைக்கும். அச்சத்தை அகற்றி திருவடிப் பேரின்பம் அருளி சிவனுள் அடங்கி நிற்பதால் சிவனும், உயிரும் ஒன்றாய்ப் பின்னி பிரிப்பின்றி இருக்க வைப்பதும் அவ்அருளேயாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1772. பிறவா நெறிதந்த பேரரு ளாளன்**
**மறவா அருள்தந்த மாதவன் நந்தி**
**அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்**
**உறவாகி வந்தென் உளம்புகுந் தானே.**

“ சிவனடியார்களே, பிறந்து இறந்து துன்பப்படும் உயிர்களைப் பிறவாத தன்மையைக் கொடுத்தருள்பவன் சிவபெருமான். தனது திருவடியை மறவாது நினைவுடன் இருக்கும்படி செய்பவனும் சிவபெருமானே. பெருந்தவத்தோனாகிய நந்தியே அறவாளி அந்தணன். அனைத்திற்கும் காரணமான பெரும் பொருளும் அவன். உயிருக்குயிராய் ஆண்டானான அவன் என்னை அடிமையாக ஏற்றுள்ளான். இது பெரும்பேறாகும். இதை

விளக்கிக் கொள்ள முடியாத நாகராசா போன்றவர்கள் ஊழிக்காலம் வரை பிறந்திறந்து பெரும் துன்பப்பட வேண்டும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1773. அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே**
**அகம்புகுந் துந்தெரி யானரு ளில்லோர்க்கு**
**அகம்புகுந் தானந்த மாக்கிச் சிவமாய்**
**அகம்புகுந் தானந்தி யானந்தி யாமே.**

'' சிவனடியார்களே, நாகராசா மனைவியின் வற்புறுத்தலுக்காகக் காலையில் ஆச்சிரமத்திற்கு வந்த போதும் அவனது மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை. அவன் ஆச்சிரமத்திற்கு வருபவர்களுக்குத் தனது கதையைச் சொல்வான். அதனால் அவர்கள் அவனைக் கண்டதும் விலகிச் சென்று விடுவர். அவன் ஏதாவது கதைத்தால் அதைக் கேட்காதவர்கள் போலச் சென்று விடுவர். இது அவனுக்கு அவமானத்தைக் கொடுத்ததால் கதிரேசனுக்குச் சொன்னான்,''அமைதியாக இருக்கலாமென்று வந்தால் மனம் மேலும் குழம்புகிறது. இங்கு யாரும் என்னை மதிப்பதில்லை. கதைத்தாலும் கதைக்கிறார்களில்லை. இனிமேல் வரவில்லை'' என்று சொல்லக் கதிரேசன் சொன்னார்,''இங்கு வருவோர் கதைப்பதற்காகத் தான் வருகிறார்கள். ஒருவரோடு ஒருவர் அல்ல. சிவனோடு கதைக்கவே வருகிறார்கள். மனிதருடன் கதைத்துப் பாவத்தைத் தேடாது சிவனுடன் கதைத்து வினையை அறுக்கவே வருகிறார்கள். சிவபெருமானை நினைத்துத் திருமுறைகளைப் படித்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினால் உள்ளம் தூய்மைப்படும். தூய்மையான உள்ளத்தில் இருக்கும் சிவனை அவர்கள் உணர்வார்கள். மல அழுக்குள்ள மனதில் சிவன் இருந்தாலும் அவன் இருப்பதை அவர்கள் அறியமாட்டார்கள். தூய்மையாக உள்ளம் உள்ளவர்களின் மனதில் சிவன் இருப்பதால் அவர்களது கண், எண்ணம், அறிவு எல்லாம் சிவமயமாகிவிடும். அதனால் சிவனை ஆனந்தி என்று அழைப்பர். அந்தக் காரணத்திற்காக வரும் அடியவர்கள் சுவாமியுடனேயும் அதிகமாகக் கதைக்க மாட்டார்கள். தாம் வந்த காரியத்திலேயே குறியாக இருப்பார்கள் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1774. ஆயும் அறிவோ டறியாத மாமாயை**
**ஆய கரணம் படைக்கும்ஐம் பூதமும்**
**ஆய பலவிந் திரிய மவற்றுடன்**
**ஆய வருளைந்து மாமருட் செய்கையே.**

'' சிவனடியார்களே, உயிர்கள் கண் முதலிய பொறிகளைத் துணையாகக் கொண்டே உலகை அறியும். உயிருடன் கூடிய மாயை மாமாயை என்று அழைக்கப்படும். இது

அறிவில்லாதது. இருப்பினும் அவற்றில் இருந்து அறிவிற்குத் துணையான காரணம், பூதம், இந்திரியம் என்பன தோன்றுகின்றன. அவை அறிவிற்குத் துணையாய் அறிவு போல விளங்குவதற்குக் காரணம் திருவருளின் அருளே. இது எழுத்தைப் படிக்கத் துணை செய்யும் மூக்குக் கண்ணாடியைப் போன்றது. திருவருளாற்றல், வனப்பாற்றல், நடப்பாற்றல், அன்பாற்றல், அறிவாற்றல், தொழிலாற்றல் என்றும் ஐவகை ஆற்றலாகப் பிரிந்து நின்று செயற்படுகிறது. இவற்றை முறையே பராசக்தி, ஞானாசக்தி, கிரியா சக்தி எனலாம். இவற்றின் விரிவுகள் அளவு கடந்தன. இந்திரியத்தை புலன் எனவும் புள் எனவும் கூறப்படும். அதனால் உலகம் அனைத்தும் திருவருளின் இயக்கத்தால் இயக்குவன. அதனால் யாவும் திருவருளின் செயற்பாடேயாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1775. அருளே சகலமு மாய பௌதிகம்**
**அருளே சராசர மாய அகிலம்**
**இருளே வெளியே யெனுமெங்கும் ஈசன்**
**அருளே சகளத்த னன்றியின் றாமே.**

“ சிவனடியார்களே, அனைத்தையும் தாங்கும் நிலைக்களமாகத் திருவருள் நிற்பதால் பூதகாரியம் முதல் அனைத்தும் திருவருளேயாகும். இயங்கு திணை, நிலைத்திணையாகிய எல்லாவற்றின் வாழ்க்கைகளும் அருளாலேயே நிகழ்கின்றன. இருளும் வெளியுமாகிய அறியாமை அறிவுகள் தொழிற்பட துணை நிற்பதும் அருளே. அவ்அருள் தான் சிவபெருமானுக்கு துணைவியாகவும் திருமேனியாகவும் நிற்கின்றது. அதனால் சிவனை அருளுருவானவன் என்பர். அருளன்றிச் சிவன் இல்லை. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1776. சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து**
**தவமான ஐம்முகன் ஈசன் அரனும்**
**பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறா**
**நவமவை யாகி நடிப்பவன் தானே.**

“ சிவனடியார்களே, சிவமாகிய அறிவும், சக்தியாகிய ஆற்றலும், ஒலியும், ஒளியும் அருளோனும், ஆண்டானும், அரன், அரி, அயன் என்னும் மூவரும் ஆகிய ஒன்பது பேரும் உலகமும், உயிர்களின் செயல்களின் பொருட்டு வேண்டப்படுபவர் ஆவர். அவ்ஒன்பது திருக்கோலங்களும் முழுமுதற் சிவனே. திருவருளால் ஒன்பது பேராகத் தோன்றுபவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1777. அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள்**
**அருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்றும் அரனே**
**இருட்கண்ணி னோர்க்கங் கிரவியுந் தோன்றா**
**தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே.**

“ சிவனடியார்களே, நாகராசா கிணற்றில் நீர் எடுக்கும் போது தவறிக் கிணற்றுள் விழுந்து விட்டேன் என்று சொல்கிறான். ஆனால் அவனது மனைவி அவர் தவறுதலாக விழவில்லை. தனது உயிரைப்போக்கவே விழுந்தார். அவர் வியாபார நிலையம் தீயினால் எரிந்து நாசமாகிய பின் தான் இருப்பதில் பயனில்லை என்று கூறுவார். இரவும் காலையும் உணவை உண்ணவில்லை. அவருக்கு நல்ல புத்தி சொல்லி அவரைக் காப்பாற்றுங்கள் என்று கதிரேசனுக்குக் கூறினாள். அதனால் கதிரேசன் ஆச்சிரமத்திற்கு வந்த நாகராசாவுக்குச் சொன்னார், “ நாகராசா, இந்த உடலையும் உயிரையும் தந்தவர் சிவன். அதனால் நாம் அவ்வுடலைப் பேணிக் காத்து வரல் வேண்டும். விதியை வினைக்கீடாக அமைப்பவர் சிவன். அதனால் விதி முடியுமுன் நாகம் கடித்தாலும் அவன் சாகமாட்டான். நீ வேண்டுமென்று விழுந்தாயோ அல்லது கால் இடறி விழுந்தாயோ தெரியாது. உலகில் நடப்பவை யாவும் சிவனின் கட்டளைப்படி தான் நடக்கும். திருவருள் உள்ளவர்களுக்கு உண்மை அறியும் இன்ப உணர்வினனான சிவனின் பெருமையும் தெரியும். அருட்கண் உள்ளவர்களுக்குச் சிவன் தோன்றுவதால் யாவும் தெரியும். சிவன் தன்னையும் காட்டி உலகத்தையும் காண வைப்பான். குருடனுக்குச் சூரிய ஒளி தெரியாது. நல்ல கண்களை உடையவனுக்குத் தெளிவாகத் தெரியும். அது போன்று சிவனும் அருட்கண்ணை உடையவருக்குத் தான் தோன்றுவான். நீ பார்வையுள்ள கண்களைப் பெற்றும் சூரியனைப் போலப் பிரகாசமாக உள்ள சிவனைத் தெரியவில்லை என்கிறாய். அது உனது குறைபாடே தவிரச் சிவனின் குறைபாடல்ல. சிவனை அன்போடு ஒரு கணம் நினைத்துப்பார். அவரது திருவருள் உனக்குக் கிடைக்கும். அது கிடைத்தால் துன்பங்கள் யாவும் இன்பங்களாக மாறும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1778. தானே படைத்திடுந் தானே அளித்திடுந்**
**தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்**
**தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்**
**தானே வியாபித் தலைவனு மாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் ஒருவர் தவறான செயல்களில் ஈடுபடுகிறார் என்று தெரிந்தால் அவர் திருந்தும் வரை அவருக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவார். சலிப்படையமாட்டார். கோபம் கொள்ளமாட்டார். பொறுமையை இழக்கமாட்டார். நாகராசாவின் மகள் வேணி சிவபக்தை. அவள் கதிரேசன் மீது பேரன்பு கொண்டவள்.

அவள் ஒரு வைத்தியனைக் காதலித்தாள். அவன் சாதியில் குறைந்தவன். அதனால் நாகராசா அக்காதலை ஏற்கவில்லை. அதனால் அவள் கதிரேசனிடம் சென்று தனது காதலைச் சொல்லித் தனக்குத் தான் காதலிப்பவனைத் திருமணம் செய்து வைக்குமாறு இரந்தாள். அன்று இரவு சிவன் அவரின் கனவில் தோன்றி வேணியின் விருப்பத்தை நிறைவேற்றுமாறு கூற கதிரேசன் அவர்களது திருமணத்தை விமர்சையாகச் செய்து வைத்தார். இருவரும் வெளிநாட்டுக்குச் சென்று கோடீஸ்வரராக இருக்கின்றனர். அதனால் வேணி தொலைபேசியில் கதிரேசனோடு தொடர்பு கொண்டு தனது தந்தையைப் புத்திமதி கூறிக்காப்பாற்றுமாறு கேட்டிருந்தாள். அதனால் கதிரேசன் சொன்னார்,‘‘நாகராசா, உனக்கு இப்போது எவ்வளவு பணம் வேண்டும். அதை நான் ஏற்பாடு செய்து தருகிறேன். பணம் தொலைந்தது தானே உனது கவலை. தொலைந்த பணத்தை நான் தருகிறேன். தயவு செய்து தவறான முடிவுகளை எடுக்காதே. எங்கும் நிறைந்து எதிலும் பிரிப்பின்றிக் கலந்திருக்கும் சிவபெருமான் ஆருயிர்களின் மீது வைத்த அன்பின் கருணையினால் வேறு பெயரின் துணைவின்றித் திருவருளின் துணையோடு படைப்பு முதல் வீடுபேறு ஈடாகவுள்ள எல்லாச் செயல்களையும் புரிந்து அருள்கிறான். அவன் தான் முழுமுதல் இறைவன். ஐந்தொழில்களையும் புரியும் முதல்வன். ஏனையோர் ஒவ்வொன்றையே செய்பவர்கள். உனக்குப் பணம் தரச் சிவன் ஆணையிட்டுவிட்டான். இனியாவது உனது மனதைச் சிவன்பால் வை என்றவர்.’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1779. தலையான நான்குந் தனதரு வாகும்**
**அலையா வருவுரு வாகுஞ் சதாசிவம்**
**நிலையான கீழ்நான்கு நீடுரு வாகுந்**
**துலையா இவைமுற்று மாயல்ல தொன்றே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் நாகராசாவுக்குச் சொன்னார்,‘‘தூமாயையின் கண் விளங்கும் அறிவு, ஆற்றல், ஒலி, ஒளி ஆகிய நான்கும் சிவனுக்குரிய அருவ நிலையாகும். அருளோனாகிய சதாசிவன் அருவுருவ நிலையாகும். ஆண்டான், அரன், அரி, அயன் ஆகிய நான்கு நிலையும் உருவ நிலையாகும். இவர்களுள் அரன், அரி, அயன் என்ற மூவரும் உடல் மெய்யாகிய மூலப்பகுதியில் அப்பெயர்களோடு ஆணையால் முத்தொழில் புரியும் மூவரையும் தொழில்படுத்துவோராவர். இம்மூவரும் ஆசான் மெய்யில் உறைபவர்கள். தலையளி, தண்ணளி, பெருங்கருணையுடன் இவ்வகையான ஒன்பது திருமேனிகளுடன் இயைந்து இயக்கினும் சிவபெருமான் ஒன்றிலும் இயந்திடாத இயல்பினன். அத்துடன் இவற்றிற்கு அப்பாற்பட்டவன். இப்போது உனக்கு அருளவிரும்பியுள்ளான். அவனது அருளை உணர்ந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அழிப்பவனும் அவன். அருளுபவனும் அவன். அதை உணர்ந்து

கொள்பவர்களால் தான் சிவனை அறிந்து கொள்ள முடியும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1780. ஒன்றது வாலே உலப்பிலி தானாகி**
**நின்றது தான்போல் உயிர்க்குயி ராய்நிலை**
**துன்றி யவையல்ல வாகுந் துணையென்ன**
**நின்றது தான்விளை யாட்டென்னுள் நேயமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நாகராசாவினது மனம் சமாதானமடையவில்லை. கதிரேசன் தன்னைச் சமாளிப்பதற்காகத் தான் பணம் தருவதாகச் கூறுகின்றார். இவர் யார் எனக்குப் பணம் தர. இவர் ஏன் தர வேண்டும் என்று நினைத்தான். அதை உணர்ந்த கதிரேசன் சொன்னார், “ உவப்பிலியாகிய சிவபெருமான் தன்னை விட்டு ஒரு போதும் பிரியாது இருக்கும் திருவருளாற்றலைத் தனக்குத் திருமேனியாகக் கொண்டதோடு உலகுயிர்களை நடத்தும் திரு ஆணையாகவும் கொண்டுள்ளான். அப்படியிருந்தும் அவற்றில் இருந்து அவன் வேறாகவே நிற்கிறான். பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் கைகளைப் பிடித்து நடத்தியும் ஓதியும் ஓதுவித்தும் நிற்கின்றனர். அப்படியிருந்தாலும் பொருள் தன்மையில் பெற்றோர் ஆசிரியர் என்ற பெயர்ப் பொருளால் வேறுபட்டு நிற்கின்றனர். இந்நிலையில் சிவபெருமான் இயைந்தும் இயந்திடாநிலைக்கு ஒப்பாகும். இம்முறையை படியிலாப்பணியாதலின் விளையாட்டென்பர். உயிரோடு சிவன் கலந்து நின்று திருவருளால் உதவிகள் புரிந்த போதும் அவன் பற்றில்லாமலும் விருப்பு வெறுப்பில்லாமலும் வினைக்கீடாகவுமே நடந்து கொள்வான். அதனால் தான் அதை விளையாட்டென்கிறார்கள். விளையாட்டின் போது வெற்றி தோல்வி வருவது போலச் சிவனின் விளையாட்டில் ஆக்கமும் அழிவும் வரும். தளராது முயற்சி செய்தால் தோற்பவன் வெல்வான். அயராது சிவனை நினைத்தால் தோல்விகளே வராது. இது தான் சிவனின் விளையாட்டு. இதை விளையாட்டென்று நினைப்பவர்கள் எப்போதும் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பர். விளையாட்டென்றாலும் அது உண்மை என்று நினைப்போர் சிவனது திருவடி நிழலில் இன்பமாக இருப்பர் என்றவள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1781. நேயத்தே நின்றிடும் நின்மலன் சத்தியோடு**
**ஆயக் குடிலையுள் நாதம் அடைந்திட்டுப்**
**போயக் கலைபல வாகப் புணர்ந்திட்டு**
**வீயத் தகாவிந்து வாக விளையுமே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்களின் அன்பின் நிலைக்களமாக நிற்பவன் சிவபெருமான். அவன் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன். அவன் தனது திருவாணையாகிய சக்தியைத் தொழிற்படுத்துவதால் மாமாயையும் நாதமாகிய ஓசையும் தோன்றும். மேலும் நீக்கல் நிலைப்பித்தல் முதலிய ஐங்கலைகளும் தோன்றும். இவ்வாறு பலவாகக் காரியப்படினும் காரணமாகிய விந்து என்றும் அழியாதது. வேண்டும் வினை விளைத்திருவாணையால் என்றும் நின்று தந்து கொண்டேயிருக்கும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1782. **விளையும் பரவிந்து தானே வியாபி**
**விளையுந் தனிமாயை மிக்கமா மாயை**
**கிளையொன்று தேவர் கிளர்மனு வேதம்**
**அளவொன் றிலாவண்ட கோடிக ளாமே.**

“ சிவனடியார்களே, பரவிந்துவாகிய தூமாயையைத் திருவானை நேரே தொழிற்படுத்தும். அவ்வானை தொழிற்பாடுகள் எல்லாவற்றிற்கும் நிலைக்களமாக நிற்கும். திருவருளாணை என்பது சிவசக்தியின் நிறைவு. அவ்வாணையால் தொழிற்படுவதே விளைவு. அவ்விளைவு, தூவாமாயை தூமாயை என இருவகைப்படும். தூமாயையானது தேவர்களுக்கும் மந்திரங்களுக்கும் வேதாகமங்களுக்கும் உடல், உறுப்பு, உலகம், உணவு ஆகிய நான்காக விளங்கும் பொருட்களுக்குத் தூவாமாயை இடமாக இருக்கும். அண்டங்கள் அனைத்திற்கும் நிலைக்களமாக இருப்பவள் திருவருள் அம்மை. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1783. **அருளிற் றலைநின் றறிந்தழுந் தாதார்**
**அருளிற் றலைநில்லார் ஐம்பாச நீங்கார்**
**அருளிற் பெருமை யறியார் செறியார்**
**அருளிற் பிறந்திட் டறிந்தறி வாரே.**

“ சிவனடியார்களே, நாகராசாவின் மனதைக் குழப்புபவன் உலகநாதன். அவன் திருமணமான ஒரு வருடத்தில் மனைவியோடு பிரச்சினைப்பட்டு அவளைக் கைவிட்டு விட்டு வாழ்பவன். அவன் நாகராசா திருந்தினால் தனது செலவுகளுக்குப் பிரச்சினை உண்டாகுமென நினைத்து இரவில் மதுபான வகைகளை வாங்கிக் கொடுத்துக் குடித்தான். கடவுளைப் பற்றித் தவறாகச் சொல்வான். அதனால் நாகராசாவின் மனம் மாறிவிடும். அதை நாகராசாவின் மனைவி கதிரேசனுக்குச் சொல்வாள். அப்போது கதிரேசன் சொன்னார், “ திருவருளில் உறைந்து நின்று மெய்யுணர்வைப் பெறாதவர்கள் நல்ல முறையில் வாழமாட்டார்கள். அதனால் ஆணவம், கன்மம், மாயை, மாயையாக்கம், மறைப்பாற்றல் என்னும் ஐந்து வகையான பாசங்களும் அவரை விட்டு

நீங்காது. மறைப்பாற்றல் திருவருளாதலால் நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்யும் மருத்துவன் போல உயிர்களோடு பாசங்களை இணைப்பித்துத் தூய்மைப்படுத்துவதால் அதுவும் மலமாகவே கொள்ளப்படும். திருவருளின் உண்மையான நிலையை உணராதார் அதன் நிறைவில் அடங்கி நிற்கமாட்டார்கள். நாகராசாவைக் கெடுப்பது உலக நாதன் என்பது தவறு. ஒவ்வொருவரும் தன்னால் தான் கெடுகிறார்கள். வலியவன் சொல்கிறானென்பதற்காக எளியவன் ஏற்கவேண்டியதில்லை. அறிவால் ஆராய்ந்து உணரல் வேண்டும். தலையிலுள்ள காயத்திற்குக் காலில் மருந்து கட்ட முடியாது. உலகநாதனை எப்படித் திருத்துவது. உனது கணவன் தான் உணர்ந்து திருந்துதல் வேண்டும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1784. வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி**
**ஆரா அமுதளித் தானந்தி பேர்நந்தி**
**பேரா யிரமுடைப் பெம்மான்பே ரொன்றினில்**
**ஆரா அருட்கடல் ஆடுகென் றானே.**

“ சிவனடியார்களே, நாகராசாவின் மனைவி துயரத்துடன் அழுது கொண்டிருந்தாள். அதைப் பார்க்கக் கதிரேசனுக்குத் துக்கமாக இருந்தது. அவர் சொன்னார், “ மகனே, அருளில்லாதவர்களை அருளாளராக்குவது மிகவும் கடினமான செயல். சொல்லும் போது நாகராசா ஏற்றுக் கொள்கிறான். பின் அவற்றை மறந்து விடுகிறான். அதற்குக் காரணம் உலகநாதன் என்கிறாய். இருவரும் தானாக உணர்ந்து பிரிந்தால் தான் உண்டு. அது நடக்க வாய்ப்பில்லை. அதனால் நீ நாகராசாவை அழைத்துக் கொண்டு தலயாத்திரைக்குச் செல். ஒரு மாதம் கழிய வா பின் பார்ப்போம். மீண்டும் அழியாத வரங்களைக் கொடுப்பவன் மா நந்தியாகிய சிவபெருமான் அவனது திருப்பெயர் நமசிவய அந்த நந்திதான் உயிர்களுக்கு திருவருளைக் கொடுத்து இன்பப்படுத்துபவன். அவன் இன்ப உருவினன். அதனால் அவனை ஆனந்தி என்று சொல்வர். அத்துடன் அவனது அருட்பண்பு காரணமாக அவனுக்கு அளவில்லாத திருப்பெயர்கள் உண்டு அத்திருப்பெயர்களுள் “ சிவ ” என்ற திருப்பெயர் மிகவும் சக்தி வாய்ந்தது. அன்பை அள்ளிக் கொடுப்பது நந்தி தான் சிவன் என்று அறிவில் சிறந்தவர்கள் தான் உணர்ந்து கொள்வர் ” அதனால் நந்தியாகிய சிவனின் திருப்பெயர்களான “ நமசிவய ” என்பதையும் “ சிவ ” என்பதையும் ஓதித்துதி. எல்லாம் சரியாகும் என்றவர். ” என்றவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1785. ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்**
**தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்**
**கூடிய வாறே குறியாக் குறிதந்தென்**
**ஊடுநின் றானவன் தனனரு ளுற்றே.**

“ சிவனடியார்களே, திருவருள் கைவரப் பெற்றவர்கள் தன்னையும், தான் இருக்கும் இடத்தையும், சூழ் நிலையையும் மறந்து விடுவார்கள். அவர்களின் நினைவில் சிவன் இருப்பதால் சிவ நினைவைத்தவிர வேறு எதுவும் வராது. அன்று பிரதோச விரதம். சிவனுக்கு விசேடமான பூசைகள் நடைபெற்று அவர் வெளி வீதி உலா வந்தார். பறைமேளம் அடிக்கும் வரதன் தனது சிவன் கோவிலில் பறைமேளம் அடிப்பான். அவனது ஊர் எமது ஆச்சிரமத்திற்கு வெகு தூரத்தில் இருந்தமையால் அவன் ஆச்சிரமத்திற்கு வரும் போது உடுக்குடன் வருவான். நல்லை நாதன் அருமையாக உடுக்கு அடிப்பான். வரதன் கொண்டு வந்த உடுக்கை நல்லைநாதனிடம் கொடுக்க அவன் மிகவும் அருமையாக உடுக்கை அடித்தான். உடுக்குச் சத்தம் கேட்டதும் வரதன் மெய் மறந்து தேவாரங்களைப் பாடினான். பாடிப்பாடி ஆடினான், சில சமயம் சிவனே என்று பலமாக ஓலமிட்டான். ஆனந்தக் கண்ணீர் அவனது கண்களால் வழிந்தது. கதிரேசனைக் கண்டதும் அவருக்கு முன்னால் சென்று தேவாரத்தைப் பாடிப்பாடி ஆடினான். கதிரேசனும் மெய்மறந்து பாடிப்பாடி ஆடத்தொடங்கினார். அப்போது அங்கு வந்த ரவீந்திரன் ஆட, உடுக்கடித்துக் கொண்டிருந்த நல்லைநாதனும் ஆடத்தொடங்கினான். ஆச்சிரமத்திற்கு வருவோரில் சிலரும் பாடி ஆடினர். இவ்வாறு தன்னை மறந்து ஆடுபவர்களுக்குச் சிவன் அருளால் உணரும் திருவடியைக் கொடுப்பான். அவ்வடியாரின் உள்ளத்தில் சிவன் வெளிப்பட்டு நிற்பதால் அவர்கள் உலகை உணரமாட்டார்கள். இந்நிலை அறிவால் அன்றி அருளால் வருவது. ஆடிப்பாடிக் கொண்டிருந்த கதிரேசன் நாகராசாவைக் கண்டு விட்டு அவனருகே வந்து சொன்னார், “ உன்னைச் சிவன் திருத்துவான். உடனே மனைவியோடு தலயாத்திரை செய். இல்லாவிட்டால் பெருந்துன்பப்படுவாய் என்றதும் நாகராசா பயந்து போனான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1786. உற்ற பிறப்பும் உறுமல மானதும்**
**பற்றிய மாயாப் படல மெனப்பண்ணி**
**அத்தனை நீயென் றடிவைத்தான் பேர்நந்தி**
**கற்றன விட்டேன் கழல்பணிந் தேனே.**

“ சிவனடியார்களே, வரதன் சொன்னான், “ உயிர்கள் படைக்கப்பட்ட போது ஏற்பட்ட மலப்பிணிப்பால் பிறப்புண்டாயிற்று. உடல், உறுப்பு, உலகம், உணவு ஆகிய மாயாகாரியக் கூட்டங்களின் தொடர்பும், அவற்றை வேறு என்று உணராது தான் என்று உணரும் ஆணவப்பற்றும் உண்டாயின. அத்தொடர்புகள் நீயல்ல என்று அருளால் தெரிவித்து இவற்றிற்கு வேறாக இவற்றை இயக்கியும் நிற்பது நீ என்று நந்தி உணர்த்தினான். பின் தன் திருவடியை என் முடிமீது சூட்டியருளினான். அதன் பின் அவனருளால் மதக் கோட்பாடுகளை விட்டேன். சிவனின் திருவடியைப்பணிந்தேன்.

இறைபணி செய்கின்றேன். எல்லோரும் இறைபணி செய்யுங்கள். அன்பால் சிவனை அர்ச்சியுங்கள். “ நமசிவய ” என்ற தமிழ் மந்திரத்தைச் சொல்லுங்கள் என்று பரவசப்பட்டவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1787. விளக்கினை யேற்றி வெளியே அறிமின்**
**விளக்கினின் முன்னே வேதனை மாறும்**
**விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்**
**விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.**

“ சிவனடியார்களே, அன்று கதிரேசனும் வரதனும் மிக்க உணர்ச்சி மேம்பட்டவர்களாகக் காணப்பட்டனர். உலகநாதன் நாகராசாவைத் தேடிக் கோவிலடிக்கு வந்தான். அவனைக் கண்டதும் கதிரேசனுக்குச் கோபம் அதிகரிக்கப்பலமாகக் கத்தினார். அதைக்கண்ட வரதன் கையில் இருந்த பிரம்பை அசைத்தபடி வந்து உலக நாதனுக்கு பலமுறை அடித்து விட்டான்., “ சிவத்துரோகியே இங்கே ஏன் வந்தாய். ஓடி விடு … ஓடு. ஓடு இல்லாவிட்டால் கொன்று விடுவேன். சிவத்துரோகிகள் இருக்கக்கூடாது ” என்று பலமாகக்கத்தினான். கதிரேசன் சொன்னார், “ நல்ல வேலை செய்தாய். நான் நினைத்ததை நீ செய்து விட்டாய். சிவன் கட்டாயம் மகிழ்வார். உலகநாதன், திருவருளாகிய திருவடியுணர்வைப் பொருத்திச் சிவபெருமானை உணர முயற்சி செய். அதனால் நீ படும் துன்பங்கள் யாவும் நீங்கும். சிவபெருமானை உணர்ந்து கொண்டவர்கள் இயற்கையான அறிவு விளக்கைப் பெறுவார்கள். திருவருளாகிய விளக்கைத் திருமேனியாகக் கொண்டு ஒளிர்ந்து விளங்கும் விளக்காகிய சிவத்துள் ஒடுங்கிச் சிவமாகத்திகழ்வர். இது பால் நிறைந்த கலன் பாலாகத் தெரிவது போன்றும், நீர் நிறைந்த மண்பாண்டம் நீராய் விளங்குவது போன்றதுமாகும். அகத்தின் அழகு முகத்தில் தோன்றும் முகத்தின் அழகு திரு நீறு அணிந்தால் தோன்றும். நீ திருநீறு அணியவில்லை. ஏன் கோவிலுக்கு வந்தாய். கோவிலுக்கு வருபவன் முழு நீறு பூசிய முனிவனைப் போல இருப்பான். நீ பேய் போல இருக்கிறாய். திருந்து திருந்து திருந்தாவிட்டால் ஏழேழு பிறவிகளிலும் துன்பப்படுவாய் ” என்றவர் அதைக்கேட்டு உலகநாதன் பயந்து போனான். தனக்குப் பெரும் ஆபத்து வரப்போகிறது என்று எண்ணிக் கோவிலின் வெளியே இருந்த நீற்றை எடுத்துப் பூசினான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1788. ஒளியும் இருளும் ஒருகாலு தீரா**
**ஒளியுளோர்க் கன்றோ ஒழியா தொளியும்**
**ஒளியிருள் கண்டகண் போலவே றாயுள்**
**ஒளியிருள் நீங்க வுயிர்சிவ மாமே.**

“ சிவனடியார்களே, திருவருள் கைவரப் பெறாதவர்களுக்கு ஒளியாகிய நினைப்பும், இருளாகிய மறைப்பும் ஒரு போதும் நீங்காது. திருவடியுணர்வுள்ளவர்களுக்கு சிவனின் நினைப்பு எவ்வேளையிலும் இருப்பதால் நினைப்பும் மறப்பும் இல்லாது போவது அவர்களுக்குத் தெரியாமலே நடைபெறும். ஒளியோடு கூடிய கண் ஒளியாகியும், இருளோடு கூடும் போது இருளாகவும் இருப்பது போல ஆருயிரும் சார்ந்ததன் வண்ணம் நிற்கும். சுட்டுணர்வும், சிற்றுணர்வும் நிலைபடாத ஒளியாகும். அவை இருளின் சார்பினால் இருள் நிலையானதாக இருக்கும். இவை இரண்டும் நீங்கினால் உயிர் சிவத்தோடு கலந்து சிவமாக இருக்கும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1789. புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி**
**நிறமே புகுந்தென்னை நின்மல னாக்கி**
**அறமே புகுந்தெனக் காரமு தீந்த**
**திறமேதென் றெண்ணித் திகைத்திருந் தேனே.**

“ சிவனடியார்களே, பிரதோச விரதத்தன்று இரவு கதிரேசன் அடியவர்களுக்கு உரையாற்றினார், “ சிவனடியார்களே, சிவனோடு கூடிய எனது அனுபவத்தைக் கூறுகிறேன் கேளுங்கள். திருவருள் நெறிக்குப்புறம்பாக நிலையில்லாதவற்றை நிலையானவை என்று நினைத்து அறியாமை மிக்கவனாக அலைந்து திரிந்தேன். அத்தகைய என்னை நன்னெறிப்படுத்தித் திருவடி சூட்டி சிவன் ஆட்கொண்டான். அத்துடன் அடியேனது உள்ளத்தில் புகுந்து வீற்றிருந்து அருள்கிறான். என்னைப் பிடித்திருந்த மலங்களை அகற்றித் தூய்மைப்படுத்தி அருளியதோடு நல்லதொரு மனையாளையும் இணைத்து வைத்தான். இதனால் சிவனை மறவாத் திருவருள முதம் எனக்குக் கிடைத்தது. இவற்றை நினைத்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1790. அருளது வென்ற அகலிடம் ஒன்றும்**
**பொருளது வென்ற புகலிடம் ஒன்றும்**
**மருளது நீங்க மனம்புகுந் தானைத்**
**தெருளுறும் பின்னைச் சிவகதி யாமே.**

“ சிவனடியார்களே, உயிர்ப்பொருள், உயிர் இல்லாத பொருள் அனைத்திற்கும் நிலைக்களமாக உள்ளவன் சிவன். அதனால் அவற்றுள் நின்று இயங்குவது சிவனருளான திருவருளாகும். அதனால் திருவருளை அகலிடம் எனப்பட்டது. திருவருளைத் திருமேனியாகக் கொண்டிருக்கும் சிவபெருமான் எல்லாவற்றிற்கும்

புகலிடமானவன். அவனைச் சென்றடைவது ஆருயிர்கள். சிவனால் ஆருயிர்களுக்கு மலத்தால் இருளும், மாயையால் மருளும், வினையால் இன்பதுன்பங்களும், இவற்றால் பிறப்பும் இறப்பும் உண்டாகும். இவை அனைத்தும் மலமெனப்படும். இவை நீங்கியதும் சிவன் உள்ளத்தில் மறவாத நிலையை ஏற்படுத்தி வெளிப்பட்டு நிற்பான். அதன்பின்பு உண்மைத் தெரிவான மெய்யறிவு உண்டாகும். அந்நிலை ஏற்பட்டதும் உயிர் சிவனின் நிலையை எய்தும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1791. கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை**
**வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்குமின்**
**புூறணி யும்முடல் வீழவிட் டாருயிர்**
**தேறணி வோமிது செப்பவல் லீரே.**

'' சிவனடியார்களே, மெய்யுணர்வில்லாதவர்கள் இங்கு இருந்தால் கூறுங்கள். சிவன் பிறந்தார், உண்டார், களித்தார், இறந்தார் என்று வேத ஆகமங்களால் உங்களால் நிறுவ முடியுமா? முடியும் என்று சொல்பவர்களுக்கு முடியாதென்று கூறுகிறேன். சிவபெருமான் நஞ்சுண்ட போதும் இறவாதவன். ஏனைய தெய்வங்கள் பிறந்து துன்பப்பட்டு இறந்தொழியவில்லை என்றும் சொல்ல முடியுமா.? அத்தெய்வங்கள் அமுதை உண்டும் இறந்தொழிந்தன. அதனால் அத்தெய்வங்கள் மெய்ப்பொருள் என்று கொள்ளும் நினைவை நீக்குங்கள். உடலை விட்டு உயிர்போன பின் அது எதற்கும் உதவாது போய் விடும். அவ்வாறு உடலை விட்டு நீங்கிய உயிர் திருவருள் வசப்பட்டிருந்தால் மெய்ப்பொருளான சிவனை அடையும். இது தான் திருவருளின் தெளிவினைப் பெறுவது என்று துணிந்து சொல்லலாம்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 11. சிவபூசை

**1792. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.**

'' சிவனடியார்களே, உள்ளம் திருக்கோவிலின் கர்ப்பக்கிருகத்தை ஒக்கும் (கருவறை) ஊனுடலாகிய உடம்பு திருக்கோவிலாகும். வாய் கோபுரவாசலாகும். திருவருளால் மெய்ப்பொருண்மையை உணர்ந்தவர்களுக்கு அவர்களின் உயிரே சிவக்கொழுந்தாகும். கள்ளவழியில் இருக்கும் ஐந்து புலன்களும் ஐந்து மணி விளக்குகளாகும். இதைச் சிவனடியார்கள் நன்கு புரிந்து கொள்ளல் வேண்டும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1793. வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்**
**ஊட்டவி யாவன வுள்ளங் குளிர்விக்கும்**
**பாட்டவி காட்டுதும் பாலவி யாமே.**

“ சிவனடியார்களே, சிவவேள்வி செய்யும் சிவ அந்தணர்களையே சிவன் ஏற்றுக் கொள்வான். அவன் தான் விரிசடைநந்தியாவான். எல்லாப் பொருட்களும் அவனின் உடைமை. எல்லா உயிர்களும் அவனின் அடிமை. அதனால் எமக்கென்று உரிமை உடையது எதுவுமில்லை. புகை ஒளி காட்டுவது (தூபதீபம்) கூட நமது உரிமை அல்ல. சிவனுக்குப் பிடித்தமான அவி உணவு செந்தமிழ்த் திருப்பாட்டுக்களாகும். அவ் அவிபாலவியாகும். ஆருயிரின் உள்ளம் குளிர்ந்தால் தான் சிவனின் உள்ளம் குளிரும். சிவனைப் பாடித்தொழுவோர் கொலையையும் புலானையும் ஒழித்த வாய்மையாளர் ஆவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1794. பான்மொழி பாகன் பராபரன் தானாகும்**
**மான சதாசிவன் தன்னையா வாகித்து**
**மேன்முகம் ஈசான மாகவே கைக்கொண்டு**
**சீன்முகஞ் செய்யச் சிவனவ னாகுமே.**

“ சிவனடியார்களே, பால்போன்ற இனிமையான தமிழ்மொழியைப் பேசும் திருவருளம்மையைத் தனது இடப்பாகத்தில் வைத்துள்ள சிவபெருமான் பெருமை மிக்க அன்னையும் அந்தனுமாக விளங்குபவன் சதாசிவன். சதாசிவனை அருளோன் என்று அழைப்பர். அச்சிவக்கொழுந்தினிடத்துச் சிவபெருமானாக எழுந்தருளச் செய்வதாகிய ஆவாகனம் செய்தல் வேண்டும். சதாசிவக் கடவுளின் மேல்முகம் ஈசானமாகும். அச்சதாசிவனைத் தொழுவோர் அருட்பொலிவுள்ளவர்களாகவும், அழகிய முகத்தினை உடையவராகவும் திகழ்வர். அந்த அழகு முகம் சீன்முகம் எனப்படுகிறது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1795. நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற்**
**கனைகழல் ஈசனைக் காண வரிதாங்**
**கனைகழல் ஈசனைக் காண்குற வல்லார்**
**புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே.**

“ சிவனடியார்களே, கழலணிந்த சிவபெருமானைக் காணவிரும்பின் இடைவிடாது திருவடியை நினைத்தல் வேண்டும். மெய்ப்பொருளின் தன்மையை உணர்ந்து மொழிய வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே காணலாம். அப்படிச் செய்யாதவர்களால் காண

முடியாது. சிவனை அருட்கண்ணால் காண வல்லாருக்கு வழிபாடு செய்யும் தகைமை உண்டாகும். அவர்கள் வழிபாடு செய்வதற்குப் புனைமலரும் நீரும் பொருத்தமான பொருட்களாகும். அத்துடன் திருமுறையைப் போற்றிப் பாடுதல் வேண்டும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1796. மஞ்சன மாலை நிலாவிய வானவர்**
**நெஞ்சினுள் ஈசன் நிவைபெறு காரணம்**
**அஞ்சமு தாம்உப சாரம்எட் டெட்டொடும்**
**அஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே.**

'' சிவனடியார்களே, சிவ உலகினர் தமது உள்ளத்தின் கண் சிவபெருமான் நிலை பெறும் காரணத்தை உன்னில், அஞ்சமுதமும், பதினாறு முகமனு கூடி வழிபடுதலாகும். ஐந்து அமிழ்து என்பது பழவகை, தேங்காய், தேன், நெய், சர்க்கரை, என்பனவாகும். கைகளை உச்சிமேல் குவித்துக் கசிந்த உள்ளத்துடன் திருமுறைகளை ஓதி வழிபட்டால் சிவபெருமான் உள்ளத்தில் வெளிப்பட்டு உறைவான் '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1797. புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை**
**நண்ணறி யாமல் நழுவுகின் றாரே.**

'' சிவனடியார்களே, சிவ வழிபாட்டின் புண்ணியம் என்னவெனில் சிவ வழிபாடே அழியாப் புண்ணியமாகும். அவ்வழிபாட்டைச் செய்யும் மெய்யடியார்க்குப் பூவும் நீரும் சிரமமில்லாமல் எவ்வேளையிலும் கிடைக்கும். அதற்குச் சிவபெருமான் அருள்புரிவான். இவ்வுண்மையினை உணராதவர் பெரும் பாவிகளாவர். தீவினையாளர் சிவனை வழிபடாது விலகிச் செல்கின்றனர். எமது ஆச்சிரமத்தில் உள்ள பூந்தோட்டத்தில் இருந்து தான் பூக்களைப் பறித்துச் சிவனுக்குப் படைப்போம். சிவனடியார்கள் எல்லோரும் பூந்தோட்டத்தை மிகவும் கவனமாகப் பராமரிப்பர். தினமும் காலையும் மாலையும் அடியவர்கள் பூங்கன்றுகளைச் சிவன் என நினைத்து நீருற்றுவர். பசளையும் இடுவர். சிவனருளால் ஒரு போதும் பூவிற்குகுத் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. கடுங்கோடை காலத்திலும் பூஞ்சோலை மிக்க பசுமையுடன் காணப்படும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1798. **மறப்புற்று விவ்வழி மன்னிநின் றாலுஞ்**
**சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி**
**மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்**
**அறப்பெற வேண்டும் அமரர் பிரானே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் பூஞ்சோலையைப் பராமரிப்பதில் மிக்க கவனம் செலுத்துபவர். அவர் எல்லா வகையான பூங்கன்றுகளை நட்டுள்ளார். தடாகம் அமைத்து நீர் பூக்களை வளர்க்கிறார். வில்வைமரம் போன்ற சிவன் விரும்பும் மரங்களையும் நட்டுள்ளார். அவர் பூப்பறிக்கும் போது, “ தேவர்களுக்கும் மூவர்களுக்கும் மற்றும் அனைவர்க்கும் முதல்வனான சிவனே உலகியலில் ஈடுபட்டு உன் திருவடி வழிபாட்டினை மறந்து உலகியலிலேயே உறைந்து நின்றாலும், நீ அடியேனை மறவா வண்ணம் காத்தருளல் வேண்டும். உன்னை மறவாத சிந்தையுடன் மெய்யடியார்கள் பூவும் நீரும் சமர்ப்பித்து ஐந்தெழுத்தை ஓதி வழிபாடு செய்வர். அவ்வாறு வழிபாடு செய்யும் அடியேனுக்கு முழு அருள் புரிதல் வேண்டும். சமிபகாலமாக நல்லை நாதன் சுகவீணமுற்று துன்பப்படுகிறான். கோவிலுக்கு அவனால் வரமுடியாதுள்ளது. அது அவனுக்குப் பெரும் கவலையைக் கொடுக்கிறது. அதனால் அவனது நோயைக் குணப்படுத்திக் கோவிலுக்கு வர ஏற்பாடு செய்” என்று வணங்குவார். தினமும் வணங்கும் போது அடியார்களுக்கு உதவும் படி வேண்டுவார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1799. **ஆரா தனையும் அமரர் குழாங்களுந்**
**தீராக் கடனும் நிலத்தும தாய்நிற்கும்**
**பேரா யிரமும் பிரான்திரு நாமமும்**
**ஆரா வழியெங்கள் ஆதிப் பிரானே.**

“ சிவனடியார்களே, கடலை அடுத்திருக்கும் திருவூர்களிலும், ஏனைய நிலங்களில் வீற்றிருக்கும் திருவூர்களிலும் இருக்கும் திருக்கோவில்கள் தோறும் சிறந்து விளங்கும் சிவபெருமானை அமரர்கள் வந்து வழிபடுவார்கள். அப்போது வானோரும் வந்து வழிபடுவர். வழிபடும் போது ஐந்தெழுத்தை ஓதியே வழிபடுவர். ஐந்தெழுத்தாவன “ நமசிவய ” “ சிவயநம ” சிவய சிவ ” என்பதோடு சிவசிவ என்பனவாகும். இவை முறையே பருமை நுண்மை, மீநுண்மை, அருண்மை எனப்பெயர் பெறும். இவற்றை முறையே தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம் எனக்கூறுவர். வழிபாட்டாலும் விழுப்பயனாலும் குறைவில்லா நிறைவாம் சிவவழிபாடு ஆராவழியாகும் அவற்றை ஏற்று அருள் புரிபவர் அம்மையும் அப்பனுமாவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1800. **ஆனைந்தும் ஆட்டி அமரர் கணந்தொழித்**
**தானந்த மில்லாத் தலைவன் அருளது**
**தேனுந்து மாமலர் உள்ளே தெளிந்ததோர்**
**பாரைங் குணமும் படைத்துநின் றானே.**

" சிவனடியார்களே, அமரர் கூட்டங்கள் பால், தயிர், வெண்ணெய், நெய், மோர் என்று சொல்லப்படுகின்றன ஆனைந்தும் (பசுவில் இருந்து பெறப்படும் ஐந்து பொருட்கள்) சிவபெருமானின் திருவடியில் படைத்துத் தொழுவர். அங்ஙனம் படைப்பதற்குக் காரணமாக உள்ளது திருவருளேயாகும். தேனொழுகும் மலர்களினுள் மனநிறைவு தெளிந்தோர் பொருளாவது போலச் சிவபெருமானும் ஐம்பூதப் பண்பாகவும் கலப்பால் விளங்குபவன். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1801. **உழைக்கொண்ட பூநீர் ஒருங்குடன் ஏந்தி**
**மழைக்கொண்ட மாமுகின் மேற்சென்று வானோர்**
**தழைக்கொண்ட பாசந் தயங்கிநின் றேத்தப்**
**பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே.**

" சிவனடியார்களே, சிவனை வழிபடுவது மிகமிகச் சுலபமானது. நல்ல சுத்தமான நிலத்தில் மலர்ந்த மலர்களைப்பறித்துச் சுத்தமான நீரில் இட்டுப்பின் அதைச் சிவனுக்கு அர்ச்சியுங்கள். மழை மேகம் மழையைப் பொழிவது போன்ற தீராத அன்புடன் சிவனை வழிபடுங்கள். சிவனுக்குப் பிடித்தமானது திருமறைப்பாடல்கள் அவற்றை இராகத்துடன் பாடுங்கள். செந்தமிழ் மந்திரமான ஐந்தெழுத்தை ஓதுங்கள். சிவன் உங்களை நாடி வந்து உங்களின் உள்ளத்தில் குடிபுகுவான். அவன் குடிபுகுந்தால் இன்பங்களை அள்ளித்தருவான். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1802. **வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு**
**உள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு**
**கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதார்**
**அள்ளற் கடலுள் அழுந்துகின் றாரே.**

" சிவனடியார்களே, திருச்சடையின் மீது கடல் போன்ற கங்கையின் நீரைத் தாங்கும் நந்தியாகிய சிவபெருமானின் திருவடிக்கு, நிறைந்த கடல் போன்ற அன்புள்ள நெஞ்சத்துடன் பூக்களை அவனது திருவடியில் குவித்து கள்ளம் கபடமில்லாத மனதுடன் வழிபடும் மெய்யடியாருக்கு எந்தத் துன்பங்களும் வரமாட்டாது. இது உண்மை. ரவீந்திரன் தனது வீட்டில் பூந்தோட்டம் அமைத்து வைத்துள்ளான். விருத்தெரிந்த நாளில் இருந்து அவன் சிவனுக்குப் பூக்களைச் சாத்தி வணங்கி வருகிறான். அவனது வாழ்வில்

தோல்விகள் வருவதில்லை. ஆசிரியராகச் சேர்ந்த அவன் இளம் வயதிலேயே உயர் அதிகாரியாகி விட்டான். அதற்குக் காரணம் அவனது சிவ பக்தி தான். அவன் அடிக்கடி சொல்வான் தினமும் சிவனுக்குப் பூக்களைப் படைத்து திருமுறைகளையும் திருவைத்தெழுத்தையும் ஓதி வந்தால் துன்பமே வராது. துன்பம் வருமென்று தோன்றினால் நான் அதைத் தான் செய்வேன் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1803. கழிப்படும் தண்கடற் கவ்வை யுடைத்து**
**வழிப்படு வார்மலர் மொட்டறி யார்கள்**
**பழிப்படு வார்பல ரும்பழி வீழ**
**வெளிப்படு வோருச்சி மேவிநின் றானே.**

“ சிவனடியார்களே, சிவவிரதங்களின் போது கதிரேசனும் அடியார்களும் கடல் ஆர்ப்பரிக்கும் ஒலியை விட மேலான ஒலியுடன் திருமுறைகளைப் படிப்பார்கள். அத்திருப்பாடல்களின் ஓசை சிவனுக்கு மிகவும் பிடிக்கும் வழிபாட்டுக்குத்தகாத மொட்டுக்களைத் தவிர்த்து நன்றாக மலர்ந்த மலர்களைச் சூடி வழிபடுவர். நல்லவர்களோடு சேர்ந்து மெய்யன்புடன் வழிபடுவோரின் பாவங்கள் யாவும் தீரும். தீவினைகள் அழியும். சிவன் தன்னை மெய்யன்புடன் வழிபடுவோரின் உச்சியின் மேல் பொருந்தி நின்று அருள்வான். எனக்கு இவ்வாறு உச்சியில் கங்கை போல் வீற்றிருந்து அருள்வதால் தான் நான் மிக்க மகிழ்வுடன் வாழ்கிறேன். எனது குடும்பமும், எனது பிள்ளைகளும் உற்றார் உறவினர்களும் எனது பேச்சைநம்பி வாழ்வதால் அவர்கள் இன்பமாக வாழ்கின்றனர் என்று அடிக்கடி கதிரேசன் கூறுவதை நீங்கள் பல முறை கேட்டிருக்கிறீர்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1804. பயனறி வொன்றுண்டு பன்மலர் தூவிப்**
**பயனறி வார்க்கரன் தானே பயிலும்**
**நயனங்கள் மூன்றுடை யானடி சேர**
**வயனங்க ளாலென்றும் வந்துநின் றானே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொல்வார், “ அடியார்களே, நீங்கள் ஏன் சிவபெருமானை வணங்குகிறீர்கள் தெரியுமா..? நீங்கள் நினைத்தவை யாவும் நினைத்தவுடன் கிடைத்தல் வேண்டும். இறுதிக்காலத்தில் முத்தி கிடைக்க வேண்டும். இது தான் சிவனை வணங்குவோரின் விருப்பமாகும். இந்த விருப்பம் நிறை வேறுவதற்காகவே சிவனை வழிபடுகிறேம். அப்படி வழிபடும் போது நீங்கள் நினைத்தவைக்கு மாறாக எதுவும் நடக்கக் கூடாதென்பதற்காக சிவபெருமான் உங்களைச் சுத்தப்படுத்துவார். கொல்லாமை ஐந்து புலன்களையும் அடக்கல், பொறுமை, உயிர்கள் மீது இரக்கம், நல்லறிவு,

மெய்த்தவம், உயிர்கள் மீது அன்பு கொள்ளல் ஆகிய நற்பண்புகளை உங்கள் மனதில் உண்டாக்குவார். இதனால் மீண்டும் உடலும் உணர்வுகளும் தூய்மை அடையும் திருவருள் வந்து சேரும். இதற்காகத் தான் நறு மலர்களைப் படைத்துத் திருமுறைகளையும் ஐந்தெழுத்தையும் ஓதுகிறோம். இதனால் உள்ளத்தில் மெய்யறிவு உண்டாகச் சிவபெருமான் மிக்க மகிழ்வுடன் வந்து கோவில் கொள்வார். மூன்று கண்களை உடைய சிவபெருமானை மகிழ்விக்க இந்தச் செந்தமிழ் வழிபாடே சிறந்ததாகும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1805. ஏத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்று**
**ஆர்த்தெம தீசன் அருட்சே வடியென்றன்**
**மூர்த்தியை மூவா முதலுரு வாய்நின்ற**
**தீர்த்தனை யாருந் துதித்துண ராரே.**

'' சிவனடியார்களே, ரவீந்திரன் சிவனின் மீது அளவற்ற பக்தி கொண்டவன். ஒரு முறை அவனது மேலாளர் பொறாமை காரணமாக அவன் மீது பொய்க்குற்றச் சாட்டைச் சுமத்தினார். அதிகாரிகளில் இருந்து சாதாரண மக்கள் பலர் அவனை அன்போடு விரும்பினர். அலுவலகத்தில் அனாதையாக வந்து தங்கியிருந்த நாய் மீது ரவீந்திரன் பரிதாபப்பட்டுத் தினமும் உணவு வைப்பான். அதை உண்டு விட்டு அந்நாய் அவனின் பின்னால் திரியும். அவனுடன் யாராவது பலத்துக் கதைத்தால் கூட அது கோபம் கொண்டு குரைக்கும். ரவீந்திரனின் மேலாளர் அன்று ரவீந்திரன் அமைச்சின் செயலாளர் தன்னை வந்து சந்திக்கும்படி கூறியமையால் அவரைச் சந்தித்து விட்டுத் தனது அலுவலகத்திற்கு வர தாமதமாகிவிட்டது. அவர் ரவீந்திரனுக்காகக் காத்திருந்து விட்டு வெளியே புறப்பட்டு வந்த போது ரவீந்திரன் வந்தான். அவனைக் கண்டதும் அவருக்குக் கோபம் வந்தது, '' நீ அமைச்சின் செயலாளரை உண்மையில் சந்தித்தாயா? இல்லை உனது வேலைகளைப் பார்த்து விட்டு வருகிறாயா? என அதட்டிக்கேட்டார். அவன் பதில் கூறுமுன் அவனின் பின்னால் நின்ற நாய் அவரைக் கடித்து விட்டது. அன்பு என்பதை அளவிட்டுக் கூறமுடியாது. அப்படியிருக்கச் சிவபெருமானின் திருவடியைப் பல்வேறு விதமான மலர்களைச் சூடி திருமுறை ஓதிப் பேரன்புடன் விழிபடுபவர்கள் மீது சிவபெருமான் எவ்வளவு அன்பு வைப்பார் அதை அளவிட்டுச் சொல்ல முடியுமா..? உயிர்களின் மலப்பிணியை நீக்கி அவ்வுயிரை ஆட்கொள்ளும் சிவபெருமான் ரவீந்திரன் மீது தீராத காதல் கொண்டவர். அதனால் அமைச்சின் செயலாளர் ரவீந்திரனின் மேலாளரை அழைத்து எச்சரித்து விட்டு அவரை இடமாற்றம் செய்தார். அன்பு என்பது விபரிக்க முடியாத பொக்கிசம். அதனால் சிவன் மீது அன்பு கொள்ளுங்கள். இதைச் சிவனை வழிபடாதவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1806. தேவர்க ளோடிசை வந்துமண் ணோடுறும்**
**பூவொடு நீர்சுமந் தேத்திப் புனிதனை**
**மூவரிற் பன்மை முதல்வனாய் நின்றருள்**
**நீர்மையை யாவர் நினைக்கவல் லாரே.**

“ சிவனடியார்களே, தேவர்கள் சிவபெருமானை சிரம் தாழ்த்தி புகழும் புகழுரை உலகெங்கும் பரந்து மண்ணுலகையும் வந்தடையும். மூவர்க்கும் உயிராய் உள் நின்று இயக்கும் கலப்பால் மூவராய், அம்மூவர்க்கும் அருள் வழங்கி ஆணையிட்டு முதல்வனாக நின்று இயக்குபவன் சிவன். அத்தகைய சிவனைப் பேரன்பு வைப்போரே அறிந்து கொள்ள முடியும். சிவனடியார்களே, இதை நம்பாதவர்கள் தான் துன்பப்படுவார்கள். ரவீந்திரன் தனது அலுவலகத்தில் இருக்கும் ஊழியர்களுக்குச் சமயம் வாய்க்கும் போதெல்லாம் சிவனைப் பற்றியும் சிவனை வணங்கும் முறைகளைப் பற்றியும் கூறுவதால் ஊழியர்களில் பலர் சிவபக்தராகினர். மேலதிகாரி வேறு சமயத்தைச் சேர்ந்தவர். மூடக் கொள்கைகளுக்கு உட்பட்டதால் அடிக்கடி பிரச்சினைகளுக்குள்ளாபவர். ரவீந்திரனை மேலதிகாரி ஏசியதால் மனம் வருந்திய சிவ பக்தனான சிவகுமார் மேலதிகாரியிடம் சென்று சொன்னான், “ ரவீந்திரன் ஐயா பொய் சொல்லமாட்டார். மற்றவர்களின் மனம் நோகும்படியாகவும் நடப்பதில்லை. நீங்கள் ஒவ்வொரு விடயத்திலும் ரவீந்திரன் ஐயாவைத் தவறாக நினைத்து ஏசுகிறீர்கள் அவர் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. சிவனிடம் சொல்வார். அதனால் தான் உங்களுக்குத் தரங்குறைத்து இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இனியாவது ரவீந்திரன் ஐயாவின் பெருமையை உணர்ந்து நடந்து கொள்ளுங்கள் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1807. உழைக்கவல் லோர்நடு நீர்மல ரேந்திப்**
**பிழைப்பின்றி ஈசன் பெருந்தவம் பேணி**
**இழைக்கொண்ட பாதத் தினமலர்[2] தூவி**
**மழைக்கொண்டல் போலவே மன்னிநில் லீரே.**

“ சிவனடியார்களே, தனது உயிர் நல்ல நிலையை அடைய வேண்டும் என்று நினைப்பவர்கள் பூவால் அர்ச்சித்துத் திருமுறைகளைப் பாடி வழிபடுவார்கள். இவர்கள் நாள் தவறாமல் சண்டேஸ்வரர் சிவ வழிபாடு செய்தது போன்று செய்வர். அப்படிச் செய்வது பெருந்தவமாகும். அது போல வழிபாடு செய்வோருக்குச் சிவன் தோன்றி அருள் புரிவான். இத்தகைய வழிபாட்டைத் தான் கதிரேசன் செய்து வருகிறார். அவர் மலர்களைப் படைத்து வழிபட்டாரானால் அவர் நினைத்தது உடனே நடக்கும். அவர் தனக்காக எதுவும் வேண்டமாட்டார். துன்பப்படும் மெய்யடியார்களுக்காகவே வேண்டுவார். அவரது தற்போதைய நினைவு நாகராசாவைச் சிவபக்தனாக்க வேண்டும்

என்பதே. அதற்காகத் தான் அவர் நாகராசாவையும் மனைவியையும் தலயாத்திரைக்குச் செல்லுமாறு கூறினார். நாகராசாவும் அவரது மனைவியும் அயலூரில் உள்ள சிவன் கோவிலுக்குச் சென்ற போது ஒரு அடியவர் நாகராசாவிடம் வந்து, " அடியாரே, கதிரேசனின் சொற்படி நடந்துள்ளீர்கள். கதிரேசன் வேறு சிவன் வேறல்ல இருவரும் ஒருவரே. உமக்குச் சிவனருளால் எல்லாம் நன்மையாகவே நடக்கும். சிவனது திருவடியை மனதால் பிடி . எல்லாம் நன்றாக நடக்கும்" என்று கூறினார். அதன் பின் நாகராசா அவரைத் தேடினார். அவரைச் காணவில்லை. அதனால் அதிர்ச்சிக்குள்ளான நாகராசா சிவனே கதி என்று நினைத்தார். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1808. வென்று விரைந்து விரைப்பணி யென்றனர்**
**நின்று பொருந்த இறைபணி நேர்படத்**
**துன்று சலமலர் தூவித் தொழுதிடு**
**கொண்டிடு நித்தலுங் கூறிய வன்றே.**

" சிவனடியார்களே, கதிரேசன் ஐம்புலன்களையும் வென்றவர். தினமும் நறும் புகையும் நெய்யால் விளக்கிட்டும் சிவனைப் போற்றிப் பாடுபவர். பூக்களைப் படைத்து நீரால் சிவனை நீராட்டி திருமுறைகளைப் பாடி மகிழ்பவர். இவ்வாறு அவர் வழிபடுவதால் அவரின் வாக்குச் சிவனின் வாக்கக இருந்தது. அவ்வூர் மக்கள் அவரிடம் சென்று ஆசி பெற்ற பின்பே எதையும் செய்வார்கள். நாகராசாவின் இளைய மகளுக்குத் திருமணம் பேசப்பட்டது. அவள் பட்டதாரி. சிவபக்தை. நாகராசா வியாபாரத்தில் பெரும் நட்டமடைந்ததால் தனது நண்பனான சிவக் கொழுந்தின் மகனைத் தனது மகளான அம்பிகைக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினான். அதை அறிந்த கதிரேசன் சொன்னார், " நாகராசா, இந்தத் திருமணம் வேண்டாம். நீ பேசாமல் இரு சிவன் தனது பக்தையான உனது மகளுக்கு நல்லதைச் செய்வான் " என்றவர். தனது துன்பம் தீரவேண்டுமானால் தனது மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நினைத்த நாகராசா திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்தான். நாளும் குறிக்கப்பட்டது. அதை அறிந்த நாகராசாவின் நண்பனின் வீட்டில் வேலை செய்த வேலைக்காரி தன்னை அவன் கெடுத்து விட்டான் என்று காவல் துறையில் புகாரிட்டான். அதனால் அத்திருமணம் தடைப்பட்டது. கதிரேசன் தனது மாணவனான வைத்தியருக்கு அவளைத் திருமணம் செய்து வைத்தார். அதனால் அடியார்களே, எதற்கும் அவசரப்படாதீர்கள். நீங்களாகவே முடிவை எடுக்காதீர்கள். எல்லாவற்றையும் சிவனிடம் ஒப்படைத்து விட்டு அழகான மலர்களைப் படைத்துத் திருமுறைகளைப் பாடி வணங்குங்கள். அவன் முடிவு செய்வான். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1809. சாத்தியும் வைத்துஞ் சயம்புவென் றேத்தியும்**
**ஏத்தியு நாளு மிறையை யறிகிலார்**
**ஆத்தி மலக்கிட் டகத்திழுக் கற்றக்கான்**
**மாத்திக்கே செல்லும் வழியது வாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் ஆச்சிரமத்தில் வீற்றிருக்கும் சிவனுக்கு ஆடை அணிகலன்களை உடுத்துவார். வெண்ணீறு சாத்துவார். திருவுரு அமைப்பார். இயற்கையான தனிப் பெருங்கடவுள் என்று புகழ்வார். அதைத்தினமும் ஆச்சிரமத்திற்கு வரும் அடியவர்கள் பார்த்தும் அதை உணர்பவர்கள் மிகச் சிலரே. பலர் ஆசைகளை ஒழித்து அதன் வழியாக மல அழுக்குகள் அற்ற வீடு பேற்றிற்குச் செல்லும் வழியை அறிகின்றனர். அது தான் சிவவழிபாட்டின் புண்ணியப் பேறாகும். பல்வேறு துன்பங்களுடன் வருபவர்கள் சிவனை நினைத்தால் அவனது வழிபாட்டு முறைகளைச் செய்தால் துன்பங்கள் அகலும் என்பதை உணராது துன்பங்களையே வணங்கும் போதும் நினைக்கின்றனர். துன்பங்களை அழிக்கும் வழி சிவ வழிபாடு என்பதை உணர மறுக்கின்றனர். அதை உணர்வோர் துன்பங்கள் இல்லாத இன்ப உலகில் வாழ்கின்றனர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1810. ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற**
**மேவித் திரியும் விரிசடை நந்தியைக்**
**கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்**
**தாவிக்கு மந்திரந் தாமறி யாரே.**

“ சிவனடியார்களே, சிவனோடு சேர்தல் மிக மிக எளிது. ஆருயிர்கள் இன்படைய வேண்டும் என்ற காரணத்தால் உச்சிக்கு மேல் திகழும் பரவெளியின் கண் விளங்கி நிற்கும் விரிந்த சடையை உடைய நந்தியை அவனின் அருளால் “ சிவ ” என்று அழைத்துப் பின் நெஞ்சில் “ சிவய ” என எண்ணி, அங்கிருந்து திருவுருவைப் பார்த்து “ சிவய சிவ ” என்று சொல்லுதல் வேண்டும். இந்த உண்மையை ஒரு சிலரே அறிவர். இவ்வளவு இலகுவான மந்திரத்தைத் தினமும் ஆச்சிரமத்தில் கேட்டும், நர் சொல்லியும் விளங்காதபவர் சொல்லொனாத் துன்பத்தில் அழுந்துகின்றனர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1811. சாணாகத் துள்ளே அழுந்திய மாணிக்கங்**
**காணு மளவுங் கருத்தறி வாரில்லை**
**பேணிப் பெருக்கிப் பெருக்கி நினைவோர்க்கு**
**மாணிக்க மாலை மனம்புகுந் தானே.**

“ சிவனடியார்களே, மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சு, மிடறு, புருவநடு என்னும் ஆறு நிலைக்களனும் ஒன்றிற் கொன்றினது இடைவெளி ஒரு சாண் ஆகும். புருவநடுவுக்கு மேல் உச்சித்துளை ஒரு சாணாகும். அதற்கு மேல் பரவெளி. இவற்றுள் உயிர் உய்தற் பொருட்டு ஊடுருவி நிற்பவன் சிவபெருமான். இவ் உண்மையை அவனருளால் அளந்து காணுவாரில்லை. அவனது திருவடி உணர்வினைப் பேணி வளர்த்து அதனால் இறவா இன்ப அன்பினை வளர்த்து இடையறாது வணங்குவோரின் உள்ளத்துள் சிவபெருமான் புகுந்து நிற்பான். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1812. பெருந்தன்மை நந்தி பிணங்கிருள் நேமி**
**இருந்தன்மை யாலுமென் நெஞ்சிடங் கொள்ள**
**வருந்தன்மை யாளனை வானவர் தேவர்**
**தருந்தன்மை யாளனைத் தாங்கிநின் றாரே.**

“ சிவனடியார்களே, பெருந்தன்மையும் பேரருளும் வாய்ந்தவன் நந்தியாகிய சிவபெருமான். ஆருயிரைப் பிணித்துத் தான் விரும்பிய படி செயலாற்றச் செய்யும் வல்லிருளான ஆணவம் அகல அவ் ஆண்டவன் மெய்யடியார்களின் நெஞ்சத்தில் வீற்றிருக்கும் தன்மையாலும், நெஞ்சத்தில் நிறைவுற அவன் வரும் தன்மையாலும் அகற்றுவான். அவன் இன்ப உருவ முழு முதலானவன். அவனே சிவ உலகத்தவர்களுக்கும், துறவுலகத்தாருக்கும் வேண்டிய வாய்ப்புக்களையும் திருவருளின் துணையால் ஈய்ந்தருளுகிறான். அவனது திருமேனியினைத் தாங்கி நின்றாரே நன்னெறிச் செல்வராவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவமிகள்.

## 12. குருபூசை

**1813. ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்**
**போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்**
**ஆகின்ற ஆதார மாறா றதனின்மேற்**
**போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே.**

“ சிவனடியார்களே, நந்தியின் திருவடியைப் பற்றுக் கோடாகக் கொண்டு ஆருயிர் திருவடிப்பேற்றினை எய்துதற்குரிய அருமறையாகிய உபதேசம் திருவைந்தெழுந்தாகும். அதனை அருளால் அருளிச் செய்பவன் சிவகுருவாவான். அவனைப் பூசிக்கும் பூசை குரு பூசையாகும். அகத்தே ஆறு நிலைக்களங்களில் செய்யும் வழிபாட்டினையும், அருஞ்சைவர் மெய்யாகக் கொள்ளப்படும் முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேல் செல்கின்ற

மாறா அழகினை உடைய விழுமிய முழு முதற் சிவனையும் இடையறாது வழிபடவேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1814. மேவிய ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பரன்**
**ஆவயின் ஞான நெறிநிற்றல் அர்ச்சனை**
**ஒவற வுட்பூ சனை செய்யில் உத்தமஞ்**
**சேவடி சேரல் செயவறல் தானே.**

“ சிவனடியார்களே, சிவபெருமானை அடைவதற்குரிய ஞானத்தின் ஞானம் ஏற்பட்ட விடத்துச் செய்யும் வழிபாடு ஞான பூசை ஆகும். அது தான் விழுமிய அர்ச்சனையாவது. ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக்கேட்டல், கேட்பித்தல் ஆகியனவாகும். ஈனமில்லாப் பொருட்களைச் சிந்தித்தல் என்பன சிவனை அடையவைக்கும் எழில் ஞானப் பூசையாகும். இடைவிடாது ஐந்தெழுத்தை ஓதும் நெஞ்சம் பூசை இடமாகவும், கொப்பூழ் ஓம இடமாகவும், புருவ நடு செம்பொருளைக்காணும் நிலைக்களமாகவும் கொண்டு புரிவது உட்பூசையாகிய அகவழிபாடாகும். இவ் வழிபாட்டினைச் செய்வோர் தலையானவராவர். அந்நெறியில் திருவடியைக் கூடுதல் என்பது ஆருயிர் தனது செயலற்று இறைபணி நிற்றலாகும். இதை உணர்ந்த கதிரேசன் பாடசாலை மாணவர்களையும் மக்களையும் ஆச்சிரமத்திற்குத் தினமும் மாலை வேளைகளில் அழைத்து வந்து திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் ஓதுவிப்பார். பின் மாணவர்களை ஓதச் சொல்வார். திறமையானவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பார். அவல், கடலை, மோதகம், வடை, அமுது என்பனவும் கொடுப்பார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1815. உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை**
**நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை**
**விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்**
**நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் மாணவர்கள் மீது அளவில்லாத அன்பை வைத்திருப்பவர். மாணவர்கள் ஒழுக்கமாக வாழ்ந்தால் தான் அவர்களது எதிர்காலம் வளமாகுமென்று நினைத்து மாணவர்களோடு மிகவும் அன்பாகப் பழகுவார். அவர்களுக்கு இனிப்புகள் வாங்கிக் கொடுப்பார். கற்றல் உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பார். அதனால் மாணவர்கள் அவரை மிகவும் விரும்பினர். அன்று பிரதோச விரத நாள். அதனால் மாணவர்களை அழைத்துக் கூறினார், “ சிவனின் மைந்தர்களே, காலை, உச்சி , மாலை என்னும் மூன்று வேளைகளிலும் சிவபெருமானை வழிபடுங்கள். அதற்காக நீங்கள்

பெரிதாக எதுவும் செய்யத்தேவை இல்லை. ஒரு நிமிடம் மனதை ஒடுக்கி இருக்குமிடத்தில் இருந்து கொண்டே ஐந்தெழுத்தைச் சொல்லுங்கள். ‘‘நமசிவய’’ என்பது தான் இறைவனின் திருப்பெயர். அதனால் அவ்ஐந்தெழுத்தைப் போற்றித் துதியுங்கள். சிவபெருமானின் திருக்கண்களாக இருப்பவை சூரியனும் சந்திரனும் தீயும் என்று உங்களுக்குத் தெரியும். அம்மூன்றிலிலும் சிவனது ஒளி மேம்பட்டு விளங்கும். அவற்றைச் சிவனின் திருவுருவாக நினைத்து வழிபடுங்கள். சிவனது திருப்பெயர் நந்தியாகும். முக்கண்னனான சிவனை அடையும் வழி நற்றமிழ் மறையான ‘‘நமசிவய’’ வை ஓதுவதே. அதை ஓதியவாறு மாணவர்கள் விரும்பியவற்றைக் கேட்டால், சிவன் மனமுவந்து தந்தருள்வான் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1816. புண்ணிய மண்டலம் பூசைநூ றாகுமாம்**
**பண்ணிய மேனியும் பத்துநூ றாகுமாம்**
**எண்ணிலிக் கைய மிடிற்கோடி யாகுமாற்**
**பண்ணிடில் ஞானிபூண் பார்க்கில் விசேடமே.**

‘‘ சிவனடியார்களே, உங்கள் ஊரில் உள்ள கோவில்களில் வணங்குவது நன்று. அதைவிட நான்கு நாயன்மார்களும் பாடல்களைப் பாடியருளிய திருத்தலங்களுக்குச் சென்று வணங்குவது ஏனைய இடங்களில் சென்று வணங்குவதை விட நூறு மடங்கு பயன் தரவல்லது. சிவத்தை வழிபட்டு இறப்பிலும் தவத்தை மேற்கொள்ளும் நாயன்மார்களினதும் மெய்யன்பர்களினதும் திருமேனிகளை வழிபட்டால் ஆயிரம் மடங்கு பயன் கிடைக்கும். சிவனது திருவடியைத் தவிர வேறு எவரின் திருவடியையும் வணங்காத சிவஞானிகளுக்குப் பிச்சையிடுவது ஏனையவற்றை விட ஒரு கோடி மடங்கு கூடுதலான பயனைத் தரும். எல்லாவற்றிலும் சிறப்பானது சிவஞானிக்குக் கொடுக்கப்படும் உணவாகும். அதனால் தான் ஆச்சிரமத்திற்கு வரும் சிவஞானிகளுக்கு உணவளிக்கக் கதிரேசன் ஏற்பாடு செய்துள்ளார். அவரது வீட்டிற்கு நடுச்சாமவேளை சென்றாலும் சுவையான உணவு கிடைக்கும். அவர் சிவனடியார்களுடன் பாடல் பெற்ற தலங்களுக்குச் சென்று அங்கு நாயன்மார்கள் சிவனைப் புகழ்ந்து பாடிய திருமுறைகளைப் பாடுவார். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1817. இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை**
**வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்**
**இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை**
**வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.**

“ சிவனடியார்களே, இடமூக்கு வலமூக்குகளில் உயிர்ப்பு நடக்கும் போது சிவ வழிபாடு செய்யின் அசுரர்களுக்குக் கிடைத்த பலனே கிடைக்கும். இவை இரண்டின் வழியன்றி நடு நாடியின் கண் உயிர்ப்பு அடங்கி உள்ள ஒருமையுடன் சிவவழிபாடு செய்தால் அதனால் பெரும் பயன் உண்டாகும். இப்பூசையின் பெருமையைக் கூறி முடிக்க முடியாது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1818. இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்**
**விந்துவும் நாதமு மாகிமீ தானத்தே**
**சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு**
**நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே.**

“ சிவனடியார்களே, சூரியனும் சந்திரனும் அது போல விந்துவும் நாதமும் திகழ்கின்ற ஆறு நிலைக்களங்களுக்கும் அப்பாற்பட்ட மேலிடத்தில் நாட்டத்தை நிறுத்தி நனவு நிலையில் உயிர்ப்பை அடக்கியவர்கள் சிவநிறைவில் ஒடுங்கிச் சிவ பெருமானை வழிபடுவதே மிகச் சிறந்த சிவ பூசையாகும். இதுவே திருவடியைச் சேர்ப்பிற்கும் நற்பூசையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1819. மனபவ னங்களை மூலத்தான் மாற்றி**
**அனித வுடற்பூத மாக்கி யகற்றிப்**
**புனிதன் அருள்தனிற் புக்கிருந் தின்பத்**
**தனியுறு பூசை சதாசிவற் காமே.**

“ சிவனடியார்களே, மனதில் எழும் எண்ணங்களையும் அதற்குத் துணையான உயிர்ப்பினையும் திருவைந்தெழுத்தால் வேறு புலன்களுக்குச் செல்லாவண்ணம் அடக்குதல் வேண்டும். அதன்பின் ஐம்பூதங்களையும் திருவருளால் ஒடுக்கி திருவருளை இடையாறாது நினைத்து நினைவான அருளுடம்பாக ஆக்கி மெய்யன்புடனும் சிவ நினைவுடனும் வழிபடுவது சதாசிவ வழிபாடாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1820. பகலும் இரவும் பயில்கின்ற பூசை**
**இயல்புடை யீசாக் கிணைமல ராகப்**
**பகலும் இரவும் பயிலாத பூசை**
**சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே.**

“ சிவனடியார்களே, பகல் இரவு ஆகிய இருகாலங்களில் அகத்தே அருட்பண்பாகிய மலரும், புறத்தே அதன் நினைவுக்குறியான நறுமலராகிய மலரும் இணைமலர்கள்

எனப்படும். இவையே சிவ பூசைக்கு ஏற்றவையாகும். இப்பூசையை ஒப்பில் பூசை என்பர். இவ்வகைப்பூசையையும் சிவபெருமான் மிகவும் விரும்பி ஏற்றுக் கொள்வான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 13. மகேசுர பூசை

**1821. படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்**
**படமாடக் கோயிற் பகவற்க தாமே.**

“ சிவனடியார்களே, அருஞ்சைவத்தத்துவங்கள் ஆறாறினையும் பிண்டவடிவில் காட்டும் படம் போல விளங்குவது திருக்கோவில். இது நின்று பயனளிக்கும் நிலையம். சிவனை நினைத்தவாறு வாழும் மெய்யடியார்களது திருமேனி நடமாகும். புனித இடம். மெய்யடியார்களின் மறவாத நினைவுக்குரிய இடங்கள் எட்டாகும். அவை நிற்றல், இருத்தல், கிடத்தல், நடத்தல், மெல்லல், துயிலல், விழித்தல், இமைத்தல் என்பனவாகும். இத்திருக்கோவிலுக்குச் செய்யும் திருத்தொண்டுகள் யாவும் சிவபெருமானது திருவடியைச் சென்றடையும். படமாடக்கோவில் வழிபாடு நடமாடக்கோவிலை நண்ணுவதில்லை. இவை இரண்டும் முறையே கல்லெழுத்தும் கருத்தெழுத்தமுமாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1822. தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்**
**துண்டது மூன்று புவனமும் உண்டது**
**கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்று**
**எண்டிசை நந்தி எடுத்துரைத் தானே.**

“ சிவனடியார்களே, சிவனை மறவாத சிந்தையைக் தண்டறு சிந்தை என்பர். இச்சிந்தனையை உடையவர்கள் இறவாத தபோதனராவர். ஆவர்கள் அருளால் மகிழ்ந்து உண்டது மூன்று டிஉலகங்களும் முற்ற உண்டதாகும். மூன்று உலகம் என்பது அவன் அவள் அதுவாகும். இவ்வுண்மையினை எட்டுத்திசைகளிலும் என்றும் நிலைத்து நிறைந்து நின்றியக்கும் நந்தியாகிய சிவபெருமான் நல்லருளால் மெய்யடியார்க்கு பொழிந்தருளியுள்ளான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1823. மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை**
**யாத்தனுக் கீந்த அரும்பொரு ளானது**
**மூர்த்திகள் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்**
**தீர்த்தம தாமது தேர்ந்துகொள் வீரே.**

“ சிவனடியார்களே, நுழைவு, நோன்பு, நுண்மை என்று சொல்லப்படும் சமயம், விசேடம், நிருவானம் ஆகிய மூன்றும் குருமுழுக்கு என்று சொல்லப்படும் ஆசாரிய அபிடேகம் பெற்ற மெய்யடியாரை அத்தன் என்பர். அத்தன் என்பதே ஆத்தன். இந்நல்லார் இருமாத்திரையில் இருந்து நீங்கி ஒரு மாத்திரையாக ஓங்குவர். அதனால் அவர் மாத்திரை எனவும் பெயர் பெறுவர். அவர் பால் சிவபெருமான் இடையீடின்றி மாத்திரைக்குள் வெளிப்பட்டு நிலையாக நிற்பான். அத்தகையோர்க்குக் கொடுக்கும் பொருட்கள் சிவபெருமானுக்கு கொடுக்கும் பொருட்களாகக் கருதப்படும். அத்துடன் அப்பொருட்கள் அயன், அரி, அரன் ஆகிய மூவருக்கும், தந்தையின் பெற்றோர், தாயின் பெற்றோர், மனைவியின் பெற்றோர் ஆகிய முத்திறத்து ஏழுவகையினருக்கும் சென்றடையும். இவ்உண்மையினைத் தெரிந்து உதவி வாருங்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1824. அகரம் ஆயிரம் ஆரியர்க் கீயிலென்**
**சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்**
**பகரு ஞானி பகலூண் பலத்துக்கு**
**நிகரிலை என்பது நிச்சயந் தானே.**

“ சிவனடியார்களே, பார்ப்பார் தங்குமிடம் அகரமாகும். அவ்வாறான ஆயிரம் அகரங்கள் அமைத்துக் கொடுத்தாலும் அல்லது கோபுரங்களுடன் கூடிய ஆயிரம் கோவில்கள் அமைத்தாலும் அதை விட உயர்வானதும் சிறப்பானதும் எது வென்றால் சிவஞானி ஒருவருக்கு ஒரு வேளை உணவு கொடுப்பதே. அதற்கு முன் சொன்ன இரண்டுமல்ல உலகில் உள்ள வேறு எதுவும் ஒப்பாகாது என்று சொல்லும் கதிரேசன் சிவஞானிகள் எவ்வேளையில் வந்தாலும் உணவு கொடுக்க வேண்டும் என்பதற்காக இரவிலும் விழித்திருப்பார். ஒரு நாள் நள்ளிரவு நேரம் ஒருவர் கதிரேசனின் வீட்டுக்கு வந்து கதவைத் தாட்டினார். கதிரேசன் எழுந்து வந்து பார்த்த போது யாரையும் காணவில்லை. அதனால் கவலை கொண்ட அவர் ஆச்சிரமத்திற்கு வந்தார். ஆச்சிரமத்தில் உள்ளவர்கள் இரவு பகலாக விழித்திருப்பர். கதிரேசன் நடந்தவற்றைச் சொன்ன போது நல்லை நாதன் சொன்னான், “ நீங்கள் எவ்வேளையிலும் சிவனடியார்களைப்பற்றி நினைத்திருப்பதால் அவ்வாறு சத்தம் கேட்டுள்ளது. வந்து கதவைத் தட்டயவர் அதற்குள் எங்கு சென்றார் ” என்றவர். திரும்பி வீட்டுக்குச் சென்ற கதிரேசன் விடியும் வரை அச்சிவனடியாருக்காகக் காத்திருந்தவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1825. ஆறிடும் வேள்வி அவிகொளும் நூலவர்**
**கூறிடும் விப்பிரர் கோடிபே ருண்பதில்**
**நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை**
**பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே.**

“ சிவனடியார்களே, அருமறை நூல்கள் கூறியபடி வேள்வி செய்வோர் அந்தணர்கள் என்று கூறப்படுவர். அத்தகைய அந்தணர்கள் பயன் பெற வேண்டும்மானால் திருவெண்ணீறு அணியும் சிவத்தொண்டர் ஒருவருக்கு ஒரு பிடி சோறு அளித்தல் வேண்டும். அதை விடச் சிறந்த பயன் மறைகளை ஓதுவதால் உண்டாகாது. இதை யாரோ சிவனடியார் தான் வந்து தட்டியிருப்பார். அச்சத்தத்தைக் கேளாது நித்திரையாகி விட்டேன் என்ற கவலையால் வருந்திய கதிரேசன் காணும் அடியார்களிடமெல்லாம் நீர் வந்திரா என்று விசாரித்தார். நல்லநாதன் சொல்வது போல அது பிரமையாக இருக்காது என அவர் உறுதியாக நம்பினார். அதனால் அவர் நிம்மதியை இழந்தார். யார் எதைச் சொன்ன போதும் அவரது மனம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அச்சம்பவம் நடந்து மூன்று தினங்களுக்குப் பின் மாலை வேளையில் ஒரு மெய்யடியார் வந்து சொன்னார், “ மகனே, மூன்று தினங்களுக்கு முன் உனது வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினேன் அப்போது வந்த ஒருவர் கதவைத் தட்டாதீர்கள் நான் உங்களுக்கு உணவு தருகிறேன் என்று கூறி ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்று உணவு தந்தார். பகல் முழுவதும் சிவசேவை செய்யும் உங்களைக் குழப்பவேண்டாம் என்றவர்” என்று கூறிய போது கதிரேசன் அதிர்ந்து போனார். அப்படியான ஒரு செயல் நடக்கவில்லை. நடந்திருந்தால் சுவாமியார் சொல்லியிருப்பார் என்று நினைத்த போது அச்சிவனடியார் சொன்னார், “ மகனே, எதையும் யோசிக்காதே. சிவன் தன் மீது அளவற்ற அன்பு கொண்டவர்களைச் சோதிப்பான். இதை மெய்யடியார்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்று கூறியவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1826. ஏறுடை யாயிறை வாஎம்பி ரானென்று**
**நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்**
**ஆறணி செஞ்சடை யண்ண லிவரென்று**
**வேறணி வார்க்கு வினையில்லை தானே.**

“ சிவனடியார்களே, வந்த அச்சிவனடியார் சொன்னார், “ திருவைத்தெழுத்தை ஓதி திருநீறு அணிபவரை ஏறுடையாய் எனவும், இறைவா எனவும், எம்பிரான் எனவும் உள்ளன்பால் ஓதுவர். அவ்வாறு ஓதித் திரு நீறு அணியும் மெய்யடியார்கள். இயங்கும் தேவர்களாவர். அவர்களைச் சிவன் என்றே நினைக்க வேண்டும். அங்ஙனம் நினைத்து

அம்மெய்யடியார்களைச் சிறப்பாகப் பேணி வழிபடுபவர்களுக்கு மூன்று வினைகளான எஞ்சுவினை ஏன்றவினை, ஏறு வினை அறுந்து விடும். அதை அறுக்கவே உன்னைத் தேடி வந்த சிவன் உன்னோடு விளையாடி உனது மன நிலையை அறிந்திருப்பார் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1827. சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட**
**பேர்நந்தி யென்னும் பிறங்கு சடையனை**
**நானொந்து நொந்து வருமாள வுஞ்சொல்லப்**
**பேர்நந்தி யென்னும் பிதற்றொழி யேனே.**

“ சிவனடியார்களே, மெய்யடியார்கள் திருவருளால் சிவனை நினைத்துத் திருமுறை ஓதி இறைபணிகள் செய்வர். அவர்களிடத்துச் சிவன் தயிரில் நெய் போல விளங்கத் தோன்றுவான். அதனால் அவ் அடியவர்களது திருமுகம் சிவப்பொலிவுடன் காணப்படும். அதனால் அவர்களைச் சிவன் என்று அழைப்பர். அத்தகைய பெயரை வழங்குபவன் நந்தியாகும். அவன் ஐந்தெழுத்தை ஓதி வருந்தி வருந்தி அழைத்தால் அவன் வந்து அழைப்பவரை ஆள்க்கொள்வான். ஆள்க்கொள்ளும் வரை பேரன்புடன் அழையுங்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1828. அழிதக வில்லா அரனடி யாரைத்**
**தொழுதகை ஞாலத்துத் தூங்கிருள் நீங்கும்**
**பழுதுப டாவவண்ணம் பண்பனை நாடித்**
**தொழுதெழ வையகத் தோரின்ப மாமே.**

“ சிவனடியார்களே,அழியும் தன்மை இல்லாத சிவனின் அருட்பண்புகளை மேற்கொண்டு வாழும் சிவனடியாரைக் கண்களாற் கண்டால் அவரைச் சிவ என மெய்யடியார்கள் தொழுது வணங்குபவர். அதனால் வணங்குபவரின் வல்லிருள் நீங்கும். தொழாத நாள் இல்லை என்று சொல்லும் படி அச்சிவனடியாரை நாடித் தொழ ஒப்பில்லாத சிவப்பேரின்பம் உடனே கிட்டும். சிவனடியார்களே, ரவீந்திரனும் நல்லை நாதனும் காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்து விட்டுக் கதிரேசனது வீட்டுக்கு வந்து அவரைத் தொழுத பின்பு தான் ஏனைய வேலைகளைச் செய்வார்கள். ஒரு நாள்க் கூடத் தொழாது விடமாட்டார்கள். ஒரு நாள் மிகவும் அவசரமான சூழ்நிலையில் ரவீந்திரன் கதிரேசனைத் தொழாது சென்று விட்டான். அன்று முழுவதும் அவனது மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. வழியில் அவன் விபத்துக்குள்ளாகவும் நேர்ந்தது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1829. பகவற் கே தாகிலும் பண்பில ராகிப்**
**புகுமத்த ராய்நின்று பூசனை செய்யும்**
**முகமத்தோ டொத்துநின் றூழிதோ றூழி**
**அகமத்த ராகிநின் றாய்ந்தொழிந் தாரே.**

“ சிவனடியார்களே, சிவன் தனது உடலில் வலப்பக்கத்தை அம்மைக்குக் கொடுத்தமையால் அவன் பகவன் என்று அழைக்கப்படுகிறான். அவன் உண்மையான மெய்யடியார்க்கு மட்டும் காட்சி கொடுப்பான் மெய்யடியார்கள் உரிய முறைப்படி பூசை செய்வர். அவ்வழிபாட்டின் பயனாக ஊழி ஊழியாக அவனைச் சிறப்புடன் பூசை செய்வோர் அவனிடம் அடங்கி நிற்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1830. தாழ்விலர் பின்னும் முயல்வ ரகுந்தவம்**
**ஆழ்வினை யாழ அவர்க்கே அறஞ்செய்யும்**
**ஆழ்வினை நீக்கி அருவினை தன்னொடும்**
**போழ்வினை தீர்க்கும்அப் பொன்னுல காமே.**

“ சிவனடியார்களே, சிவனடியார் வழிபாட்டின் போது அன்பில் ஒரு சிறிதும் குறைபாடில்லாமல், மேலும் மேலும் சிவனைப் பேணும் தவத்தால் ஏறு வினை நீங்கியது போன்று அருவினையாகிய எஞ்சுவினையுடன் ஏன்றவினையையும் சிவனருளால் நீக்குவர். அவர் வாழும் இடம் சிவ உலகாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 14. அடியார் பெருமை

**1831. திகைக்குரி யானொரு தேவனை நாடும்**
**வகைக்குரி யானொரு வாதி யிருக்கிற்**
**பகைக்குரி யாரில்லை பார்மழை பெய்யும்**
**அகக்குறை கேடில்லை யவ்வுல குக்கே.**

“ சிவனடியார்களே, பத்து திசைகளிலும் ஒருவனாக நிற்கும் முழுமுதலான சிவனை, அவனருளாலே வணங்கும் மெய்யடியார்கள் அரசர் உட்படச் சிவனுக்கு மாறாக வாழ்பவர்கள் எவரையும் மதிக்கமாட்டார்கள். எவரையும் வாதிட்டு வெல்வரே தவிர அடிபணியமாட்டார்கள். அவ்வகையான மெய்யடியார்கள் வாழும் நாட்டில் தீயவர்கள் வாழமாட்டார்கள். தீயவர்கள் வாழாததால் அவ்வூரில் பருவ மழை தவறாது பெய்யும். விளையும் குறையாது. பஞ்சமும் உண்டாகமாட்டாது. சிவனடியார்களே, ரவீந்திரனின் மேலாளர் மாற்றுச் சமயத்தைச் சேர்ந்தவர். அவர் ரவீந்திரனைக் கண்டவுடன் சிவ

நிந்தனை செய்வார். அது ரவீந்திரனுக்குக் கோபத்தை உண்டாக்கும். ஆத்திரம் தீர அடிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கும். அப்போது அவன் கதிரேசனை நினைப்பான். அவர் சொல்வார், “ மகனே, உலகில் உள்ளவர்கள் எவரும் ஒருவரைப் போல இன்னொருவர் இருப்பதில்லை. அதனால் பலர் பாவபுண்ணியங்களைப் பாராது தாம் நினைத்தபடி நடப்பர். அவர்களையெல்லாம் திருத்த முடியாது. காலம் அவர்களைத் திருத்தும். நீ அமைதியாகப்பணியைச் செய். பலனைச் சிவனிடம் ஒப்படை. அவர் பார்த்துக் கொள்வார்” என்பார் அதனால் ரவீந்திரன் மிகவும் சிரமப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொள்வான். ஒரு நாள் அதிகாரியுடன் அவன் பிரயாணம் செய்தவாகனம் விபத்துக்குள்ளான போது அதிகாரி மிகவும் பாதிக்கப்பட்டார். ஐந்து நாட்களின் பின்பு தான் சுயநினைவு வந்தது. சுயநினைவு வந்த போதும் அவரால் பேச முடியவில்லை. அவரைப் பராமரித்த சிற்றூழியன் அவரது மனைவிக்குச் சொன்னான், “ வாய் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது. என்பதற்காக தேவையில்லாத வார்த்தைகளைப் பேசக்கூடாது. காலம் மாறும் போது அதிகாரம் முடிவுக்கு வந்து விடும். வாயும் அடைபட்டு விடும் என்றவன். அவனது மனைவி சிவ பக்தை “ எனக்கு முன்பே இந்நிலை உருவாக்கு வருமென்று தெரியும். சிவன் இவரை என்ன கேட்டவர். இவர் தான் சிவ நிந்தனை செய்தவர் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1832. அவ்வுல கத்தே பிறந்தவ் வுடலொடும்**
**அவ்வுல கத்தே அருந்தவ நாடுவர்**
**அவ்வுல கத்தே அரனடி கூடுவர்**
**அவ்வுல கத்தே அருள்பெரு வாரே.**

“ சிவனடியார்களே, மெய்யடியார்கள் சிவ உலகத்திற்குச் சென்று வருவர். அதனால் அவர்கள் தூய உடலுடன் இருப்பர். அவ்வுலகத்திற்குச் சென்று சிவனை வழிபட்டு அருந்தவம் செய்வர். அச்சிவ உலகத்தில் இருந்து கொண்டே சிவனது திருவடியினைக் கூடுவர். அச்சிவ உலகத்திலேயே சிவ இன்பத்தைப் பெறுவர். இது உண்மையானது. பற்றுக்கள் வழியே புலன்களைச் செல்ல விடாது தடுத்து மெய்யன்புடன் சிவனை நினைத்தால் சிவ உலகத்திற்குச் செல்லலாம். சிவ உலகம் எப்படியானதென்று நான் மெய்மையை உணர்த்தும் நூல்களில் படித்துள்ளேன். நான் சிவனை நினைத்தால் கைலாயம் தோன்றும். நந்தியெம் பெருமான் இருப்பார். திருவருளம்மை சிவனின் இடப்பாகத்தில் இருப்பாள். சிவனின் கழுத்தில் நாகம் ஊரும். அவனது சடையில் கங்கை பெருகும். மகிழ்வுடன் சிவனுடன் உரையாடுவேன் என்று கதிரேசன் சொல்வார். மனத்தை விட வேகமானது எதுவும் இல்லை. அது கண்மூடிக் கண்களைத் திறப்பதற்குள் உலகமெல்லாம் சென்று வந்துவிடும். அப்படிபட்ட மனதிற்குச் சிவனின் அருள் இருந்தால்

அது ஏழு உலகங்களுக்கும் ஒரு நொடியில் சென்று வந்து விடும். ’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1833. கொண்ட குறியுங் குலவரை யுச்சியும்**
**அண்டரும் அண்டத் தமரரும் ஆதியும்**
**எண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்தினுள்**
**உண்டெனில் நாமினி உய்ந்தொழிந் தோமே.**

‘‘ சிவனடியார்களே, ஆருயிர்கள் வினைக்கீடாக ஏற்கும் பல்வேறு வகையான பிறப்பு வேறுபாட்டு உண்மைகளும், உலகில் காணப்படும் உயர்ந்த மலையுச்சியின் தன்மைகளும், ஒன்றோடு ஒன்று நெருங்குதற்கரிய பல்வேறு அண்டங்களும், அவ்வவ் அண்டங்களில் வாழும் அமரர்களும், அவர்களை இயக்கும் காரணரும், எட்டுத்திசைகளில் உள்ளவர்களும் திருவருளின் துணையோடு நாடும் கால் என் அறிவின் கண் புலனாகாது நின்றனர். இந்நிலை அருள்கைவந்த மெய் நிலை எனப்படும். இந்நிலை எய்துவோர் உயர்ந்தவராவர் ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1834. அண்டங்கள் ஏழும் அகண்டமும் ஆவியுங்**
**கொண்ட சராசர முற்றுங் குணங்களும்**
**பண்டை மறையும் படைப்பளிப் பாதியுங்**
**கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே.**

‘‘ சிவனடியார்களே, இத்திருப்பாடலில் திருமூலர் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகிறார். சூரியனைச் சூழ்ந்து சுற்றும் ஏழு வகையான கோள்களும், வேறு விரிந்த நிலைகளும், அந்நிலைகளில் உள்ள உயிர்களும், ஆங்காங்குள்ள இயங்கு திணை நிலத்திணை, உயிர்களும், அவ்வவற்றின் பண்புகளும், பண்டைத்தமிழ் நான்மறையும், படைத்தல், காத்தல் முதலிய திருவருள் தொழில்களும் சிவபெருமான் என்னுடன் விளங்கி நின்று என் அறிவினுள்க் காட்டுவதால் அவை அனைத்தின் உண்மைகளும் அடியேனின் அறிவினுள் புலனாகாது நின்றன். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1835. பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்**
**உள்நின்ற சோதி ஒருவர்க் கறியொணாக்**
**கண்ணின்றிக் காணுஞ் செவியின்றிக் [3]கேட்டிடும்**
**அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே.**

“ சிவனடியார்களே, இருவினைக்கீடாகச் சிவபெருமானால் தரப்படும் உடம்பின் கண்ணே ஆண், பெண், அலி என்ற குறிவேறு பாடுகள் காணப்படுமேயன்றி, உயிரின் கண் அவை எவையும் காணப்படமாட்டாது. அப்படி இருக்கையில் இறைவனிடத்தில் அவை காணப்படும் என்று எப்படிச் சொல்வது. இறைவன் ஆண் பெண் அலி என்பவற்றில் எதுவும் அல்லாதவன். அவன் ஆருயிரின் அகமாகிய நெஞ்சினுள் மறைந்து அறிவுப் பேரொளியாகத் திகழ்கின்றவன். எனினும் அவனை அவனருளால் அறியலாமே தவிரத்தன் அருளால் அறிய முடியாது. அவன் கருவிகளின் துணையின்றித் தன் அருளாற்றலால் எல்லாவற்றையும் அறிந்து கொள்பவன் அதனால் அவன் கண்ணின் றிக்காண்பான். செவியின் றிக்கேட்பான். இத்தகைய பெருமை வாய்ந்த சிவனைச் சிவகுருவால் ஆராய்ந்தறிவதே பிறப்பற்ற நிலையை உண்டாக்கும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1836. இயங்கும் உலகினில் ஈசன் அடியார்**
**மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்**
**புயங்களு மெண்டிசை போதுபா தாள**
**மயங்காப் பகிரண்ட மாமுடி தானே.**

“ சிவனடியார்களே, நிற்காது சுழலும் இவ்வுலகில் சிவபெருமானின் திருவடியுணர்வு கைவரப்பட்ட சிவனடியார்கள் செந்நெறிச் செல்வராவர். இவர்கள் சிவ உலகை ஆள்பவர்கள். சிவபெருமானின் திருத்தோள்கள் திசைகள் எட்டிலும் அருள் புரிவதற்காக எட்டாகிச் செயற்படுகின்றன. அத்துடன் அவனது திருவடித் தாமரை பாதாளத்தில் உள்ள ஏழினிற்கும் அப்பால் திருமுடி வெளியில் திகழும் புற அண்டங்களுக்கும் அப்பாற்பட்டது ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1837. அகம்படி கின்றநம் ஐயனை யோரும்**
**அகம்படி கண்டவர் அல்லலிற் சேரார்**
**அகம்படி யுட்புக் கிறிகின்ற நெஞ்சம்**
**அகம்படி கண்டாம் அழிக்கலும் எட்டே.**

“ சிவனடியார்களே, மறவாத நினைவுடன் உள்ளத்தில் வீற்றிருந்து அருள்கின்ற சிவபெருமானை, மனஅடக்கத்துடன் கொல்லாமை முதலிய எண்பெரும் பண்புகளுடன் மலர்களைப் படைத்துத் தினமும் வழிபடும் மெய்யடியார்கள் பிறப்பு இறப்புக்கு உட்படமாட்டார்கள். தன்முனைப்பான அகங்காரத்தை விட்டொழித்தோர் நுண்ணுடலின் மெய்மையை உணர்வர். அவர்கள் எட்டுறுப்பால் ஆன நுண்ணுடலின் தன்மையை அறிந்து அதை நீக்க வல்லவராவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1838. கழிவு முதலுங் காதற் றுணையும்**
**அழிவும தாய்நின்ற ஆதிப் பிரானைப்**
**பழியும் புகழும் படுபொருள் முற்றும்**
**ஒழியுமென் னாவி யுழவுகொண் [2]டானே.**

“ சிவனடியார்களே, சொல்லி முடிக்க முடியாத பெருமையும், எல்லையில்லாத விரிவும், தன்நிலை நீங்காத திருவருள் அம்மை காதல் துணையாகவும், பேரொடுக்கப் பெரும் துணையாகவும் ஆருயிர்களைக் காப்பாற்றுகிறாள். சிவ பெருமானை வழிபடுவதாலும் அவரது புகழைப் பாடுதலும் அவனது அருட்தொழில் ஐந்தினையும் புகழ்தலையும் தொழிலாகக் கொண்டவர்களின் ஆவியை உழவு நிலமாகக் கொண்டு தன் விருப்பப்படி உழுது பண்படுத்தி இயக்குகிறான். ”

“ சிவனடியார்களே, உயிர் விளை நிலம் போன்றது. அதைப் பண்படுத்திப் பசளையிட்டு பராமரித்தால் நல்ல விளைச்சலைப் பெறலாம். உயிரான வயலைப் பண்படுத்தச் சிவனை வேண்டினால் அந்த வயலில் உள்ள களைகளை அகற்றி நல்ல நிலைப்படுத்தி உயிருக்கு மேல் நிலையைக் கொடுத்து இன்புறவைப்பான்” என்று கதிரேசன் கூறுவார். ஒரு காலத்தில் அவர் வறுமை காரணமாகச் சில தீய செயல்களைச் செய்தார். அவரது மனம் பண்படவில்லை. ஒரு நாள் அவர் எதிர் பாராத வேளை ஆச்சிரமத்திற்கு வந்தார். அங்கு சிவனைப் பற்றிய பெருமைகளை அறிந்து கொண்டார். அதன் பின் சிவன் விருப்போடு அவரின் மனதில் கோவில் கொண்டு கரடுமுரடாக இருந்த மனதைப் பண்படுத்தியமையால் அவரது வாழ்க்கை முன்னேறியது என்று அவர் தனது முன்னைய வாழ்க்கை பற்றி துணிந்து கூறுவார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1839. என்தாயோ டென்னப்பன் ஏழேழ் [1]பிறவியும்**
**அன்றே சிவனுங் கெழுதிய [2]ஆவணம்**
**ஒன்றா யுலகம் படைத்தான் எழுதினான்**
**நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே.**

“ சிவனடியார்களே, என் தாயும் தந்தையும், ஏழு வகையான பிறப்புக்களிலும் நான் சிவனின் அடிமை என்று எழுதிக் கொடுத்து வீட்டனர். அது போல எல்லாத் தாய் தந்தையாரும் எழுதிக் கொடுத்து விட்டனர். அதை எழுதியவன் படைப்போன். காப்பவனான முகில் வண்ணன் சாட்சிக்கை யொப்பமிட்டான். இது போல ஆசிரியர்களும் வைத்தியர்களும் தமது தொழில்களைச் செய்யு முன் அடிமைத்தன்மை வாய்ந்தவர்களாவர். இதைத்தான் ஊழ்வினை என்கிறோம். திருவிழாக்காலங்களில் மலசல கூடங்கள் மிகவும் அசுத்தமடைந்து காணப்படும. பல ஊர்களில் இருந்து பலரும் வருவதால் அவை மிக

மோசமான நிலையில் இருக்கும். அவற்றைத் துப்பரவு செய்யயாரும் வரார். அதனால் அவற்றைக் கதிரேசனும் ரவீந்திரனும் நல்லை நாதனும் துப்பரவு செய்வார்கள். அதைப் பொறுக்க முடியாத கதிரேசனின் மனைவியும் ரவீந்திரனின் மனைவியும் துன்பப்படுவர். இனத்தவர்கள் கேலி செய்வர். அப்போது கதிரேசன் சொல்வார், “ எமது பெற்றோர் முன்னைய பிறப்புக்களில் என்னைச் சிவனுக்கு அடிமையாக எழுதி ஒப்படைத்து விட்டார்கள். அடிமைகள் எல்லாவேலைகளையும் செய்ய வேணடும். அது சிவனின் கட்டளை. இதை உணராதவர்கள் தான் வெக்கத்தைப் பார்ப்பார்கள் என்றவர். அதைக் கேட்ட இளைஞப் பலர் இப்போ அந்த வேலையைச் செய்கிறார்கள். ” என்றார் சுந்திரமூர்த்தி சுவாமிகள்.

**1840. துணிந்தா ரகம்படி துன்னி உறையும்**
**பணிந்தா ரகம்படி பாற்பட் டொழுகும்**
**அணிந்தா ரகம்படி யாதிப் பிரானைக்**
**கணிந்தா ரொருவர்க்குக் கைவிட லாமே.**

“ சிவனடியார்களே, மலசலகூடத்துப்பரவு வேலைகளைக் கதிரேசனுடன் சேர்ந்து ஆனந்தராசா என்னும் இளைஞனும் செய்பவன். அவன் மிகுந்த ஏழை படித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருந்தான். வேலை கிடைக்கவில்லை. தாய் கடுமையான நோயாளி. அவனுக்குக் கீழ் மூன்று பிள்ளைகள் இருந்தனர். ஆனந்தராசாவின் மாமனின் மகள் தாட்சாயினி அவளும் பரம் ஏழை அவள் வந்து ஆனந்தராசாவின் வீட்டாருக்கு உணவு சமைத்துக் கொடுப்பாள். அதனால் ஆனந்தராசாவுக்கு வேலை கிடைத்தும் அவளைத் திருமணம் செய்து கொடுப்பது என்று இரு வீட்டாரும் தீர்மானித்தனர். ஆனந்தராசா தினமும் கோவில் மலசலகூடங்களைத் துப்பரவு செய்வான். அதனால் வெறுப்படைந்த தாட்சாயினி. அவனைத் திருமணம் செய்ய மறுத்து விட்டாள். கதிரேசன் வந்து சொல்லியும் அவள் கேட்கவில்லை. அவள் ஊரில் உள்ள இளைஞன் ஒருவனை விரும்பி அவனுடன் சென்று விட்டாள். இது ஆனந்தராசாவுக்குப் பெரும் துயரத்தைக் கொடுத்தது. அதை அறிந்த கதிரேசன் சொன்னார், “ மகனே, திருவடி உணர்வால் உண்மையை உணர்ந்தவர்களின் உள்ளத்தில் சிவன் விரும்பி உறைவான். அத்துடன் இறைபணி செய் உனது உள்ளத்தில் அவன் வசப்பட்டு நிற்பான். இறைபணி செய்வோரின் சிவ நினைவால் திருவுள்ளமாகும். அந்த உள்ளத்தில் அன்னையோடு சிவன் அகம் மகிழ்ந்திருப்பான். அவன் அவர்களைத் தாங்கிய வண்ணம் வீற்றிருப்பான். அவ்வெண்ணத்தோடு வாழ்பவர்கள் இறைபணியைச்செய்வதையிட்டுத் துயரப்படமாட்டார்கள். நீ பட்டதாரி. வெக்கம் பாராது வேலை செய்கிறாய். கூட்டுதல் துடைத்தல் கழுவுதல் விளக்கேற்றல் முதலிய தொண்டுகளையாரும் செய்யலாம். இதையாரும் செய்யமாட்டார்கள். இத்திருத்தொண்டு செய்வோரை விடக்கூடுதலான பயனைப் பெறுவார்கள். நீ எழுதிய நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து உதவி அரசாங்க

அதிபராவாய். ” என்றவர். அவர் சொன்னது போல அவன் அப்பரீட்சையில் சித்தியடைந்தான் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1841. தலைமிசை வானவர் தாழ்சடைந ந்தி**
**மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்**
**புலைமிசை நீங்கிய பொன்னுல காளும்**
**பலமிசை செய்யும் படர்சடை யோனே.**[1]

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார் தாழ்ந்த சடையினை உடைய நந்தியெம் பெருமான் தலையால் வணங்கும் சிவ உலகத்தினருக்கு தனது திருவடியை அவரின் திருமுடி மேல் சூட்டியருள்வான். மனமகிழ்வுடன் இறைபணி செய்பவர்களுக்கு மலங்கள் யாவும் நீங்கிய தூமாயை உலகத்தில் இன்பப் பயன்களை அருள்வன். அவன் தான் படர் சடையை உடைய சிவபெருமான். ”

“ ஆனந்தா, நீ பட்டதாரி. இளைஞன். இருந்தும் யாரும் செய்யத்துணியாத இந்த வேலையை இறைபணி என்று நினைத்து மிகவும் மகிழ்வுடன் செய்தாய். மதிப்பு, மரியாதை என்பன உனக்கு இருக்க வேண்டும் என்று நீ நினைக்காததாலும், மிகவும் தாழ்ந்த வேலையைச் செய்தாலும் சிவன் உன்னை உயர்ந்த இடத்தில் வைத்து விட்டார். பெரும் தனவந்தனான சட்டநாதன் தனது பட்டதாரி மகளான சிவச் செல்வியை உனக்குத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார். அவர் விரும்பினால் மட்டும் போதாது. துற்காலப் பெண்கள் மதிப்பு மரியாதை பார்ப்பார்கள். ஆனால் சிவச் செல்வி படித்த பண்பாளனான நீ இறை பணியாக மலகூடம் கழுவிய அன்றே உன்னைத் தான் திருமணம் செய்வேன் என்று முடிவு செய்தவளாம். நீ பாக்கியசாலி. உன்னைப் புரிந்தவள் உனது மனைவியாகிறாள். இது சிவன் உனக்குத் தந்த வெகுமதி என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1842. அறியாப் பருவத் தரனடி யாரைக்**
**குறியால் அறிந்தின்பங் கொண்ட தடிமை**
**குறியார் சடைமுடி கட்டி நடப்பார்**
**மறியார் புனல்மூழ்க மாதவ [2]மாமே.**

“ சிவனடியார்களே, ஆனந்தராசாவுக்குக் கதிரேசன் சொன்னார், “ மகனே, இளம் பருவத்துச் சிவனடியர்களை அவர்கள் மேற்கொண்டுள்ள சிவத்திருக்கோலப் பொலிவால் சிவன் மகிழ்ந்து தனது அடிமையாக்கிக் கொள்வான். அவர்களுக்குப் பேரின்பத்தை அள்ளிக் கொடுப்பான். சிவனது திருமறவாத நினைவினர் என்பதன் புற அடையாளம்

திருச்சடையை வளர்த்தல். அதற்காகத்தான் நான் சடை வளர்க்கிறேன். உனக்கு வயதிருக்கிறது. அவரது திருவடியினை விளக்கிய நீரைத் தீர்த்த நீராக நினைத்து தலையில் தெளிப்பேன். அது தான் தவமாகும். இவ்வாறு திருமூலர் குறிப்பிடுகிறார். உனது திருக்கோலத்தையும், நீ சிவன் மீது மாறாத அன்பு கொண்டதையும் நினைத்துத்தான் உன்னைத் தடுத்தாட்கொண்டவர். நீ உனது மாமன் மகளைச் செய்யக்கூடாதென்பதற்காகவே திருவிளையாடலை நடத்தினவர். உனக்குப் பெரிய தனவந்தனின் மகளைத் தந்தவர். சிவன் தனது அடியவர்கள் துன்பப்படாது பேரின்பமாக வாழ வேண்டும் என்று நினைத்துக் கருமமாற்றுபவர். என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1843. அவன்பால் அணுகியே அன்புசெய் வார்கள்**
**சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லன்**
**அவன்பால் அணுகியே நாடு மடியார்**
**இவன்பாற் பெருமை இலயம தாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் நல்லை நாதனுக்குச் சொன்னார், “ நல்லை, இமயமலையில் இருந்து ஒரு சிவனடியார் எமது ஆச்சிரமத்திற்கு வரவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தச் சிவனடியாரின் மாணவன் ஒருவன் ஆச்சிரமத்திற்கு வந்துள்ளான். அந்தச் சிவனடியாரை அன்புடன் வரவேற்று உபசரித்தல் வேண்டும். அப்படியன் சிவனடியார்கள் தான் சிவனது திருவடியை அடையக் கூடியவர்கள். அச்சிவனடியாரை அன்புடன் அழைத்து அவருக்கு வேண்டிய சேவைகளைச் செய்வோரே சிறந்தவராவர். அவரை உபசரிப்பதன் மூலம் சிவனை அடையலாம். ஆகையால் எமது ஆச்சிரமத்திற்கு வருபவர்கள் அனைவரையும் அழைத்து அச் சிவனடியாரின் பெருமைகளைக் கூறுதல் வேண்டும். அவரைச் சிவனைப் பூசிப்பதைப் போலப் பூசித்து வணங்க வேண்டும். அதற்கான நடைமுறைகளைச் செய் என்றவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1844. முன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்கள்**
**எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்**
**தெண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்**
**பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே.**

“ சிவனடியார்களே, சிவனடியார்களுக்குரிய ஒழுக்கத்துடன் வாழ்வோரை பதினெண் கணத்தவர் உட்படத்தேவர்கள் அனைவரும் கைகூப்பித் தொழுவர். அவர்கள் இந்நிலவுலகத்திற்கு வந்து சிறப்புடன் பூசை செய்வர். அவ்வழிபாட்டைத் தெளிந்த எட்டுத்திசைகளிலும் உள்ளவர்கள் சேர்ந்து வழிபட, அவ்வழிபாட்டின் பயனாக

பன்னிரண்டு காத தூரத்திற்குச் சிவமணம் கமழும். திருவெண்ணீறு, சிவமணி, திருவைத்தெழுத்தைப் பயில்வதனால் அக்குறி சிவனையே குறிக்கும்.

" கதிரேசன் நல்லைநாதனுக்குச் சொன்னார், " எமது ஆச்சிரமத்திற்குப் பல ஊர்களில் இருந்தும் சிவனடியார்கள் வருகிறார்கள். அவர்களுக்கு இமயமலையில் இருந்து வரும் சிவனடியாரைப்பற்றிக் கூறுங்கள். அவ்வூர்க் கோவில்களில் சிவபூசை செய்யக் சொல்லுங்கள். ஊர் முழுவதிலும் சிவமணம் கமழவேண்டும். வரும் சிவனடியார் ஆச்சிரமத்தில் தங்கியிருப்பார். அவரை ஊர்களுக்கு அழைத்து அருள் பெற விரும்புவோர் அழைத்துச் செல்லலாம் என்று கூறுங்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1845. சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்**
**அவயேகம் இன்றி அறிவோருண் டாகும்**
**நவயோகங் கைகூடு நல்லியல் காணும்**
**பவயோகம் இன்றிப் பரலோக மாமே.**

" சிவனடியார்களே, வரவிருக்கும் சிவனடியார் முப்பது வருடங்களுக்கு முன்பு வந்தவர். சிவனின் திருவடியை ஒரு போதும் மறவாத சிவயோகி அவர். அவரது செயல்கள் யாவும் சிவனது செயல்களாகும். அவரது கூற்றுக்கள் உடனே நடைபெறும் முப்பது வருடங்களுக்கு முன்பு தனது குருவுடன் வந்தவர். இரண்டு வருடங்களாக எமது ஊரில் மழை பெய்யாமையால் பஞ்சம் தலை விரித்தாடியது. மக்கள் அவரிடம் முறையிட்டனர். அவர் வெகுநேரம் சிவனைப் பிரார்த்தித்து விட்டுச் சொன்னார், "இன்று இரவு மழை பெய்யும். இனி ஒரு போதும் மழை பெய்யாமல் விடாது" என்றவர் அது போலக் கடந்த முப்பது வருடங்களாகப் பருவ மழை பொய்க்கவில்லை. அதனால் மக்கள் மிக்க மகிழ்வுடன் வாழ்ந்து சிவசேவை செய்கின்றனர். அத்தகையோர் வாழும் நாடு சிவநாடாகும். ஆந்த நாட்டில் மெய்யுணர்வுடையோர் வாழ்வதால் தீவினைகள் நடைபெறமாட்டாது. அவர்கள் வந்து சென்றால் புதுமைகள் உண்டாகும். நன்மைகள் பெருகும். இங்கு வாழ்வோர் மீண்டும் பிறவார். அதனால் வரும் மெய்யடியாரைச் சிறப்பாக வரவேற்று வணங்கி நன்மைகளைப் பெறுங்கள். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1846. மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன்**
**மேலுணர் வான்மிகு ஞாலம் கடந்தவன்**
**மேலுணர் வார்மிகு ஞாலத் தமரர்கள்**
**மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே.**

“ சிவனடியார்களே, சிவனின் திருவாணைப்படி உயிர்களுக்கு உடலைக் கொடுப்பவன் அயன். அவற்றைக் காப்பவன் அரி. இருந்த போதும் அவர்களின் உணர்வுகள் முழுவதும் அவர்களது தொழிலான படைத்தல் காத்தலிலேயே இருக்கும். அத்துடன் தாம் தாம் வல்லவர்கள் என்று நினைத்து மகிழ்வர். அதனால் அவர்கள் சிவனை உணர்வதில்லை. ஆனால் பூமியில் வாழும் மெய்யடியார்கள் அவ்வாறு நினைப்பதில்லை. சிவன் தான் எல்லாவற்றிற்கும் காரணன் என்று எண்ணிச் சிவனின் நினைவாகவே இருப்பார்கள். அதனால் அவர்களை எல்லோரும் சிவனடியார்கள் என்று போற்றுவார்கள். வரவிருக்கும் சிவனடியார் சிவனின் மீது பேரன்பு கொண்டவர். அதனால் அவர் சொல்வதெல்லாம் நடைபெறும். முப்பது வருடங்களுக்கு முன் ரவீந்திரன் சிறுவன். அவன் அச்சிவனடியார் மீது பேரன்பு பூண்டு ஆச்சிரமத்தில் தங்கியிருந்து சேவை செய்தவன். அதனால் மகிழ்ந்த அவர், “ எதிர்காலத்தில் நீ பெரும் கல்விமானாக வருவாய். மதிப்புள்ளவனாகவும் சிவ உணர்வுள்ளவனாகவும் வாழ்வாய் ” என்று வாழ்த்தினவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 15. பேசன விதி (ஊன்முறை)

**1847. எட்டுத் திசையும் இறைய னடியவர்க்**
**கட்ட அடிசில் அமுதென் றெதிர்கொள்வர்**
**ஒட்டி யொருநிலம் ஆள்பவர் அந்நிலம்**
**விட்டுக் கிடக்கில் விருப்பறி யாரே.**

“ சிவனடியார்களே, எட்டுத் திசைகளிலும் வசிப்பவர்கள் இறை உணர்வுடன் சமைக்கும் சோற்றை இறைவனின் அடியவர்களுக்குக் கொடுப்பதற்காகவே சமைப்பர். அதனால் அது சுவை அமிழ்தாய்த் திகழும். அவ்வுணவை மெய்யடியார்களுக்குக் கொடுப்பர். அதன் பின் தாமும் உண்பர். உயிரின் நிலைக்களமான உடலை ஆள்வது உயிராகும். ஆவ் உயிர்கள் அவ் உடலினையும் அதன் பொருட்டுச் சமைக்கும் உணவையும் சிவனுக்கு என்று எண்ணுதல் வேண்டும். அவ்வாறு எண்ணாதவர் மெய்யுணர்வு இல்லாதவராவர். அவர்களை விட்டுக் கிடக்கில் விருப்பறியார் என்று அழைக்கப்படுவார்கள். சிவனடியார்களே, கதிரேசன் தினமும் மதியவேளையில் ஒரு சிவனடியாருக்கேனும் உணவு கொடாது தான் உண்ணமாட்டர். சில நாட்களில் சிவனடியாருக்காகக் காத்திருந்து விட்டு அவர்கள் வராததால் அவர் ஆச்சிரமத்திற்கு வந்து அங்கிருக்கும் சிவனடியாரை அழைத்துச் செல்வார். சில சமயங்களில் யாராவது வராவிட்டால் தான் வளர்க்கும் பசுவுக்குச் சோற்றைப் படைத்துக் கொடுத்து விட்டே தான் உன்பார். இது அவர் நெடு நாட்களாகக் கடைப்பிடிக்கும் நடைமுறையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1848. அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்வர்**
**உச்சியம் போதாக வுள்ளமர் கோவிற்குப்**
**பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்து**
**இச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே.**

“ சிவனடியார்களே, உலகத்தில் உயிர்மட்டும் இருக்கிறது என்று நினைப்போர் தாழ்ந்தவர்களாவர். இவர்கள் உடலே உயிர் என்று நினைப்பவர்களை விட உயர்ந்தவர்களாவர். உண்மையை உணர்ந்தவர்கள் உடல், அதன் அகத்தே உயிர், உயிருக்குள் உயிராகச் சிவன் ஆகிய முப்பொருட்கள் இருப்பதை உணர்வர். இவ் உணர்வு சிவனருளால் கைகூடும். இவ்வாறானவர்கள் தான் சிவன் உள் நின்று அருள்வதைப் புரிந்தவர்கள். கோவிலையும் வீட்டையும் காணும் மக்கள் கோவில் சிவனுடைய தென்றும் வீடு தம்முடையதென்றும் எண்ணுகின்றனர். தம்முள்ச் சிவன் இருக்கிறான் என்று உணர்ந்தவர்கள் தமது வீட்டையும் திருக்கோவில் என்றே எண்ணுவார்கள். இது தந்தை கட்டிய வீட்டில் தான் வாழ்வதை ஒக்கும். அது தந்தையின் வீடு என்று நினைப்பதையும் ஒக்கும். மதிய வேளையில் தாம் உண்ணும் உணவு சிவபெருமான் தந்த உடம்புக்கு எனக்கருதுவோரே உயர்ந்தவராவர். இவர்கள் உண்ணும் போது சிவனும் தானும் வேறெனக் கருதமாட்டார்கள். இதுவே பிச்சை பிடித்து உண்டலாகும். தாம் சமைக்கும் உணவு ஆண்டவனுக்கு என்று நினைப்பதை கோவிலுணவு என்கிறோம். வேறு எப்பொருட்களையும் விரும்பாது சிவநினைவில் ஒடுங்கிச் சிவனாக இருப்பது ஏகாந்தத் திருத்தல் எனப்படும். உச்சி வேளையின் தன் நிழல் வெளிவரா திருக்கும் வேளையைத் தன் நிழல் தன்னடியில் தாங்குதல் என்பர். இதுவும் ஏகாந்தத்தை உணர்த்தும் எடுத்துக் காட்டாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 16. பிட்சாவிதி

**1849. விச்சுக் கலமுண்டு வேலிச்செய் ஒன்றுண்டு**
**உச்சிக்கு முன்னே யுழவு சமைந்தது**
**அச்சங்கெட் டச்செய் அறுத்துண்ண மாட்டாதார்**
**இச்சைக்குப் பிச்சை இரக்கின்ற வாறே.**

“ சிவனடியார்களே, உணவு உயிர்களுக்கு முக்கியமானதாகும். அதைவிடச்சிறந்தது உயிர்ப்பு. உயிர்ப்பு உடலின் வாழ்நாளை நீடிக்கச் செய்யும். உணவானது உண்டபின்பும் பசியை உண்டாக்கும். உயிர்ப்பு இயங்குவதற்குரியாலம் மூக்காகும். அகந்தவமாகிய யோகப்பயிற்சியால் அமிழ்தந்தைச் சமைத்து உண்ண முடியாதவர்கள், உடலின் மீது வைத்த பற்றினால் பிறர் சமைத்த உணவைப் பிச்சையாக ஏற்று இரந்து உண்டு

வாழ்கின்றனர். யோக உணவான அமிழ்து தாமே தமது உடலின் அகத்தே திருவருளால் சமைப்பது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1850. பிச்சைய தேற்றான் பிரமன் தலைதன்னில்**
**பிச்சைய தேற்றான் [1]பிரியா அறஞ்செய்யப்**
**பிச்சைய தேற்றான் பிரமன் சிரங்காட்டிப்**
**பிச்சைய தேற்றான் பிரமன் பரமாகவே.**

“ சிவனடியார்களே, சிவபெருமான் படைப்போனாகிய பிரமனது மண்டை ஓட்டில் பிச்சை எடுக்கிறான். அவன் சிவையுடன் கூடியிருந்து முப்பத்திரண்டு அறங்களையும் இடைவிடாது செய்வித்துக் கொண்டிருக்கிறான். இருப்பினும் சிவன் பிச்சை எடுப்பதற்குக் காரணம், ஈவோரை அருளாளராகவும், இரப்போரெல்லாம் ஆண்டான் நிலையாகவும் கருதுதல் வேண்டும் என்பதற்காகவே சிவன் இரப்பவர்களுக்கு ஈயவைத்தான். ஈபவர்களுக்கு அருளைக் கொடுக்கிறான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1851. பரந்துல கேழும் படைத்த பிரானை**
**இரந்துணி என்பர்கள் எற்றுக் கிரக்கும்**
**நிரந்தர மாக நினையும் அடியார்**
**இரந்துண்டு தன்கழல் எட்டச்செய் [1]தானே.**

“ சிவனடியார்களே, ஏழுவகையான உலகங்களையும் படைத்த சிவபெருமான் இரந்து உண்பவன் என்று உண்மையை அறியாதவர்கள் கூறுவார்கள். அவர்கள் சிவன் ஏன் இரந்து உண்கிறான் என்பதை உய்த்துணர வேண்டும். அஃது இடை விடாது தனது மெய்யடியார்கள் தன்னையே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் உண்ணும் உணவு தனது திருவருளால் வழங்கப்படுகிறது என்னும் உண்மையை உணர்த்த உணர்கின்றனர். அதனால் அவர்கள் அத்திருவருளின் பால் இரந்து பெற்று உண்ணுதல் வேண்டும். அவ்வாறு பெற்று உண்டால் தனது திருவடியை அடைவது எளிதாகும் என்ற திருக்குறிப்பை உணர்த்தவே சிவன் இரந்து உண்கிறான். உண்ணும் உணவைச் சிவன் தந்தது என உணர்வோர், அதனால் வரும் பயன்கள் யாவும் சிவன் தந்தவை எனச் கொள்வர். அதனால் இறைபணியில் நிற்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1852. வரவிருந் தான்வழி நின்றிடும் ஈசன்**
**தரவிருந் தான்தன்னை நல்லவர்க் கின்பம்**
**பொரவிருந் தான்புக லேபுக லாக**
**வரவிருந் தாலறி யானென்ப தாமே.**

“ சிவனடியார்களே, மெய்யடியார்கள் செந்நெறியின் கண் வாழவேண்டும் என்று சிவபெருமான் அருளிக்கொண்டு அந்நெறியின் கண் வெளிப்பட்டு நிற்கிறான். திருவருளால் செந்னெறியில் வாழ்வோருக்கு அவன் தன்னைக் கொடுத்து விடுவான். அதனால் தான் சிவஞானிகளிடத்தில் அவன் வெளிப்பட்டு நிற்கின்றான். தனது திருவடியை நினைத்து அது தான் தனது புகலிடமென நினைப்பவர்களது உணர்விலே இருந்து அருளுவான். ” என்றார் சுந்தரமூர்ததி சுவாமிகள்.

**1853. அங்கார் பசியும் அவாவும் வெகுளியும்**
**தங்கார் சிவனடி யார்சரீ ரத்திடைப்**
**பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்துந்**
**தங்கார் சிவனை தலைப்படு [1]வாரே.**

“ சிவனடியார்களே, தீயினை ஒத்த பசி, அவா, சினம் முதலான குற்றப்பாடு சிவனடியார்களின் மனதில் ஒரு போதும் இருக்கமாட்டாது. அவர்கள் உடம்பையும் உடமைகளையும் இறைவன் தமக்கு இரவலாகத் தந்ததென்று நினைத்து வாழ்வாரே தவிர அதனால் செருக்கடையமாட்டார். நிலவுலகம் முதலிய எவ்வுலகத்திலுமுள்ள நிலையில்லாத பொருட்களால் வரும் இன்பத்தையும் ஏற்கமாட்டார்கள். சிவனது திருவடியே நிலையான இன்பங்களைத் தரும் என்ற நினைவோடு வாழ்வர். கதிரேசன் அயலூரில் உள்ள ஒரு தென்னந்தோப்பு விற்பனைக்கு வந்த போது அதை வாங்க விரும்பினார். அதை வாங்கப் பலர் போட்டி போட்டனர். அதனால் அதிக விலை கொடுத்து அதை வாங்கினார். அதனால் கவலைப்பட்ட நல்லைநாதன் சொன்னான், “ அறாவிலை கொடுத்து இதை வாங்க வேண்டுமா…? ஊரவர் ஏசுகின்றனர்” என்றான். அதற்குக் கதிரேசன் சொன்னார், “ விற்றவன் எனக்கு வேண்டியவன். அவனுக்குப் பணத்தேவை இருந்தது. அதுவும் அத்தோப்பின் பெறுமதியிலும் கூடுதலாக இருந்தது. அவன் அதைச் சொல்லிக்கவலைப்பட்டவன். அதனால் தான் கொடுத்தேன். எனது பணத்தையா கொடுத்தேன். இல்லையே சிவன் தந்தான் கொடுத்தேன். விற்றவன் பெரும் சிவபக்தன். அவன் மனம் வருந்தினால் அவனது உயிரில் கலந்திருக்கும் சிவனும் மனம் வருந்துவார். சிவச் சொத்து அவச் சொத்தாகாது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1854. மெய்யக ஞான மிகத்தெளிந் தார்களுங்**
**கையக நீண்டார் கடைத்தலைக் கேசெல்வர்**
**ஐயம் புகாமல் இருந்த தவசியார்**
**வையகம் எல்லாம் வரவிருந் தாரே.[2]**

“ சிவனடியார்களே, திருவடியுணர்வான மெய்யுணர்வுடைய சிவஞானிகள் இல்லறத்தை நல்லறமாகக் கொண்ட வாழும் சிவனடியார்களின் வீடுகளுக்கே செல்வர். ஏனென்றால் அவர்கள் நல்வழியில் தேடிய பொருளையே தாணமாகக் கொடுப்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். சில சிவஞானிகள் தாம் இருக்கும் இடத்திலேயே இருப்பர். மெய்யடியார்கள் அவர்கள் இருக்கும் இடத்திற்குத் தேடி வந்து உணவு கொடுப்பர். இமயமலையில் இருந்து ஆச்சிரமத்திற்கு வந்த சிவஞானி ஆச்சிரமத்திற்கு வருமுன் கதிரேசனது வீட்டிற்குச் சென்று கதிரேசனையும் அவரது மனைவியையும் வணங்கி ஆசி பெற்றார். அதனால் கதிரேசன் மிக்க துயரங்கொண்டார். அதை அறிந்த சிவஞானி சொன்னார், “ அடியவனே சிவனடியாரைச் சிவனாகக் காண்பது சைவரது பண்பு நீங்கள் இருவரும் சிவனும் உமையுமாக இருந்து சிவசேவை செய்கிறீர்கள். சிவபக்தன் ஒருவனுக்குத் துன்பம் வருவதை பொறுக்கமுடியாதவர் நீர். அதனால் தான் உம்மை வணங்கினேன். நான் இங்கு தங்கியிருக்கும் காலம் முழுவதும் உமது வீட்டில் தான் உண்பேன். ஆச்சிரமத்திற்குப் பலரும் வருவார்கள். போவார்கள். தீயவழியில் பொருளைச் சேகரிப்போர் அதனால் வரும் பாவத்தைப் போக்கப் பொருள் கொடுப்பார்கள். அதனால் நான் அங்கு உண்ணமாட்டேன். சிவநெறி தவறாது வாழும் உனது உணவு தான் எனது முத்திக்கு வழிவகுக்கும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 17. முத்திணபேதம்

**1855. நாலேழு மாறவே நண்ணிய முத்திரை**
**பாலான மோன மொழியிற் பதிவித்து**
**மேலாக நந்தி திருவடி மீதுய்யக்**
**கோலா கலங்கெட்டுக் கூடுநன் முத்தியே.**[1]

“ சிவனடியார்களே, நாலேழு என்பது நான்கும் ஏழும் என்னும் உம்மைத்தொகை. அதனால் அது பதினொன்றாகும். அறிதற்கருவியாகிய செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்தும், செய்தற்கருவியாகிய கருவாய், கால், கை, வாய், எருவாய் (குதம்) என்னும் ஐந்தும், மனம் ஒன்றுமாகிய பதினெரு மெய்த் தத்துவங்களையும் அருளால் தம் வழிப்படுத்திய மெய்யுணர்த்தவர்களே முத்திரையாகிய சிவப்பொறியைப் பொறித்துக் கொள்வர். சிவப்பொறி என்பது திருத்தொண்டர் தொகைத் திருப்பாடல்கள் பதினொன்றையும் அன்புடன் இடைவிடாது ஓதுதல் ஆகும். ஏனையவற்றைப் பேசாது ஊமை போல இருந்து நந்தியான சிவனைத் தியானித்தல் வேண்டும். இது தான் திருவடிப்பேறாகும். சிவனடியார்களே, முத்திரையைப் பொறிப்பதற்காகத் தான் கதிரேசன் ஆசசிரமத்திற்கு வரும் சிவனடியார்களுக்கும், மாணவர்களுக்கும் திருத்தொண்டர் தொகையில் உள்ள திருப்பாடல்கள் பதினொன்றையும் திரும்பத்திரும்பப் பலமுறை

சொல்லிக் கொடுப்பார். இத்திருப்பாடல்களை மிகுந்த பக்தியோடு சிவனை இடையறாது நினைத்து ஓதல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1856. துரியங்கண் மூன்றுஞ் சொருகிட னாகி**
**அரிய வுரைத்தார மங்கே யடக்கி**
**மருவிய சாம்பவி கேசரி யுண்மை**
**பெருகிய ஞானம் பிறழ்முத் திரையே.**

“ சிவனடியார்களே, உயிர் உடலுடன் கூடித் தன்னை மறக்கும் நிலை பேருறக்க நிலையாகும். இந்நிலையை உடற்பேருறக்கம் எனவும், அருட்பேருறக்கம் எனவம் கூறுவர். இம்மூன்றும் முறையே, சிவதுரியம், பரதுரியம், சீவதுரியம் எனக்கூறப்படும். இவ் மூன்றும் திருவடியுணர்வால் அடங்குமிடனாகிய, அரியவுரையாகிய நன்மொழி புகுதலுக்குரிய கருவியாகும். நாக்கையும் அடக்குதல் வேண்டும். இது சாம்பவி சேகரி முத்திரையின் உண்மைப் பெருக்கமாகும். சிவஞானம் பெறுவதற்குரிய முத்திரையும் அதுவேயாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1857. சாம்பவி நந்தி தன்னிருட் பார்வையாம்**
**ஆவபவ மில்லா அருட்பாணி முத்திரை**
**ஓம்பயில் ஓங்கிய வுண்மைய கேசரி**
**நாம்பயிர் நாதன்மெய்ஞ் ஞானமுத் திரையே.**

“ சிவனடியார்களே, சாம்பவியோடு கூடிய நந்தியின் திருவருட் பார்வையால் பிறப்பினை அறுக்கும் உண்மை அடையாளம் அருட்பணி முத்திரை. இது தான் சின்முத்திரையாகும். ஆதன் மூலம் மலம் நீங்கிய உயிர் சிவனுடன் கலக்கும் இயற்கைப்புணர்ப்பு இதுவாகும். பெருவிரல் இறை எனவும், ஆட்காட்டி விரல் ஆருயிர் எனவும், இரு விரல்களும் இணைந்து ஒற்றுமைப்பட்டு வட்டமாக இருப்பது இன்பமான பெருவாழ்வு எனக் கொள்ளப்படுகிறது. நடுவிரல் வினையாகும். மோதிர விரல் மாயை ஆகும். சிறுவிரல் மலம். இம் மூன்றும் அவ்வுயிருடன் சேரும் திறனற்றுப் பிரிந்து நிற்கும். ஓம் மொழி பயிலும் உண்மையை உடைய அடையாளம் கேசரியாகும். “ சிவயநம ” என்ற நாமத்தை ஓதுதல் ஞான முத்திரையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1858. தானத்தி னுள்ளே சதாசிவ னாயிடும்**
**ஞானத்தி னுள்ளே நற்சிவ மாதலால்**
**ஏனைச் சிவமாஞ் சொரூப மறைந்திட்ட**
**மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே.**

“ சிவனடியார்களே, சதாசிவன் கண்டத்தில் வீற்றிருந்து அருளுபவன். திருவடியுணர்வாகிய சிவஞானத்தினால் அகத்தினுள் உணர்வுக் குணர்வாய்ச் சிவன் தோன்றுவான். வாய் பேசாதிருத்தலாகிய மோனத்தினுள் சிவமாம் உருவம் மறைந்திடும். இதுவே மோன முத்திரை முடிந்த முடிபாகிய வீடு பேறு ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1859. வாக்கு மனமும் இரண்டு மவுனமாம்**
**வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம்**
**வாக்கு மனமும் மவுனமாஞ் சுத்தரே**
**ஆக்குமச் சுத்தத்தை யாரறி வார்களே.**

“ சிவனடியார்களே, செயலற்றிருக்கும் தன்மையாகிய மௌனம் இருவகைப்படும். ஒன்று வாய் அடுத்தது மனம். இரண்டும் செயலற்று இருந்தால் தான் பயன் உண்டாகும். வாய் பேசாதிருந்தால் ஊமை. வாயும் மனமும் ஒன்றுபட்டு மோன நிலையில் இருந்தால் அவ் உயிர் அருளில் கலந்த தூய உயிராகும். திருவருளோடு சேர்ந்து தூய்மைப்பட்ட உயிரை யாரும் அறியமாட்டார்கள் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1860. யோகத்தின் முத்திரை யோரட்ட சித்தியாம்**
**ஏகத்த ஞானத்து முத்திரை எண்ணுங்கால்**
**ஆகத் தகுவேத கேசரி சாம்பவி**
**யோகத்துக் கேசரி யோகமுத் திரையே.**

“ சிவனடியார்களே, எண்பெரும் இருத்திகளாகிய சித்திகள் யோக முத்திரை ஆகும். நான்கு மறைகளாலும் வகுக்கப்பட்ட முறைப்படி வாழ்ந்து சிவனருளால் கைவரப் பெற்ற கேசரி சாம்பவி யோகத்துக் கேசரி முதலிய முத்திரைகள் அடங்கிய முத்திரை யோக முத்திரையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

**1861. யோகியெண் சித்தி அருளொலி வாதனை**
**போகிதன் புத்தி புருடார்த்த நன்னெறி**
**யாகுநன் சத்தியும் ஆதார சோதனை**
**ஏகமுங் கண்டொன்றில் எய்திநின் றானே.**

“ சிவனடியார்களே, அகத்தவமாகிய யோகத்தால் பெறும் எண் சித்தியுள்ளவன் திருவருள் உயிர்ப்பாகிய அருள் மூச்சுடைய வாதனாவான். போக நிலையில் உள்ளவர்கள் புத்திக்கு மேல் உணரும் நன்னெறியின் கண் உளனாகுவர். இவையே உண்மையாகும். இதுவே

மூல முதல் ஆறு நிலைக்களங்களிலும் நின்றருள்பவன் சிவன் என்று துணியும் தன்மை கண்டு உடனாகக் கூடிய எதிர் நிற்கும் பண்பாகும். “ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1862. துவாதச மார்க்கமென் சோடச மார்க்கமாம்**
**அவாவறு மீரை வகையங்க மாறுந்**
**தவாறு வேதாந்த சித்தாந்தத் தன்மை**
**நவாவக மோடுன்ன னற்சுத்த சைவமே.**

“ சிவனடியார்களே, பன்னிரு வகையான யோக வழி வன்மையான வழியாகும். சீலம், நோன்பு, செறிவு அறிவு ஆகிய நான்கும். மென்மை வழியாகும். அந்நன்னெறி நான்கும் தனித்தனி நான்காக விரியும் அதனால் அவை பதினாறு வழியாகும். வேந்துறுப்புப்பத்தாகும். செருக்கு, சினம், சிறுமை, இறவல், மாண்பிறந்த மானம் மாணாவுகை என்னும் குற்றங்கள் ஆறும் பற்றற நீங்கிய மனதுடன் மேலோதிய வழிகளில் நின்று சிவனை இடையறாது நினைக்கும் பேறு பெற்றவர் இயற்கைச் சைவத்தினை மேற்கொண்டவராவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1863. மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை**
**ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை**
**தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை**
**கானிக்கு முத்திரை கண்ட சமயமே.**

“ சிவனடியார்களே, மோன முத்திரை முத்தர்களுக்கு உரியது. சிவகுருவுக்குரியது ஞான முத்திரை. சித்தாந்த செந்நெறியாளரின் முத்திரை. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1864. தூநெறி கண்ட சுவடு நடுவெழும்**
**பூநெறி கண்டது பொன்னக மாய்நிற்கும்**
**மேனெறி கண்டது வெண்மதி மேதினி**
**நீனெறி கண்டுள நின்மல னாகுமே.**

“ சிவனடியார்களே, தூயநெறியான உச்சித்துளை வழியின் மேல் இருக்கும் ஆயிரம் இழைத்தாமரை அருள் வழியாகும். அருளால் அன்நெறியைக் காண்பவரின் உள்ளமும் உடலும் பொன் வண்ணமாகத் திகழும். மேல் நெறியாகக் காணப்படுவது திங்கள் மண்டிலமாகும். மேற் செல்லும் உயிர்ப்பு வழி கண்டவரது உள்ளம் மலமகன்று நலமுற்று நிலை நின்ற தூய்மையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 15. பூரணகுகை நெறிச்சமாதி

**1865. வளர்பிறை யிற்றேவர் தம்பாலின் மன்னி**
**உளரொளி பானுவின் உள்ளே யொடுங்கித்**
**தளர்விற் பிதிர்பதந் தங்கிச் சசியுள்**
**உளதுறும் யோகி யுடல்விட்டாற் றானே.**

“ சிவனடியார்களே, யோகிவளர்பிறை நாளில் தன் உடலை விட்டுநீங்கினால் திங்கள் மண்டிலத்திலே சென்று தங்குவன். செல்லும் வழியில் துறக்கவுலகத்திற்கும் ஞாயிற்றுலகத்திற்கும் பிதிர் உலகத்திற்கும் சென்று அங்கு தங்கித்தங்கிச் செல்வன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1866. தானிவை யொக்குஞ் சமாதிகை கூடாது**
**போன வியோகி புகலிடம் போந்துபின்**
**ஆனவை தீர நிரந்ததர மாயோகம்**
**ஆனவை சேர்வார் அருளின்சார் வாகியே.**[1]

“ சிவனடியார்களே, சமதி நிலைகைகூடாது உடலை விட்டுப் போன யோகி நிலையான சிவனின் திருவடியைச் சேராது மீண்டும் பிறக்க நேர்ந்தால் நற்சார்பில் வந்து பிறந்து வினை நீங்கி அருளின் சார்வாகி நிலையான புகலிடம் மாயோகி ஆவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1867. தானிவ் வகையே புவியோர் நெறிதங்கி**
**ஆன சிவயோகத் தாமாறா மவ்விந்து**
**தானதி லந்தச் சிவயோகி யாகுமுன்**
**ஊனத்தோர் சித்திவந் தோர்காய மாகுமே.**[2]

“ சிவனடியார்களே, அங்ஙனம் பூமியில் பிறந்த யோகி ஏனைய உலகத்தினர் போன்று உழைத்து உண்டுடுத்து உறங்கி வாழ்ந்து சிவயோகி செல்லும் தூமாயை கைவரப் பெற்றுத் திகழ்வான். அதற்கு நிலைக்களமாகிய இவ்உடலே தூய உடலாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1868. சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்**
**தவலோகஞ் சேர்ந்துபின் றான்வந்து கூடிச்**
**சிவயேக ஞானத்தாற் சேர்ந்தவர் நிற்பர்**
**புவலோகம் போற்றுநர் புண்ணியத் தோரே.**[1]

“ சிவனடியார்களே, சிவயோகியாகிய ஞானி உடல் பழுதடைந்து நீங்கினால் சிவ உலகம் சென்று பின் நிலவுலகம் வந்து பிறந்து நிறைந்த சிவயோக ஞானத்தால் திருவடி சேர்ந்து நிலையான இன்பம் பெற்று நீடு வாழ்வர். புவ உலகம் முதலிய அனைத்துலகும் இச் சிவயோக ஞானியைப் போற்றும். அதனால் போற்றுபவர்களுக்குப் புண்ணியப் பேறு உண்டாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1869. ஊனமின் ஞானிநல் யோகி யுடல்விட்டால்**
**தானற மோனச் சமாதியுள் தங்கியே**
**தானவ னாகும் பரகாயஞ் சாராதே**
**ஊனமின் முத்தராய் மீளார்** [2] **உணர்வுற்றே.**

“ சிவனடியார்களே, திருவடியுணர்வு பெற்று ஞானியாதற் பொருட்டு சிவயோகியாராகி செறிவு நெறி நின்றவர் உடலை விட்டால் தான் என்னும் உயிர்த்தன்மை நீங்க உரையற்ற உலக உணர்வுகள் அற்ற உணர்த்தும் உணர்வுடன் நிறைவுற்ற அருளில் தங்கித்தான் அவன் ஆகுவர். வேறோர் உடலின் கண் புகுந்தவர் பழுதற்ற நல்லுயிராவர். இவர்கள் இன்ப உணர்வு எய்தி என்றும் குறையாத இன்பத்தை அனுபவிப்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1870. செத்தார் பெறும்பய னாவது ஏதெனில்**
**செத்துநீர் சேர்வது சித்தினைக் கூடிடில்**
**செத்தா ரிருந்தார் செகத்தில் திரிமலஞ்**
**செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே.**

“ சிவனடியார்களே, உலக இன்பங்களைத் துறந்தவர் செத்தவர் எனப்படுவர். அவரின் பெரும் பயன் எது வென்று கேட்டால், சிவ நினைவுடன் சிவனடியைச் சேர்வது. அச்சிவனது திருவடியைக் கூடிய பின்பு அவர் நிலவுலகத்தில் இருந்தாலும் கூடும்.அங்ஙனம் இருப்பவர் மும்மல மற்ற செம்மலாக இருப்பார். அவர்கள் செம் பொருளாகிய சிவமாகவே விளங்குவர். அவர்களே சித்தர் என்று அழைக்கப்படுவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1871. உன்னக் கருவிட் டுரவோ னரனருள்**
**பன்னப் பரனே யருட்குலம் பாலிப்பன்**
**என்னப் புதல்லர்க்கும் வேண்டி யிடுஞானி**
**தன்னிச்சைக் கீச னுருச்செய்யுந் [1]தானே.**

“ சிவனடியார்களே, கருவிடுதலாகிய பிறப்பின் பற்றற்று சிவபெருமானின் திருவடியை மெய்யன்புடன் துதிக்க அச்சிவபெருமான் அருள்னெறிக்கு வாயிலாகிய சிவக்குலத்தை அளித்தருள்வான். அதனால் அவர் சிவகுருவாகத் திகழ்வர். மாணாக்கராகிய மெய் கண்டார்கள் பலர் அவரை விரும்புவர். அச்சிவஞானியின் செயல்கள் யாவும் சிவனின் செயலேயாகும். ஆதனால் அச்சிவஞானியாகிய சித்தர் நினைத்தவை அனைத்தும் அப்பொழுதே சிவபெருமான் நிறைவேற்றியருள்வான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1872. எங்குஞ் சிவமா யருளா மிதயத்துத்**
**தங்குஞ் சிவஞானிக் கெங்குமாந் தற்பரம்**
**அங்காங் கெனநின்று கசமுண்ட வான்தோய்தல்**
**இங்கே யிறந்தெங்கு மாய்நிற்கும் ஈசனே.**

“ சிவனடியார்களே, எங்கும் சிவத்தைக் கண்டு அச்சிவத்தின் திருவருளை உணர்ந்து வாழ்பவன் சிவஞானியாவான். காணும் பொருட்களெல்லாம் சிவமாகவே தெரியும். அதற்குக் காரணம் ஓப்பு பூதவெளி எல்லாவற்றையும் தனது உள்ளத்தில் அடக்கித்தானாக நீக்கமின்றி நிற்பதாகும். அச்சிவஞானி பூமியில் சிவனின் அருளால் வாழ்ந்து வரினும் அவன் எங்கும் நிறைந்துள்ள ஈசனாவான். உலகம் முழுவதும் சிவனது உடைமை என்றும் உயிரனைத்தும் அவனது அடிமை எனவும் அவன் திருவருளால் உணர்ந்து கொள்வான். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 19. சமாதிக்கிரியை

**1873. அந்தமின் ஞானிதன் னாகந் தீயினில்**
**வெந்திடி னாடெலாம் வெம்பும் தீயினில்**
**நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு**
**வந்துநாய் நரிக்குண வாகும் வையமே.**

“ சிவனடியார்களே, என்றும் அழிவில்லாத திருவடியுணர்வு கைவரப்பெற்ற சிவஞானியின் திருமேனியை கல்லறைப்படுத்தலாகிய சமாதி நிலையில் வையாது தீயில் வெந்திடச் செய்தால் நாடெல்லாம் வெப்பு நோய் அதிகரிக்கும். கொடிய நோய்கள் நாட்டில் பரவும். அதன் காரணமாக மக்கள் பெருந்துன்பமடைவர். மேலும் அத்திருமேனி காட்டில்

வீசப்பட்டு மிருகங்களால் உண்ணப்படின், உலகத்தில் பெரும் போர் ஏற்பட்டு மக்கள் பலர் மாண்டு போவர். அவர்களது உடலை மிருகங்கள் உண்ணும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1874. எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடில்**
**அண்ணல்தங் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்**
**மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்**
**எண்ணரு மன்னர் இழப்பார் அரசுமே.** [1]

“ சிவனடியார்களே, சிவநினைவில் முழுமைபெற்ற சிவஞானியின் திருவுடல் தீயால் தகனம் செய்யப்பட்டால், அது சிவனது திருக்கோவிலைத் தீயிட்டது போன்றதாகும். அப்பாவத்தால் மண்ணில் மழை பெய்யாது. அதனால் பெரும் பஞ்சம் உண்டாகும். பலநாடுகளைக் கைப்பற்றி ஆண்டமன்னரும் முடி துறப்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1875. புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது**
**நண்ணி யனல்கோக்கில் நாட்டில் அழிவாகும்**
**மண்ணி லழியில் அலங்கார பங்கமாம்**
**மண்ணுல கெல்லாம் மயங்குமனல் மண்டியே.**

“ சிவனடியார்களே, சிவஞானியின் உடலைப் புதைத்து அவ்விடத்தில் திருக்கோவில் அமைப்பது பெரும் சிவ புண்ணியமாகும். அப்படிச் செய்யாது தீயிட்டால் நாட்டிற்குப் பெரும் அழிவுகள் உண்டாகும். மேலும் அத்திருமேனி கவனிப்பாரற்று அழிந்தால் நாட்டின் அழகெல்லாம் அழியும். நாடும் அழியும் கடும் வெப்பமும்,தீயும், நோய்களும் உண்டாகிப் மக்களுக்குப் பொருந்துன்பம் உண்டாகும. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1876. அந்தமில் ஞானி இருளை அடைந்தக்கால்**
**அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்**
**சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்**
**அந்தமில் இன்ப அருள்பெறு வாரே.**

“ சிவனடியார்களே, அளவிடப்படாத திருவடிப்பேற்றை அடைந்த மெய்யுணர்வு பெற்ற சிவஞானி இருள் நிலையடைந்தால அவரது திருவுடலை நிலவறையாகிய குகை செய்து அவற்றின் கண் வைத்தல் வேண்டும். அங்ஙனம் அமைத்தால் அறிவாற்றல் மிக்க வேந்தரும் நிலவுலகத்தில் வாழும் மக்களும் திருவருள் இன்பம் பெற்று மகிழ்வுடன் வாழ்வர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1877. நவமிகு சாணாலே நல்லாழஞ் செய்து**
**குவைமிகு குழவைஞ் சாணாகக் கோட்டித்**
**தவமிகு குவைமுக் கோணமுச் சாணாக்கிப்**
**பவமறு நற்குகை பத்மா சனமே.**

“ சிவனடியார்களே, நிலத்தின் கீழ் அமைக்கும் குகையின் அளவு வருமாறு, ஆழம் ஒன்பது சாண். ஆகலமாகிய சுற்றளவு ஐந்து சாண். மூன்று சாண் அகலத்தில் முக்கோணம். இந்த அளவின்படி அமைக்கும் குகை தாமரை இருக்கையாகிய பதுமாசனமாகும் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1878. தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை**
**நன்மலர்ச் சோலை நகரினற் பூமி**
**உன்னருங் கானம் உயர்ந்த மலைச்சாரல்**
**இந்நிலந் தான்குகைக் கெய்தும் இடங்களே.**

“ சிவனடியார்களே, சிவஞானியின் உயிர் உடலை விட்டு நீங்கித் திருவடிக்குச் சென்ற பின் அவரது உடலை வைக்கும் குகையை அமைக்கும் இடங்களாவன அச்சிவஞானியின் மாணவனின் வீட்டில், நடைச்சாலையின் அண்மை, குளக்கரை, ஆற்றங்கரை, பூந்தோட்டமிக்க காடு, மலைச்சாரல். இவ்வாறான இடங்களில் குகையை அமைத்து அதில் அவரது திருமேனியினை அடக்கம் செய்தல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1879. நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்**
**நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்**
**பொற்பம ரோசமும் மூன்றுக்கு மூன்றணி**
**நிற்பவர் தாஞ்செயும் நேர்மைய தாமே.**

“ சிவனடியார்களே, குகையை அமைக்கும் போது மேற்பரப்பு நால்வட்டம் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். வணங்கும் மெய்யடியாரின் முழந்தாள் இரண்டு முன்கை இரண்டு, நெற்றி ஒன்று ஆகிய ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் படும் படி வணங்கத்தக்கதாக இடம் இருத்தல் வேண்டும். அதனால் அவ்விடம் ஒன்பது அடியாக இருத்தல் வேண்டும். திருக்கோவிலில் பலிபீடத்திற்கு முன்பும் அதன் வெளியிலும் எட்டு உறுப்புக்கள் நிலத்தில் படும்படி வணங்குதல் வேண்டும். மற்றும் திருவுருவங்களின் முன் ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் படும்படி வணங்குதல் வேண்டும். திருக்குகை மூன்று நிலை உள்ளதாகவும், மூன்று சுற்றுள்ளதாய்அமைத்தல் வேண்டும். வழிபாடு செய்யும் மெய்யடியார்கள் மேற் சொன்னவாறு வணங்குதல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1880. பஞ்சலோ கங்கள் நவமணி பாரித்து**
**விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு**
**முஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே**
**பொன்செய்நற் சுண்ணம் பொதியலு மாகுமே.**

“ சிவனடியார்களே, நிலவறைக் குகையின் அடிப்பகுதியில் பசும் பொன், கரும்பொன், வெண்பொன், செம்பொன், வரைபொன் என்னும் ஐவகைப்பொன்னும் ஒக்பான் ஒளிக்கற்களும் அமைத்தல் வேண்டும். இவற்றின் மேல் இருக்கை அமைத்தல் வேண்டும். அதன் மேல் தருப்பைப்புல் பரப்புதல் வேண்டும். திருவெண்ணீறு குவித்தல் வேண்டும். அதன்மேல் திருமேனியை வைத்தல் வேண்டும்.அதன் மேல் சுண்ணச்சாத்து பூசிப் பொதிதல் வேண்டும். பொன் அனைத்தும் முறையே தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு எனப்படும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1881. நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்**
**கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுந்**
**தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து**
**ஒள்ளியநற் றூபம் உவந்திடு வீரே.**

“ சிவனடியார்களே, குகையின் நடுவில் நால் வட்டம் அமைத்து அதன் மேல் மலர்மாலைகள், சந்தனக்கலவை, கத்தூரி முதலிய வாசனைப் பொருட்கள், சாந்து, புனுகு, பன்னீர் சேர்த்துத் தக்கவாறு பொதிதல் வேண்டும். பின்நறுமணப் புகையைக் காட்டுதல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1882. ஓதிடும் வெண்ணீற்றால் உத்தூளங் குப்பாய**
**மீதினி விட்டா சனத்தினின் மேல்வைத்துப்**
**போதறு சுண்ணமும் நீறும் பொலிவித்து**
**மீதி லிருத்தி விரித்திடு வீர்நீரே.**

“ சிவனடியார்களே, செந்நெறிக்கு ஆதாரமாக ஓதப்படும் திருவெண்ணீற்று முழுப்பூச்சு குப்பாயம் போல (சட்டை) அமைத்தல் வேண்டும். இருக்கை மேலும் திருவெண்ணீற்றைக் குவித்தல் வேண்டும். அதன் மேல் திருமேனியை எழுந்தருளுவித்தல் வேண்டும். வாசனைப் பொடிகளும் திருவெண்ணீறும் மேலும் சாத்துதல் வேண்டும். அதன் மேல் திருமேனியைச் செம்மையாக இருத்தித் திருவைத்தெழுத்தை ஓதுதல் வேண்டும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1883. விரித்தபின் னாற்சாரு மேவுதல் செய்து**
**பொரித்த கறிபோ னகமிள நீருங்**
**குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை**
**தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே.**

‘‘ சிவனடியார்களே, சிவஞானியின் திருவுடலுக்கான குகையை அமைத்த பின் சாய்வு மனையைப் பொருந்த வைத்து அதன் மேல் பாவாடை விரித்து இலையமைத்துப் பொன் போலப் பொலிந்துச் சமைத்த கறிவகைகளையும் திருவமுதும் இளநீரும் படைத்த பின்பு அத்திருவுருவின் முன் குழை முகப்பார்வை தரித்தலாகிய நைவேத்தியம் கண்ட பின் வேண்டுவன செய்ய வேண்டும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1884. மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்**
**போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்**
**பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்**
**மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே.**

‘‘ சிவனடியார்களே, அதன் பின் திருவெண்ணீறு சுத்தி வாசனைப் பொடிகளைத் தூவி பல்வேறுபட்ட மலர்களால் அர்ச்சித்து தருப்பைப் புல்லும் வில்வமும் சாத்திச் சிவபெருமானின் திருவடியில் அர்ச்சித்த தீர்த்த நீரால் திரு மஞ்சனம் செய்யவும். பின் வழிபடவும். வழிபடுவதற்குரிய காலம் மூன்று, கருவி மூன்று, பணி மூன்று, கருத்து மூன்று ஆதலால் மூன்றிற்கும் மூன்று அழகிய இடம் அமைத்தல் வேண்டும். காலம், காலை, நண்பகல் மாலை, கருவியாவன, உள்ளம், உரை, உடல் என்பனவாகும். பணியாவன அன்பு, அறிவு, ஆற்றல் என்பனவாகும். கருத்து என்பது, அன்பு, இன்பு, அடைவு என்பனவாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1885. ஆதன மீதில் அரசு சிவலிங்கம்**
**போது மிரண்டினில் ஒன்றைத்தா பித்து**
**மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்**
**காதலிற் சோடசங் காணுப சாரமே.**

‘‘ சிவனடியார்களே, கல்லறைப் படுத்திய குகையின் மீது அரசு அல்லது சிவலிங்கத்தை நாட்டி சிறப்புப் பொருந்திய திரு முன் வடக்கு நோக்கியேனும் கிழக்கு நோக்கியேனும் அமைத்துப் பதினாறு வகைச் சிறப்புடன் பூசை செய்தல் வேண்டும். அப்பதினாறும் இவை திருமஞ்சனம், நறுமலர், மணக்கட்டு, நறும்புகை, உறுஞ்சுடர்,குளிர்நீர், திருவமுது, தூசு, அடைக்காய், கண்ணாடி,குடை, கவரி, ஆலவட்டம், விசிறி, ஆடல், வாத்தியம். ’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1886. உதயத்தில் விந்துவில் ஓங்குகுண் டலியும்**
**உதயக் குடிலில் வயிந்தவம் ஒன்பான்**
**விதியிற் பிரமாதி கள்மிகு சத்தி**
**கதியிற் கரணங் கலைவை கரியே.**

“ சிவனடியார்களே, விந்து என்று சொல்லப்படும் தூமாயை தோற்றத்தில் சிறந்த குண்டலினியும், பெருவெளியில் மாயாகாரியமான வைந்தவம் ஒன்பதும், அவற்றின் முறையால் அயன் முதலிய ஒன்பதின் மரும், திருவருள் முறையாகக் கரணங்கள் கலைகள் வைகரி முதலிய ஓசைகள் ஆகிய எல்லா ஆக்கப்பாடுகளும் தோன்றும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1887. செய்திடும் விந்துபே தத்திறன் ஐயைந்துஞ்**
**செய்திடு நாதபே தத்திற னாலாறுஞ்**
**செய்திடு மற்றவை யீரிரண் டிற்றிறஞ்**
**செய்திடு மாறாறு சேர்தத் துவங்களே.**

“ சிவனடியார்களே, தூமாயையாகிய விந்துவில் இருந்து நல்லுயிர்களை இயக்கிச் சிவன் திருவருளால் கொள்ளும் திருவுருக வகை இருபத்தைந்து. அவை வருமாறு சிவக் கொழுந்து, அம்மையப்பபிள்ளை, ஒற்றைத்தாளர், எச்சத்தலைவர், விடையூர்தி, நந்தி வரத்தர், கூத்தப்பெருமானார், கொடுஞ்சினத்தர், பெண்ணொரு கூற்றணைவார், ஆலமர்செல்வர், திருநீலகண்டர், சலந்தரயொடுக்கி, கங்கைதாங்கி, ஊற்றுழியுதவி, சிவச்சுடர்க்கொழுந்து, மீனொடுக்கி, ஆமையொடுக்கி, பன்றியொடுக்கி, ஆளரியொடுக்கி, முதுகெலும்பு தூக்கி, காலவைரவர், பலிப்பல்வன் என்பன. நாதத்தின் வகையாகிய விந்து, பரவிந்து, நாதம், பரநாதம் என்னும் நான்கும் தோன்றின. நாத வகை உட்கருவிகள் இருபத்து நான்கும் தோன்றும். இவற்றின் விரிவாகிய முப்பத்தாறு மெய்களும் தோன்றும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1888. வந்திடு பேத மெலாம்பர விந்துமேல்**
**தந்திடு மாமாயை வாகேசி தற்பரை**
**உந்து குடிலையோ டேமுறு குண்டலி**
**விந்துவில் இந்தான்கு மேவா விளங்குமே.**

“ சிவனடியார்களே, பரவிந்துவில் தோன்றினும் மாமாயை மேலோதிய இருபத்தைந்து சிவவடிவங்களையும் தந்திடும். மேலும் வாகேசி தற்பரை செலுத்துங் குடிலை, இன்புறுத்தும் குண்டலி என்னும் விந்துவில் பொருத்தின் தோன்றும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1889. விளங்கு நிவிர்த்தாதி மேவக ராதி**
**வளங்கொள் உகார மகாரத் துளவிந்து**
**களங்கமில் நாதாந்தங் கண்ணினுள் நண்ணி**
**உளங்கொள் மனாதியுள் அந்தமு [2]மாமே.**

“ சிவனடியார்களே, மேலும் நீங்கள், நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல் ஆகிய ஐந்துகலைகளும் தூமாயையில் இருந்து தோன்றும். இந்து மாயையில் இருந்தே அகரமுதலும் உளங்கொள் உகரமும் , மகரமும், விந்துவும், நாதமும் ஆகிய ஐந்து எழுத்துக்களும் தோன்றும். இவை முறையே எழுச்சி, இறுப்பு, மனம், எண்ணம், ஆள் என்னும் ஐந்து கருவிகளையும் செலுத்தும் கடவுளர் ஐவருக்கும் கைக்கருவியாக நிற்கும். இக்கடவுளர் ஐவரும் முறையே அயன், அரி, அரன், ஆண்டான் அருளோன் எனப்படுவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1890. அந்தமும் ஆதியு மாகிப் பராபரன்**
**வந்த வியாபி யெனலாய வந்நெறி**
**கந்தம தாகிய காரண காரியந்**
**தந்தைங் கருமமுந் தான்செய்யும் வீயமே.**

“ சிவனடியார்களே, காரண காரியங்களுக்குத் துணையாக நிற்கும் முழு முதற் சிவன் பராபரன் எனப்படுவான். அவன் எங்கும் வியாபித்து நீக்கமற நிற்பவன். அப்போது ஐந்தொழிலடகளையும் இடையறாது புரிவன். இது பெரும் பெருமையான விடயமாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1891. வீயம் தாகிய வி ந்துவின் சத்தியால்**
**ஆய வகண்டமும் அண்டமும் பாரிப்பக்**
**காயஐம் பூதமுங் காரிய மாயையில்**
**ஆயிட விந்து அகம்புற மாகுமே.**

“ சிவனடியார்களே, விந்துவின் ஆற்றலால் அகண்டமும், அண்டமும் ஆகிய அனைத்து ஆக்கப்பாடுகளும் உண்டாவன. ஆகாயம் முதலிய ஐம்பூதங்களும் முப்பத்தொரு மெய்களும் தூமாயையாகிய விந்துவின் காரியம் போன்ற படங்குடிலானாற்கோலும் வளர்ச்சியன்று. பால் தயிராவது போன்ற திரிபு. இதனைத் தூமாயை என்பர். இவை தூமாயையின் கீழ்ப்பகுதியாகும். இவ்விந்து முப்பத்தாறு மெய்களுக்கும் அகமும் புறமுமாகும். விந்து என்பதும் காரணமாயை என்பதும் ஒன்றாகும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1892. புறமகம் எங்கும் புகுந்தொளிர் விந்து**
**நிறமது வெண்மை நிகழ்நாதஞ் செம்மை**
**உறமகிழ் சத்தி சிவபாத மாயுட்**
**டிறனொடு வீடளிக் குஞ்செயற் கொண்டே**

“ சிவனடியார்களே, விந்து புறமகம் எங்கும் விரவி ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. விந்தின் நிறம் வெண்மை. நாதத்தின் நிறம் செம்மை. அறிவாற்றல்களால் ஆருயிர்களை மகிழ்விக்க மகிழும் சத்தி சிவம் இரண்டிற்கும் முறையே விந்து நாதம் பதித்த நிலைக்களமாகும்.

உயிர்குயிராய் உணவிற்குணர்வாய் உண்ணின்று பேறருளும் அருளிப்பாடு கொண்டே இவை அனைத்தும் நிகழ்கின்றன. ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1893. கொண்டஇவ் விந்து பரமம்போற் கோதற**
**நின்ற படங்கட மாய்[1] நிலை நிற்றலிற்**
**கண்டக லாதியின் காரண காரியத்து**
**அண்டம் அனைத்துமாய் மாமாயை [2] யாகுமே.**

‘‘ சிவனடியார்களே, சிவபெருமான் தொன்மை வாய்ந்தவராக இருப்பது போல விந்துவும் தொன்மையானது. ஊயிர்களின் ஆணவக்குற்றத்தை அறுப்பது விந்து. இதிலிருந்து படமாகிய சீலையும் கடமாகிய ஏனமும் தோன்றும். அவ்வாறு தோன்றுவது திருவருள் ஆற்றலால் இயக்கிக் காணச் செய்யும் ஐவகைத்திருவருளாற்றலான கலைகளால் காரணகாரியத் தொடர்பாய் மாமாயையில் இருந்து தோன்றும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1894. அதுவித்தி லேநின்றங் கண்ணிக்கு[3] நந்தி**
**இதுவித்தி லேயுள வாற்றை யுணரார்**
**மதுவித்தி லேமல ரன்னம தாகிப்**
**பொதுவித்தி லேநின்ற புண்ணியன் தானே.**

‘‘ சிவனடியார்களே, மேற்கூறப்பட்ட காரணங்களால் வித்துவில் நாதமாகிய சிவன் விரவிப் பிரிப்பின்றிக் கலந்து நிற்கின்றான். இந்த முறையாக மாயை தொழிற்படும் இயற்கை உண்மையை உணரார். தேனுக்குக் காரணமாக உள்ளது மலர். அ்.து ஈண்டு மலர் வித்தெனப்பட்டது. அது உச்சித்துளை மேற்கொள்ளப்படும் ஆயிரம் இதழ்த் தாமரையினைக்குறிக்கும். அத்தாமரையில் சிவபெருமான் வீற்றிருந்து அருளுகிறான். அதுபோலப் பொன்னம் பலத்தின் கண்ணும் நின்று அருள் புரிகின்றான். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1895. வித்தினி லன்றி முளையில்லை அம்முளை**
**வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை**
**வித்தும் முளையும் உமனன்றி வேறல்ல**
**அத்தன்மை யாகும் அரனெறி [4] காணுமே.**

‘‘ சிவனடியார்களே, வித்தும் முளையும் இரு பொருளாக உடன் தோன்றுவன அல்ல. வித்தை நிலைக்களமாகக் கொண்டு முளை அதனுள் அடங்கிநிற்கும். இது பாலும் குவளையையும் போன்றது. முளை வித்தின் வாயிலாக அன்றி வேறு வழிகளால் வெளிப்படுவதில்லை. அவை இரு பொருளாகத் தோன்றினாலும் இரு பொருட்கள் அல்ல. கையும் விரலும் போன்று ஒட்டி உடனாகத்தோன்றும். மலரும் மணமும் போல அடங்கித்தோன்றும் இரு பொருட்களாகும். அது போல விந்துவாகியதூமாயை திருவருள் ஆற்றல் என்ற நிலைக்களத்தில் அடங்கி அதனால் தொழிற்படும். இது போலச் சிவனது

திருவருளின் நிலைக்களத்து மாயை தொழிற்படும். அதனால் மாயையும் திருவருளும் ஒன்றாகாது. இதுவே அரன் அருளிய மெய்கண்ட செந்நெறி அல்லது சித்தாந்த சைவம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1896. அருந்திய வன்ன மவைமூன்று கூறாம்**
**பொருந்து [1]முடன்மனம் போமல மென்னத்**
**திருந்து முடன்மன மாங்கூறு சேர்ந்திட்டு**
**இருந்தன முன்னாள் இரதம தாகுமே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்கள் உண்ட உணவு மூன்று வகைப்படும். ஒரு பகுதி பகுவுடலை வளர்க்கும். மறுபகுதி மனதை வளர்க்கும். அடுத்த பகுதி மலமாய்க்கழியும். ஆருயிர்களின் செயற்பாடுகளுக்கு நிலைக்களமாக அமைவது உடல். அவ்வுடம்பு ஐந்து வகைப்படும். அவையாவன பருவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்ப மயவுடம்பு என்பன. இவற்றை அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம் ,விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என்பர். முன்பு உண்ட உணவின் சக்தி பருவுடலாகவும் மனவுடலாகவும் வளர்ந்திருக்கின்றன. ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1897. இரத முதலான ஏழ்தாது மூன்றின்**
**உரிய தினத்தின் ஒருபுற் பனிபோல்**
**அரிய துளிவிந்து வாகுமேழ் மூன்றின்**
**மருவிய விந்து வளருங்கா யத்திலே.**

“ சிவனடியார்களே, இரதமாகிய சாரம் முதலிய ஏழு பொருட்களால் ஆனது இவ்வுடல். அவ் ஏழு பொருட்களும் வருமாறு சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, எலும்பு, மூளை வெண்ணீர் என்பன. இவற்றை இரசம், இரத்தம், மாமிசம், மேதசு, அத்தி மச்சை, சுக்கிலம் எனவும் கூறுவர். இவற்றுள் சாரம், செந்நீர், வெண்ணீர் ஆகிய மூன்றும் ஒருநாள் ஒரு புற்பனி போல திரளும். இத்திரட்சியே விந்து எனப்படும். இவ்விந்து இருபத்தொரு நாள்வரை உடம்பில் வளரும்.” ஏன்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1898. காயத்தி லேமூன்று நாளிற் கலந்திட்டுக்**
**காயத்துட் டன்மன மாகுங் கலாவிந்து**
**நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்**
**மாயத்தே செல்வோர் மனத்தோ டழியுமே.**

“ சிவனடியார்களே, அதன் பின் மூன்று நாட்கள் பரந்து கலந்து முன் உடல் விந்துவாக இருந்த அது மனவிந்துவாக மாறும். அதனை அறிவு விந்துவாக அமைத்துச் சிவனின் திருவடிநினைவாக நீங்காது இருப்போருக்கு அவ்விந்து நீங்கா பற்றுடன் உலக மயக்கத்தில் உள்ளவர்களுக்கு அவ்விந்து மனதுடன் அழியும். இதனைக் கனவில் கழிதல் என்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1899. அழிகின்ற விந்து அளவை யறியார்
அழிகின்ற தன்னையுட் காக்கலுந் தேரார்
அழிகின்ற காயத் தழிந்தயர் வுற்றோர்
அழிகின்ற தன்மை யறிந்தொழி யாரே.**

“ சிவனடியார்களே, திருவடியுணர்வில்லாதவர்கள் இவ்வாறு அழியும் விந்துவின் அளவை அறியமாட்டார்கள். எண்பது துளிச்செந்நீர் வெண்ணீரின் ஒரு துளியாகும். இத்தகைய எண்பது வெண்ணீர்த்துளிகள் ஒரு முழுத்துளி விந்துவாகும். ஒரு விந்து வீணாக அழிந்தால் ஆயிரத்து நானூறு துளிச்செந்நீர் அழிந்ததாகும். விந்து அழிவதால் வாழ்நாளும் உடலும் அழியும் என்பதைப்பலர் அறிவதில்லை. அதிலிருந்து தம்மைக்காக்கவும் இவர்கள் முயலமாட்டார்கள். இதனால் தினமும் அழிகிறோம் என நினைத்து அவர்கள் நல்வழிப்படவும்மாட்டார்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 21. விந்துசயம் - போகசரவோட்டம்

**1900. பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
ஓர்க்கின்ற வுள்ளம் உருக அழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானுமே.**

“ சிவனடியார்களே, காம உணர்வோடு தன்னைப் பார்க்கின்ற மாதரை தான் பாராது விலகிப் போய்ச் சிவத்தை இடையறாது நினைக்கின்ற நெஞ்சம் நெகிழ்ந்து மேலும் உருகும்படி மூலத்திடத்து தழலினை மூட்டிப் புறத்தே பிறக்கும் வாசலை அவாவுடன் பார்க்கின்ற கண்ணாசை முற்றும் நீங்க மூலத்திடத்திலிருந்து நடு நாடி வழியாக உயிர்ப்பை மேலேற்றிச் செலுத்திப் பயில்வோர் அகத்தவராகிய சிவயோகியாவர். ”

“ சிவனடியர்களே, சிவராமனும் சிறுத்தொண்டனும் இணைபிரியாத நண்பர்கள். இருவரும் நிறைந்த பக்திமான்கள். இருவரும் திருமண மாணவர்கள். சிவராமன் சலன புத்தியுள்ளவன். அவனை ஆச்சிரமத்திற்கு வரும் ஆதினி என்ற பெண் காம உணர்வோடு உற்றுப்பார்ப்பாள். உதட்டைக் கடிப்பாள். மெதுவாகச் சிரிப்பாள். இவ்வாறு அவள் பல ஆண்களைப் பார்த்துச் செய்வதுண்டு. அது தெரிந்தும் சிவராமன் அவளின் மீது மோகம் கொண்டு அவளுடன் பேசுவான். இதை அறிந்த சிறுத்தொண்டன் சொன்னான், “ சிவா, சில பெண்கள் சில காரணங்களுக்காகப் பலரைப் பார்ப்பார்கள். நீ கற்றவன். உனக்கு நான் விரிவாகச் சொல்லத்தேவையில்லை. காம உணர்வுள்ளவர்கள் பெண்ணின் அங்கங்களைப் பார்த்து ரசிக்க விரும்புவர். அது கூடாது. நீ சிவ பக்தன். சிவனின் மீது அன்பைச் செலுத்து. அது உனது மனதை மாற்றும். உணர்வுகளை அடக்கும். கண்ணாசை நீங்கும். நீ மூலத்திடத்திலிருந்து நடு நாடி வழியாக

உயிர்ப்பிணைமேலேற்றி அகத்தவம் செய். உனது மனக்குழப்பம் தீரும் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1901. தானே யருளாற் சிவயோகந் தங்காது**
**தானேயக் காமாதி தங்குவோ னும்முட்குந்**
**தானே யதிகாரந் தங்கிற் சடங்கெடும்**
**ஊனே யவற்றுள் ளுயிரோம்பா மாயுமே.**

“ சிவனடியார்களே, சிவராமனுக்குச் சிறுத்தொண்டன் சொன்னான், “ சிவா, சிவயோகத்தில் உறைந்து நில்லாத ஒருவன் காமம் முதலாகச் சொல்லப்படும் மருட்பகை ஆறினுள்த்தங்குவோனாக இருந்தால் அவனுக்குப் பல தீமைகள் உண்டாகும். உடல் கெட்டுப்போம். உயிர் மேன்மையடையாமல் மீண்டும் மீணடும் பிறக்கும். திருவருள்கை விட்டுவிடும். ஆதினி நல்லவள் அல்ல என்று உனக்குத் தெரியும். அவளின் மேல் கொண்ட மோகத்தால் தனது மனைவியை விட்டு விட்டு அவளோடு வாழ்ந்த பற்குணம் மானமிழந்து பொருட்களையும் இழந்து கடைசி காலத்தில் தேடுவாரற்று இறந்தவன். இது கூடத்தெரியாது அவரது மாய உடலை விரும்புகிறாயே. அழகுப்பொருட்கள் இல்லாவிட்டால் அவளை நாயும் பாராது என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1902. மாயாள் வசத்தே சென்றிவர் வேண்டில்**
**ஓயா இருபக்கத் துள்வளர் பக்கத்துள்**
**ஏயாவெண் ணாளின்ப மேற்பனி மூன்றிரண்டு**
**ஆயா அபரத்து ளாதிநாள் ஆறாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசனை ஆலோசனை கேட்டபோது அவர் சொன்னார், “மகனே, புதிதாகத்திருமணமான கஜேந்திரன் சைவ சமயம் எல்லாவற்றிக்கும் காரணம் கண்டு பிழையானவற்றை நீக்கி நல்லவற்றைக் கைக்கொள்ளும்படி அறிவுறுத்துகிறது. அது காமத்தை முக்கியமானதாகக் கருதி அதன் நன்மை தீமைகளை விரிவாகக் கூறுகிறது. உறவால் படைப்பு நிகழ்கிறது. அந்தப்படைப்பைச் சிறப்பாகச் செய்ய வேண்டிய நடைமுறைகளைப் பற்றிக் கூறுகிறது. உறவென்று நன்மக்கட்பேற்றிற்காக நல்ல நாளில் ஏற்படுத்தப்பட வேண்டியது. இது கணவன் மனைவிக்குத் தான் பொருந்தும். வளர்பிறை, தேய்பிறை என்னும் இரண்டு பக்கத்துள், முன்வருகின்ற எட்டு நாட்களும் கூடி இன்பம் பெறாது, ஞாயிற்றுக்குப் பின் ஆறு நாட்களும் கூடி இன்பம் பெறலாம். இது போலதேய்பிறையில் முன் ஆறு நாட்களும் ஞாயிற்றுக்குரியன. அந்நாட்களில் கூடி இன்பம் பெறலாம். விலக்கிய நாட்களில் உறவு கொண்டால் பனி என்றும் துன்பம் உண்டாகும். வளர்பிறையைத் திங்களின் பக்கம் எனவும், தேய்பிறையை ஞாயிற்றின் பக்கம் என்றும் என்னும் கொள்வர் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1903. ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம்**
**வேறன்பு வேண்டுவோர் பூவரிற் பின்னந்தோ**
**டேறும் இருபத் தொருநா ளிடைத்தோங்கும்**
**ஆறின் மிகுத்தோங்கும் அக்காலஞ் செய்யவே.**[1]

" சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குச் சொன்னார், " மகனே, வளர்பிறையில் ஆறு நாட்களும் தேய்பிறையில் வரும் ஒன்பது நாட்களில் முதலாம் பிறை எட்டாம் பிறையும், அமாவாசை வரும் நான்குநாட்களும் நீங்கலாகிய ஐந்து நாட்களும் ஆகிய இரு பக்கமும் கூடிப் பதினொரு நாட்கள் யோகியர் மங்கை நல்லாரைச் சேர்வதற்கு மாண்புடைய நாட்களாகும். சிவபக்தரான குடும்பத்தவர்கள் மாதவிலக்கேற்பட்ட மூன்று நாட்களும் நீங்கலாக இருபத்தேழு நாட்களில் மேற்குறிப்பிட்ட நாட்கள் தவிர்ந்த நாட்களில் கூடலாம். இது சைவ விதி. இவ்விதியின்படி கூடினால் சிவவுணர்வுள்ள நல்ல பிள்ளைகள் பிறப்பார்கள். ஏனைய விலக்கப்பட்ட நாட்களில் கூடுவோர் வாழ்நாள் முழுவதும் துன்பங்களை அனுபவித்து பிறப்புகள் எடுத்துத் துன்பப்படுவர் என்றவர். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1904. செய்யும் அளவிற் றிருநான் முகூர்த்தமே**
**ஏய்யுங் கலைகாலம் இந்து பருதிகால்**
**நையு மிடத்தோடி னன்காம நூல்நெறி**
**செய்க சலமிடந் தீர்ந்து விடுக்கவே.**

" சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குச் சொன்னார், " மனைவியோடு கூடுவதற்குரிய நற்பொழுது இரவுப்பொழுதில் விந்துவைக் கருப்பையில் தங்கவிடும் காலம் வலப்பால் மூக்கில் உயிர்ப்புச் செல்லும் காலமே. குாம நூலில் கூறியபடி நடந்து கொள்ளல் வேண்டும். சிலவேளைகளில் இடப்பால் மூக்கில் உயிர்ப்புச் சென்றால் அதனை மாற்றி வலப்பால் விடுதல் வேண்டும். மூச்சுப் பயிற்சி செய்வதால் நீ உயிர்ப்பை மாற்றி விடுவாய் என்று எனக்குத் தெரியும். மூச்சுப் பயிற்சி செய்யாதவர்கள் உயிர்ப்புச் செல்லும் வழியை அறியமாட்டார்கள் என்றவர். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1905. விடுங்கான் முனைந்திந் திரியங்க ளைப்போல்**
**நடுங்கா திருப்பானும் ஐயைந்து நண்ணப்**
**படுங்காதன் மாதின்பாற் பற்றற விட்டுக்**
**கடுங்காற் கரணங் கருத்துறக் கொண்டே**

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், " மகனே, பேரன்புமிக்க மனைவியிடத்து மகப்பேற்றைக் கருதிச் சிற்றின்பப்பற்றுக்களை அறவே விட்டு விரைந்தோடும் உயிர்பினை மட்டுப்படுத்தி மன அமைதி கொண்டு நடுக்கமின்றி பொறி புலலன்கள் பத்தும் ஒத்துப் பொருத்தக் கருப்பையில் விந்தை விடுதலே வேண்டும் என்றவர். " என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1906. கொண்ட குணனே நலனேநற் கோமளம்
பண்டை யுருவே பகர்வாய் பவளமே
மிண்டு தனமே மிடைய விடும்போதிற்
கண்ட பரணமுட் செல்லக்கண் டேவிடே**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்மைக்குரிய நான்கு குணங்களும், இயற்கை அன்பு செயற்கை அன்புகளால் ஏற்படும் நன்மையும், மருவும் பருவமாகிய இளமையும், கட்டுக்குலையாத உடலும், செம்மையான வாயும், பொலிந்த மார்பும் உடைய மங்கையையே சேருதல் வேண்டும். அப்படிச்சேரும் போது காவிமுறைகளை நன்கறிந்திருத்தல் வேண்டும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1907. விட்டபின் கர்ப்பவுற் பத்தி விதியிலே
தொட்டுறுங் காலங்கள் தோன்றக் கருதியே
கட்டிய வாணாள்சா தோன்றக் கருதியே
பட்ட நெறியிதென் றெண்ணியும் பார்க்கவே.**[1]

“ சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்கு சொன்னார், “ நல்ல முறையில் கூடிக்கருத்தரித்த பின்பு அம்மகவினுக்கு வரக்கூடிய காலக்கணக்குகளை நன்கு தீர்மானித்து, வாழ்நாள் நிலைமையும், சாநாள்நிலைமையும், சிறந்த முன்னும், சிறவாக்குணனும், கீழ்மைக்குணனும் முதலிய எல்லாவற்றையும், தாங்கக்கூடியகூட்டத்தாலும் ஓடிய உயிர்ப்பினாலும் உய்த்துணர்த்து நோக்குதல் வேண்டும். ஒரு மகள் தந்தையின் செயற்பாடுகளால் தான் முன்னேற்றமடையும். பலர் உறவில் கொள்ளும் ஆசையைப் பிள்ளை வளர்ப்பில் செலுத்துவ தில்லை ஒரு பிள்ளை பிறந்து அது தனது சொந்தக்காலில் நிற்கும் வரை தந்தை அதற்குக் கொழு கொம்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் அப் பிள்ளை சிறந்த ஒழுக்க முள்ளவனாகவும் கல்வியாளனாகவும், மெய்யடியானா கவும் சமூகத்திற்குச் சேவை செய்பவனாகவும் இருக்கும் என்றார். ” என்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1908. பார்த்திட்டு [1]வைத்துப் பரப்பற் றுருப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீக்கியே
சேர்த்துற் றிருதிங்கள் சேரா தகலினும்
மூப்புற்றே பின்னாளி லாமெல்லா [2]முள்ளவே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே தாயின் வயிற்றில் வடிவம் பெற்ற மகவு முன்னூறு நாள் தாயின் வயிற்றில் தங்கி பின் பூமிக்கு வரும். வருமுன் அது கர்ப்பத்தில் இருக்கும் போதே தன் வாழ் நாளில் எய்தும் பேறு, இழவு, இன்பம், பிணி மூப்பு, சாக்காடு என்றும் ஆறும் பெற்றுக் கொள்ளும். அதனால் பெற்றோர்கள் ஒழுக்கம்

உள்ளவர்களாகவும், மெய்யுணர்வு உள்ளவர்களாகவும் வாழுதல் அவசியம். அவர்களின் வினைப் படி தான் பிள்ளை வந்தமையும் என்றார். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1909. வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை**
**வித்திடு வோர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை**
**வித்தினில் வித்தை விதற வுணர்வரேல்**
**மத்தி லிருந்ததோர் மாங்கனி யாமே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்கு சொன்னார், ‘‘ மகனே விளைநிலத்தை நல்ல முறையில் பன்படுத்தி பசனையிட்டுப் பின் வித்திட்டு நல்ல முறையில் பாது காக்காதவர்களுக்கு விளைவு வருவதில்லை வித்திடுவோருக்கு அதற்கான சிறப் பான அறிவு உண்டு. அது போலக் கரு இடுவார்க்கும் அனைத்தும் உள்ளன வித்து மாயை யாகிய தூமாலையில் இருந்து கருவான விந்து உண்டாகும். அவ்விந்திலிருந்து வரும் உயிர் விந்தை அசைவின்றி இருந்து உணர்ந்து கொண்டால் தயிர் கடையும் மத்துப் போன்று விளங்கித் தோன்றும். அம்மத்தின் உள்ளிடாகச் சிவன் தோன்றுவான். முப் பழங்களான வாழை, மா, பலா என்பனவாகும். அதில் நடுப் பழமாகச் சிவன் தோன்றுவான் நடுப் பழம் மாம் பழமாகும். என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1910. கருத்தினில் அக்கர மாயுவு மியாவுங்**
**கருத்துளன் ஈசன் கருவுயி ரோடுங்**
**கருத்தது வித்தாய்க் காரண காரியங்**
**கருத்துற மாறிவை கற்பனை [3]தாமே**

‘‘ சிவனடியார்களே, கருஉற்பத்தியின்போது தந்தை என்றும் எண்ணங்களே அக்கருவில் பதிவாகும். பின் விளக்க முறும் அதனால் கர்த்தா வாகிய தந்தையின் அறிவே மகவிற்கு அறிவாகப் பெருகும். கரு உற்பத்தியாகும் போது தந்தை எண்ணுபவற்றை யே ஆண்டவன் அமைத்து விடுவான். அதனால் தான் பிள்ளைப் பேறு தவப் பேறு எனப்படுகிறது. அத்துடன் கரு என்பதற்குக் காரணம் என்றும் பொருளுமுண்டு. தந்தையின் கருத்தே வித்தாய் காரணகாரிய விளைவாய் அமையும். அதனால் தந்தை உறவின்போது உயர்ந்த நல்ல எண்ணங்களுடன் இருத்தல் வேண்டும். குடித்து விட்டும் பல வேறு காமஎண்ணங்களுடனும் கூடியிருப்பதாலேயே நெறிதவறிய பிள்ளைகள் பிறக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்காகத் தான் சைவசமயம் ஒழுக்கக் கோட்பாடுகளை அமைந்து அவற்றைப் பின்பற்றுமாறு வலியுறுத்துகிறது என்றார். ’’ என்றார் சுந்தாரமூர்த்தி சுவாமிகள்.

**1911. ஒழியாத விந்து வுடன்நிற்க நிற்கும்**
**அழியாப் பிராணன் அதிபலஞ் சத்தி**
**ஒழியாத புத்தி தபஞ்செப மோனம்**
**அழியாத சித்தியுண் டாம்விந்து வற்றிலே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குத் தொடர்ந்து சொன்னார், ‘‘ மகனே, கணவன் மனைவியிடையே ஏற்படும் உறவு புனிதமானது. புனிதமான எண்ணங்களுடன் சேர்ந்திருந்தால் தான் நல்ல மகவைப் பெறலாம். விந்துவானது மூலத்துள் இயற்கையான சூட்டினால் வற்றப்பட்டு உடலுடன் கலந்து கரைந்து விடவேண்டும். அவ்வாறு உடலுடன் ஒன்றாய் விந்து விலகாது வேறிடம் செல்லாது நிற்பின் விரைவில் உயிர் அழியாது. அளவிறந்த வலு உண்டாகும். அகற்றலும் நீங்காது. நல்லறிவு, தவம், திருவைந்தெழுத் தெண்ணலாகிய சிவம், வாய் வாளாமை அழியாத எண்பெரும் சித்தியாவும் அருளால் உண்டாகும். கற்பவனுடைய முயற்சியும், நினைவும், தெளிவும் அவனுக்குப் புலவன் என்ற பட்டத்தை வழங்குவதற்குரிய கருவியாகும். எனினும் அக்கருவிகள் பட்டத்தை வழங்காது அக்கருவிகளுக்குரிய கற்றோனும் பட்டத்தைச் சூட்டிக் கொள்ளான். வினவித்தேர்ந்து நினைவுற்று நடு நிற்கும் சான்றோரே பட்டத்தினை வழங்குவர். அது போலத்திருவருளாற்றலே அனைத்தையும் கை கூடச் செய்யும். அதனால் எவ்வேளையிலும் சிவ நினைவாக இருப்பவர்களுக்குத் தீய செயல்களைச் செய்யும் பிள்ளைகள் கருவில் உருவாகமாட்டாது என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1912. வற்ற அனலைக் கொளுவி மறித்தேற்றித்**
**துற்ற சுழியனல் சொருகிச் சுடருற்று**
**முற்று மதியத் தமுதை முறைமுறை**
**செற்றுண் பவரே சிவயோகி யாரே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ‘‘ மூலத்து அனலைக் கொளுத்தி விந்துவை வற்றச் செய்து அவ்விந்தை கீழ்நோக்கிச் செல்லவிடாது தடுத்து மேல் நோக்கி ஏற்றி புருவ நடுவான சுழியின்கண் நிறுத்தி ஒளி பெற்றுத் திங்கள் மண்டித்து முழுமதி அமிழ்தினை முறை முறை பிழிந்து நுகர்ந்து அதுவே உணவாய் உடலை வளர்த்து அருளால் வழியும் அழியாமல் இருப்பவர் சிவயோகி என்று அழைக்கப்படும் அகத்தவத்தோர் ஆவர். விந்தை வற்றச் செய்தல் வேண்டும். அது வற்றாது துடிப்புடன் இருந்தால் பல்வேறு பட்ட துன்பங்கள் வரும். அதனால் சிவயோகிகள் தேவையேற்படும் போது மட்டும் விந்தைச் சுரக்கச் செய்வர். அதனால் பெரும் இன்பமும் பெறுவர் என்றார்.’’ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1913. யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்**
**யோகியும் ஞான புரந்தர னாவோனும்**
**மோக முறினு முரையமிர் துண்போனும்**
**ஆகிய விந்து அழியாத அண்ணலே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார். ‘‘ மகனே, பயிற்சி கொண்ட உள்ளத்தை உடையவர்கள் வேட்கையுற்றாலும் விந்தை வெளிவிடாது உள்ளே அடக்கி இன்பம் காண்பர். யோகிகளும், ஞானிகளும் தலையாய சித்தர்களும் தலையாக

யோகிகளும், தலையாய ஞான முதல்வர்களும் விந்தை தம்முடம்புக்குள்ளே அடக்கி நுகர்ந்து இன்பம் காண்பர். இது சாதாரண மனிதர்களால் இயலாதகாரியம் இதற்கு மூச்சுப்பயிற்சியும் அகத்தவமும் உதவி செய்யும். இப்போது இது பற்றிய விளக்கம் உனக்குத் தேவையில்லை. எனினும் ஒரு காலத்தில் உனக்குத் தேவைப்படும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1914. அண்ணல் உடலாகி யவ்வனல் விந்துவும்**
**மண்ணிடை மாய்க்கும் பிராணனாம் விந்துவுங்**
**கண்ணுங் கனலிடைக் கட்டிக் கலந்தெரித்து**
**உண்ணில் அமிர்தாகி யோகிக் கறிவாமே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், '' மகனே, ஏனைய உயிர்களுக்கு உயிர்க்குயிராகத்திகழும் சிவபெருமான் அகத்தவ யோகியர்க்கு உடலாகத் திகழ்வான். அங்ஙனம் திகழ்வதால் விந்து மாயையாகிய அனற்பிழம்பும் மண்ணில் வீணாகக் கழிப்பின் மாயச் செய்யும் உயிர் விந்துவாகிய அனற்பிழம்பும் கருதப்படும் மூலக் கன்னுடன் கூடிக்கலந்து ஒப்பில் பேரொளிப் பிழம்பாய்ச் சுடர் விட்டு அகத்துள் அமிழ்தாகி யோகிக்குத் தாவில் அறிவாகும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1915. அறியா தழிகின்ற வாதலால் நாளும்**
**பொறியால் அழிந்து புலம்புகின் றார்கள்.**
**அறிவாய் நனவி லதீதம் புரியச்**
**செறிவா யிருந்து சேரவே மாயுமே.**

'' சிவனடியார்களே, மேலும் கதிரேசன் சொன்னார், '' மகனே, விந்துவின் பெருமை புரியாத மெய்யுணர்வில்லாதவர்கள் விந்துவை வெளியேற்றிப் பிற்காலத்தில் பெருந்துன்பப்படுகின்றனர். இவ் உண்மையை அருள் வழி நின்று அறியாது தினமும் விந்துவை அழித்துப் பொறிவேட்கையால் பலர் புலம்பித் துன்பப்படுகின்றனர். அருளால் அறிவுடையவராகி நனவிலே சிவ நினைவுடன் எதையும் சிந்திக் காது உயிர்ப்படங்கலாகிய அப்பாலைப் புரிந்தோர்க்குத் தூமாயை விந்துவும் உயிர் விந்துவும் ஓன்றாகக் கூடிக்கட்டுப்பட்டு நிற்கும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1916. மாதரை மாய வருங்கூற்ற மென்றுன்னக்**
**காதல தாகிய காமங் கழிந்திடுஞ்**
**சாதலு மில்லை சதகோடி யாண்டினுஞ்**
**சோதியி னுள்ளே துரிசறுங் காலமே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் மேலும் சொன்னார், '' மகனே, ஒழுக்கமில்லாத பெண்கள் உருவத்தால் மட்டும் பெண்ணாகத் தோன்றும் கூற்றுவனாவர். அவர்களோடு பேசுதல் பழகுதல் இரங்குதல் கூடாது. அவர்களைக் கூற்றுவன் என்று எண்ணினால் நேர்மையும்

சீர்மையும் இன்றிக் காதல் என்ற பெயருடன் தோன்றும் காமம் அழிந்து போகும். அதனால் வரும் துன்பங்கள் இல்லாமற் போகும். இறப்பும் வராது. வளரும் வரை குற்றமில்லாத சிறந்த வாழ்வு கிட்டும். தனபாலனைப் பார் எவ்வளவு வசதியாக இருந்தவன். அழகான அன்பான மனைவி. மூன்று ஆண் பிள்ளைகள். ஆதினி என்ற பெண்ணில் ஆசைப்பட்டு பணம் பொருட்களை மட்டுமல்ல மானத்தையும் இழந்து வாழ்கிறான். அன்பான மனைவியைத் தவிர வேறு எப்பெண்ணின் மீதும் காமம் கொள்ளல் ஆகாது. அப்படிக் காமம் கொண்டால் மானம் மரியாதையுடன் பணம் பொருட்களையும் இழக்க வேண்டி வரும். ஒழுக்கமில்லாப் பெண்கள் பேய்களுக்குச் சமமானவர்கள் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1917. காலங் கடந்தவன் காண்விந்து செற்றவன்**
**காலங் கடந்தழிந் தான்விந்து செற்றவன்**
**காலங் களின்விந்து செற்றுற்ற காரிகை**
**காலின்கண் வந்த கலப்பறி யாரே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ‘‘ மகனே, காலங்கடந்தும் திடகாத்திரமாகவும் மிக்க மகிழ்வுடனும் நெடுங்காலம் வாழ விரும்புபவன் விந்தினை அடக்கிக் கொண்டவனாவான். விந்துவை அடக்க முடியாது அவதிப்பட்டுத் தீய வழியில் வாழ்வோர் விரைவில் பல துன்பங்களுக்குள்ளாகி மாண்டு போவர். இளமைக்காலத்தில் விந்தைக் கட்டுப்படுத்தி வாழ்ந்து அழகிய பெண்ணைக் கூடியவர்களுக்கு அக்கூட்டப் பயனாகப் உயிரை ஓட்டும் வீசும் காற்றுத் தோன்றி வளரும். அவ்வீசும் காற்றுத் தம்முயிரைப் போக்கும் தன்மைத் தென்றும் அ்.்து இணை விளைச்சால் விளைவதென்றும் உணரார். தனபாலன் நல்லைநாதனைவிட முப்பது வயது குறைந்தவன் நல்லைநாதன் பெண்களைத் தெய்வமாக மதிப்பவன். தனபாலன் காணும் பெண்களுடன் கூட நினைப்பவன். இப்போது தனபாலனுக்கு ஐம்பது வயது. பொல்லூன்றி நடக்கிறான். நடக்கமுடியாது துன்பப்படுகிறான். அதற்குக் காரணம் விந்தைக் கட்டுப்படுத்தாமையே என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1918. கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காதல்**
**நலத்தக வேண்டில்அந் நாரி யுதரக்**
**கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தை**
**விலக்கு வனசெய்து மேலணை வீரே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குச் சொன்னார், ‘‘ மகனே, காதலர் இருவர் கருத்தொத்து மகிழ்வுடன் வாழவிரும்பிக் கூடுவதற்குத் தகுதியெனக் கருதும் நாளின் முதல் நாளில் காதலினால் பெரும் பயன் அடைதற்காக காதலியின் மலக்குடலில் தங்கும் மலத்தை அகற்றி வாதம் பித்தம் கபம் என்னும் மூன்றையும் இருக்க வேண்டிய முறையில் செய்து நல்ல முறையாகக் கூடி இன்புற வேண்டும். தாயின் வயிற்றில் மலம்

நிரம்பியிருந்தால் பிறக்கும் பிள்ளை மந்தனாவான். அது போலச் சிறு நீர் இருந்தால் பிறக்கும் பிள்ளை ஊமையாவான். சிறு நீரும் மலமுமிருந்தால் பிறக்கும் பிள்ளை குருடாகும். எனவே கணவனும் மனைவியும் இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். சைவ சமய ஞானியான திருமூலர் இவ்வாறு கூறியுள்ளார் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1919. மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்**
**கோலால் நடத்திக் குறிவழி யேசென்று**
**பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றினால்**
**மாலா னதுமாள மாளுமவ் விந்துவே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், '' மூலம் முதலாகச் சொல்லப்படும் ஆறு நிலைகளுக்கும் அப்பாலுள்ள தூவெளி மேனிலம் எனப்படும். அங்கு விந்துவும் நாதமும் தோன்றும். அவற்றை நடு நாடி வழியாக நடத்தி அகத்தவ ஆசான் கூறிய படி சென்று அவ்விந்துப் பாலாகிய அமிழ்தத்தினைப் பருகுவராயின் பற்றறப் பற்றினவராவர். பிறப்புக்கு ஏதுவான மருள் முற்றும் மாயும். அவ்விந்தும் அடங்கும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1920. விந்து விளைவும் விளைவின் பயன்முற்றும்**
**அந்த வழிவும் அடக்கத்தில் ஆக்கமும்**
**நந்திய நாசமும் நாதத்தாற் பேதமும்**
**தந்துணர் வோர்க்குச் சமயமாகும் விந்துவே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குச் சொன்னார், '' மகனே, விந்து துளிதுளியாகக் கூடி விளைகின்ற விளைவும் விளைந்து முற்றினால் எய்தும் பயனும் உணர்ந்து அடங்குதல் நன்று. இம்முறையை எப்போதும் கடைப்பிடித்தால் நீண்ட காலம் வாழலாம். அங்ஙகமின்றி இணை விளைச்சாகிய ஆண் பெண் கூட்டத்தினை விரும்பினால் அவ்விந்து வீணாய்க் கழிந்து வாழ் நாளை வீழ்நாளாக்கும். இவற்றை உண்மையாக உணரின் விந்து அடங்கும். அவ் அடக்கத்தினால் பேராக்கம் உண்டாகும். அடங்காது விட்டால் பெரும் போக்கு ஏற்படும். நாதத்தால் ஏற்படும் விந்துவின் சிறப்பும் அருளால் உணர்வார்க்கு விந்து அடங்கும். வெற்றியும் உண்டாகும். பொதுவாக வாழ்க்கையில் பெண்களுடன் கூடி இன்பம் அனுபவிப்பதைத்தான் பலரும் விரும்புவர். அந்தப் பெண் தனது மனைவியாக இருப்பதோடு தேவையின்றிச் சேர்வது கூடாது என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1921. விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து**
**நந்திய அங்கியி னாலே நயந்தெரித்**
**தந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்**
**சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ விந்து என்று சொல்லப்படுகின்ற உயிர் வாழ் வித்தினைப் பொருந்திய மூலத்திடத்து விளங்கும் மூல அனலால் செம்மையுறச் செய்து கொப்பூழ் முதல் நெஞ்சம் வரையுள்ள ஞாயிற்று மண்டிலத்திற்கு வலப்பால் நாடி வழியாக ஏற்றி அதன் மேல் நெஞ்சம் முதல் நெற்றி வரையுள்ள திங்கள் மண்டிலத்திற்கு இடப்பால் நாடி வழியாக ஏற்றி அத்திங்கள் மண்டிலச் சார்புறத்தன்மையும் வெண்மையும் மிக்க வன்மை அமுதமாகும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1922. அமுதச் சசிவிந்து வாம்விந்து மாள**
**அமுதப் புனலோடி அங்கியின் மாள**
**அமுதச் சிவபோகம் ஆதலாற் சித்தி**
**அமுதப் பலாவன மாங்குறும் யோகிக்கே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குச் சொன்னார், “ மகனே, திங்களின் துளித்துளியான அமிழ்தம் என்று சொல்லப்படுகின்ற உடலின் விந்து மாளுதலாகிய கட்டுப்பாட்டினை எய்த, அது பெருக்கெடுத்தோடிக் கொப்பூழில் தோன்றுகின்ற சிவ அனலில் கட்டுப்படும். அப்போது ஆர் அறிவில் விளைவது சிவயோகமாகும். அதனால் அவ்விடத்துத் திருவடி இன்பப்பலாவனம் எய்தும். இவை அனைத்தும் சிவயோகியர்க்கே உண்டு. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1923. யோகமவ் விந்து ஒழியா வகைபுணர்ந்து**
**ஆகம் இரண்டுங் கலந்தாலு மாங்குறாப்**
**போகஞ் சிவபோகம் போகிநற் போகமா**
**மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே.**[1]

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே, சிவயோகிகள் ஒரு பெண்ணுடன் கூடினால் உடல்கள் கூடுமேயன்றி மனங்கள் கூடாது. சிவயோகியின் மனம் சிவ நினைவில் இருப்பதால் விந்து வெளிப்படாது. அந்த மனவடக்கம் சிவனால் அவருக்கு அருளப்பட்டது. அப்போது ஏற்படுவது அன்பியற் போகமுமல்ல, அது போல அருளியற் போகமுமல்ல. அருள்க் கூட்டம் கூடும் ஆண்டான் அடியினைச் சார்த்த இன்பியற் போகமாகும். இது அருளால் அனுபவிக்கும் நற்போகமாகும். இச் செந்நெறி ஒழுக்கத்தை மேற்கொள்ளாத அறியாமை உடைய மூடர்கள் ஆணவச் சார்பான விந்தை விட்டு அழிவார்கள். பெண்ணைக் கண்டால் அவளை நினைத்தால், அவள் தொட்டால், சொற்கேட்டால், கருதினால் உறவு கொள்ளாமல் விந்தைக் கழிக்கும் கடை கெட்ட

காமுகர் போலி இன்பம் அனுபவிக்கும் இயல்பினராவர். இன்பம் என்பது முழுமையான திருப்தியாக இருத்தல் வேண்டும். மேற்சொன்னவாறு பெண்ணின் குரல் கேட்டதும் விந்தை இழக்கும் ஆண்களால் பெண்கள் துக்கப்படுகின்றனர். சிவயோகிகள் கூடும் போது சிவயோகிக்கு விந்து கழியாமலே பெரும் இன்பம் உண்டாகும். இது மனப்பயிற்சி உடையவர்களுக்குத் தான் பொருந்தும். அதற்கான மனப்பயிற்சியை நீ பெற்றிருக்கிறாய் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1924. மாத ரிடத்தே செலுத்தினும் அவ்விந்து**
**காதலி னால்விடார் யோகங் கலந்தவர்**
**மாதர் உயிராசை கைக்கொண்டே வாடுவர்**
**காதலர் போன்றங்கன் காதலாஞ் சாற்றிலே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே, அருளால் சிவயோகம் தன்னை வரப்பெற்றவர்கள் மகப்பேற்றின் பொருட்டு விந்துவை மாதர் பால் செலுத்த நேர்ந்தாலும் ஏனையோர் போன்று காதலுடனோ காமத்துடனோ விடமாட்டார் அருளால் விடுவர். இவ்வாறு நடந்து கொள்ளாது காம உணர்வு காரணமாக அவாவுடன் மருண்டு பெண்கள் தான் தம்முயிர் என்று பெருவேட்கை கொண்டு துன்புறுவர். இவர்கள் உண்மைக் காதல் உயிர்க் காதல் உடையான் காதல் என்பதனை மறந்து உடற் காதல் உலகக் காதல் கொண்டு ஓய்வின்றிச் செயலில் ஈடுபடுபவராவர். இது காதலாஞ்சாறு எனப்படும். மகனே அறிஞர்கள் தமது மனைவியோடு நற்புத்திரப்பேற்றுக்காகவே சேர்வர். சேரும் போது சைவசித்தாந்த விதிகளுக்கமையவே சேருவர். இவர்கள் திருவருளின் துணையோடு சேர்வதால் பிறக்கும் பிள்ளைகளும் சிவ நினைவோடும் ஒழுக்கத்துடனும் வாழும். சிவ நினைவில்லாது மது மயக்கத்துடனும் காமக் கிளர்ச்சியுடனும் சேர்வோர் ஊழிக்காலம் வரை துன்பப்படுவர் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1925. சாற்றிய விந்து சயமாகுஞ் சத்தியால்**
**ஏற்றிய மூலத் தழலை யெழமூட்டி**
**நாற்றிசை யோடா நடுநாடி நாதத்தோ**
**டாற்றி யமுதம் அருந்தவிந்தாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே, விந்துவைக்கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும். விந்து மனம் போலக்கட்டுப்படமறுக்கும். அதை நன்நிலைப்படுத்தினால் கட்டுப்படும். விந்தின் போக்கில் போகாது மனதின் போக்கில் விந்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குத் திருவருட் சக்தியால் மூலத்திடத்து அனலை எங்கும் தன் உள்ளத்தைப் போக விடாமல் “ சிவ சிவ ” என்னும் நான்மறையால் கைவரச் செய்து சிவயோகியானவன் தனது வாழ்க்கைத் துணையான பெண்ணின்பால் உள்ள செந்நீரான நாதத்துடன் தனது நடு நாடியில் இருந்து வெளிப்படும் விந்துவான வெண்ணீரைச் செலுத்தினால் அவ்விந்து கட்டுப்படும். அதுவுமல்லாமல் நெற்றிவாயிலாகத்

திங்கள் அமிழ்தத்தை அருந்துவதும் இதற்குத் துணையாகும். இம்முறையைப் பயிற்சியால் மெய்யடியார்கள் கைக்கொள்கின்றனர். மகவுத்தேவையின்றி இன்பத்திற்காகக் கூடும் போது இந்த முறையைக் கைக்கொள்ளல் வேண்டும். இம்முறையால் விந்துவில் உள்ள ஆண்மைத்தன்மை அற்றுப் போவதால் கரு உண்டாகமாட்டாது. சிவ உணர்வு அவ்வாறு செய்ய வைக்கிறது என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1926. விந்துவும் நாதமும் மேவக் கனல்மூல**
**விந்த வனன்மயிர்க் கால்தோறும் மன்னிடச்**
**சிந்தனை மாறச் சிவமக மாகவே**
**விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், '' மகனே, நான் சொன்னவாறு விந்துவும் நாதமும் நடுநாடி வழியாக உடலிலே பொருந்த மூலத்தில் இருக்கும் அனல் மயிர்த்துளை தோறும் நிலை பெறும்படி நெஞ்சமானது பயிற்சி வயத்தால் உலகியலை நோக்காது மாறும்படி இடையறாது '' சிவ சிவ '' என்று எண்ணிக் கொண்டிருப்பவர் சிவமாவர். அம்முறையால் விந்துவின் தூய்மையாகிய கட்டுப்பாடும் எய்தும். இதுவே உடம்பு நிலைக்கும் விந்துவாகும் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1927. வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்**
**வித்துக்குற் றுண்ணாமல் வித்துச்சுட் டுண்பவன்**
**வித்துக்குற் றுண்பானில் வேறல னீற்றவன்**
**வித்துக்குற் றுண்ணாமல் வித்துவித் தானன்றே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், '' வேளாண்மை செய்வோர் வித்துக்களை எவ்வளவு துன்பம் வந்தாலும் குற்றி உண்ணார். விளைவுக்காக விதைக்கப்படும் வித்துக்கள் பெறுமதி வாய்ந்தவை. உயிர்களைக் காப்பவை என்று அவர்களுக்குத் தெரியும். அது போலச் சிவயோகியும் வித்தாகிய விந்தினை பெண்பால் விடுவலாகிய குற்றத்தைச் செய்யார். விந்தை அடக்குவதன் மூலம் நெடு நாள் வாழின் அந்நாள் முழுவதும் உலகத்தில் வாழும் பலகோடி மக்களுக்கு அவ்யோகியர் பெரும் பயனாற்ற முடியும். அங்ஙன மின்றி பெண்பால் விந்துவை விட்டு ஒரு சில மக்களைப் பெற்று தம் வாழ்நாளை வீணாகக் கழித்து விரைந்து இறப்பதால் பயனெதுவும் உண்டாகாது என்று அறிந்தவர்கள் அவர்கள். விளைவை அறியாதவனே வித்தைக் குற்றி உண்பான். இது போல விளைவுகளை அறியாதவனே விந்தை விட்டுத் தனது காமத்தைத் தீர்ப்பான் அதனால் மகப்பேற்றை அதிகமாக விரும்பாது நல்ல மக்கள் சிலரைப் பெற்று அவர்களை உலகிற்குப் பயன் செய்யும்படி வளர்த்தலே வித்தைக் குற்றி உண்ணாதவனது நிலையாகும். ஒரு கொத்து விதை நெல் பல கொத்து விளைச்சலைத் தரும். இது போல விந்தைக்கட்டுப்படுத்தி வாழ்பவன் உலகிற்கு நன்மை செய்பவனாவான் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1928. அன்னத்தில் விந்து அடங்கும் படிகண்டு**
**மன்னப் பிராணனாம் விந்து மறித்திட்டு**
**மின்னொத்த விந்துநா தாந்தத்து விட்டிட**
**வன்னத் திருவிந்து மாயுங்கா யத்திலே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், “ நாம் உண்ணும் நல்ல உணவால் உற்பத்தியாகும் விந்து தனது உடம்பினுள்யோகப் பயிற்சியால் அடக்கும் முறைகளை அறிந்து அடக்க வேண்டும். அப்படி அடக்கினால் உயிர் நெடுநாள் நிலைபெற்றிருக்கும். இதற்கு விந்தினை கீழ் நோக்கி அதாவது பெண்ணின் குறியை நோக்கி ஓடவிடாது மேல் நோக்கி ஓடவிட வேண்டும். மின்னல் போலத்தோன்றி மறையும் இவ்வுடம்பு விந்தையும் நாதத்தினையும் ஒன்று கலந்து அடக்கிடவேண்டும். அப்படி அடக்கினால் உடல் அழகுடன் உரமும் பெறும். விந்தைக் கட்டுப்படுத்தியவன் சிவயோகியாவான் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1929. அன்னம் பிராணனென் றார்க்கு மிருவிந்து**
**தன்னை யறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்**
**சொன்ன மாமுருத் தோன்றும்எண் சித்தியாம்**
**அன்னவ ரெல்லாம் அழிவற நின்றதே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், “ மகனே, உண்ணும் உணவு சத்துள்ளதாக இருத்தல் வேண்டும். சத்துள்ள உணவாலும் பயிற்சியாகிய உயிர்ப்பினாலும் இரு விந்துக்கள் உண்டாகும். அவ்விந்தின் சிறப்பினை அறிந்து அவ்விந்தைத் தமது உடலுள் தங்கவைக்க வேண்டும். அவ்வாறு தங்குதலைச் செய்வார்க்கு உடம்பு தவ உடம்பாக மாறும். மேலும் அது பொன் போலப் பளபளக்கும். எண்பெரும் சித்திகளும் தோன்றும். அவர்கள் பூமியில் மிகுந்த ஆரோக்கியத்துடன் நெடுநாள் வாழ்வார்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1930. நின்ற சிகாரம் நினைக்கும் பிராணனாய்**
**ஒன்று மகாரம் ஒருமூன்றே டொன்றவை**
**சென்று பராசத்தி விந்து சயந்தன்னை**
**ஒன்ற வுரைக்க வுபதேசந் தானே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ ஓ மொழியில் அகரம், உகரம், மகரம் என்ற மூன்றும் முறையே இறை, உயிர், தளையாகத்தோன்றும். இவ்மூன்றுக்கும் உயிராகத் தோன்றுவது “ சிவ ” என்னும் சிறப்பு எழுத்தின் முதற்கண்காணப்படும் சிகரமாகும். இம்மூன்றும் மூலத்திடத்தலாகும். இதன் கண் திருவாற்றலாகிய பராசக்தி விந்து வினைக் கட்டுப்படுத்தியருள்வள். இந்நிலைகைகூடுமாறு உயிராகிய சிகரத்தை முதலாகக் கொண்டு திகழும் திருவைத்தெழுத்தைச் சிவகுரு அருளிச் செய்ய மேற்கொண்ட கணிப்பது

உபதேசமாகிய செவியறிவுறூ உவாகும். இது “ சிவய நம” என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1931. தானே யுபதேசந் தானல்லா தொன்றில்லை**
**வானே யுயர்விந்து வந்த பதினாக்கு**
**மானே ரடங்க அதன்பின்பு புத்தியுந்**
**தானே சிவகதி தன்மையு மாமே.**

“ சிவனடியார்களே, சிவகுரு அருளிச் செய்யும் “சிவயநம” என்ற தமிழ் மறை தான் உபதேசமாகும். சிவபெருமானின் கலப்பில்லாத பொருள் எவையுமில்லை. தூமாயையில் இருந்து வெளிவந்த கலைகள் பதின்னான்காகும். மனம் “சிவ சிவ” என்று சொல்லும் தன்மையால் அமைதி கொண்டு அடங்கிய பின் இறுப்பாகிய புத்தியும் அடங்கும். அதன்பின் ஆருயிர் சிவத்துடன் அடங்கும். அதுவே சிவகதியாகும். ஒரு குடும்பத்தவனின் இறுதி நிலை இது. மனமானது படிப்படியாக அடங்கிச் சிவனோடு கலப்பது தான் சைவசித்தாத்தின் இறுதி நிலை ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1932. விந்துவும் நாதமும் விளைய விளைந்தது**
**வந்தஇப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலாம்**
**அந்தமும் ஆதியு மாமந் திரங்களும்**
**விந்து அடங்க விளையுஞ் [1]சிவோகமே.**

“ சிவனடியார்களே, விந்தும் நாதமும் கட்டுற்று விளைய விளைந்து உயர்திணை வினைக்கீடாக ஆணையாகப் தோன்றிய இயங்குதினை நிலைத்தினையாகிய பல உயிர்களுக்குள்ளும் ஆறறிவு நிரம்பப் பெற்றது. உயர் திணை மண்ணுயிர்கள் எல்லாவற்றிற்கும் அந்தமும் ஆதியுமாகிய அமுத்தமிழ் மந்திரம் இரண்டு. அவை “சிவ சிவ” “நமசிவய” என்பனவாகும். இம்மந்திரத்தின் வலிமையால் விந்து வினைக்கட்டுப்படுத்தியவர்களுக்குச் சிவோகநிலை உண்டாகும். அடியார்களே, கதிரேசன் கஜேந்திரனுக்குச் சொன்னார், “ மகனே, நீ புதிதாகத் திருமணமானவன். அதனால் நீ மனைவியுடன் கூடியிருக்க விரும்புவாய். அது போல உனது மனைவியும் விரும்புவாள். அது தவறல்ல. ஆனால் நினைத்தவுடன் கூடுவதும், பகலில் கூடுவதும், பல முறைகூடுவதும் கூடாது அது உடலைப்பாதிப்படைய வைப்பதோடு நல்ல மகவைப் பெறுதலையும் தடை செய்யும். பயிற்சியால் இதைத் தடை செய்ய வேண்டும். மூச்சுப்பயிற்சியும் அகத்தவமும் செய்வோர். ” சிவ சிவ ” என்றும் “ நமசிவய ” என்றும் நினைத்துச் சிவனை மனதுள் ஆராதித்தால் சிவ வாழ்வு மேம்பட்டு விந்து வின் உக்கிரத்தைத் தனிக்கும் என்றவர். ” எனறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1933. வறுக்கின்ற வாறு மனத்துலா வெற்றி**
**நிறுக்கின்ற வாறுமந் நீள்வரை யொட்டிப்**
**பொறிக்கின்ற வாறுமப் பொல்லா வினையை**
**அறுக்கின்ற நால்வரும் அத்திப் பழமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே, திருவருளால் அன்றி வேறு எவற்றாலும் விந்துவைக் கட்டுப்படுத்த முடியாது. மனதை அடக்கி புலன்களைத் தன் வழிப்படுத்தும் வெற்றியும் திருவருளால் தான் உண்டாகும். அந்த வெற்றியை மனதில் நிறுத்தி காக்கும் நிலையும் திருவருளால் தான் உண்டாகும். ஒத்த நடு நாடியின் வழியே ஒட்டிச் சேர்கின்ற முறைமையும் உண்டாகும். பிறப்புக்கு வித்தான இருவினைகளும் அழிக்கப்பட்டு விடும். அதற்குச் சிவபெருமான் உதவி செய்வார்” என்று கதிரேசன் கூறும் போது கஜேந்திரன் சொன்னான், “ ஐயா, நீங்கள் முன்பு நான் இளைஞனாக இருக்கும் போது ஏதாவது ஆபத்துக்கள் வந்தால் சிவனை நினைத்துச் செந்தமிழ் மந்திரத்தை ஓதச் சொன்னீர்கள் சமீபத்தில் ஒரு நாள் எனது அலுவல வேலை செய்யும் ஒரு பெண் ஊழியரின் வீட்டிற்றுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவளுக்குத் திருமணமாகவில்லை. அவள் என்னைக் காணும் வேளைகளில் காதல்கதைகள் பேசுவாள். அன்று அவள், “ கஜேந்திரா, உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்” என்று கூறியவாறு எனக்கு அருகில் வந்தவள். நான் திகைத்தபோதும் சிவனை மறக்காததால் சிவனே நமசிவய என்று மனதுள்ச் சொன்னேன். நேரம் சென்றது தெரியவில்லை. அவள் சொன்னாள் அழகன் என்பதால் ஆண்மையுள்ளவனாக இருப்பாயென நினைத்தேன். நீமரம், பட்டமரம் என்றவள். சிவன் எனக்குக் காம உணர்வு ஏற்படாமல் செய்து விட்டார் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1934. விந்துவும் நாதமும் மேவி யுடன்கூடிச்**
**சந்திர னோடே தலைப்படு மாயிடில்**
**அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்**
**அங்குதி மந்திரம் ஆகுதி யாகுமே.**

“ சிவனடியார்களே, கஜேந்திரன் அவ்வாறு கூறியதும் கதிரேசன் சொன்னார், “ மகனே, திருவைத்தெழுத்து எல்லாவகையான அச்சங்களையும் அகற்றும். மனதைச் சுத்தப்படுத்தும். துணிவைக் கொடுக்கும். அதனால் தான் அன்று உனக்கு அந்த நிலை உண்டானது. விந்துவும் நாதமும் அருளால் பொருந்தி உடன் கூடித் திங்களுடன் சேருமானால் ஆயிரம் இதழ்த் தாமரை பரவெளியிலிருந்து ஊற்றெடுக்கும் அமிழ்தம் வந்து வெள்ளம் போன்று பெருகி எழும். அதற்கு ஆகுதியாவது திருவைத்தெழுத்து. அந்த நிலை தான் உனக்கு ஏற்பட்டது. திருவருள் வெள்ளம் போல உனது மனதுள்ப் பெருகியமையால் தான் உன்னை மரம் என்று சொல்லி உன்னை அவள் வெறுத்தவள். காம உணர்வு உள்ளவர்களின் உணர்வைத் தடுத்துத்துணியப்பண்ணவும், காம

உணர்வில்லாதவர்களுக்குக் காம உணர்வை ஊட்டுவதும் திருவைத்தெழுத்து. ஒரு நாள் ஆச்சிரமத்திற்கு வரும் அடியன் ஒருவன் வந்து தனக்குச் சிவ நினைவு வருகிறதே தவிரச் காம உணர்வு வரவில்லை. இதனால் மனைவியோடு மகிழ்வாக வாழ முடியவில்லை என்றான். அவனுக்குச் சிவனை நினைக்கும் போது உனது மனைவியையும் சேர்த்து நினை அவளை மகிழ்வுறும் படி சிவனிடம் முறையிட்டு ஐந்தெழுத்தை ஓது என்றேன். சில நாட்களின் பின் அவன் வந்து மகிழ்வோடு சொன்னான், " இப்போ எனது மனைவி மகிழ்வாக இருக்கிறாள் என்று. அதனால் ஐந்தெழுத்து எல்லாவற்றிற்கும் மருந்தாகச் செயற்படும் வல்லமை மிக்கது. அதனால் பக்தியைத் தான் உருவாக்க முடியும் என்றில்லை. பயம் இருந்தாலும் அது நீங்கும் என்றவர். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1935. மனத்தொடு சத்து மனஞ்செவி யென்ன**
**இனத்தெழு வார்கள் இசைந்தன நாடி**
**மனத்தில் எழுகின்ற வாக்கு வசனங்**
**கனத்த இரதமக் காமத்தை நாடிலே.**

" சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், " மகனே, இணை விழைச்சாகிய ஆண் பெண் சேரும் காமத்தை விரும்பினால் மனம் அதனுடன் பொருந்திவிடும். அதனால் அந்த எண்ணத்தைத் தவிர வேறெந்த எண்ணமும் மனதில் உருவாகாது. அதனால் காமத்தை விரும்புபவனால் எச் செயலையும் ஒழுங்காகச் செய்ய முடியாது. அதனால் மனித உழைப்பும் முன்னேற்றமும் பாதிக்கப்படும். ரவீந்திரனுடன் வேலை செய்பவன் பிரதாபன். அவனுக்குக் காம உணர்வு அதிகம். அலுவலகத்தில் கூடப் பெண்களுடன் பொழுதைப் போக்குவதால் மேலதிகாரியின் வெறுப்புக்கு ஆளாபவன். அவன் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்திருந்தான். அன்று நேர்முகப் பரீட்சை. அலுவலகத்தின் அவனுடன் சிரித்துப் பேசும் பெண் ஒருத்தி தனது மகனது பிறந்த திணத்திற்கு வருமாறு கூறியிருந்தாள். அவன் அவளின் வீட்டுக்குச் சென்றால் நேரம் போவதே தெரியாமல் கதைத்துக் கொண்டிருப்பான். இரண்டு மணிக்கு நேர்முகத்தேர்வு. அவன் பதினொரு மணிக்கு அப் பெண் வீட்டுக்குச் சென்றான். அவளுடன் கதைத்துக் கொண்டிருந்ததால் அவன் அன்று நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல வில்லை. காம உணர்வு சாதாரண ஓர் உணவு. தாகம் பசி போன்ற சாதாரண உணர்வு. அது பெரிய உணர் வென்றும் அதை உடன் தீர்க்க வேண்டும் என்றும் நினைப்பவன் முன்னேற மாட்டான். பசி ஏற்படும் போது சோறுகறி இல்லாவிட்டால் ஏதாவது பழங்களை உண்டு நிலைமையைச் சமாளிப்பவன் சிவனடியான். புசிக்கும் போது அறுசுவை உணவு வேண்டும் என்று நினைப் பவன் போகி அதனால் தான் அவன் எப்போதும் தோல்வியடைகிறான் என்றவர். " என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1936. சத்தமுஞ் சத்த மனமும் மனக்கருத்**
**தொத்தறி கின்ற விடமும் அறிகிலர்**
**மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு**
**அத்தன் இருப்பிடமும் அவ்விடந் தானே.**

“ சிவனடியார்களே, கண், நாக்கு, மூக்கு, செவி, மெய் என்னும் அறிதற் கருவிகள் ஐந்தும் சத்தம் என்ற சொல்லால் பெறப்படும். அவ் ஓசையை வெளிப் படுத்தத் துணை செய்யும் மனமும், அம்மனக் கருத்தை தந்து அறிகின்ற புலன்களும் எவ்வாறு ஒத்து இயங்குகின்றன, அவற்றை யார் இயக்குகிறார்கள் என்றும் உண்மையை உணராதவர்கள் அறிவிலிகள். சிவனின் அருளால் தான் இவை இயங்குகின்றன என அறிந்தவர்களுக்குச் சிவன் அவ்வறிவாகவே வீற்றிருந்து அருள்வான். அதுவே அவனது தூய இருக்கையாகும். எந்த ஒரு செயலும் சிவனருளால் தான் நடை பெறுகின்றது என்று எண்ணுவோரின் அறிவினுள் அறிவாக இருந்து சிவன் அருளுவான். ஒரு மாணவன் தான் கற்க உதவுவது சிவன் என்றும் அவனருளால் தான் நான் கற்கிறேன் என்றும் நினைத்தானேயானால் சிவன் அவனது அறிவை இருப்பிடமாகக் கொண்டு அங்கு கோவில் கொண்டு அருள்வான். அதனால் அவன் படிக்கும் போது பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்களைத் தெரிவு சொய்து படிப்பான். அதற்குச் சிவன் உதவி செய்வான் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1937. உரமடி மேதினி யுந்தியி லப்பாம்**
**விரவிய தன்முலை மேவிக்கீ ழுங்கி**
**கருமுலை மீமிசை கைக்கீழிற் காலாம்**
**விரவிய கந்தர மேல்வெளி யாமே.**

“ சிவனடியார்களே, எமது உடல் ஐம்பூதங்களின் செயற்கையாகும். எம்மைத் தாங்குவது பாதமான நிலம். பாதத்தில் இருந்து கொப்பூழ் வரை நீராகும். கொப்பூழில் இருந்து மார்பு வரை தீயாகும். மார்பிலிருந்து தோள் வரை காற்றாகும் கழுத்துக்கு மேல்வானமாகும். இவ்வாறு உடலில் ஐம்பூதங்களும் பொருந்தி நிற்கின்றன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 22 ஆதித்தநிலை
## ஆண்டாதித்தன்

**1938. செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கள்**
**மஞ்சுடை மேரு வலம்வரு காரணம்**
**எஞ்சுட ரீசன் இறைவன் இணையடி**
**தன்சுட ராக வணங்குந் தவமே.**

‘‘ சிவனடியார்களே, சூரியனும் அதன் ஒளியினைப் பெற்று ஒளிரும் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலிய கோள்களும் ஏனைய விண்மீன்களும், வானவர்களும் மேகம்தழுவும் பொன் மாலையாகிய பனிமலையினைத் தினமும் வலம் வருவார்கள். அதற்குக் காரணம் தமக்கு ஒளியைத் தருபவர் சிவபெருமான் என்பதற் கேயாம். அதனால் அப்பொன் மலைக்கு மேலேயுள்ள வெள்ளி மலையின் மீது வீற்றிருந்து அருளும் சிவபெருமானின் திருவடியைத் தினமும் வலம் வந்து போற்றி வணங்குவர். ’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1939. பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்**
**பகலவ னாய்நின்ற புண்ணிய நாதன்**
**இகலற ஏழுல கும்முற வோங்கும்**
**பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே.**[1]

‘‘ சிவனடியார்களே, பகலவனான சூரியன் சிவபெருமானிடம் ஒளியை இரவலாகப் பெற்று ஒளியை உலகிற்கு அளிக்கிறான். அவன் எல்லா உயிர்களுக்கும் புகலிடமாக நின்று விளங்குபவன். அவனே புண்ணிய முதல்வன். ஏழு உலகங்களையும் எவ் வகையான மாறு பாடுகளுமின்றி அனைத்துயிர்களும் சிறப்பாக வாழ அறிவுப் பேரொளியைத் தருபவன். அவனைச் சிவஞாயிறு என்றும் சிவ சூரியன் என்றும் கூறுவர். இச்சிவனே அனைத்து உயிர்களுக்கும் ஆதி காரணன் ஆவான். சிவம் சூரியனாகத் தோன்றுவ தால் தான் சூரியன், நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், சூரியன் என்ற வகையில் ஏழாவதாக நிற்கின்றனன். அதனால் தெய்வ வடிவங்களில் மிகவும் சிறப்புப் பெற்றவனாகச் சூரியன் விளங்குகின்றான். அதனால் அவன் பலர் புகழ் ஞாயிறு என்று சிறப்மிக்கப் படுகின்றனன் காலையில் தோன்றும் இளஞ் சூரியன் சிவமுருகனாகவும், பகல் முக் கூறு திருமாலாகவும், மாலைச் சூரியன் வளர் சிவனாகவும் சிறப் பித்துக் கூறப்படுகிறான். ’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1940. ஆதித்தன் அன்பினோ டாயிர நாமமுஞ்**
**சோதியி னுள்ளே சுடரொளி யாய்நிற்கும்**
**வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்**
**ஆதியில் அன்பு பழுக்கின்ற வாறே.**

‘‘ சிவனடியார்களே, ஆதித்தனாகிய சிவஞாயிற்றினைச் சோதியாகிய உலகஞாயிறு ஆயிரம் திருப் பெயர்களை வாயாரப் புகழ்ந்து வழிபட அந்த ஞாயிற்றுனுள் சிவன் சுட ரொளியாக விளங்குகின்றான். அச் சிவனின் திருப் பெயரை மறையவராயினும் வானவராயினும் அன்போடு ஒதி வந்தால் சிவனது அன்பு செழிந்துப் பழுக்கும் சிவனது திருப் பெயர் நமசிவய என்பதாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1941. தானே யுலகுக்குத் தத்துவ னாய்நிற்குந்**
**தானே யுலகுக்குத் தையலு மாய்நிற்குந்**
**தானே யுலகுக்குச் சம்புவு மாய்நிற்குந்**
**தானே யுலகுக்குத் தண்சுட ராகுமே.**

“ சிவனடியார்களே, சிவபெருமான் தான் உலகிற்கு என்றும் மெய்ப் பொருளானவன். அவன் உலகத்தை இயக்குவதற்காகத் தையலாகிய திருவருளம்மை யோடு திருவருளாக நிற்பவன். அவன் ஆருயிர்களுக்கு இன்பத்தை யருளும் சம்புவமாய் நிற்பவன். அதனால் தான் சம்புவமானசக்தி ஆருயிர்களுக்கு இன்பத்தை அருள்கிறது. அவனே தண் சுடராகிய திருவருட் பேரொளியாக நிற்பவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1942. வலையமுக் கோணம் வட்டம் அறுகோணந்**
**துலையிரு வட்டந்துய்ய விதமெட்டில்**
**அலையுற்ற வட்டத்தில் ஈரெட் டிதழாம்**
**அலைவற் றுதித்தனன் ஆதித்த னாமே.**

“ சிவனடியார்களே, வளையம், முக்கோணம், வட்டம், அறுகோணம், துலை, இருவட்டம் ஆகிய ஆறு வகையான அடையாளங்களால் மூலமுதல் ஆறிடங்களுள் அவற்றின் துய்ய தன்மையை ஆராயின் சுழன்று கொண்டிருக்கும் வட்டத்தில் பதினாறு இதழ்த் தாமரை காணப் பெறும். அதன் கண் நெஞ்சில் செவ்விதாக ஞாயிறு தோன்றும். இதுவே விசுத்தியில் சூரியன் உதிக்கும் முறையாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1943. ஆதித்த னுள்ளி லானமுக் கோணத்திற்**
**சோதித் திலங்குநற் சூரிய னாலாங்**
**கேத முறுங்கேணி சூரிய னெட்டிற்**
**சோதிதன் னீரெட்டற் சோடசந் தானே.**

“ சிவனடியார்களே, ஞாயிற்றுக் குரிய நிலைக்களனாகிய முக்கோணத்தில் யாவற்றையும் விளக்கித் திகழ்கின்றவன் பகலவன். பகலவன் என்பதும் சூரியன் என்பதும் ஒன்றாகும். அவனது நாலாவது கால் குற்றம் தரும் கேணி போன்றதாகும். பகலவனுக்குரியவை எட்டிதழ்த் தாமரை, பதினாறு இதழ்த் தாமரை யாகும். குற்றம் தரும் கேணி என்பது திங்களின் நாலாம் கால் இறங்குத் தன்மையால் நேர்வது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1944. ஆதித்த னோடே அவனி [1]யிருண்டது**
**பேதித்த நாலும் பிதற்றிக் கழிந்தது**
**சோதிக்குள் நின்று துடியிடை செய்கின்ற**
**வேதப் பொருளை விளங்குகி லீர்நீரே.**

“ சிவனடியார்களே, சூரியன் ஒளி தராவிட்டால் உலகம் இருள் மயமாகவே இருக்கும் எழுத்தோசை நான்கும் பதற்றிக் கழியும். இயற்கைப் பேரொளியாகிய சிவத்துடன் வேறறக் கலந்து நிற்கும் திருவருள் பேராற்றவான திருவருள் அம்மை செய்தருளும் மறை பொருளை உலகோர் உணரமாட்டார்கள். உலகில் எதுவும் நடைபெற மாட்டாது தாவரங்கள் அழிந்து போய் விடும். உலக இயக்கமானது சூரியனது ஒளியிலேயே தங்கியுள்ளது அதனால் ஆதிபகவன் முதற்றேயுலகு என்று வள்ளுவர் சொல்கிறார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1945. பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி**
**யாருக்குங் காணவொண் ணாத அரும்பொருள்**
**நீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவன்**
**ஆருக்கும் எட்டாதவ் வாதித்தன் தானே.**

“ சிவனடியார்களே, மண்ணின் இயைபான வித்து நிலைக்குக் கீழே உள்ளது ஞாயிறு வரும் வழியாகும். அதைத் திருவருளின் துணையில்லாது காண முடியாது. நீர் நிலையாகிய மேல் வயிற்றிற்கும் தீ நிலையாகிய நெஞ்சிற்கும் நடுவே ஞாயிறு தோன்றும். அந்த ஞாயிறு தம்முணர்வு முனைப்பால் ஆராய்வார் எவருக்கும் எட்டாத அரும் பொருளாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1946. மண்ணை யிடந்ததின் கீழொடும் ஆதித்தன்**
**விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடுங்**
**கண்ணை யிடந்து களிதந்த வானந்தம்**
**எண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே.**

“ சிவனடியார்களே, நிலவுலகம் உருண்டையானது. அது உருண்டு ஞாயிற்றைச் சுற்றி வருகிறது. உலகம் தானாகச் சுற்றுவதற்கு ஒரு பகலும் ஓர் இரவுமாக ஒரு நாளாகிறது. பூமி ஞாயிற்றைச் சுற்றிவர முன்னூற்று அறுபத்தைத்தேகால் நாட்கள் செல்கின்றன. இது ஒரு வருடமாகும். இரவுப் பொழுது வரும் போது சூரியன் நிலத்தைப் பிளந்து கொண்டு போவது போல எமக்குத் தோன்றும். அங்ஙனம் மண்ணைப் பிளந்து ஓடும் ஞாயிறானது விண்ணின் மீது தன்னையும் பொருள்களையும் தனது கதிரால் விளக்கி நிற்கும். அக்கதிகளால் ஆருயின் கண்கள் விளக்கமுறும். அப்பொழுது ஆருயிர்கள் கண்டும் இன்புற்றுக் களிக்கின்றன. அத்துடன் தன்னை அகம் தழுவி நிற்பதாகிய தியானத்திற்கும் உரிமை கொடுத்தருள்கின்றனன். இந்தியான உரிமையே எண்ணும் கிழமை என்று சொல்லப்படுகிறது ”

“ சிவனடியார்களே, நல்லை நாதனிடம் இரவு பத்து மணிக்கு வந்த அவனது நண்பன் கெங்காதரம் சொன்னான், “ நல்லை, இதை வலம்புரிச்சங்கு என்று ஒருவன் தந்தான். அவனை எனக்குத் தெரியாது. வலம்புரிச்சங்கானால் வாங்கிக் கோவிலுக்குக் கொடுக்கலாம். இதைப் பார் என்றான். அதற்கு நல்லை நாதன் சொன்னான், “வலம் புரிச்

சங்கைப் பகலில் தான் பார்த்து வாங்குதல் வேண்டும். இரவிலும் வேறு வெளிச்சங்களிலும் பார்த்து வாங்க முடியாது. வலம்புரிச்சங்கில் அகிய ஒளிபட்டால் மாறுதல்கள் உண்டாகும். அதுவேறு வெளிச்சங்களுக்குத் தெரியாது. சில பொருட்களின் உண்மைத் தன்மையைச் சூரிய ஒளி மூலம் தான் அறியலாம். சூரியகாந்தக்கல்லில் உள்ள நிறங்களை சூரிய ஒளி பட்டால் தான் தெரியும். அதுபோல உயிரினங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் கூடிக்களிக்கவும் சூரிய ஒளி தேவை. முக்கியமாக மிருகங்கள் பறவைகள் பகலில் தான் கூடிக்களிக்கின்றன. அதனால் அவனைக் காலையில் வரச் சொல் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1947. பாரை யிடந்து பகலோன் வரும்வழி**
**யாரும் அறியார் அருங்கடை நூலவர்**
**தீரன் இருந்த திருமலை சூழென்பர்**
**ஊரை யுணர்ந்தார் உணர்ந்திருந் தார்களே.**

‘‘ சிவனடியார்களே, உலகம் சூரியனைச் சுற்றி வருகிறது. ஆனால் பலர் சூரியன் தான் உலகைச் சுற்றி வருவதாகக் கூறுகின்றனர். அவர்கள் உண்மையை உணராதவராவர். அவ் உண்மையை நுண்ணறிவுடையவர்களே உணர்வார்கள். மெய்யறிவில்லாத அறிவிலிகள் மெய் உணர்வில்லாதவர்கள் எழுதிய நூல்களை உயர்ந்தனவாகக் கருதிச் சிலர் சூரியன் தான் பூமியைச் சுற்றி வருகின்றது கூறுகின்றனர். ’’

‘‘ சிவனடியார்களே, செழியன் பெரிய சமயப் பிரசங்கி பல் வேறுவகையான தொண்டுகள் செய்பவர். ஆசிரியர். அவரது உதவியாளர்கள் இருவர் ரவீந்திரனிடம் வந்து சொன்னார்கள், “ஐயா, செழியனைப் பற்றி உங்களுக்குத் தெரியும்” என்ற போது ரவீந்திரன் கேட்டார், ‘‘ யார் அவர்? எனக்குத் தெரியாது ’’ என்ற போது வந்தவர் ஆச்சரியப்பட்டார், ‘‘அவரைத் தெரியாதவர்கள் உலகில் இல்லை. உங்களுக்குத் தெரியாது என்றால் எம்மால் நம்பமுடியவில்லை. பெருங் கொடையாளர். சமயம் பிரசங்கம் செய்பவர். அம்மன் கோவில் முதலாளி’’ என்றபோது ரவீந்திரன் சொன்னார், ‘‘ எனக்கு அவரைத் தெரியாது. வந்த விடயத்தைச் சொல்லுங்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது ’’ வந்தவர் சொன்னர், ‘‘ அவர் ஒரு நூல் எழுதியுள்ளார். அதற்கொரு வாழ்த் துரை தேவை’’ என்ற போது ரவீந்திரன் சொன்னர், ‘‘நூலின் பிரதியைத் தாருங்கள் ’’ என்றபோது வந்தவர் சொன்னார், ‘‘அவர் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். அவரின் நூலை வாசிக்காமலே படித்தவர்கள் விமர்சனங்கள் தந்து அவ்அவ் நூல்களில் சேர்த்துள்ளோம்’’ என்றபோது ரவீந்திரன் சொன்னார், ‘‘ நூல் முழுமையாக வாசியாது விமர்சனம் செய்ய முடியாது. உண்மையான கருத்தை உணராதவர் விமர்சனம் செய்வதால் தான் மக்கள் தவறான கருத்துக்களை உண்மையென்று நினைக்கின்றனர். தாழ்ந்த நிலையினர் எழுதிய பல நூல்களுக்குக் கல்வியறிவு மிக்கவர்கள் என்று சொல்வோர் வாசிக்காது கொடுக்கும் அணிந்துரைகள் மக்களைத் தவறாக வழி நடந்து கின்றன என்றவர் ’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1948. நின்றும் இருந்துங் கிடந்தும் நடந்தும்**
**கன்றாய நந்திக் கருத்துள் இருந்தனன்**
**கொன்று மலங்கள் குழல்வழி யோடி**
**வென்று விளங்கும் விரிசுடர் காணுமே.**

‘‘ சிவனடியார்களே, உயிர்கள் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும் சிவன் அவர்களது உள்ளத்தை விட்டு அகலாது அறிவுள் நின்று அருள்புரிவன். அதனால் மலங்கள் அடங்கும். சூரியனது ஒளி நடுநாடி வழியாகச் சென்று பரவும். அவ்வொளி எல்லா விளக்கொளிகளையும் விஞ்சி மிக்கு விளங்கி ஒளிரும். இவ்வொளியை அக ஞாயிறு என்பர்.

‘‘ சிவனடியார்களே, வந்தவர்களில் ஒருவர் சொன்னார், ‘‘எங்களது செழியன் சக்தி வாய்ந்தவர். செல்வாக்கு மிகுந்தவர். பெரும் புகழுள்ளவர். நீர் அதிகாரியாக இருப்பதால் உம்மை மேம்படுத்து வதற்காக ஒரு சந்தர்ப் பத்தைத் தந்துள்ளார்” என்றபோது ரவீந்திரன் சொன்னார், ‘‘என்னை மேம்படுத்தச் சிவன் இருக்கிறான். அவன் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வன். உயிர்கள் என்ன தொழில் செய்தாலும், செய்யாது விட்டாலும் சிவன் உயிரோடு கலந்து நின்று கருமமாற்ற வைப்பன். இது உங்கள் பிரசங்கிக்குத் தெரியாதா? ஏதோ தான்தான் சமயத்தை வளர்ப்பதாகக் கூறிக் கொள்கிறார். எப்படி வளர்க்கிறார் என்று ஊருக்குத் தெரியும். உண்மையில் சிவபக்தராக இருத்தால் மலம் அடங்கி இருக்கும் எனக்குத்தான் எல்லாம் தெரியும். என்னால் தான் எல்லாம் சொய்ய முடியும் என்று நினைப்பவன் எதுவும் தெரியாதவன். எதுவும் தெரியா தவன் எழுதுவதை வேதவாக்கென்று சிலா் கூறுவது பணத்திற்காக அல்லது புகழுக்காக. அதற்காக பணத்தைச் செலவு செய்வதும் பதவிகள் காரணமாக எல்லாம் அறிந்தவன் என்றும் நினைப்பவன் பதவிக் காலம் முடிந்ததும் மரணமானவனுக்குச் சமமாவான். அது போலக் காசுகொடுத்து வாங்கிய புகழும் மெய்யறிவை வளர்க்காத எழுத்தும் உண்ட உணவு உண்டபின் கழிவாவது போலக் கழிவாகி விடும் பின் அதை யாரும் மதிக்கமாட்டார்கள் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1949. ஆதித்தன் ஓடி யடங்கும் இடங்கண்டு**
**சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்**
**பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெல்லாம்**
**ஆதித்த னோடே யடங்குகின் றாரே.**

‘‘ சிவனடியார்களே, ரவீந்திரன் சொன்னான், ‘‘புகழ் தகுதியின் காரண மாகவரல் வோண்டும். பணம் உழைப்பின் காரணமாக வரவேண்டும். புகழைப் பணத்தின் மூலமும், பணத்தைக் குறுக்கு வழிகள் முலமும் சேர்ந்தால் அது சேர்த்துச் சில நாட்களின்பின் விட்டுச் சென்று விடும். உயிர்ப்பானது பிங்கலை வழியாக ஒடி நடுடியுள்ப் புகும். அப்படிப் புகும் போது உண்டாகும் அகவொளி ஞாயிறு எனப்படும். அவ்வொளியை உணர்ந்து அந்நிலையில் நிற்க ல்லவர்களே தம்மை உணர்ந்தவராவர். அதாவது காலக் கணக்கைக் கூட்டிக் கொள்ளும் ஆற்றலைத் திருவருளால் உடையவராதல். அவ்வழியை அறியாதவர்கள் வீண்பிதற்றல்களைப் பிதற்றிக் கொண்டு திரிவர். இந்நிலை அவர் இறக்கும் வரையும் தொடரும். தன் வாழ் நாளையும் பேரும் புகழையும் நூல் அறிவையும் ஞாயிற்றைக்

கொண்டு அளப்பவரே ஞாயிறுபோல நிலைத்து வாழ்வர். அவர்களது புகழும் நிலைக்கும். இதிலிருந்து முன்வாழ்ந்த வர்களைப் பற்றியும் இப்போது வாழ்பவர்களைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள் என்றார். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1950. உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து**
**சொருகிக் கிடக்குந் துறையறி வாரில்லை**
**சொருகிக் கிடக்குந் துறையறி வாளர்க்கு**
**உருகிக் கிடக்குமென் னுள்ளன்பு [3]தானே.**

'' சிவனடியார்களே, ரவீந்திரன் வந்தவர்களுக்குச் சொன்னான், '' திரு நீற்றுப் பூச்சும், காவி அல்லது வெள்ளை உடையும் உருத்திகாக்கமும், பேசியதைப் பேசுவதும் சிவன் மீது உள்ளன்பு செய்வதாக அமையாது. பேசுவதற்கு ஆயிரக்கணக்கான தகவல்கள் உண்டு உதராணமாகத் திருமூலர் எத்தனையோ சமய விசயங்களைக் கூறியுள்ளார். பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உடலைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் சிவனைப் பற்றியும் கூறியுள்ளார். அவை பாமர மக்களுக்கு புரிவதில்லை. அவற்றைப் புரியவையுங்கள். யாரும் எழுதியதை எழுதாதீர்கள். நாயன்மார்களின் வரலாறு பாடசாலைகளில் கற்பிக்கப் படுகிறது. அதை அப்படியே பேசினால் யார் கேட்பார்கள்? புதிய வற்றைப் பேசுங்கள். மக்ககள் கேட்பதற்கு வருவார்கள். புதியவற்றை எழுதுங்கள் மக்கள் வாசிப் பார்கள். வாசிப்புப் பழக்கம் அற்றுப் போனதற்கு அது தான் காரணம். அகத்தவ முயற்சியால் உயிர்ப் பினை நடு நாடி வழியாகச் செலுத்தி அகவொளியைக் கண்டவர், அக்காட்சியால் பல அண்டங்களும் ஒன்றோடு ஒன்று நெருங்கிச் சுழன்று கொண்டிருக்கும் நிலையை உணர்வர். அங்ஙனம் உணர்ந்து கொண்டால் உள்ளன்பு நெகிழ்ந்து அரனின் கழல் செல்லும். அதனால் இன்புறும் நிலை உண்டாகும். இது தான் உள்ளன்பு நிலை. வெளி வேடங்கள் எதற்கும் உதவாது. பிறவிகளை அது அதிகரிக்கும் என்றவர். '' என்றார் சுந்தரத மூர்த்தி சுவாமிகள்.

**மனவாதித்தன்**

**1951. எறிகதிர் ஞாயிறு மின்பனி சோரும்**
**எறிகதிர் சோமன் எதிர்நின் றெறிப்ப**
**விரிகதி ருள்ளே வியங்குமென் ஆவி**
**ஒருகதி ராகில் உவாவது வாமே.**

'' சிவனடியார்களே, வெப்பமான கதிர்களை வீசும் சூரியனும், குளிர்மையான கதிர்களை வீசும் சந்திரனும் மேல் கீழாக நேர் ஒக்கத் தோன்றும் போது உவா எனப்படும். உவாக் காலமென்பது பௌர்ணமியாகும். இதை என்றோ திருமூலர் கூறி விட்டார். அவர் கூறிப்

பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்பு தான் பிற நாட்டவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைத்தான் எம்மவரும் நம்புவது கொடுமையான விடயமாகும். பூரணை நாளில் விரிந்து எறிக்கும் கதிரால் ஆருயிர்கள் இயங்கா திருக்கும் '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1952. சந்திரன் சூரியன் தான்வரிற் பூசனை**
**முந்திய பானுவில் இந்துவந் தேய்முறை**
**அந்த இரண்டும் உபய நிலத்திற்**
**சிந்தை தெளிந்தார் சிவமாயி னார்களே.**

'' சிவனடியார்களே, ரவீந்திரன் வந்தவர்களுக்கு சொன்னான், '' நீங்கள் செழியனின் அருள் நிலையைப் பற்றிச் சொன்னீர்கள். இப்போ பலர் தமக்குத் தாமேபட்டம் சூட்டிக் கொள்கின்றனர். அந்தப்பட்டங்களின் அர்த்தம் என்ன வென்று கூடச் சூட்டுபவர்களுக்குத் தெரியாது. காசு கொடுத்தால் விருதுகளை வாங்கலாம். பட்டம் சூட்டுவார்கள். சந்திரகலை என்று சொல்லப் படும் இடகலையும், சூரியகலை என்று சொல்லப் படும் வட பால்கலையும் முறையாக இயங்கிக் கொண்டிருப்பின் நற்தவமான சிவபூசைக்கு உகந்த நாளாகும். சூரியகலையின் கண் சந்திர கலை பொருந்தி வரும்போது அது பூசனைப் பொழுதாகும். அக்கலை நடு நாடிவழியாகச் செல்லும் போது மனம் தெளிவடையும். இவர்கள் தான் சித்தம் சிவமாக்கப் பட்டவர்கள். இவர்களைத் தவிர்ந்த ஏனையோர் வேடங்களால் தம்மைச் சித்தம் தெளிந்தவர்களாகக் காட்டிக் கொள்பவர்கள். ஊரறிந்த பிராமணனுக்குப் பூநூல் தேவையில்ல. நல்ல நூல்களுக்கு விளம்பரம் தேவையில்லை. மல்லிகை தோட்டத்திற்கு வண்டுகள் தேடி வரும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1953. ஆகுங் கலையோ டருக்கன் அனல்மதி**
**ஆகுங் கலையிடை நான்கென லாமென்பார்**
**ஆகும் அருக்கன் அனல்மதி யோடொன்ற**
**ஆகுமப் பூரணை யாமென் றறியுமே.**

'' சிவனடியார்களே, பிங்கலையாகிய வலப்பால் உயிர்ப்பு எனப் படும் ஞாயிறும், அனலாகிய தீயும் திங்களாகிய இடப் பால் உயிர்ப்பும், கலை எனப் படும் நடு நாடியும் ஆகிய நான்கும் கலை என்று அழைக்கப்படும். வலப்பால் உயிர்ப்பும், மூலத்தீயும், இடம் பால் உயிர்ப்பும் நாடியின் கண் கூடிப் பொருந்தினால் நிறை நிலா நாள் ஆகும். அகத்தே காணும் நிறை நிலா என்பது திங்கள் அமிழ்தத் தீஞ்சுவை வெண்ணிலா. ஆகும் இதற்கான இடம் நெற்றில் புருவமாகும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1954. ஈரண்டத் தப்பால் இயங்கிய வவ்வொளி**
**ஓரண்டுத் தார்க்கும் உணரா வுணர்வது**
**பேரண்டத் தூடே பிறங்கொளி யாய்நின்ற**

**தூரண்டத் தக்கா ரறியத்தக [1]காரே**

“ சிவனடியார்களே, ஈரண்ட மாகிய அனலும் கதிரும் உள்ள நிலைக்கனங்களுக்கு மேலாக விளங்கும் அந் நிலவொளி புறத்தே காணப்படும் எவ்வகை அண்டத்தவர்களும் அறிதற்கு அரிதானதாகும். அது அறிவுப் பிழம்பாக நிற்பது. அது பெரிய அண்டந்தூடே ஒளிர்ந்து திகழும் பேரொளியாக உள்ளது. சிவபெருமானது திருவருளால் அவ்வொளியை நெருங்கத் தக்க தவமுடையவர் யாரும் இல்லை. அப்படியறியத்தக்கவரே அறியத்தக்கவராவர். இது சிவன் சந்திரனை அணிந்த மெய்மையை விளக்குவதாகும். இது ஆருயிர்களின் அறிவினைத் தினமும் வளர்க்கும். திங்களை அணிந்திருப்பது எல்லா உயிர்களுக்கும் இறவா இன்பச்சிறப்பறிவை வழங்குவதற்கே ஆகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1955. ஒன்பதின் மேவி யுலகம் வலம்லரும்**
**ஒன்பது மீசன் இயலறி வாரில்லை**
**முன்பதின் மேவி முதல்வன் அருளிலார்**
**இன்ப மிலாரிருள் சூழநின் [2]றாரே.**

“ சிவனடியார்களே, கோள்கள் ஒன்பதும் சிவபெருமானின் ஆணைப்படி இயங்குவனவாகும். இவ்வுண்மையை அறிந்தவர்கள் ஒருவரும் இலரென்றே கூறலாம். அவ் ஒன்பது கோள்களும் தனித்தனிப் பேராற்றல் உடையவை என மயங்கும் படி செய்து விட்டனர். அவை பேராற்றலுள்ள முதன்மைப் பொருள்களல்ல. இதை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே வேதாகமங்கள் அறுதியிட்டுக் கூறிவிட்டன. பின் வந்த நாயன் மார்களும் கூறியுள்ளனர். ஒன்பது கிரகங்களையும் இயக்குபவன் சிவன். அவன் உள் நின்று இயக்கா விடில் அவை இயங்கா. அவனே முழு முதல்வன். அதனால் சிவனை வணங்கி அவன் அருள் பெற்று வாழுங்கள்”

“ சிவனடியார்களே, நல்லை நாதன் கதிரேசனிடம் வந்து சொன்னார், “எனக்கு இப்பொழுது ஏழரைச் சனி ஆரம்பமாகி இருக்கிறது. இது முன்றாவது சனி. அதை மரணச் சனி என்பர். இதனால் எனக்கு ஏதாவது தீமைவருமா? நான் இறந்து விடுவேனா….?” அதற்குக் கதிரேசன் சொன்னார், “எந்தக்கிரகத்திற்கும் எந்த விதமான சக்தியும் இல்லை. அவை சிவபெருமானின் ஆணைப்படி இயங்குகின்றன உயிர்கள் வினைக்கீடாகவே உடலைப் பெறுகின்றன. உயிரைக்கருப்பையில் வைக்கும் போதே சிவபெருமான் அதற்கான செயற்பாடுகளையும் வைத்து விடுவான். அதன் படி தான் உயிர்களின் வாழ்க்கை நடை பெறும். அதில் மாறுபாடு சொய்ய வேண்டுமனால் சிவனை வணங்குதல் வேண்டும். சிவனை மெய்யன்புடன் வணங்கினால் சிவனால் வகுக்கப்பட்ட விதியைச் சிவன் மாற்றியருள்வார். இது நாயன்மார்களது வரலாற்றில் இருந்து நீ அறியவில்லையா? மனித உடலை உயிர் பெறுவது சிவனை அடையவே. சிவனை அடைந்தால் பிறப்பில்லை. பிறப்பில்லா விட்டால் துன்பமில்லை. முன்னோர் சிலர் இவற்றை அறியாது கிரகங்களுக்கு முதன்மை கொடுத்தது விட்டனர். அதைச் சாதாரன அறிவு படைத்த

மக்களும் நம்புகிறார்கள். பரிகாரங்கள் செய்கிறார்கள். இவற்றால் பயனேற்பட மாட்டது கிரகங்கள் கொடுக்கும் சக்தியற்றன. அவை சிவனிட மிருந்தே சக்தியைப் பெறுகின்றன. அதனால் கிரகங்களை இரப்பதை விடுத்துக் சிவனை இரப்பது தான் உய்யும் வழி. மரணம் எனபது கருவாக இருக்கும் போதே நிட்சயிக்கப்பட்டது. அதைப் பற்றிக் கவலை கொள்ளாது உனது வேலைகளைப்பார் என்றவர். ” சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1956. விந்து அபரம் பரமிரண் டாய்விரிந்து**
**அந்த அபரம் பரநாத மாகிய**
**வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத்து**
**உந்தும் அருணோ தயமென்ன வுள்ளத்தே.**

“ சிவனடியார்களே, விந்து என்ற தூமாயை இருவகைப்படும். அவை கீழ் நிலை விந்து, மேல் நிலை விந்து. இவற்றை முறையே பரவிந்து அபர விந்து எனக் கூறுவர். அபரவிந்து பரநாதமாகத் தோன்றும். அதிலிருந்து திருவருள் ஐவகைக் கலையாகத் தோற்ற முற்றது. அவை முறையே நீக்கி, நிலைப்பி, நுகர்வி, அமைப்பி, அழுத்தி என்பனவாகும் இவற்றை முறையே நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை எனப்படும் இக்கலைகளி னூடாகச் சிவ பெருமான் தூண்டித் தொழிற்படுத்துவன். இந்நிலை தான் ஆருயிர்களின் அகத்தில் தோன்றும் சிவசூரியனாகும். அது தான் அருணோ தயமாகும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1957. உள்ள அருணோ தயத்தெழும் ஓசைதான்**
**தெள்ளும் பரநாதத் தின்செய லென்பதால்**
**வள்ளல் பரவிந்து [1]வைகரி யாதிவாக்கு**
**உள்ளன [2]ஐங்கலைக் கொன்றாம் உதயமே.**

“ சிவனடியார்களே, ஞான ஆதித்தன் என்பது அறிவுச் சுடர். இவ் அறிவுச் சுடர் மூலத்திடமாக நின்று ஒசை வடிவாகத்தோன்றும். அவ் ஒசை மேல் நிலை நாதத்தின் செயலாகும். நாத வடிவின் நிறம் செம்மையாகும். அதனால் தான் அருமை என்றனர். இவை சிவபெருமானால் நிகழ்த்தப் படுவன. இவ் மேல் நிலை விந்துவிலிருந்து செவியோசை முதலிய ஒசைகள் தோன்றும். அது போல ஐங்கலைகளும் தோன்றும். இவ் ஒசைகள் நான்கும் ஐங்கலைகளுக்கு உட்பட்டன. அவை ஐந்துவகையாகக் குறிக்கப் பெற்றன . அவை நுண்ணோசை, நினைவோசை, மிடற்றோசை, தன் செவிக்குக் கேட்கும் ஒசை, என்பனவாகும் இவற்றை முறையே சூக்குமை, பைசத்தி, மத்தின்மை, வைகரிசு, வைகரி எனப்படும் வைகரி என்பது தன் செவிக்கு மட்டும் கேட்பது. வைகரி என்பது பிறரது செவிக்கும் கேட்பது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1958. தேவர் பிரான்திசை பத்துத யஞ்செய்யும்**
**மூவர் பிரானென முன்னொரு காலத்து**
**நால்வர் பிரான்நடு வாயுரை யாநிற்கும்**
**மேவு பிரான்என்பர் விண்ணவர் தாமே**[1]

“ சிவனடியார்களே, சிவபெருமானே தேவர்களில் இருந்து சகல உயிரினங்களுக்கும் முதல்வன். அவனின் அருளாலே தான் பத்துத்திக்கிலும் பொருட்கள் யாவும் தோற்று விக்கப்பட்டன. அதற்கு இயற்றுதல் கருத்தாவாக நிற்பவர்கள் மூவர்கள். அவர்கள் சிவனது திருவாணைப்படி தான் செயலாற்றுகின்றனர். இவர்களால் எதையும் செய்ய முடியாது. ஏனெனில் இவர்கள் முக்குணத்தால் படைக்கப்பட்ட உயிர்களாவர். இவர்கள் அயன் அரி அரன் என அழைக்கப்படுவர். இவர்கள் மூலப் பகுதிக்கு உட்பட்டவர்கள். இவர்களுக்குக் கண்காணியாக நின்று தொழிற் படுத்துவோர் மூவர் உளர். அவர்களும் உயிரினத் தவரேயாவர். இவர்கள் தூமாயையில் உறைந்திருக்கிறார்கள். எனினும் கட்டு நீங்கிய சிறப்பு உயிரினத்தவராவர். இவர்கள் தூமாயையின் கண்ணுள்ள காணப்படும் முப்பத்திரண்டாம் மெய்யாகிய ஆசான் மெய் ஆகும். இம் மூவரும் அயன் அரி அரன் என்னும் காரணத் தொழிற் பெயரைப் பெற்றவர்கள். இது போலவே ஆண்டானும் இவர்கள் நால் வருக்கும் முதல் வன்சிவனென்று தெரிந்த மண்ணாவரும் விண்ணவரும் அவனையே வணங்கி நிற்பர் ”

“ சிவனடியார்களே, கதிரேசன் கோள்களால் எதுவும் செய்ய முடியாதென்று கூறிய பின்பும் நல்லைநாதனது மனம் அமைதியடைய வில்லை. அவரது மூத்த மகளின் மகள் கர்ப்பமாக இருப்பதால் அவளது குழந்தையைப் பார்த்த பின் தனக்கு இறப்பு வர வோண்டு மென்று சிவனைத் துதிப்பவர். அது தெரிந்த கதிரேசன் சொன்னார், “மரணத்தைத் தடுத்து நிறுத்தும் தன்மையோ அல்லது மரணத்தைக் கொடுக்கும் ஆணையோ கோள்களிடம் இல்லை. நீ திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவன். சென்ற வருடம் குரு ஒன்பதில் இருந்தால் பெரும் பெரும் நன்மைகள் வருமென்று சோதிடம் கூறுகிறது. அது உனக்கு நடந்ததா? கோடியில் ஒருவருக்கு நடக்கும். எல்லாம் விதிப்படி நடக்கும். கவலையை விட்டு விட்டுச் சிவனிடம் யாவற்றையும் ஒப்படைத்து விட்டு வாழ். எனக்கு மரணச் சனி கழிந்து பத்து வருட மாகிறது எதுவும் நடக்கவில்லை என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1959. பொய்யிலன் மெய்யன் புவனா பதியெந்தை**
**மையிருள் நீக்கு மதியங்கி ஞாயிறு**
**செய்யிருள் நீக்குந் திருவுடை நந்தியென்**
**கையிருள் நீங்கக் கலந்தெழுந் தானே.**[1]

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ உன்னைப் போன்ற மயக்கமான புத்தியுடைவர்கள் தான் சிவனை வணங்கிய போதும் சந்தர்ப்ப சூழ் நிலைகளால்

தடுமாறுகிறார்கள். உண்மையென்று வணங்கும் போது நினைப்பவை, பின் அது பொய்யோ எனச் சந்தேகப்படுகின்றனர். அதனால் தான் கிரகங்களையும் தேவதைகளையும் நால்வரையும் நம்புகின்றனர். நீ சிவபக்தன் ஒன்றையே நினை. அதைச் செயற்படுத்து சந்தேகப்படாதே. இருநூற்று இருபத்து நான்கு புவனங்களுக்கும் முதல்வன் சிவபெருமான். அவன் பாழ்ங்கோளர்களாகிய நாத்திகர் கடவுள் இல்லை என்று கூறுபவர்கள் போல இல்லாதவன் அல்ல. இருளை நீக்கும் சூரியன், சந்திரன், தீ என்னும் மூன்றுமாகும். அது போல இருவினைகளையும் நீக்கியருள்பவன் நந்தியெம் பெருமான் அவன். தான் அந்த இருளை நீக்க மெய்யடியார்களது மனதில் உயிருக்குயிராக எழுந்தருளியிருப்பவன். அவனுக்கு யாவும் தெரியும். சிவபக்தனாக இருந்தாலும் வினைப்படி தான் இன்பங்களும் துன்பங்களும் வரும். இன்பம் வரும் போது மகிழும் உயிர்கள் துன்பம் வரும் போது சிவனை மகிழ்வோடு நினைத்தல் வேண்டும். ஆனால் பலர் துன்பம் வரும் போது தன்நம்பிக்கையை இழந்து விடுவதால் தான் துன்பப்படுகின்றனர். நம்பிக்கையுள்ளவன் தளரமாட்டான். துன்பத்தை வைராக்கியத்தால் விரட்டுவான். பிறப்பென்பதே துன்பம். பிறந்தவன் துன்பத்தைக் கடந்தால் தான் இன்பமடைவான். அதற்குத் தடையாக இருப்பது சந்தேகம். நம்பிக்கையின்மை. இவற்றால் மனம் பலவீனப்பட வேண்டாத நினைவுகள் மனதை ஆட்டிப்படைக்கும். அது தான் தற்போதய உனது நிலை. அதை மாற்று என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1960. தனிச்சுட ரெற்றித் தயங்கிருள் நீங்க**
**அனித்திடு மேலை யருங்கனி யூறல்**
**கனிச்சுட ராய்நின்ற கயிலையில் ஈசன்**
**நனிச்சுடர் மேல்கொண்ட வண்ணமு மாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் திருப்தியடையாத நல்லை நாதனுக்குச் சொன்னார், “ சாதாரண பக்தர்கள் உலக இன்பங்களை வேண்டித்தான் சிவனை வணங்குகின்றனர். மெய்யடியார்கள் பிறப்பின் துன்பங்களை அறிந்து பிறப்பை அறுக்கவே சிவனை வணங்குகின்றனர். இருதிறத்தார்க்கும் சிவன் வினையின் படி தான் அருள்வான். மெய்யுணர்வுடையவர்களுக்கு அவர்களின் முன் நேரில் தோன்றியும் அருள்வான். எமக்குத் துன்பங்கள் வருவது வினையை அறுக்க. துன்பத்தின் போது மகிழ்பவனது துன்பம் இன்பமாக மாறி விடும். இதை உனக்குப் பல முறை சொல்லியும் உணர்கிறாய் இல்லை. எல்லாவற்றையும் தன் ஆணைப்படி செய்விப்பவன் சிவன் என்று உணர்பவர்கள் ஒரு போதும் துன்பப்படார். ஒப்பில்லாத சிவன் தனிச்சுடராவன். அவன் மல இருளை நீக்க ஒளி வீசி அருள் செய்வான். அவனே திங்கள் அமிழ்தாகிய அருங்கனி ஊறலை அள்ளித்தருபவன். அவனே முதிர்ந்த பேரொளிப்பிழம்பாக உள்ளவன். அவன் திருக்கைலையில் வீற்றிருக்கும் ஆண்டவன். அவனே எல்லா ஒளிக்கும் ஒளியை அருளும் ஆண்டவன். இதை உணர்ந்தவர்கள் சந்தேகம் கொள்ளமாட்டார்கள். நீ உணரவில்லை. அதனால் சந்தேகப்படுகிறாய். உலகை இயக்கும் சிவன் தனது தொழிலைப்

பல்வேறுபட்டவர்களைக் கொண்டு செய்விக்கிறான். என்று நம்பு. யாவும் நலமாக இருக்கும் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1961. நேரறி வாக நிரம்பிய பேரொளி**
**போரறி யாது புவனங்கள் போய்வருந்**
**தேரறி யாத திசையொளி யாயிடும்**
**ஆரறி வாரிது நாயக மாகுமே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் நல்லை நாதனுக்குச் சொன்னார், ‘‘ நம்பிக்கை வைத்து விட்டுச் சந்தேகப்படுவது மிகுந்த துன்பத்தைத் தரும். ஒருவன் ஒரு பெண் மீது நம்பிக்கை வைத்தான். அவள் இவனை விட உயர்ந்தவனொருவனோடு சென்றால் முதலில் விரும்பியவன் படும் துன்பம் அளவில்லாதது. அது போலச் சிவனை நம்பிய நீ சந்தேகப்படுவதன் மூலம் இவ்வளவு காலமும் சேமித்தவற்றை இழப்பதைப் போன்ற துன்பத்தை அடைந்துள்ளாய். சிவபெருமான் நுண்ணறிவாகவே ஆருயிர்களுடன் ஒன்றித்து நின்று அருள்பவன். இதை உணரலாமே தவிர உயிர்களின் முனைப்பால் அறிந்து கொள்ள முடியாது. சந்தேகப்படுபவன் மற்றவர்களை அல்லத் தன்னையும் நம்பமாட்டான். முதலில் உன்னை நம்பு. உன்னை நீ நம்பினால் உனது எண்ணங்களில் உனக்கு நம்பிக்கை வரும். மரணம் என்பது நிட்சயிக்கப்பட்டது. மெய்யுணர்வுள்ளவர்கள் தமது ஆற்றலால் மரணத்தையும் வெல்வர் என்று ஆச்சிரமத்தில் எத்தனை சிவனடியார்கள் சொல்லக் கேட்டிருப்பாய். அவற்றை நம்பாவிட்டால் ஆச்சிரமத்திற்கு வருவதாலோ அல்லது கடவுளை வணங்குவதாலோ பயனில்லை என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1962. மண்டலத் துள்ளேமலர்ந்தெழும் ஆதித்தன்**
**கண்டிடத் துள்ளே கதிரொளி யாயிடுஞ்**
**சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்**
**நின்றிடத் தேநிலை நேரறி வார்கட்கே.**

‘‘ சிவனடியார்களே, மண்ணால் மூடப்பட்ட நிலவுலகத்துள்ளே விளங்கித்தோன்றும் ஒளி சூரிய ஒளியாகும். இதுவே மூலத்திடத்து விளங்கும் ஞாயிறாகும். அதுவே மிடற்றின் இடம் என்று சொல்லப்படும். விசுத்தியின் கண் கதிர்களின் ஒளியாய்த்திகழும். அவ் ஒளி எல்லாத்திசைகளிலும் பரவி விளங்கும். திருவருளால் நின்ற இடத்திலே நின்று திருவடியுணர்வால் எல்லாவற்றையும் காண்பவர்களுக்கு இவ்வுண்மை எளிதில் புலனாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1963. நாபிக்கண் ணாசி நயன நடுவினுந்**
**தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்**
**தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்**
**மூவரு மாக வுணர்ந்திருந் தார்களே.**

‘‘ சிவனடியார்களே, ஆருயிர் உறையும் கொப்பூழ், கண், நாசி, புருவநடு, உச்சித்துளை என்று சொல்லப்படுகின்ற ஐந்து இடங்களிலும் உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் ஒளி கொடுத்தருளும் சிவபெருமானைத் தூமாயையின் கண் வீற்றிருக்கும் அரன், அரி, அயன் என்று சொல்லப்படும் மூவருமாக மெய்யுணர்ந்தோர் உணர்ந்திருப்பர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**சிவாதித்தன்**

**1964. அன்றிய [1]பாச இருளுமஞ் ஞானமுஞ்**
**சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தால்**
**ஓன்று மிருசுட ராமரு ணோதயந்**
**துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே.**

‘‘ சிவனடியார்களே, ஆருயிர்களுக்குப் பற்றுக்கள் பலவற்றை உண்டாக்குவது பாசம் என்ற இருளாகும். இவ்இருள் அறிவைத்தடை செய்து மனம் போன போக்கில் செல்லவைக்கும். இதை அறியாமை என்று சொல்வார்கள். இவ்அறியாமையை அகலச் சிவ ஒளி விளக்கம் அளித்துப் பொருந்தும் திங்களையும் ஞாயிற்றினையும் ஒளிரச் செய்யும். புறவிருள் அவ்வொளியால் நீங்கும் போது அகவிருள் அவ்வொளிக்கு ஒளியை அருளும் அளவில்லாத சிவஞான ஒளியால் நீங்கும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1965. கடங்கடந் தோறுங் கதிரவன் தோன்றில்**
**அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்**
**விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்து**
**அடங்கிட நின்றதும் அப்பரி சாமே.**

‘‘ சிவனடியார்களே, நிலத்தில் நீர் நிரப்பிவைக்கப்பட்ட குடங்கள் பலவற்றிலும் வானத்தில் உதிக்கும் சூரியன் தோன்றுவான். அச்சூரியன் ஒவ்வொரு குடங்களிலும் தனித்தனியாகத் தோன்றுவான். அவ்வாறு பலவாகக் காணப்பட்டாலும் சூரியன் ஒருவனே. அச்சூரியனைக் குடத்தில் அமர்த்த வேண்டுமென்று குடத்தை மூடினால் சூரியன் அக்குடத்துள் அடங்குவானா? இல்லையே. அவ்வாறு சிவபெருமானும் ஒவ்வொரு உயிரிலும் தனித்தனி வெவ்வேறாகக் காணப்பட்டாலும் உடம்பு தோறும் உயிர்தனித்தனி வெவ்வேறாகும். ஆனால் உடலின் அகத்தே காணப்படும் உயிர்களிடத்து நீக்கமற விரவி நிற்கும் சிவபெருமான் ஒருவனே. அவன் சூரியனைப் போலக் குடத்தில் அடங்காதவன். அவன் உடம்பின் அகத்தேயும் புறத்தேயும் எங்கும் எப்போதும் விரவி நிற்பவன். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1966. தானே விரிசுடர் மூன்றுமொன் றாய்நிற்குந்
தானே யயன்மா லெனநின்று தாபிக்குந்
தானே யுடலுயிர் வேறன்றி நின்றுளன்
தானே வெளியொளி தானிருட் டாகுமே.**

“ சிவனடியார்களே, ஞாயிறு, திங்கள், தீ என்னும் மூன்றும் தனித்தனியே ஒளி தரும் ஒளிப்பொருட்கள். அவை சிவனிடமிருந்தே ஒளியைப் பெற்று உலகிற்குக் கொடுக்கின்றன. அம் மூன்றும் ஒன்றுபட்டு நிற்கின்றன. அவற்றைச் சிவபெருமானே அயன் அரியாக நின்று ஆக்கியும் நிறுத்தியும் அருளுகின்றனன். அவனே எல்லாவற்றிற்கும் புகலிடமான வெளியாகவும் நின்றருள்வான். அவனே எல்லா ஒளிகளையும் செயற்படுத்தும் முதல்வனாகவும் விளங்குகின்றான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1967. தெய்வச் சுடரங்கி ஞாயிறுந் திங்களும்
வையம் புனல்அனல் மாருதம் வானகஞ்
சைவப் பெரும்பதி தாங்கிய [1]பல்லுயிர்
ஐவர்க் கிடமிடை யாறங்க மாகுமே.**

“ சிவனடியார்களே, தெய்வத்தின் திருவருளால் ஒளி பெறும் தீ, ஞாயிறு, திங்கள் முதலியனவும் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியனவும் சிவபெருமானால் தாங்கப்படுவன. இவை தன்னை நினைத்து வழிபடும் மெய்யன்பர்களுக்குச் சிவபெருமான் வெளிப்பட்டுக் காட்சி தரும் நிலைக்களங்களாகிய திருவுருவங்களாகும். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களுக்கு உடல் நிலைக்களமாகும். இவை அனைத்தும் உடம்பின் உள்ளே காணப்படும் மூல முதலாக எண்ணப் பெறும் ஆறு நிலைக்களங்களின் இடையுமாகும். இடை என்பதும் முச்சுடர்களுக்குப் பின்னால் ஓதப்படும் ஆறுறுப்பு என்றலும் ஒன்றாகும்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 23. பசு இலக்கணம்
## பிராணன்

**1968. உன்னும் அளவில் உணரும் ஒருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்ன மயமென றறிந்துகொண் டேனே.**[1]

“ சிவனடியார்களே, சிவபெருமானன நினைத்தால் நினைப்பவர்களுக்கு நினைத்தவற்றைச் கொடுத்துதபுபவன். ஆருயிர்கள் நினைத்தளவில் அதை உணரும் ஒப்பில்லாதவனாவான். ஆருயிர்களின் உள்ளத்தில் நின்று செந்தமிழ் மறையைப் பயிற்றுவிப்பவன். அத்தகைய சிறப்பு வாய்ந்த அவன் என்னுள் எழுந்தருளி இருக்கிறான். என்னுள்ச் சோதியாக இருப்பவனும் அவனே. அவனது இயற்கைத் தன்மை பேரருளை அள்ளிக் கொடுப்பதாகும்.

இவ் உண்மையை நான் அவனருளாலே அறிந்து கொண்டேன் என்று திருமூலர் தனது அனுபவத்தைக் கூறுகிறார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1969. அன்ன மிரண்டுள ஆற்றங் கரையினில்
துன்னி யிரண்டுந் துணைப்பிரி யாதன்னந்
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின்ன மடவன்னம் பேறணுகா தன்றே.**

“ சிவனடியார்களே, ஆருயிரின் வாழ்க்கை ஆற்று நீருக்கு ஒப்பானது. இவ் வாழ்க்கைக்கு இரண்டு அன்னங்கள் துணை செய்கின்றன. அதில் ஒன்று சிவபெருமான். அடுத்தது உயிர். இவற்றை முறையே முற்றுணர்வுப் பொருள் சிற்றறிவுப் பொருள் என்றும் கூறலாம். வேறோராற்றான் விளக்கின் அறிவதும் அழுந்துவதும் என்றும் கூறலாம். அறிவது சிவபெருமான். அழுத்துவது உயிர். சிவன் ஒருவர். ஆனால் உயிர்கள் பலவாகும். உயிரானது தான் சிவனை விட வேறான பொருள் என்று எண்ணினால் அது சிவபெருமானை அடையமாட்டாது. ”

“ சிவனடியார்களே, ஆருயிர்களின் வாழ்க்கை ஆற்று நீருக்கு ஒப்பானது. மழை பெய்யாவிட்டால் ஆற்று நீர் வற்றிவிடும். அதை நம்பி வாழும் உயிரினங்கள் பெருந்துன்பப்படும். அது போலச் சிவபெருமானின் கருணை இல்லாவிட்டால் உலகம் துன்பமயமாகிவிடும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## புருடன்

**1970. வைகரி யாதியு மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமும்
மெய்கரி ஞானங் கிரியா விசேடத்துச்
செய்கரி யீசன் அனாதியே செய்ததே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்களை மலப்பிணியில் இருந்து நீக்குவதற்காகப் நான்கு வகை ஓசைகளையும், ஐந்து வகை மலங்களையும், ஏழு வகை உணர்வுகளையும் தோற்று வித்து மெய்ப்பொருளாக விளங்குபவன் சிவபெருமான். அவனது பேராற்றலே இவை அனைத்தையும் தொழிற்படுத்துகிறது. நான்கு ஓசைகளாவன் செவியோசை, மிடற்றோசை, நினைவோசை, நுண்ணோசை. ஐவகை மலங்களாவன ஆணவம், கன்மம், மாயை, மாயை ஆக்கம், மறைப்பாற்றல் ஏழுவகை உணர்வு மெய்யாவன மருள், காலம; , ஊழ், உழைப்பு, உணர்வு, விழைவு, ஆள் என்பனவாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1971. அணுவில் அணுவினை ஆதிப் பிரானை**
**அணுவில் அணுவினை ஆயிரங் கூறிட்டு**
**அணுவில் அணுவை அணுகவல் லார்கட்கு**
**அணுவில் அணுவை அணுகலு மாமே.**

“ சிவனடியார்களே, அணுவாகிய ஆருயிருக்கு உயிராய் நுண்ணியனாய் விளங்குபவன் ஆதியாகிய அம்மையுடன் கூடிய சிவபெருமான். அவனைத் திருவடி உணர்வால் ஆராய்பவர்களுக்கு அணுவுக்கு அணுவாய்த் திகழும் சிவபெருமானை அணுகுவது கைகூடும்.

“ சிவனடியார்களே, அணுவைக் காண முடியாது. அப்படியிருக்க அணுவுக்குள் அணுவாக இருக்கும் சிவபெருமானைக் காண முடியுமா என்று நினைக்காதீர்கள். அவனை மெய்யன்போடு ஒரு கணம் நினையுங்கள். அப்படி நினைத்ததும் அவன் மலை போல வளர்ந்து உங்களது மனதுக்குள் குடியேறி விடுவான். அவனைக் காண்பதும் அவனடி சேர்வதும் மிகவும் இலகுவானது “ நமசிவய ” என்ற செந்தமிழ் மந்திரம் அவனைக் காணவைக்கும் என்று கதிரேசன் ஆச்சிரமத்தில் உரையாற்றும் போது கூறுபவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1972. படர்கொண்ட ஆலதின் வித்தது போலச்**[1]
**சுடர்கொண் டணுவினைத் தூவழி செய்ய**
**இடர்கொண்ட பாச இருளற வோட்டி**
**நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே.**

“ சிவனடியார்களே, விழுது ஊன்றி விரிவாகப்படர்ந்து நின்று பெரும் நிழலைக் கொடுக்கும் ஆலமரத்தின் தன்மை அதன் வித்தின் கண் அடங்கியிருக்கிறது. அதன் வித்தைக் கொண்டு மரத்தை அளவிட முடியாதது போல திருவருளின் ஒளியைக் கொண்டு அணுவாகிய ஆருயிர் உய்வதற்கான வழி வகைகளைச் சிவபெருமான் தனது திருவுள்ளத்தால் அமைந்தருளியுள்ளான். ஆருயிர்கள் அவன் அமைத்தருளிய நன்நெறிக்கண் சென்று தமது மல இருளை அகற்றுதல் வேண்டும். அவ்வாறு நடந்து திருவடியைச் சேர்க்கும் திருவடியை நாடுதல் வேண்டும். ”

“ சிவனடியார்களே, நல்லைநாதன் கதிரேசனது நண்பன். கதிரேசன் மாமிசம் உண்பதில்லை. மது வகைகளைக் குடிப்பதில்லை. ஆனால் நல்லைநாதன் மாமிசம் உண்பான். மது வகைகளைக் குடிப்பான். ஒரு நாள் கதிரேசனுடன் முரண்பட்ட செந்தூரன் என்பவன், “ நீ பெரிய நீதிவானா…? என்னோடு பிரச்சினைப்படும் முகுந்தனோடு உனது நண்பன் நல்லை நாதன் சேர்ந்து குடிப்பவன். அதனால் நீ நல்லை நாதனுக்காக குமுந்தனுக்குப் பரிந்து பேசுகிறாய். குடிகாரனோடு சேர்ந்த நீ குடிக்காமலா இருப்பாய்.

யாவும் வெளிவேடம்'' என்றவன். அதனால் கதிரேசன் நல்லை நாதனது உறவைத் துண்டித்தார். அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் நல்லை நாதன் கதிரேசனின் வீட்டுக்கு வந்த போது கதிரேசன் சொன்னார், '' நல்லை, பன்றியோடு சேர்ந்த பசுவும் மலம் உண்ணும் என்பார்கள். பசு மலம் உண்ணாவிட்டாலும் அது பன்றியோடு கூடியிருப்பதால் அதுவும் உண்ணும் என நினைப்போர் பலர். அதனால் நீ இங்கு இனிமேல் வராதே. நான் இறந்தால் கூட வர வேண்டாம். ஆருயிர்கள் உய்வதற்கான வழி வகைகளைச் சிவபெருமான் அமைத்தருளியுள்ளார். அந்நலவழியை நான் பேணி அதன்படி வாழ்கிறேன். அவ்வாறு உன்னால் வாழ முடியாவிட்டால் இங்கு வராதே என்றவர். சில நாட்கள் நல்லைநாதன் கதிரேசனது வீட்டுக்கு வரவில்லை. கதிரேசன் நல்லை நாதனுக்குப் உதவிகள் செய்பவர். அதனால் அவன் திருந்தி வாழத்தொடங்கினான். அதனால் கதிரேசன் அவனை நண்பனாக ஏற்றுக் கொண்டார். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1973. அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்**
**கணுவற நின்ற கலப்ப துணரார்**
**இனையிலி யீச னவனெங்கு மாகித்**
**தணிவற நின்றான் சராசரந் தானே.**

'' சிவனடியார்களே, மிகவும் நுண்மையான அணுவான உயிரினுள்ச் சிவபெருமானும், அச்சிவபெருமானிடத்து ஆருயிரும் வேறறக்கலந்து நிற்கும் கலப்பைச் சொல்லில் சொல்ல முடியாது. அதைத் திருவருளால் உணருதல் வேண்டும். அவ்வாறு உணராதவர்கள் ஒழுக்கமில்லாதவராவர். அவன் உலகெங்கும் எல்லையின்றிக் கலந்திருக்கிறான். அம்முறையால் அவனே இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய எல்லாப் பொருட்களும் என்று நல்லவர்களால் சொல்லப்படுகிறான். ''

'' சிவனடியார்களே, நல்லைநாதன் முப்பது வருடங்களுக்கு முன்பு பரம ஏழை. அவன் கதிரேசனின் உதவியுடன் தான் அப்போது வாழ்ந்து வந்தான். கதிரேசன் சொன்ன சொற்படி வாழும் உத்தமர் என்று எல்லோருக்கும் தெரியும். அதனால் நல்லை நாதன் கதிரேசனிடம் சென்ற போது அவர் சொன்னார், '' நல்லை, எல்லா உயிர்களும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்புடன் தான் சிவபெருமான் நன்நெறிகளை வகுத்துள்ளார். மாமிசம் உண்பதால் மதுவைக் குடிக்கும் நிலை ஏற்படும். மதுவைக்குடித்தால் பல தீமைகளைச் செய்ய அது தூண்டும். அதனால் பாவம் தான் வரும். நிம்மதி இல்லாமல் போகும். பிரச்சினைகள் நாள் தோறும் தேடி வரும் இப்போ உன்னால் எனது மானமும் போகிறது. சிவபெருமான் எல்லா உயிர்களும் இன்பத்தைப் பெற வேண்டும் என்பதற்காகத் தான் உயிர்களோடு வேறறக்கலந்து நின்று அருள்கிறான். இதைத் தீயவர்கள் உணரமாட்டார்கள். அவர்கள் உணர்ந்தால் திருந்திவிடுவார்கள். உன்னைத் திருத்த முடியாது. '' என்று கதிரேசன் கூறிய போது நல்லைநாதன்

சொன்னார், “ இனிமேல் நான் குடிக்கமாட்டன். குடித்ததாக நீங்கள் கேள்விப்பட்டால் என்னை அடித்துத் துரத்துங்கள். ” என்று அழுததால் கதிரேசன் அவனது நட்பை ஏற்றுக் கொண்டவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**சீவன்**

**1974. மேவிய சீவன் வடிவது சொல்லிடில்**
**கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு**
**மேவிய கூறது ஆயிர மாயினால்**
**ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றாமே.**

“ சிவனடியார்களே, உயிரின் வடிவம் இவ்வாறானது என்று கூற முடியாது. உடல் கலன், உலகம் ஊண் முதலியவற்றுடன் பெருந்தியிருக்கின்ற ஆருயிரின் வடிவம் எதுவெனக் கூறுவோமானால் பசுவினது மயிர் ஒன்றினை எடுத்து நூறு கூறுகளாக்குதல் வேண்டும். பின் அதில் ஒன்றை எடுத்து ஆயிரம் கூறுகளாக்குதல் வேண்டும். அதன் பின் அதிலொன்றை எடுத்து நூறாயிரம் கூறுகள் செய்தால் எப்படி இருக்குமோ அது போன்றது தான் உயிரின் வடிவமாகும். அதனால் ஆருயிருக்கு வடிவம் எதுவும் இல்லை ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1975. உண்டு தெளிவன் உரைக்க வியோகமே**
**கொண்டு பயிலுங் குணமில்லை யாயினும்**
**பண்டு பயிலும் பயில்சீவ னார்பின்னைக்**
**கண்டு சிவனுருக் கொள்வர் கருத்துளே.**

“ சிவனடியார்களே, சிவன் இயற்கை உணர்வும் முற்றும் உணர்தலையும் உடைய தூய அறிவை உடையவன். அதனால் அவன் தெளிவினன் என்று சொல்லப்படுகிறான். அவன் எல்லாவற்றுடனும் பிரிப்பின்றி நிற்கும் பெரியவன். அதனால் விட்டுப் பிரித்து தனித்து நிற்கும் பண்பு அவனிடம் இல்லை. ஆயினும் தொன்மையில் இருந்தே அவனுடன் நீக்கமற நின்று அகத்தவம் பயின்று வரும் ஆருயிர் பின்பு அவனது திருவருளால் அவனது திருவுரு வினைக் காணும். கண்ட பின் அவனது திருவுருவைப் பெற்று இன்புறும் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1976. மாயா வுபாதி வசத்தாகுஞ் [2]சேதனத்**
**தாய குருவரு ளாலே யதில்தூண்ட**
**ஒயும் உபாதியோ டொன்றினொன் றாதுயிர்**
**ஆய துரியம் புகுந்தறி வாகவே.**

“ சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு இந்த மாயா காரிய உடம்பு தடைபோன்றதாகும். அதனால் அதை மாயா உபாதி என்பர். ஆனால் அவ்வுடலில் இருக்கும் உயிர்

அறிவுடையது. அவ்அறிவுடைய உயிரைத் தனக்கு உடலாகக் கொண்டு சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருள்வன். அச்சிவகுரு யோகிகளை மேன்நிலையாகிய அறிவு நிலைக்குச் கொண்டு செல்வான். அவ்வாறு செய்யப் போகத்தடைகள் நீங்கும். அப்போது ஆருயிர் உடல் கலன் உலகு உணா என்னும் நால் வகைப்பற்றுனுள் ஒன்றினும் பற்றின்றி நான்காம் நிலையான பேருறக்க நிலையை அடையும். அந்நிலை எய்தியதும் உயிர் திருவடி நினைவாகவே இருக்கும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பசு**

**1977. கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்**
**கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்**
**உற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போது**
**மற்றைப் பசுக்கள் வறள்பசுவாந் [1]தானே.**

'' சிவனடியார்களே, திருவருளுணர்வால் மெய்யுணர்வைப் பெற்ற ஆருயிர்கள் சிவபெருமானை நாடி நிற்கும். அங்ஙனம் நிற்கும் போது அறிவு விளங்கும். அவ்வகையான உயிர்கள் சிவனைப் பொருந்தி நிறைந்த பாலுள்ள குடம் போன்று தளம்பாத இன்பநிலையினை எய்தும். இவற்றைவிட ஏனைய உயிர்கள் அறிவில் வறுமை ஏற்பட்டு அலைந்து திரியும். அவை எப்போதும் அறிவிற் குறைந்த உயிர்களாகவே இருக்கும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1978. கொல்லையின் மேயும் பசுக்களைச் செய்வதென்**
**எல்லை கடப்பித் திறைவ னடிகூட்டி**
**வல்லசெய் தாற்ற மதித்தபின் அல்லது**
**கொல்லைசெய் நெஞ்சங் குறிப்பறி யாதே.**

'' ஐம்புலன்கள் என்ற காட்டுக்குள் தம்மை அறியாது மேயும் பசுக்களாகிய ஆருயிர்களோடு உடனாய் நின்று உடல் கலன் உலகம் ஊண் முதலியவற்றில் வைத்த பற்றுகளை நீக்கி திருவடியில் கூட்டி அதை இன்புறச் செய்வதே திருவருளின் அருஞ்செயலாகும். திருவருள் அவ்வாறு செய்தருளத் திருவுள்ளம் கொண்ட பின்பு தான் பண்படாத விளை நிலமாகிய ஐம்புலக்கொல்லையினை பண்படுத்தும் திருக்குறிப்பை ஆருயிர்கள் உணரும். அதற்கு முன் எதுவும் அறியாமலே இருக்கும். '' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## போதன்

**1979. சீவ னெனச்சிவ னென்னவே றில்லை**
**சீவ னார்சிவ னாரை யறிகிலர்**
**சீவ னார்சிவ னாரை யறிந்தபின்**
**சீவ னார்சிவ னாயிட்டிங் [2]கிருப்பரே.**

‘‘ சிவனடியார்களே, சிவபெருமானையும் உயிர்களையும் ஒரு போதும் பிரித்துக் காண முடியாது. அது இடமும் அவ்விடத்தில் காணப்படும் நிகழ்பொருளும் போலக் கலந்து காணலாமே தவிரத் தனித்துக் காண முடியாது. அதனால் சீவனும் சிவனும் வேறில்லை என்பதை உணருதல் வேண்டும். ஆனால் பொருளால் ஒன்றானதல்ல. ஆருயிரானது திருவருளின் துணையின்றிச் சிவனைக் காணமாட்டாது. இது ஒளியுடைய கண் வெளிச்சமின்றிப் பொருளைச் காணாததை ஒக்கும். திருவருளால் ஆருயிர் சிவனை அறிந்த பின் அது சிவனது திருவடியில் அடங்கிச் சிவனாகவே இருந்து இன்புறும். ’’

‘‘ சிவனடியார்களே, மாட்டுவண்டியென்றால் மாட்டையும் வண்டியையும் சேர்த்துக் குறிக்கும். ஒன்றைவிட்டு ஒன்றை நீக்கினால் அது செயற்படாது. அது போன்றது தான் சிவனும் சீவனும். இரண்டில் சிவம் இல்லாத விடத்து சீவன் தொழிற்படமாட்டாது. சிவனை அடையச் செய்வது திருவருள். திருவருளின் துணையின்றிச் சிவனை அடைய முடியாது ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1980. குணவிளக் காகிய கூத்தப் பிரானும்**
**மனவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்**
**பணவிளக் காகிய பல்தலை நாகங்**
**கணவிளக் காகிய கண்காணி யாமே.**

‘‘ சிவனடியார்களே, என்றும் பேரொளியாகத்திகழும் சிவபெருமான் மனமான விளக்கினை உடைய ஆருயிர்களுக்குக் கண்காணியாவான்.மனம் என்பது புத்தித்தத்துவமாகும். ஐந்து தலைநாகத்தின் படத்தின் கண் விளங்கும் சிவபெருமான் கூட்டமாகிய ஒளி விளக்கினன் எனப்படுவான். அவன் அறிவுக்கண்ணால் காணப்படும் கண்காணியாவான். அதனால் எப்போதும் ஆருயிர்களை அவன் கண்காணித்துக் கொண்டேயிருக்கிறான். ’’

‘‘ சிவனடியார்களே, கதிரேசனும் சிவனடியார்களும் அயலூரில் உள்ள சிவன் கோவிலைத் தரிசிக்கச் சென்றனர். செல்லும் வழியில் பெருமழை பெய்தது. வீதிகள் எங்கும் வெள்ளம் கரை புரண்டோடியது. அவர்கள் மிகவும் சிரமப்பட்டு கோவிலை அடைந்தனர். குளிக்காது கோவிலினுள்ச் செல்லக்கதிரேசன் தயங்கினார். வழமையாக அத்திருக்கோவிலுக்கு வந்தால் அருகில் இருக்கும் குளத்தில் குளித்துச் விட்டுத்தான் கோவிலுக்குச் சொல்வார்கள். கதிரேசனின் தயக்கத்தைத் தெரிந்து கொண்ட நல்லை நாதன் சொன்னார், ‘‘ வழிதெருவெல்லாம் வெள்ளம். இந்த வெள்ளம் கோவில் குளத்தில் நிறைந்து நிற்கும் வழிதெருவில் உள்ள குப்பைகளைத் தள்ளி வந்து குளத்தை நிரப்பியிருக்கும் அதனால் கோவில் கிணற்றில் குளிப்போம். வருண பகவான் எம்மைக்குளிப்பாட்டியுள்ளார். அதுபோதும் எனக்கு என்று சொல்லச் சிவனடியார்கள் பலர் அதை ஏற்றுக் கொண்டனர். கதிரேசன் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கோவிலினுள் சென்றார். அப்போது அங்கிருந்த சிவனடியார் ஒருவர் சொன்னார், ‘‘ கோவிலுக்கு அருகில் இருக்கும் காட்டில் வாழும் முதலைகளை வெள்ளம் தள்ளி வந்திருக்கும். குளத்தில் குளிக்காதீர்கள் ’’ என்று

கூறிவிட்டுச் சென்றார். அப்போது நல்லை நாதன் சொன்னார், “ நான் அதை நினைத்துத்தான் சொன்னேன். இவ்வூரவர்கள் மழைகாலத்தில் குளத்தில் குளிப்பதில்லை. சிவன் கண்காணியாவான். அவன் தான் சொல்லுவித்தவன் என்றவர் ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1981. அறிவாய் அறியாமை நீங்கி யவனே**
**பொறிவாய் ஒழிந்தெங்குந் தானான போதன்**
**அறிவா யவற்றினுட் டானா யறிவன்**
**செறிவாகி நின்றஅச் சீவனு மாமே.**

“ சிவனடியார்களே, நல்லைநாதன் சொன்னார், “ சிவபெருமான் இயல்பாகவே பேரறிவாளன். அதுபோல இயல்பாகவே பாசங்களில் இருந்தும் நீங்கியவன். அதனால் நடந்தது நடக்கவிருப்பது நடப்பது யாவும் அவனுக்குத் தெரியும். அதனால் அவன் ஆருயிர்களின் அறிவிக்குள் அறிவாக நின்று அவற்றை அறிவிப்பான். அதற்காகத் தான் சிவன் உயிருடன் கலந்து நிற்கின்றான். இது ஆசிரியர் தரம் ஒன்றில் கற்கும் மாணவனது கையைப்பிடித்து எழுதுவிப்பதைப் போன்றது. அவ்வேளையில் மாணவனது கை ஆசிரியரது கையாகத்திகழும் என்று எமது சமயம் கூறுகிறது. எமது குருவான சிவபெருமான் நாம் புறப்பட்ட வேளையில் இருந்து வீடு செல்லும் வரை எம்மைக் கண்காணித்துச் கொண்டேயிருப்பான். இது ஒரு மாணவனை ஆசிரியர்கள் கண்காணிப்பதைப் போன்றது. கோவிலுக்கு வந்ததும் எனது மனதுக்குள் யாரோ இருந்து “ கவனம் கவனம் ” என்று சொல்வதைப் போலிருந்தது. பிரச்சினையான வேளைகளில் மனம் என்னை எச்சரிக்கும். அப்போது திருவருள் மயமான மனம் சிவனாகச் செயற்படும். அதனால் தான் சொன்னேன். என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1982. ஆறாறின் தன்மை அறியா திருந்தேனுக்கு**
**ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி**
**ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்**
**ஆறாறுக் கப்புற மாகிநின்[1] றானே.**

“ சிவனடியார்களே, அப்போது கதிரேசன் சொன்னார், “ நான் எதைச் செய்யும் போதும் செய்யு முனபும் சிவனை நினைப்பேன். அவனிடம் சொல்லி விட்டுத் தான் செய்வேன். குளிப்பதையும் சொல்ல வேண்டும் என நினைத்தேன். கடுங்குளிர் என்னை எதுவும் செய்யவிடாமல் தடுத்து விட்டது. அருஞ்சைவர் தத்துவங்கள் முப்பத்தாறும் இன்னின்ன என்றும் மெய்மையை எனக்கு உணர்த்தியவன் நந்தியெம் பெருமான். அவன் அறிவுக்குள் அறிவாக நின்று அருள்பவன். அதனால் தான் உனது அறிவுக்குள் அவன் புகுத்து அறிவிற்கு அறிவாகச் செயற்பட்டுள்ளான். இது வியப்புக்குரியதல்ல. நந்தியெம் பெருமானான சிவன் உயிரோடு உயிராகக் கலந்திருப்பதை உணர்பவர்களின் அறிவு சிவனது அறிவாக இருக்கும். அதனால் தான் உனக்கு இந்த எண்ணம் உருவானது.

அம்முப்பத்தாறு தத்துவங்களின் மெய்மையைப் புரிந்து கொண்டால் அம்மெய்மைகளுக்குள் நின்று சிவபெருமான் அருள்வார். இது நடைமுறைச் சாத்தியமானது என்றவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1983. சிவமா கியஅருள் நின்றறிந் தோரார்**
**அவமா மலமைந்து மாவ தறியா**
**தவமான செய்து தலைப்பறி கின்றார்.**
**நவமான தத்துவ நாடகி லாரே.**

“ சிவனடியார்களே, அருஞ்சைவரின் தத்துவங்களான முப்பத்தாறையும் உணர்ந்தவர்களே பிறப்பற்றவராவர். திருவருளின் பெருமையைத் திருவருளின் கண் உறைந்து நின்றே அறிதல் வேண்டும். அப்படி உறைந்து நின்று உண்மையினை உணர்வோர் அரியர். இவர்களை “அறிந்தோரவர்” எனச் சொல்லப்படுகின்றது. இவர்கள் கொள்கை எதுவோ சமயம், மதம் எனவோ கூறிக்கொள்வோர் நிலைமை அனைத்தும் அவரவர் மேற்கொள்ளும் தத்துவத்தளவிலேயே நிலை பெறும். உயிர்களை வருத்தும் மலங்கள் ஐந்து. இம் மலங்களின் செயற்கையால் செய்யப்படுவன யாவும் அவம் என்றே சொல்லப்படும். இவ் உண்மையைப் பலரும் அறிவதில்லை. பிறப்பு நால்வகைப்படும். அவை மக்கள், தேவர், நரகர், விலங்குகள் என்பனவாகும். இவற்றுள் விலங்குகள் ஐந்து அறிவுடைய உயிர்கள். ஆறறிவுடையோர் மக்களாவர். மக்களில் தீவினையைச் செய்தவர் நரகராவர். இன்ப நிலையாகிய தேவரின் நிலையில் அகத்தவம் புரிவாரும் உளர். அதனால் பிறப்புக்கள் உண்டாகும். இத்தகைய தவத்தினைச் செய்து மீண்டும் பிறப்பெய்தித்துன்பப்படுபவர்கள் பலர். அவர்களைத் “தலைப்பறிகின்றார்” என்பர். இவர்கள் தாமறியாத விடயங்களையும் மேன்மையான தத்துவங்களையும் அறியும் தன்மை இல்லாதவர்கள். ”

“ சிவனடியார்களே, கதிரேசன் எப்பொழுதும் கந்தபுராணம் சிவஞான போதம் திருவருட் பயன் திருக்குறள் திருமந்திரம் போன்ற சமய நூல்களையே படிப்பார். அவை பற்றியே பேசுவர். அவ்வூரில் வாழும் பட்டதாரி ஆசிரியரான வாகீசன் அவரைச் சந்திக்கும் வேளைகளில் சொல்வார், “ ஐயா, சமய நூல்களைப் படிப்பது தவறல்ல. சமூகத்தைப்பற்றி அக்கறைப்படவும் இல்லை. அறிந்து கொள்ள முயல்வதும் இல்லை அது ஏன்..? ” என்று கேட்கக் கதிரேசன் சொன்னார், “ இப்போது நான் திருமந்திரத்தைப் படிக்கிறேன். இதை யார் சமய நூல் என்று கூறியது? ” அதைக்கேட்டு வாகீசன் திகைத்துப் போனார். அப்போது கதிரேசன் சொன்னார், “ ஒவ்வொரு மதமும் தமது மதத்தைப் பின்பற்றுவோர் மேன்மையடைய வேண்டு என்பதற்காகவே தத்துவங்களைக் கூறியுள்ளன. திருமந்திரம் எல்லாவகையிலும் உயிர்கள் இன்பமடைய வேண்டுமென்று நினைத்து பூவுலகில் எப்படி வாழ வேண்டும், வானுலக வாழ்வு எத்தகையது, நோய்கள்

ஏன் வருகின்றன, அவற்றை எவ்வாறு குணப்படுத்துவது, நல்ல பிள்ளைகளைப் பெறுவது எப்படி, கடவுளை வணங்குவது எப்படி. கணவனும் மனைவியும் எப்படிக் கூடி இருத்தல் வேண்டும் என்றும், பாவங்கள் பிரச்சினைகள், மோதல்கள் எவ்வாறு உண்டாகின்றன என்றும், அவற்றை எவ்வாறு எதிர் கொள்வது என்றும் கூறுகிறது. ஒரு மனிதன் இதை வாசித்துத் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். என்பது தான் திருமந்திரத்தின் நோக்கம். இதை எப்படிச் சமய நூல் என்பீர்கள்? என்று கேட்டவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1984. நாடோறும் ஈசன் நடத்துந் தொழில்உன்னார்**
**நாடோறும் ஈசன் நயத்தூட்டல் நாடிடார்**
**நாடோறும் ஈசன்நல் லோர்க்கருள் நல்கலால்**
**நாடோறும் நாடார்கள் நாள்வினை யாளரே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், “ வாகீசா, பள்ளிப்படிப்பில் இவற்றைச் சொல்லிக் கொடுப்பதில்லை. பள்ளிப்படிப்பால் வந்த அறிவினைக் கொண்டு நாம் நல்லவற்றைத் தேடிக் கற்றல் வேண்டும். முன்னைய ஆசிரியர்கள் எந்நேரமும் வாசித்துக் கொண்டிருப்பர். அதனால் நல்ல பல விடயங்களை அறிவர். உனது தம்பியின் மகன் ஊமை. இது ஏன் வந்தது என்று சிந்தித்தீர்களா? அவன் குடித்து விட்டு வந்து காலநேரம் பாராது மனைவியோடு உறவு கொள்வான். உறவின் போது மனைவியின் உடல் தூய்மையாக இருத்தல் வேண்டும். வயிற்றில் மலமோ சிறு நீரோ நிரம்பியிருந்தால் ஊமைப்பிள்ளை அல்லது குருட்டுப்பிள்ளை தான் பிறக்கும் என்று திருமந்திரம் சொல்கிறது. இது சமயமா..? பொழுது விடிவதும் பொழுது முடிவதும் உயிரின் வாழ் நாளைக் குறைப்பதற்காகவே. இதை எண்ணாதவர்கள் அறியாமை வசப்பட்டவராவர். இவர்கள் ஒரு போதும் உண்மை நிலையை உணரமாட்டார்கள். சிவபெருமான் நிகழ்த்தும் ஐந்தொழிலின் பெருமையையும் உணரார். தினமும் சிவபெருமான் உயிர்கள் செய்யும் வினைப்பயனை அவ்வுயிரோடு சேர்ந்து வைப்பதையும் உணரார். சிவனால் ஆட்கொள்ளப்பட்ட நல்லார் தான் சீவன் முத்தர்கள். இவர்களை விட ஏனையோர் இன்பவாழ்க்கையை எண்ணிச் செயற்பட்டு அவை தோல்வியில் முடியத் துன்பப்படுவர். நல்லவற்றை விட்டு விட்டுத் தீயவற்றைச் செய்வர். அதனால் பிறந்தும் இறந்தும் பிறந்தும் துன்புறுவர் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 24. ஐந்திந்திரியம் அடக்கும் அருமை

**1985. ஆக மதத்தன ஐந்து களிறுள**
**ஆக மதத்தறி யோடணை கின்றில**
**பாகனு மெய்த்தவை தாமும் இளைத்தபின்**
**யோகு திருந்துதல் ஒன்றறி [2]யோமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் வாகீசனுக்குச் சொன்னார், “ மிக்க மதங்கொண்ட யானைகள் உடம்பினுள்ளே இருக்கின்றன. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவாகும். அவை அடங்காது மதங் கொண்டுள்ளதால் கந்தாகிய கட்டுத்தறியிலும் அடங்காது. இவ்வைந்தையும் அடக்கப் பாகனாகிய உயிர் முயல வேண்டும். அலைந்து அலைந்து துயரும் புலன்களை அடக்கத் திருவருளின் துணையை நாட வேண்டும். திருவருளால் தான் மதங் கொண்ட யானைகளான புலன்கள் ஐந்தையும் அடக்க முடியும். இதைத்தவிர்த்த ஏனைய வழிகளால் புலன்களை அடக்க முடியாது துன்பங்கள் வரும் போது சிவனை நினைத்து “ நமசிவய ” என்ற மந்திரத்தை ஓதினால் துன்பங்கள் போகும். தீய செயல்களில் ஈடுபடும் போது அதே “நமசிவய” என்ற மந்திரத்தை ஓதினால் சிவன் ஓடோடி வந்து தீய செயல்களைச் செய்யவிடாது தடுப்பான். மதங் கொண்ட யானைகளான புலன்கள் எதற்கும் அடங்காது “நமசிவய” என்ற செந்தமிழ் மந்திரத்திற்குத் தான் அடங்கும். அது போல உனக்கு யாராவது தீமை செய்ய நினைக்கிறார்கள் என்று தோன்றினாலும் செந்தமிழ் மந்திரத்தை உச்சரித்தால் அவர்களால் தீமை செய்ய முடியாது. உன் மீது கோபம் கொண்ட மேலதிகாரியைப் பணிய வைக்க அந்த மந்திரத்தால் மட்டுமே முடியும். ஒரு வாரம் ஓதி விட்டு வந்து சொல் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1986. கருத்தினன் னூல்கற்றுக் கால்கொத்திப் பாகன்**
**திருத்தலும் பாய்மாத் திகைத்தன்றிப் பாயா**
**எருத்துற வேறி யிருக்கிலு மாங்கே**
**வருத்தினும் அம்மா வழிநட [1]வாதே.**

“ சிவனடியார்களே, அதைக் கேட்ட வாகீசன் சொன்னான், “ எனது மேலதிகாரி மிகவும் கொடியவர். எதற்கும் இலஞ்சத்தை எதிர்பார்ப்பவர். என்னிடமும் அதைத்தான் எதிர் பார்க்கிறார். நான் அரச தொழில் செய்வதோடு தோட்டமும் செய்கிறேன். இம்முறை வெண்காயத்தை மூன்று இலட்ச ரூபாவுக்கு விற்றேன். அதில் ஒரு பகுதியைக் கடனாகக் கேட்கிறார். அவர் கடன் வாங்கினால் திருப்பிக் கொடுப்பதில்லை. அவருக்குப் பணம் கொடுப்பதில் பார்க்கத் தோட்டச் செய்கையை விடலாம். ” என்ற போது கதிரேசன் சொன்னார், “ மகனே, ஐம்புலன்களின் அவாவால் தான் தீமைகள் நடைபெறுகின்றன. ஐம்புலன்கள் மதயானைகள் போன்றவை என்றாலும் நல்லவர்களின் மனத்தைத் தேராகவும் உயிர்ப்பை பாய்மாவாகவும் உருவகிப்பதுண்டு. பாய்மா என்பது குதிரை. யானை மதங் கொண்டது. குதிரை கடிவாளத்தினால் கட்டுப்படுவது. மனம் சிவனால் கட்டுண்டால் கடிவாளமிடப்பட்ட குதிரையாகி விடும். உயிர்களின் உடலில் உள்ள ஐம்புலன்களையும் அகத்தவப்பயிற்சியால் கட்டுப்படுத்த வேண்டும். அப்படிக்கட்டுப்படுத்தாது விட்டு யோகம் பயில்வதால் நன்மை ஏற்படாது. தீமை தான் வரும். உனது மேலதிகாரி இடைக்கிடை ஆச்சிரமத்திற்கு வந்து யோகம் பயிலபவர். அதனால் பயன் இல்லை என்று

சொல்லியும் புரிந்து கொள்கிறாரில்லை. நீ முழுமையான அன்பு கொண்டு சிவனிடம் முறையிடு. சிவன் அதைத் தீர்த்து வைப்பார். உனக்கு சிவனில் நம்பிக்கை இல்லை என்று எனக்குத் தெரியும். ஒரு செயலைச் செய்யாமல் பயன் வரும் என்று எண்ணலாகாது. அதனால் சிவன் மீது நம்பிக்கை வைத்து முயற்சி செய் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1987. புலமைந்து புள்ளைந்து புட்சென்று மேயும்**
**நிலமைந்து நீரைந்து நீர்மையும் ஐந்து**
**குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்**
**உலம்வந்து போம்வழி யொன்பது[2] தானே.**

'' சிவனடியார்களே, செவி, மெய், கண், நாக்கு, மூக்கு ஆகிய அறிதற் கருவிகளுக்கு நிலைக்களமான பொறிகள் ஐந்து. அதைப் புலம் என்று சொல்வார்கள். அவற்றின் இடமாக நின்று புலன்களை ஏற்றுக் கொள்ளும் இந்திரியங்களான புலன் கொளி ஐந்து. அவற்றைப் புள் என்று உருவகிக்கப்பட்டுள்ளன. அப்புட்கள் மேயப்படும் புலங்கள் ஐந்து. அவை ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன அவற்றுக்குரிய பண்புகளும் ஐந்து. அவை கேட்டல், உறுதல், காண்டல், சுவைத்தல், முகர்தல் என்பன இப்பயன்களை அப்புட்கள் நுகரும். இவ்ஜந்தும் தொழிலால் வேறு படினும் பயனால் ஒன்றுபடும். மிகவும் அலையுற்றுப் போகும் வழி ஒன்பதாகும். அவை உடலில் காணப்படும் தொளைகளாகும். அவற்றுள் இரண்டு வாயில்கள் எனவும், ஏழு சாலேகம் எனவும் கூறப்படும். வாயில்கள் இரண்டும் முறையே வாயும் குதமுமாகும். சாலேகம் ஏழும் முறையே காதிரண்டு, கண்ணிரண்டு, மூக்கிரண்டு, கருவாய் ஒன்று என்பனவாகும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1988. அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன**
**அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்**
**அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்**
**எஞ்சா திறைவனை எய்தலு மாமே.**

'' சிவனடியார்களே, உடம்பினுள் இந்திரியங்கள் ஐந்துள்ளன. அவை சிங்கங்களாக உருவகிக்கப்பட்டுள்ளன. அவ்ஜந்து இந்திரியங்களும் புறத்தே சென்று புறப்பொருட்களை நுகர்ந்து பின்பு அகமான உடம்புள் வந்து சேரும். அக்கொடிய சிங்கங்களது கூரிய நகங்களையும் பற்களையும் திருவருளின் துணையால் அறுத்தால் சிவபெருமானின் திருவடியினை உறுதியாக அடையலாம். இங்கு ஐம்பொறிகளை உரிய நகங்களாகவும் நச்சுப்பற்களாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. அவற்றின் முனைப்பு அடங்கினால் அவை நல்வழிப்பட்டுச் சிவனை அடைய விரும்பும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1989. ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்**
**ஐவரு மைந்தரு மாளக் கருதுவர்**
**ஐவரு மைந்து சினத்தொடே நின்றிடில்**
**ஐவர்க் கிறையிறுத் தாற்றகி[1] லோமே.**

“ சிவனடியார்களே, தொண்ணூற்றாறு மெய்களுள் ஐவர் அமைச்சர்களாவர். ஏனைய மெய்கள் வாயின் மிலேச்சர், சாரணர், தூதர், சூதமாகதர், புரோகிதர் முதலானோரும் இவுளிமறவர், யானை வீரர், தறுகணாளர், மள்ளர், தந்திரத்தலைவர் முதலானவர்களும், உறுதிச் சுற்றத்தாரும் பிறரும் அவர் இவ்ஐவரும் மெய்வாய்கண் மூக்கு செவி என்னும் அறிதற் கருவிகளாகும். இவ்ஐவரும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பவற்றை உண்டு முடிக்கக் கருதுவர். அவற்றின் எண்ணப்படி விட்டால் நுகர்வு எல்லையின்றிச் செல்லும். அவற்றைக் கட்டுப்படுத்த உயிரால் முடியாது. ஐம்புலன்களும் மனதிற்குக் கட்டுப்படாவிட்டால் அவற்றால் பெரும் தீமைகள் தான் உருவாகும். அத்துடன் மனம் விரும்பிய நுகர்வுகளை உயிரால் பெற்றுக் கொடுக்க முடியாது. வாகீசனது மேலாளர் கௌதமன். அவர் தனது மனதைக் கட்டுப்படுத்த முடியாததால் தன் மனம் போன போக்கிற்கேற்பச் செயற்பட்டார். கடன் என்ற பெயரில் பலரிடம் பணத்தை வாங்கிய அவர் வாகீசனுக்குப் பெரும் தொல்லை கொடுத்தார். அதனால் வாகீசன் கதிரேசனிடம் வந்து அதைச் சொல்லிக் கவலைப்பட்டதோடு அவர் கேட்ட தொகையைக் கொடுக்க விரும்பினான், “ இரண்டு தினங்கள் கழியத்தருகிறேன் என்று உனது மேலதிகாரிக்குச் சொல் என்று கூறிய கதிரேசன் தனது நண்பரான காவல்துறை அதிகாரிக்குக் கௌத்தமனைப் பற்றிக் கூறினார். மறுதினம் இலஞ்ச ஆணைக்குழுவால் கௌதமன் கைது செய்யப்பட்டார். மனதின் போக்கைக்கட்டுப்படுத்தாவிட்டால் பெரும் துன்பங்கள் வரும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1990. சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடொறுஞ்**
**சொல்லகில் லேன்திரு மங்கையும் அங்குள**
**வெல்லகில் லேன்புலன் ஐந்துடன் தன்னையுங்**
**கொல்லநின் றோடுங் குதிரையொத் தேனே.**

“ சிவனடியார்களே, திருவருளின் நலத்தால் சிவபெருமானைத் திருமுறைகளைப்பாடித் தொழவில்லை. சிவனுடன் திருவருளம்மையும் கூட இருக்கின்றாள். அதனால் அவளையும் தொழும் பெருமையையும் பெறவில்லை. அதனால் ஐம்புலன்களின் வழிச் செல்லும் மனதை வெல்லும் ஆற்றலையும் பெறவில்லை. அதனால் கற்காதவனை ஒத்துள்ளேன். அதனால் தான் நான் இன்று எனது பெரும் தொழிலையும் இழந்து மானத்தையும் இழந்து ஊரவரின் கேலிக்குள்ளாகியுள்ளேன். என்னை மன்னித்து எனது வேலையைப் பெற்றுத் தாருங்கள் ” என்று கதிரேசனது காலைப்பிடித்து இரந்து அழுதான் கௌதமன். அதனால் அவன் மீது இரக்கப்பட்ட கதிரேசன் சொன்னார், “ சிவபெருமானைச் சுத்தமான

மனதுடன் வணங்கினால் அவனது அன்பான திருவருள் வணங்குபவனை வந்தடையும். அத்திருவருளுடன் அருளாற்றலாகிய திருமங்கையும் வந்தமர்வாள். தமிழ்த்திருமுறைகளைப் பாடிப்பணிந்தால் ஐம்புலன்கள் தானாகவே அடங்கும். அவை அடங்கினால் பற்றுக்கள் மனதைத் திசை மாறச் செய்யாது. நான் உனது மேலாளருடன் கதைக்கிறேன். நீ கடன் என்று வாங்கிய இலஞ்சப் பணத்தைக் கொடு என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1991. எண்ணிலி யில்லி யுடைத்தவ் விருட்டறை**
**எண்ணிலி யில்லியோ டேகிற் பிழைதரும்**
**எண்ணிலி யில்லியோ டேகாமை காக்குமேல்**
**எண்ணிலி யில்லதோர் இன்பம [2]தாகுமே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் கௌத்தமனுக்குச் சொன்னார், '' மகனே, கற்காத ஒருவன் வேண்டுமென்றே தீமைகளைச் செய்தாலும் அது மன்னிக்கப்பட வேண்டியது. ஏனென்றால் அது தவறு என்றும் அதனால் பெரும் துன்பம் வரும் என்றும் உணரக்கூடிய அறிவு அவனிடமிராது. ஆனால் கற்றவர்கள் செய்யும் தவறு தெரிந்து கொண்டே செய்யப்படுவது. நீ நன்கு திட்டமிட்டுச் செயலாற்றியுள்ளாய். உனக்குக் கடன் தந்தோர் அதைப் உரிய இடத்தில் புகாரிடவில்லை. அதனால் தப்பினாய். இந்நிலை தொடர்ந்து நீடிக்கமாட்டாது. அதனால் திருந்து. திருந்துவதற்கு வழி சிவனை வணங்குவதேயாகும். எமது உடலில் விளக்கமாகத் தெரியும் ஒன்பது தொளைகளை அன்றி எமது உடலில் உள்ள மயிர்க்கால்கள் அனைத்தும் கட்புலனாகாத நுண்தொளைகளாகும். அதனால் இவ்வுடல் அளவிடமுடியாத தொளைகளை உடையது. அத்துடன் எளிதில் அகற்ற முடியாத ஆணவவல்லிருள் நிறைந்த பாழறையுமாகும். அளவிட முடியாத அத்தொளைகளின் வழியாக ஐம்புலன்களும் மனமும் சென்றால் பிறப்பிறப்பேற்படும். என்றும் தீய செயல்களைச் செய்யும் நாட்டம் உண்டாகும். திருவருளால் மனதினை அடக்கி ஐம்புலன்களையும் திருவடித்தொண்டில் ஈடுபடுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் புலன்கள் அத்தொளை வழியே செல்லமாட்டா. அம்முறையால் தான் தொளைகள் வழியாக வெளியேறும் புலன்களை அடக்க முடியும். அப்படி அடக்கினால் சிவபெருமானின் மாறாத அன்பான திருவருள் மனதை வந்தடைந்து அதைத் தூய்மைப்படுத்தும். அதனால் புலன்களை அடக்கிச் சிவனைத் தொழு. யாவும் நல்லதாக நடக்கும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1992. விதியின் பெருவலி வேலைசூழ் வையந்**
**துதியின் பெருவலி தொல்வான் உலகம்**
**மதியின் பெருவலி மானுடர் வாழ்க்கை**
**நிதியின் பெருவலி நீர்வலி தானே.**

“ சிவனடியார்களே, இருவினைகளுக்கீடாகச் சிவபெருமானால் இந்த நிலவுலகம் படைக்கப்பட்டது. முழுமுதலாக விளங்கும் சிவபெருமானை உயிர்கள் தொழுது அதன் பயனாக இன்பதுன்பங்களை அனுபவிக்கும் இடமாகச் சிவபெருமானால் இவ்நிலவுலகம் அருளப்பெற்றது. அதனால் ஆருயிர்கள் திருமுறையின் படி அம்மை அப்பரான சிவபெருமானை தொழுது பணி செய்து மெய்யுணர்வைப் பெற்று சீர்சிறப்பினை எய்த வேண்டும் என்ற நோக்குடனேயே இவ்நிலவுலகம் படைக்கப்பட்டது ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 25. ஐந்திந்திரியம் அடக்கு முறைமை

**1993. குட்ட மொருமுழ முள்ள தரைமுழம்**
**வட்டம் அமைந்ததோர் வாவியுள் வாழ்வன**
**பட்டன மீன்பல பரவன் வலைகொணர்ந்து**
**இட்டனன் யாமினி யேதமி லோமே.**

“ சிவனடியார்கள‌ே, ஒருமுழ ஆழமும் ,அரை முழுப் பரப்பும் கொண்ட வட்டமாக அமைந்த முகஞ்சேர் நீர் நிலை ஒன்று உடம்பின் உள்ளே காணப்படுகிறது. அந்த நிர் நிலையில் வாழ்வின் புலன் களாகிய மீன்கள் பல நம்முன் நின்று நம்மை இயக்கும். திருவருளால் நாம் சிவனைப் பொது நீக்கித் தொழுதோம். அதனால் சிவபெருமான் அம் மீன்களைச் செம்மைப்படுத்தச் செம்படவனாகத் தோன்றினான். கடலில் வலை வீசி அம் மீன்களைச் மேம்படுத்தியருளினான். அதனால் அம் மீன்கள் தூய்மைப்பட்டன. அதன் பின் ஐம்புலன்கள் தரும் துன்பங்களில் இருந்து நீங்கிச் சிவ இன்ப நினைவில் மகிழ்ந்தோம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1994. கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்**
**அடக்க லுறுமவன் தானே யமரன்**
**[2]விடக்கிரண் டின்புற மேவுறு சிந்தை**
**நடக்கின் நடக்கும் நடக்கு மளவே.**

“சிவனடியார்களே, கதிரேசன் கௌத்தமனுக்குச் சொன்னார், “கௌத்தமா, அனைத்துயிர்களும் இன்பம் அனுபவிக்கும் பொருட்டே சிவபெருமானால் உடம் பின்கண் ஐம் பொறிகளும் அமைக்கப்பட்டன. அவை மலத்தைச் சார்ந்தமையால் அவை தீய வழியை நாடுகின்றன. அத்தீய வழியில் செல்லாது புலன்களை அடக்கி நல்வழிப் படுத்துதல் வேண்டும். அவ்வாறு நல்வழிப்படுத்தப் புலன்களை அடக்கி மனதைச் சிவபெருமானின் திருவடிக்கு ஒப்டைத்து மீளா அடிமையாக வாழுதல் வேண்டும. இதுவே புலனடக்கமாகும். இத்தகைய புலனடக்கம் உள்ளவர்களே புலவர்களாவர். அப்புலவரால் விரும்பப்படுபவரே தேவராவர். நீ கற்றும் இதை உணரவில்லை. துன்பங்கள் பல வந்தும் திருந்தாதது மேலும் மேலும் தீய செயல்களைச் செய்து துன்பப்படுகிறாய். தற்பொழுது நம்பிக்கையுடன் நீ சிவனை வணங்குவதால் முகத்தில் ஒரு பொலிவு ஒரு தெளிவு

தெரிகிறது. சிவனின் அருளால் திரும்பவும் வேலை கிடைத்து விட்டது. அதனால் புலன்களை அடக்கிச் செந்தமிழ் மந்திரத்தை ஓதி சிவஇன்பநிழலில் அமர்ந்திருக்க முயற்சி செய் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1995. அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்**
**அஞ்சு மடக்கும் அமரரும் அங்கிலை**
**அஞ்சு மடக்கில் அசேதன மாமென்றிட்டு**
**அஞ்சு மடக்கா அறிவறிற் தேனே.**

'' சிவனடியார்களே, கௌத்தமன் கதிரேசன் சொல்லிக் கொண்டிருந்த போது எதையோ யோசித்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த கதிரேசன் சொன்னார், '' கௌத்தமா, மனம் இலகுவில் அடங்காது. அதைச் சிவநாமத்தைச் சொல்லி வற்புறுத்தி அடக்குதல் வேண்டும். புலனடக்கம் என்பது மனதைத் தீய வழியில் செல்லவிடாது நல் வழிப்படுத்துவதாகும். இதைத்திருவருளால் தான் தெரிந்து கொள்ள முடியும். கடவுளை வணங்க, மனம் கோவிலுக்கு வந்த அழகான பெண்ணின் முகத்தில் இருக்கும். கடவுளை வணங்குவதால் புலன்கள் அடங்கும் என்று எண்ணுவது அறிவில்லாதவர்களின் செயலாகும். இதை அஞ்சும் இடக்கிய அமரரும் இல்லை என்பார்கள். மனதை அடக்கினால் அது கல்லுப் போன்று உணர்ச்சியற்றதாக இருத்தல் வேண்டும். அது தான் மன அடக்கம். சிவனை வணங்கும் போது சிவ நினைவைத் தவிர வேறு எதுவும் வரக் கூடாது உண்ணாமல் இருந்தால் பசிக்கக்கூடாது. தாகமாக இருந்தால் நீரைகுடிக்கக் கூடாது ஏனென்றால் அந்த உணர்வுகள் வந்தால் மனம் ஒருநிலைப்படாது. அதனால் வணங்குமுன் உன் உடலையும் மனதையும் சமப்படுத்த வேண்டும். வணங்கும் போது அருகில் நடை பெறுவன தெரியக் கூடாது. அந்நிலை வர முயற்சி செய் என்றவர் '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1996. முழுக்கி யெழுவன மும்மத வேழம்**
**அடக்க அறிவென்னுந் தோட்டியை வைத்தேன்**
**பிழைத்தன வோடிப் பெருங்கேடு மண்டிக்**
**கொழுத்தன வேழங் குலைக்கின்ற வாறே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் கௌத்தமனுக்குச் சொன்னார், ''கௌத்தமா, கல்வியால் வரும் அறிவு நல்லவற்றைச் சொன்னாலும் ஏற்காது. அந்த அறிவு பெரும் பாலும் சமய தத்துவங்களுக்கு முரணானது. சமயம் கடவுள் என்பன உள்ளுணர்வால் உணர்ந்து கொள்ள வேண்டியவை. ஐம்புலன்களாகிய மும் மதவேழம் என்றும் இந்தியியங்கள் மனமென்ற காவலை கடந்து மூர்க்கத்துடன் எழும். அவற்றை அறிவென்ற தோட்டி அடக்குதல் வேண்டும். அவ்வேழங்கள் அறிவு என்ற தோட்டியினையும் மீறி தப்பி ஓடும். அப்படி ஓடினால் நீக்க முடியாத பெரும் துன்பங்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். அக்கேடுகளால் அவ்வேழங்கள் கொழுப்பேறி எமக்கு வரும்

நன்மைகளை யெல்லாம் அழித்து விடும். இது பற்றி முன்பு உனக்கு நான் சொல்லியும் கேளாது வாழ்ந்தமையால் தான் வாகீசனிடம் கடன் என்ற பெயரில் இலஞ்சம் கேட்டாய். உன்னைத் திருத்துவதற்காகவே அப்படி ஒரு நடவடிக்கையை நானும் காவல் துறை அதிகாரியும் சேர்ந்து எடுத்தோம். அதனால் உனக்குப் பாதிப்பேற்படவில்லை. இந்திரியங்கள் கொடியன இப்போது உனக்குக் காவல்துறை அதிகாரி நடவடிக்கை எடுக்காத தால் தப்பினாய் இது இனிமேல் நடவாது. ஐம்புலன்களையும் அடக்காததால் வந்த துன்பத்தை அனுபவித்து விட்டாய் சிவனருளால் தான் இது நடந்தது நீ அதை நம்பாவிட்டால் துன்பப்படுவாய் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1997. ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது**
**ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது**
**ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது**
**ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் கௌத்தமனுக்குச் சொன்னார், ‘‘ வாகீசன் வந்து சொன்னதும் நான் பெருந்துன்பப்பட்டேன். உயர் கல்விகற்று பெரும் உத்தியோகத்தில் இருக்கும் நீ இவ்வாறான கேவலமான செயல்களில் ஈடுபட்டது எனக்குக் கோபத்தைக் கொடுத்தது. ஆனால் வாகீசன் மிகமிக நல்லவன். அவனுக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் அதனால் தான் அவன் இரவு பகல் பாராது முயற்சி சொய்கிறான். அதை நீ கையாடினால் அவனது முயற்சியால் என்ன பயன். இருந்தும் அவன் உன்னைப் பற்றிப் புகாரிட விரும்ப வில்லை. புகாரிட்டால் உனது எதிர்காலம் நாசமாகி விடும் என்று பயப் பட்டான் அதனால் நான் சிவனிடஞ் சொல்லி அனுமதி கேட்டபின்பே இச்செயலைச் செய்தேன். கொடுமைகளை ஆராயாது செய்விக்கும் ஐம்புலன்களும் திருவைந் தெழுத்துக்குத் தான் கட்டுப்படும். அப்படிக் கட்டப்பட்டு நல்வழிப்பட்டால் இவ்வுலகம் சிவ உலகமாக மாறும். சிவத்தைப் பேனல் தவத்திற்கு அழகு என்பார்கள். அதுவே அரனார் திருவடிப் பேறுமாகும். அப்படியானவர்கள் குறைவில்லாத திருவருளை உடையவராவர் அதனால் தான் வாகீசன் அவ்வாறு சொன்னார். நானும் உன்னைத் திருத்த விரும்பினேன் திருவருள் தீமைகளைச் செய்யவிடாது என்றவர். ’’ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1998. பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்**
**விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்**
**பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கும்**
**அருத்தமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ‘‘திருவருளைப் பற்றி நீ அறிய வேண்டும் என்பதற்காகத் தான் நான் உண்மையைச் சொன்னேன். பயமுறுத்தி ஒரு செயலைச் செய்விப்பது மனித நேயம் அல்ல. உண்மையை நீ உணர்ந்து திருந்த வேண்டும் என்பதற்காகவே சொன்னேன். திருவருளை உடையவன் பாவம் செய்யான்.

பிறரைக் கெடுக்கமாட்டான். தீமைகளைப் பிறருக்குச் செய்யான். உனது வேலையை இழக்க நான் காரணமாக இருக்க விரும்பவில்லை. தவறு செய்பவனைத் திருத்த வேண்டும். விளங்காதவனுக்கு விளக்கம் அளித்தல் வேண்டும். நீ பயம் காரணமாகத் திருத்தக் கூடாது. உண்மையை உணர்ந்து திருத்த வேண்டும் என்பதற்காகத் தான் சொன்னேன். தொடர்ந்து பேசுவதால் பயன் உண்டாகப் போதில்லை. கானல் நீர் போலத் தோன்றி மறையும் உலகத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளல் வேண்டும். எல்லா நன்மை தீமைகளுக்கும் காரணமாக உள்ளது மனம். மனம் உண்மையை உணர்ந்து மெய்யுணர்வை அடையுமானால் நல்லவற்றை நினைக்கும். நல்லவற்றைச் செய்யும். இல்லா விட்டால் தீமைகளைச் செய்து ஊழிக்காலத்தின்பின்பும் துன்பப்படும். எனவே மனதை அடகிச் சிவனை வழிபட்டு உண்மைப் பொருளை உணர்ந்து இன்பமாக வாழ்வதையே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும் என்றவர். ” என்றர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1999. இளைக்கின்ற வாறறிந் தின்னுயிர் வைத்த**
**கிளைக்கொன்று மீசனைக் கேடில் புகழோன்**
**தளைக்கொன்ற நாகமஞ் சாடல் ஒடுக்கத்**
**துளைக்கொண்ட தவ்வழி தூங்கும் படைத்தே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ” ஆருயிர்கள் மலப் பிணிப்பால் துன்பப் படுவதாகிய இளைப்பினை எய்தும். இளைப் பென்பது பொய்யை உண்மை யென்றும் உண்மையைப் பொய்என்றும் தீர் மானித்துச் செயலாற்றுவது. அதைத் தனது திருவருளால் உணர்ந்து பேரருள் புரிந்து உயிரை நன்நிலைப் படுத்துபவன் சிவன். அந்நிலை என்ன வென்றால் மென்மேலும் திருவருளை அள்ளி வழங்கி உயிரைச் சிவப்பேறு அடையுமாறு செய்தலாகும். இவ்வாறு பேரருள் புரிந்து உயிர்ப்பை அடக்கி நடு நாடியில் விந்துவுடன் சேர்த்து மேலும் பேலும் கட்டுற்று உயரும். ஒரு முறை மெய்யன்புடன் சிவனை நினைத்து செந்தமிழ் மந்திரமான “ நமசிவய ” என்று நினைத்தால் மனதுள் திருவருள் பெருகும். பின் தொடர் நினைப்பால் இன்பம் உண்டாகும். அந்த இன்பம் திருவடியைச் சேரவைக்கும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2000. பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி**
**சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு**
**வாய்ந்துகொள் ஆனந்த மென்னும் அருள்செய்யில்**
**வேய்ந்துகொள் மேலை விதியது தானே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடந்து சொன்னார், “கௌத்தமா, மனதைகட்டுப் படுத்துவது இயலாதகாரியமாகும். முழுமையான உறுதியும், எதுவந்தாலும் பொருட்படுத்தாத தன்மையும், துன்பங்கள், ஆசைகள், அவாக்கள் வரும் போது மனதை ஒரு நிலைப்படுத்தி சிவனை நினைக்கும் நினைவு தான் மனதைக் கட்டுப்படுத்தும்.

புலன்கள் ஐந்தும் புறத்தே பாயும் தன்மை கொண்டவை. நீ மதுபானம் குடிப்பவன். குடிப்பவர்களும் பெண்களின் தொடர்பும் உள்ளவர்களும் மனதைக் கட்டுப்படுத்தச் சிரமப் படுவர். குடித்தவனைக் கண்டது குடிக்க விருப்பமுண்டாகும். தொடர்புள்ள பெண்களைச் கண்டதும் மனம் கட்டுப்பாட்டை இழக்கும். பலர் குடிக்கமாட்டேன் என்று கோவிலில் கற்பூரம் கொழுத்திச் சத்தியம் செய்து விட்டுக் குடிப்பதை நான் கண்டிருக்கிறேன். நீ விரும்பாவிட்டாலும் உன்னுடன் தொடர்பு கொண்ட பெண்கள் உன்னை நாடி வருவார்கள். நீ இலஞ்சமாகப் பெறும் பணத்தின் பெரும்மதியைப் பெண்களுக்குத் தானே கொடுப்பவன். அதனால் அவர்கள் தேடி வருவார்கள். நேற்று உன்னைத் தேடிக் கவிதா என்ற பெண் வந்ததாகக் கேள்விப்பட்டேன். மனத்தின் வேகத்தைக் கணிக்க முடியாது. அது உலகில் உள்ள எல்லாவற்றின் வேகத்தையும் விட எத்தனையோ ஆயிரம் மடங்கு அதிகமானது. அதனால் தான் புலன்கள் பாயும் தன்மை கொண்டன என்று சொல்லப்படுகிறது. அந்தப் பாய்ச்சலைத் திருவருளால் அகற்றித் திருவருள் உணர்வு என்ற கட்டுத்தறியில் கட்டுதல் வேண்டும். அதற்குத் துணை செய்வது “ சிவசிவ ” என்ற செந்தமிழ் மந்திரம். மெய்யுணர் வோடு அந்த மந்திரத்தை உச்சரித் தால் சிவபெருமான் மகிழ்ந்து உனது மனத்தைக் கட்டுப்படுத்த உதவுவர். அதனால் திருவடிப் பேறு உண்டாகும். இதைத்தவிர வேறு எந்த வழிகளாலும் தறிகெட்டுப் பாயும் மனதைக் கட்டுப்படுத்த முடியாது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2001. நடக்கின்ற நந்தியை நாடோறு முன்னில்**
**படர்க்கின்ற சிந்தையைப் பைய வொடுக்கிக்**
**குறிக்கொண்ட சிந்தை குறிவழி நோக்கில்**
**வடக்கொடு தெற்கு மனக்கோயி லாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “செய்யும் செயல்கள் யாவும் எளிதாகவும் இனிதாகவும் இயல்பாகவும் மகிழ்வாகவும் நடைபெற வேண்டும் என்று செயலைத் தொடங்கு முன் நந்திக் கடவுளை வேண்டுதல் வேண்டும். சுத்தமான மனதுடன் அமைதியாக வேண்டினால் நந்திக் கடவுள் மகிழ்வுடன் உதவுவார்.அவரின் அருளால் திருவைந்தெழுத்தைக் கணித்தல் கை கூடும். வடபெருங் கல்லும் தென் பெருங்கடலும் எல்லையாகக் கொண்ட இடத்தில் விருப்புடன் குடியிருக்கும் சிவபெருமான் திருவைந் தெழுத்தை முறைப்படி ஒது வோரின் நெஞ்சில் கோவில் கொண்டருளுவான். இதன் படி நீ நடந்தால் மகிழ்வுடன் வாழலாம் பலர் துன்பங்கள் வந்த பின்பு தான் கடவுளை வணங்க முற்படுகிறார்கள். கோவிலுக்குச் சென்று வணங்குவதும் அர்சசனை செய்வதும் விழாக்கள் செய்வதும் வணக்கமாகாது. மனதை ஒருநிலைப்படுத்திப் பரபரப்பின்றிச் சில நிமிடங்கள் வணங்கினால் போதும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2002. சென்றன நாழிகை நாள்கள் சிலபல
நன்றது நீள்பொருள் நீர்மேல் எழுத்தொத்து
வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள்
குன்று விழவதில் தாங்கலு மாமே.**

" சிவனடியார்களே, கதிரேசன் கௌத்தமனுக்குச் சென்னார், " பெரும் பெரும் தவைந்தர்கள் தமது வாழ்வு நிலைக்குமென்று நினைத்து இறுமாப்புடன் வாழ்கிறார்கள். ஊரில் பெரும் தனவந்தன் சிவசாமி. அவனது இரண்டு பிள்ளைகள் வைத்தியர்கள். அவனுக்குத் திடீரென்று ஒரு விசித்திரமான நோய்வந்து. ஊர்வைத்தியர்கள் வைத்தியம் செய்து குணப்படுத்தாததால் வெளிநாட்டிற்குக் கொண்டு சென்றனர். வெளிநாட்டு வைத்தியர்களாலும் அவரது நோயைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. அதனால் ஆறு மாதங்கள் தங்கி வைத்தியம் செய்து விட்டு ஊருக்கு வந்தனர். வாழ் நாள் என்பது நாழிகை, நாள், மாதம், வருடம் என்று கழிந்து ஆயுளைக்குறைக்கும். பணம் பொருளால் எதையும் செய்யலாமென்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் இவ்வுடல் நீர்மேல் எழுத்துப் போன்றது. உடல் அழியுமுன் வாழ்வை நல்ல வழியில் மேம்படுத்த வேண்டும். திருவருளால் புலன்களை அடக்கி ஆசைகளைத் தவிர்த்து வாழுதல் வேண்டும். அப்படித் தவிர்த்தால் குன்று போல வரும் ஆசைகள் அகன்று விடும். சிவசாமி நோய் வாய்ப்பட்டிருந்த போது நான் அவரைப்பார்க்கச் சென்றேன். வைத்தியரான அவரது மகன் சிவபாலன் அவரது நோயை பெரிதாக எடுக்கவில்லை. அப்பா கோடி கோடியாகப் பணம் சேர்த்து வைத்துள்ளார். வெளி நாட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறோம். அங்கு அவரை இலகுவாக சுகப்படுத்தலாம் என்றவர். சென்று திரும்பிய பின் நான் சென்ற போது சொன்னார், "முன்பு நான் நீங்கள் சொல்வது எதையும் நம்புவதில்லை. இப்போ யோசித்துப் பார்த்தால் நீங்கள் சொல்வது உண்மை என்று தெரிகிறது. அடுத்த நேரச் சோற்றுக்கு வழியில்லாத கந்தசாமி எண்பது வயது கடந்தும் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் வாழ்கிறான். அவன் தனது பிள்ளைகள் தன்னைக் கவனிப்பது இல்லை யென்று கூடக்கவலைப் படுவதில்லை. மடத்தில் உண்டு விட்டு மகிழ்வுடன் வாழ்கிறான் அப்பாவுக்கு என்னகுறை அவர் உண்ட உணவு எப்படியானவை. அவருக்கேன் இந்த நோய் வந்தது என்று கவலைப்படுகிறான். நான் எதுவும் சொல்ல வில்லை கந்தசாமியைக் கேட்டுப்பார் என்றேன் என்றவர். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2003. போற்றிசைத் துப்புனி தன்திரு மேனியைப்
போற்றிசெய் மீட்டே புலனைந்தும் புத்தியால்
நாற்றிசைக் கும்பின்னை யாருக்கு நாதனை
ஊற்றுகை யுள்ளத் தொருங்கலு மாகுமே.**

" சிவனடியார்களே, சிவசாமியின் மகன் சிவபாலன். அவன் பெரும் வைத்தியன். அவனது மைத்துனன் ஆசிரியன். அவனது சகோதரன் வைத்தியன். சகோதரி மேலதிகாரி. இருந்தும்

அவனால் மகிழ்வுடன் வாழ முடியவில்லை. கதிரேசன் பாடசாலைப் பக்கம் செல்லாதவர். ஆனால் கற்ற ஊரவர் எல்லோரும் அவரை மதிக்கின்றனர். அவரிடம் ஆலோசனை கேட்கின்றனர். படித்தவர்களிடம் சென்று யாரும் ஆலோசனை கேட்பதில்லை. இது ஏன் என்று அன்று சிவசாமியை பார்க்க சென்ற கந்த சாமியிடம் கேட்டான் சிவபாலன். அதற்குச் கந்தசாமி சொன்னான்., “ ஐயா, கதிரேசன் சிவபெருமானைப் போற்றித் தொழுபவர். சிவ நினைவோடு புலன்களை அடக்கி நல்வழியில் வாழ்பவர். உலகெங்கும் உள்ள உயிர்களுக்கெல்லாம் தலைவன் சிவன் என்று உணர்ந்தவர். சிவனை நாள்தோறும் மெய்யன்புடன் வழிபடுபவர். பக்கம் சாராதவர். சிவனை வேண்டியபின்பே செயல்களைச் செய்பவர். எவ்வேளையிலும சிவ நினைவைத் தவிர வேறெந்த நினைவும் இல்லாதவர். உலகைப் புரிந்தவர். பணம் பொருளை மதியாதவர். அப்படியானவரின் உள்ளத்தில் சிவன் கோவில் கொண்டிருந்து அவரைக் கொண்டு சேவை செய்விக்கின்றான். மேற் சொன்னவை மனதில் இருந்தால் நடுநிலைமை உண்டாகாது. அதனால் தான் மக்கள் அன்பான தெய்வமாக பூசிக்கின்றனர் என்றவர் “ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2004. தரிக்கின்ற நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே**
**அரிக்கின்ற [2] ஐவரை யாரும் உணரார்**
**சிரிக்கின்ற வாறு சிலபல பேசில்**
**வரிக்கொண்ட மைசூழ் வரையது வாமே.**

“ சிவனடியார்களே, பாடசாலைக்குச் செல்லாத கந்தசாமி அறிவுடையவன் போலப் பேசியதுசிவபாலனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அதனால் அவன் கேட்டான்;

“ உனக்குப் பணம் பொருள் இல்லையென்ற கவலை இல்லையா.? ” அதற்குக் கந்தசாமி சொன்னான் “ உண்ண உணவும் உடுக்க உடையும், மற்றும் தேவையானவற்றைச் சிவன் அவ்வப்போது தருகிறான். பணம் பொருள் தேவை தான். ஆனால் அளவுக்கதிகமாகத் தேவையில்லை. பணம் பொருளால் எதையும் சாதிக்க முடியாது. சாதித்தாலும் அவை நிலைக்கப் போவதில்லை. சம்பாதித்தால் செலவுசெய்தல் வேண்டும். சேமித்து வைத்து விட்டுச் செல்வதால் பயன் என்ன? வைத்திலிங்கம் உண்ணாமல் உறங்காமல் சேமித்துத் தனது மகளுக்கு உயர்ந்த உத்தியோகத்தனுக்கு அதிக சீதனம் கொடுத்துச் செய்து வைத்தார். அவன் குடிகாரன். பொருளை அழித்ததோடு வேலையும் பறி போய் விட்டது. கதிரவேலு பெரும் பணக்காரன். இனிப்பு உண்ண மாட்டான். எண்ணெயில் பொரித்து உண்ண மாட்டான். சுவையான உணவு உண்ண மாட்டான். அவனுக்கு நாற்பது வயது. உண்ணாமல் வாழ்வதால் என்ன பயன்? நான் நன்றாக உண்டு மகிழ்வுடன் வாழ்கிறேன். பிள்ளைகளைப் பற்றி எண்ணுவதால் பயனில்லை. அவர்கள் தமது வாழ்க்கையைத் தாமே கெடுக்கிறார்கள். சொன்னாலும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அதற்காக கவலைப் பட முடியுமா? சிவபெருமான் தூமாயையை நிலைக்களமாகக் கொண்டு திருவருளைத்

திருமேனியாகக் கொண்டு வீற்றிருப்பவன். இது சிவனடியார்கள் திருநீற்றுப் பூச்சுடன் திருக்கோவிலில் இருப்பதை ஒக்கும். நான் உடல் முழுவதும் வெண்ணீறு பூசிக் கோவிலில் இருக்கிறேன். அதனால் நான் சிவனுடன் இருக்கிறேன். அதனால் எந்த பயமும் இல்லை. எந்த குறைகளும் இல்லை. சிவபெருமானின் திருவருளாலான மேனியைச் சகலம் என்பர். அந்த திருவுருவை நினைத்தால் இன்பம் பெருகும். அதனால் புறப் பொருட்களில் பற்று உண்டாகாது. பணம் பொருளைத் தேடி மகிழ்வுடன் இருக்கிறார்கள். மகிழ்வென்பது திருப்தி. உங்கள் தந்தைக்கு எப்போதாவது திருப்தி ஏற்பட்டதா.? திருப்தி உண்டானால் ஆணவம் போய் விடும். பற்றற்ற நிலை உண்டாகும். உறுதியான உடல் எனக்கு இருக்கு. பற்றற்ற மனமும் இருக்கு. சிவன் இருக்கிறான். இதை விட வேறு என்ன வேண்டும் என்றவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2005. கைவிட லாவதொன் றில்லை கருத்தினுள்**
**எய்தி யலனை யிசையினால் [2]ஏத்துமின்**
**ஐவ ருடைய அவாவினில் தோன்றிய**
**பொய்வ ருடைய புலன்களும் ஐந்தே.[3]**

“ சிவனடியார்களே,கந்தசாமி தொடர்ந்து சொன்னான். “ ஐயா, சிவன் வைத்தியநாதன். அவன் எல்லா நோய்களையும் தீர்த்து வைப்பவன். அத்துடன் தனது அடியவர்களுக்கு நோய் ஏற்படாமல் பாதுகாப்பவன். இது எப்படி என்று நினைக்கிறீர்களா? மூச்சுப் பயிற்சி செய்தல் வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும். தேவையில்லாதவற்றை எண்ணக்கூடாது. சைவ சமயம் ஒவ்வொருவருடைய நாளாந்தக் கடமைகளைச் சொல்லியவுள்ளது. அத்துடன் நோயில்லாமல் நூற்றாண்டுக்கு மேல் வாழும் வழிகளையும் கூறியுள்ளது. எனக்கு எண்பது வயது. நல்லைநாதனுக்கு எண்பது வயது கதிரேசனுக்கு எண்பது வயது மூவரும் இது வரை மருந்து வகைகளை உண்ணவில்லை. மிருகங்கள் தமக்குத் தாமே வைத்தியம் பார்க்கின்றன. அந்த முறையைக் கைக்கொண்டால் மருந்து உண்ணத்தேவையில்லை. உணவும் மதுவும் மாதும் தான் நோய்க்கான காரணிகள். உணவைக் குறைத்தால் பல நோய்களைத் தவிர்க்கலாம். சிவனை வழிபடல் வேண்டும். பணம் இருக்கு. கல்வி இருக்கு என்று அகங்காரங் கொண்டு சிவ வழிபாட்டைக் கைவிடக் கூடாது. ஆணவ வல்லிருளை வெல்வதற்காகத்தான் சிவராத்திரி விழாக் கொண்டாடப்படுகிறது. அன்று உபவாசமிருந்தால் நோய்கள் யாவும் பறந்து விடும். மனதை ஒருமுகப் படுத்தி திருமுறைகளை ஓதிச் சிவனை வழிபட வேண்டும். இது ஆருயிரைச் சிவனடியில் சேர்ப்பிக்கும். ஐம்புலன்களின் ஆசையினால் தறிகெட்டலையும் மலையாட்டைப் போன்றது மனம். அதைக் கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்திச் சிவனை நினைத்தால் நினைப்பவை எளிதில் கைகூடும். சிவ நினைப்பு உலக எண்ணங்களை மனதுள் செல்ல விடாது. இதை அனுபவத்தால் தான் உணர முடியும். கல்வியாலோ பணத்தாலோ உணர முடியாது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 26. அசத் குருநெறி

**2006. உணர்வொன் றிலாமூடன் உண்மையோ ராதோன்**
**கணுவின்றி வேதா கமநெறி காணான்**
**பணியொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்**
**அணுவின் குணத்தோன் அசற்குரு வாமே.**

“ சிவனடியார்களே, சிவகுரு எழுந்தருளி வந்து ஆருயிர்களை ஆட்கொண்டு அவற்றை நல் வழிப்படுத்தும் திருநெறிக்கு வழித்துணையாக நிற்பவன் குலகுரு. அவன் தான் குலதெய்வம். குலகுரு என்பவர் திருக்கோவில் வழிபாட்டைச் செய்வித்து சிவ தீக்கை செய்விப்பாருமாவார். அவர்கள் செம்மையாக இருத்தல் வேண்டும். அதற்குப் பொருத்தமில்லாதவர்கள் திருந்தாத மாக்களாவர். சிவ உணர்வில்லாத மூடர். முப்பொருள் உண்மையை உணராதவன். அருமறையான திருவைந்தெழுத்தை ஓதாதவன் . செந்தமிழ் வேதாக மொழியை அறியாதவன். தாழ்வு என்ற தன்மையான அன்பும் பணிவும் ஒரு சிறிதும் இல்லாதவன், சிவபெருமானையும் சித்தாந்த சைவத்தையும் இகழ்பவன், பிறப்பு இறப்புக்குட்படும் ஆணவச் செருக்குடையவனாவான். என்று கந்தசாமி கூறக்கேட்ட சிவபாலன் மனக் கலக்கத்துடன் கதிரேசனிடம் வந்து அது பற்றிக் கேட்ட போது கதிரேசன் சொன்னார், “ மகனே, அழுத பிள்ளை தான் பால் குடிக்கும். உனது தந்தை கோவில் வாசலை அறியாதவர். நீ கேட்டதற்காகச் சொல்கிறேன். நீ படித்தவன். வைத்தியன். எழுத்தறிவில்லாத நான் எப்படி சொல்வது. உனது தந்தையைக் குணப் படுத்த முடியும். அதற்கு முதலில் அவருக்குச் சிவ உணர்வை உண்டாக்க வேண்டும். சிவனது பெருமையை தெரிந்து கொள்ளல் வேண்டும். ஐந்தெழுத்தை ஓதுதல் வேண்டும். சிவனடியார்களை மதிக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் சிவனின் அணியான திருவருளைப் பெற முடியாது. நீ வைத்தியன். நோய்களை குணமாக்குபவன். எந்த நோயைக் குணப்படுத்த முடியும். நோய்கள் மருந்துகளால் சற்று விலகியிருக்கின்றன. பின் வந்து சேர்கின்றன. சில நோய்களை மருந்துகளால் மாற்ற முடியாது. இது உனக்குத் தெரியும். ஆனால் மூச்சுப் பயிற்சியாலும் அகத் தவத்தாலும் மனவொடுக்கத்தாலும் பிரார்த்தனையாலும் எல்லா நோய்களையும் திரும்பி வராத படி மாற்றலாம். நீ கதைக்கும் போது இளைக்கிறாய். பலவீனமாக இருக்கிறாய். தடுமாறுகிறாய். இதற்கு மருந்து மூச்சுப்பயிற்சியும் அகத்தவமும் தான். விரும்பினால் சொல் அவற்றைச் சொல்லித்தருகிறேன். ஆறு மாதங்கள் தொடர்ந்து செய் நோய் முற்றாகக் குணமாகும். என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2007. மந்திர தந்திர மாயோக ஞானமும்**
**பந்தமும் வீடுந் தரிசித்துப் பார்ப்பவர்**
**சிந்தனை செய்யாத் தெளிவியா தூண்பொருட்டு**
**அந்தக ராவோர் அசற்குரு வாகுமே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், ‘‘விஞ்ஞானம் படித்த உனக்கு மெஞ்ஞானத்தில் இராது. நம்பிக்கையிருந்தால் ஒரு வனாரத்திற்காவது செய்து பார். எதையும் செயல்மூலம் அறிவது தான் உண்மையானதாகும். நீ செய்து பார்த்து விட்டுச் சொல். தேவையில்லாத மருந்துகளை விட்டுவிட்டு உணவை மருந்தாக உண். சித்தர்கள் அப்படி உண்டமையால் தான் நோயின்றி பல காலம் வாழ்ந்து அரிய பல செயல்களைச் செய்தனர். உணவுக் கட்டுப்பாடும் மன அமைதியும் உடலில் உள்ள நோய்களைச் சுகமாக்கும். மந்திரங்களின் உண்மையும், அதன் பொருளுண்மையும், யோகப் பயிற்சியும் அதனால் வரும் ஞானமும், பிறப்பிறப்பை மட்டுமல்ல நோய்களையும் நீக்கும். நல்லவர்களின் நட்பும் உபதேசமும் வாழ்வை முன்னேற்றும். அதனால் தான் சைவ சமயம் குருவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. குருவைச் சிவனாக எண்ணி அவர் வழியில் வாழ்வோருக்குத் துன்பமிராது. இதை விட்டு விட்டு உழைப்புக்காக போலி வேடமிடுவோரை நம்பித்தான் பலர் அழிகின்றனர். உனது தந்தை போலியான ஒருவரைக் குருவாக நிதைத்தமையால் தான் அவருக்கு இந்த நிலை ஏற்பட்டது. இப்படியானவர்கள் அகக் கன குருடானவர்கள். அத்துடன் புறக் கண்களும் குருடானவர்கள். எதற்கும் குரு வேண்டும். எதையும் தெரியாமல் பிறக்கும் மனிதன் எதை தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் அதை தெரிந்து கொண்டவரிடம் தான் அறிய முடியும். அப்படி அறிவிப்பவர் தான் குரு. அவ்வகையான குரு ஒழுக்கமுள்ளவரானால் தான் அவரும் பயன் பெற்று மற்றவர்களுக்கும் பயனுள்ளவராக வாழ்வார் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2008. ஆமா றறியாதோன் மூடன் அதிமூடன்**
**காமாதி நீங்காக் கலதி கலதிகட்கு**
**ஆமா றசத்தறி விப்போன் அறிவிலோன்**
**கோமா னலனசத் தாகுங் குரவனே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார். ‘‘உனது தந்தையைக் கெடுத்தது தமிழ் நாட்டிலிருந்து இருந்து வந்த போலிச் சாமியொருவன். அவன் அவரை மயக்கி வைத்திருந்தமையால் அவர் உண்மையை உணர்ந்து கொள்ளவில்லை. அவன் அடிக்கடி மக்களைச் சந்திப்பான். அவனது பொய் உரைகள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கை உண்டு பண்ணின. பிறப்பற்று இன்பமாக வாழ்வதற்கான வழியை அறியாதவர்கள் உண்மையை அறியாதோராவர். அந்தப் போலி வேடதாரியை பற்றிப் பல புகார்கள் ஊரில் எழுந்த போது நான் உனது தந்தைக்கு உண்மை நிலையைப் புரிய வைக்க விரும்பினேன். அதை அவர் ஏற்கவில்லை. காமம், வெகுளி, மயக்கம் என்ற முக்குற்றங்களும் நீங்காத அந்த மூடனை உனது தந்தை அவதார புரிசனாக நினைத்தார். செத்துச் செத்து பிறக்கும் மால் முதலிய சிறு தெய்வங்களையும், கோள்களையும், அவற்றைப பெரிதாக கூறும் மறைகளையும், அவற்றைக் கொண்டாடும் ஆசிரியர்களையும் நன்கு மதித்துப் பூசை செய்பவர்கள் போலிக் குருவாவர். இவர்கள் தாம் கெடுவது மட்டுமல்லாது பிறரையும் கெடுத்து வாழ்பவர்கள். இதை அறிந்த ஊரில் உள்ள சிலர்

அவரை அடித்துத் துரத்தினர். அதனால் நான் தான் அதைச் செய்வித்ததாக நினைத்த உனது தந்தை என்னோடு முரண்பட்டவர். அதனால் தான் அவருக்கு மனக் குழப்பத்தால் நோய் உண்டானது என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2009. கற்பாய கற்பங்கள் நீக்காமற் கற்பித்தால்**
**தற்பாவங் குன்றுந் தனக்கே பகையாகும்**
**நற்பால் அரசுக்கு நாட்டுக்கும் கேடென்றே**
**முற்பாலே நந்தி மொழிந்துவைத் தானே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் மேலும் சொன்னார், ''குலகுருவாக வருபவர் ஆருயிர்களின் மனதில் தவறான எண்ணங்கள் வரும் போது அதை நீக்கி நல்வழிப்படுத்துதல் வேண்டும். அதை விட்டுவிட்டுத் தவறான எண்ணங்களை வளர்த்தால் அதனால் துன்பங்கள் தான் வரும். இப்படியானவர்கள் அதனால் வரும் பயனிலேயே கருத்தாக இருப்பார்கள். அதனால் அவரது உபதேசத்தை கேட்பவர்களும் அந்த நிலைக்கு வருவார்கள். அது மனித மேம்பாட்டுக்கு முரணானதாக இருக்கும். அறநெறிப்படி ஆட்சி செய்யாத அரசனால் ஏற்படும் கேட்டைப் போலப் போலியான குருவால் பெருங்கேடு உண்டாகும். இதை அறியாது உனது தந்தை அப்போலிச் சாமியாரை நம்பி மோசம்போனவர் என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2010. குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்**
**முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்**
**குருடரும் வீழ்வர்கள் முன்பின் னறவே**
**குருடரும் வீழ்வார் குருடரோ டாயே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், ''சிவா குருடர்க்கு குருடர் வழிகாட்டுவது போல அப்போலிக் குருவை நம்பிக் அறியாமை மிகுந்த மக்கள் அவரது மயக்கு வார்த்தைகளை நம்பித் தமது பொருட்களை கொடுத்தனர். தமக்கு வரும் நோய்களை அவர் தீர்ப்பாரென நம்பினர். பேய் பிசாசுகளையும் விரட்டுவாரென நம்பினார். அதனால் பலர் தமது பெறுமதியான பொருட்களை இழந்தனர். யாரும் எதைச் சொன்னாலும் கேட்காது அப்போலிக்குருவை நம்பினர். சிலர் அவரின் மகிமையை எடுத்து கூறினர். உண்மையை சொல்லப் போன நல்லைநாதனைத் தாக்கினர். அவர்கள் அகக் கண் குருடானவர்கள் என்று தெரிந்தமையால் நான் அவற்றில் தலையிட விரும்பவில்லை. அகக்கண் குருடாக இருப்பவரும் புறக்கண்கள் குருடாக இருப்பவரும் கோலத்தால் குருவாக நடிப்பர். அக்குரு ஆச்சிரமத்தில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூசைகள் வழிபாடுகள் செய்து மெய்யுணர்வுக்குத் துணை செய்வது போல வெளிக் காட்டி மக்களைக் கவர்வர். அதையறியாதவர்கள் அதை மெய்யெனநம்பி பாழ்குழியில் விழுவர். இது தான் நடைபெற்றது அதை உண்மை என்று நம்பிய சிவசாமி உண்மையை அறிந்ததும் அறிவிழந்து போனார் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 27. சற்குரு நெறி

**2011. தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து தன்னை யறியத் தரவல்லோன்
தாடந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாடற்து பாசந் தணிக்கு மவன்சத்தே.**

“ சிவனடியார்களே. இமய மலையில் வீற்றிருந்து தவம் செய்து வரும் நமசிவாயம் சுவாமிகள் எமது ஆச்சிரமத்திற்கு வருகை தந்திருக்கிறார். அவர் மெய்யடியார்களுக்கு குருவாகித் தீக்கை கொடுக்க விருகிறார். கதிரேசனுக்கு நேற்று தீக்கை கொடுத்தார். இனி அவர் தான் விரும்பியவர்களைத் தனது மாணவனாக ஏற்று கொள்வார். சிவகுருவாக எழுந்தருளி வந்து ஆட்கொள்ளும் சிவனும் அதற்கு வழித்துணையாக நிற்கும் குலகுருவும் கருத்தில் ஒருவரேயாவார் என்பது உங்களுக்குத் தெரியும். சிவபெருமானின் திருவடியினைத் தந்தருள்பவனே மெய்க்குரவன். மெய்குரவன் என்பதும் சற்குரு என்பதும் ஒருவரையே. திருவடியினைத் தந்தருளி தன்னை வெளிப்படுத்துபவனே சிவகுரு எனப்படும் மெய்க்குரு. தாளை அருளித் தத்துவாதீதமாகிய அப்பால் நிலைக்கான ஆருயிரைச் சாரச் செய்பவன் குரு. திருவடியினைத் தந்த பின் பாசத்தை அகற்றியருள்வான். அவன் என்றும் உள்ள மெய்ப்பொருளாவான். “ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2012. தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்
தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்
தவிரவை தான்நமன் தூதுவர் கூட்டந்
தவிரவைத் தான்பிற வித்துயர் தானே.**

“ சிவனடியார்களே. சிவகுருவாக எழுந்தருளி வரும் சிவன் ஆருயிர்களுக்கு அருளளிக்கும் செயற்பாடுகள் பலவாகும். அவையாவன, தனது அடியவர்களின் வினைகளை நீக்கியருள்வான். தன்னடியார்களை கோள்களான நவக்கிரகங்களின் துன்புறுத்தால் அவர்கள் ஏவும் தொழில்களை செய்விக்கும் தன்மையை உருவாக்குவான். யமனது தூதுவர்களைத் தன்னடியாரின் அருகில் வராதிருக்க அருளுவான். இமயமலையில் இருந்து வந்த நமசிவாயகம் சுவாமிகள் ஆச்சிரமத்தில் உள்ளவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருப்பின் கேட்டுத் தெளிவடையுங்கள். நீங்கள் தெளிவடைந்தால் தான் மகிழ்வுடன் சிவனை வணங்க முடியும் என்ற போது ஓர் அடியவர் எழுந்து, “ சுவாமி. சிவனடியார்களைக் கோள்கள் தாக்காது எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். . எனக்கு ஏழரை சனி நடைபெறுகிறது. அதனால் சோதிடர்கள் என்னை வெருட்டுகின்றனர். எனக்கு மூன்றாவது சனியான மரணச் சனி நடைபெறுகிறது. அதனால் துன்பங்கள் உண்டாகுமா

என்று கேட்டார். அதற்கு நமசிவாயம் சுவாமிகள் சொன்னார்: “ சிவனை வணங்குவோரெல்லாம் சிவனடியார்கள். பற்றற்று விருப்புடன் வணங்கும் மெய்யணர்வுள்ள சிவயோகிகளைத் கோள்களால் எதுவும் செய்ய முடியாது. யமனும் வர அஞ்சுவன். கோள்களுக்குச் சக்தியை கொடுப்பது சிவன். சிவனின்றி அணுவும் அசையாது. அதனால் சிவனை இறுக்கமாகப் பற்றிப் பிடிப்போர் எதற்கும் அஞ்ச மாட்டார்கள். சிவனின் அனுமதியின்றிக் கோள்கள் எதுவும் செய்யாது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2013. கறுத்த இரும்பே கனகம தானான்**
**மறித்திரும் பாகா வகையது போலக்**
**குறித்தஅப் போதே குருவருள் பெற்றான்**
**மறித்துப் பிறவியில் வந்தணு[1] கானே.**

“ சிவனடியார்களே, நமசிவாயகம் சுவாமிகள் தொடர்ந்து சொன்னார். “ சிவனை வணங்குபவனின் உறுதியைப் பொறுத்தே செயல்கள் அமையும். உறுதியான மனதுடன் நம்பிக்கை, இரும்பு வேதிப்பவனது உறுதியால் செம் பொன்னாக மாறும். அங்ஙனம் செம் பொன்னான இரும்பு மீண்டும் இரும்பாக மாறாது. அவ்வாறு அடியவர்களின் நிலையறிந்து சிவகுரு எழுந்தருள்வான். அப்பொழுது குருவருள் கிட்டும். அக்குருவருள் பெற்றவன் மீண்டும் பிறக்க மாட்டான். கதிரேசன் மெய்யுணர்வு மிகுந்த சிவயோகி. நான் இமய மலையில் இருக்கும் போது சிவன் எனது மனதில் வந்து கதிரேசனை ஆட்கொண்டு சிவ தீக்கை கொடு என்றவர். சிவனின் அனுமதியோடு தான் சிவனடியார்களை குருவால் ஏற்று கொள்ள முடியும் என்றவர் ” என்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2014. பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்**
**நேசத்து நாடி மலமற நீக்குவோர்**
**ஆசற்ற சற்குரு வாவோர் [2]அறிவற்றுப்**
**பூசற் கிரங்குவோர் போதக் குருவன்றே.**

“ சிவனடியார்களே, திருவருளால் சிவபெருமானுடன் தன்னையும் அன்பினால் ஆராய்ந்து அருளால் பாசத்தை நீக்கியவரும், ஏனையோர்க்கும் அவ்வருளினாலே மலத்தை அறுத்து நீக்குபவர் தான் மெய்க்குரவராவர். அவ்வாறு இல்லாமல் நல்ல அறிவு சிறிதளவும் இல்லாது மாயப்போக்குடையவர் ஒருபோதும் மெய்யுணர்வுக்குரவராகார். ”

“ சிவனடியார்களே, சுலபமாகப் பணம் சம்பாதிக்க வழி சிவவேடமிடுதல் என்று உணரும் புல்லறிவாளர்களை தாம் மெய்க்குரவர்கள் என்று வேடந்தாங்கிவந்து மக்களை ஏமாற்றுகிறார்கள். அவர்களை இனங்காணுதல் வேண்டும். சமீபத்தில் அயலூருக்கு வந்த போலிக்குருவெருவர் திருநீற்றை பெற்றுக் கொடுத்தார். சிலருக்கு தங்க நகைகளை பெற்றுக் கொடுத்தார். சிலருக்குச் சிவலிங்கத்தை எடுத்து கொடுத்தார். இது மாயவித்தை.

இதைப் பழக்கப்பட்டோர் இலகுவாகச் செய்வர். இங்கு போர்நடைபெற்ற பொது மக்கள் பட்டினியால் பெருந்துயரப்பட்டனர். அப்போது அப்போலி சாமி அயலூரிலேயே இருந்தார். ஒரு அடியவன் வந்து, “ சுவாமி, நீங்கள் சிவனிடம் திருநீறு, சங்கிலி, சிவலிங்கம் ஆகியன பெற்று கொடுக்கிறீர்கள். தயவு செய்து பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவு பெற்றுக் கொடுங்கள் என்ற போது நாளை சிவ பூசை செய்து பெற்று தருகிறேன். என்று கூறிவிட்டு அப்போலிச் சாமி ஊரை விட்டு வெளியேறிச் சென்று விட்டான். இவை யாவும் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் செய்யப்படுபவை. இவற்றை நம்பி ஏமாறாதீர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2015. நேயத்தே நிற்கும் நிமலன் மலமற்ற**
**நேயத்தை நல்கவல் லோனித்தன் கூத்தனே**
**ஆயத்த வர்தத் துவமுணர்ந் தாங்கற்ற**
**நேயர்க் களிப்பவன் நீடுங் [3]குரவனே.**

“ சிவடினயார்களே, இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய முழுமுதற் சிவன் அன்பரது உள்ளத்தாமரையில் அருளால் பிணைந்து நிற்பவன். குற்றமற்ற தன்னைத் தனது மெய்யன்பர்களுக்குக் கொடுத்து அவர்களைத் தனது சுற்றத்தவராக்கிக் கொள்பவன். என்றும் அழியாத முழுமுதல்வன். இயற்கையாகவே தூய்மையானவன். சிவமெய்யடியவர்களின் உள்ளத்தில் திருவருளால் கூடி மெய்யுணர்வைக் கொடுத்தருள்பவன். மெய்யுணர்வு கைவரப் பெற்றவர் தத்துவம் உணர்ந்தோராவர். அவரே மலப்பகை அற்றவராவர். அத்தகையோர் சிவனைப் போன்று பேரன்புடையவராவர். அவர்களுக்கு திருவடிப்பேற்றை அளிப்பவனே நிலைபெற்ற மெய்க்குரவன் ஆவான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2016. பரிசன வேதி பரிசித்த தெல்லாம்**
**வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்**
**குருபரி சித்த குவலயம் எல்லாந்**
**திரிமலந் தீர்ந்து சிவகதி [1]யாமே.**

“ சிவடினயார்களே, பொன்னாக்கும் மருந்தை பரிசனவேதி என்பர். இதனைப் பொன்னாக்குவது எனச் சொல்வதும் பொருந்தும். பண்டைய மக்கள் இதனைக் குளிகை என்றனர். அக் குளிகை உலகியற் பொருட்களில் பட்டவுடன் அவற்றைப் பொன்னாக்கி விடும். அது போல மெய்க்குரவனாகிய சிவகுரு தொட்டவுடன் மும்மலங்களும் அகன்று ஆருயிர் சிவனைச் சென்று அடையும். அவர்கள் சிவ கதியடைந்து சிவனாகிச் சிவனோடு இருப்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2017. தானே யெனநின்ற சற்குரு சந்நிதி**
**தானே யெனநின்ற தன்மை வெளிப்படில்**
**தானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற**
**ஊனே யெனநினைந் தோர்ந்துகொள் [2]உன்னிலே.**

“ சிவடினயார்களே, சிவபெருமான் ஆருயிர்களோடு சேர்ந்து அவ்வுயிராகவே நின்றருள்கின்றான். அத்துடன் அவ்வுயிரைத்தானாக இருப்பதற்கும் அருளுவான். இது நன்கு கற்றுணர்ந்த புலவனொருவன் தனது புலமையை வெளிப்படுத்தாது உள்ளடக்கிப் பொதுவான ஆளெனத் தோன்றுவதைப் போன்றது. அப்போது பொது நிலையான ஆளியல்பு உள்ளடங்கப் புலமை மேலோங்கி சிறப்பான புலவன் எனப்புகழப்படுவான். உயிரானது சிவனின் சிவனான தன்மை வெளிப்பட்டால் அவ்உயிர் திருவடி உணர்வால் தானாகவே தன்னை உணரும். ”

“ சிவடினயார்களே, ரவீந்திரன் கல்வி அமைச்சில் ஓர் உயர் அதிகாரி. ஆனால் அவன் அதை வெளிப்படுத்துவதில்லை. சாதாரண ஒரு குடி மகனாகவே அவன் நடந்து கொள்வான். ஏதாவது பொது நிகழ்வுகளுக்குச் சென்றால் அவன் பொது மக்களோடு பொது மக்களாய் பின் வரிசையில் அமர்ந்திருப்பான். அவனை அடையாளம் காண்பவர்கள் பரபரப்புடன் வந்து அவனை அழைத்துச் சென்று உரிய மதிப்புக் கொடுத்து மேடையில் இருத்திக் கௌரவிப்பார்கள். அவன் தனது பதவியை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. அதை உணர்ந்தவர்கள் தான் அவனைக் கௌரவிப்பர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2018. வரும்வழி போம்வழி மாயா வழியைக்**
**கருவழி கண்டவர் காணா வழியைப்**
**பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்**
**குருவழி யேசென்று கூடலு மாமே.**

“ சிவடினயார்களே, வினைக்கீடாக வரும் வழியான பிறப்பும், பின் செல்லும் வழியான இறப்பும் ஒரு போதும் மாறாத மறையாத அழியாத மாயம் மிகுந்த வழியாகும். இவ்வழியினைப் பிறக்கும் கருவழி கண்டவர் காண்பர். இவ்வழியினைக் காணாதவர்கள் அருளால் பெருவழி காண்பர். அவ்வழி நந்தியெம் பெருமானால் மகிழ்ந்து காட்டப்பட்ட நல்வழியாகும். அதுவே நன்நெறியும் திரு நெறியும் ஆகும். அதைச் சிவகுருவின் திருவழிச் சென்று பெறல் வேண்டும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2019. குருவென் பவனே வேதாக மங்கூறும்**
**புரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்து**
**ஒருசிந்தை யின்றி உயர்பாச நீக்கி**
**வருநல் குரவன்பால் வைக்கலு மாமே.**

“ சிவடினயார்களே, சிவகுரு என்று அழைக்கப்படுபவன் செந்தமிழ் மறையையும், வேதாகமங்களையும் சிறப்பாக ஓதும் பேரின்ப வடிவினன். அவனைச் சேர்ந்த உயிர்களைச் சிவயோகத்தில் சேர்ப்பதற்கான செயல்களைச் செய்தருளுவான். அதனால் திருவடியுணர்வைப் பெற்ற உயிர் வேறு எதையும் எண்ணுவதில்லை. அவ் உயிரை திருவடியுணர்வுக்குட்படுத்தி மேம்படச் செய்து பாசப்பசைகளை அகற்றி திருவடி நிழலில் சேர்ப்பிப்பவன் சிவகுருவாவான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2020. சத்தும் அசத்துஞ் சதசத்துந் [1]தான்காட்டிச்**
**நித்தும் அசித்துஞ் சிவபரத் தேசேர்த்துச்**
**சுத்த மசுத்த மறச்சுக மானசொல்**
**அத்தன் அருட்குரு வாமவன் கூறிலே.**

“ சிவடினயார்களே, மெய்ப்பொருளான சிவம் சத்து என்று சொல்லப்படுவது. அழிவில்லாததாகவும், ஆற்றல் உள்ளதாகவும் அறிவில்லாததாகவும் இருப்பது மலம். அதை அசத்து என்று சொல்லப்படுகிறது. சத்து நிலையுள்ளது. அசத்து நிலையில்லாதது. மெய் பொய் என்பவற்றிற்கு இவையே பொருள். மலம் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். ஆருயிர்கட்கு நிலையில் மலத்துடனும், ஒட்டு நிலையில் சிவத்துடனும் ஒடுங்கி அதுவது வாய் நிற்கும். இந்நிலைக்கு பளிங்கு கண் வானம் என்பன ஒப்பாகச் சொல்லப்படும். உயிரைச் சார்பி என்று சொல்வர். முப்பொருள் உண்மையை உள்ளவாறு எடுத்துக் காட்டுபவன் சிவகுரு. அறிவுள்ள உயிருக்கும் அறிவில்லாத உடல் உலகங்களுக்கும் சார்பிடமாக நிற்கும் பேரறிவுப் பெரும் பொருள் சிவன். ஆருயிர் அருட்குரவனால் பொருளுண்மையை உணர்வது தூ நிலையாகும். ஊண்மையை உணராத நிலை தூவா நிலையாகும். இவ் இரு நிலையையும் அறுப்பவன் சிவகுரு. மாறாத இன்பத்தைத் தரும் ஐந்தெழுத்தை அருளிச் செய்வதும் அவனே. அத்தகைய அத்தனாகிய அருட்குருவின் அருளால் யாவும் விளக்கமுறும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2021. உற்றிடும் ஐம்மலம் பாச வுணர்வினாற்**
**பற்றறு நாதன் அடியிற் பணிதலாற்**
**சுற்றிய பேதந் துரியமூன் றால்வாட்டித்**
**தற்பர மேவுவோர் சாதக ராமே.**

“ சிவடினயார்களே, ஆருயிர்களுக்குப் பாசத்தினால் ஆவணம் கன்மம் மாயை மாயை யாக்கம் நடப்பாற்றல் ஆகிய ஐவகையான மலங்கள் பொருந்தின. இவை சிவனது திருவடியில் திருமுறைகளைப் பாடி வழிபட்டதால் அகன்றன. எனினும் உயிர்களைச் சூழ்ந்துள்ள உலகியல் நுகர் பொருட்களில் உள்ள அவாவினைப் பேருறக்கமாகிய துரியை மூன்றால் அகற்றினார். அகன்றதும் சிவபெருமானின் திருவடிப் பேறுகிடைத்தது. அது கிடைத்ததும் இறவாப் பேரின்பமும் கிடைத்தது. அதுவே நன்நெறிப் பயிற்சியாகும். இவரையே சாதகர் எனக்கூறுபர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2022. எல்லாம் இறைவன் இறைவி யுடனின்பம்**
**வல்லார் புலனும் வருங்கால் உயிர்தோன்றிச்**
**சொல்லா மலமைந் தடங்கியிட் டோங்கியே**
**செல்லாச் சிவகதி சேர்தல் [1]விளையாட்டே**

“ சிவடினயார்களே, ஆருயிர்களுக்கு எல்லாவற்றையும் அருளிச் செய்யும் சிவனும் சிவையும் அவ்வுயிர்களின் பக்குவத்திற்கேற்ப திருவடி இன்பத்தை அருளிச் செய்ய வரும் போது வலிமை மிக்க ஐம்புலன்களும் அதற்கு உடந்தையாகப் பசு கரணங்கள் எல்லாம் பதிகரணங்களாகச் சொல்லாமலே செயற்படத் தோன்றும். பின் அவை அமைந்து அடங்கும் துணையாகி விடும். சிவபெருமான் அவ்வுயிர்களை மேன்மேலும் பெருகி என்றும் நீங்காது நிற்கும் இன்பத்துள் நிலை பெறச்செய்தருள்வன். இது தான் ஆருயிர் அடையும் சிவகதிப் பேறாகும். இது சிவனது விளையாட்டாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2023. ஈனப் பிறவியில் இட்டது மீட்டூட்டித்**
**தானத்து ளிட்டுத் தனையூட்டித் தாழ்த்தலும்**
**ஞானத்தின் மீட்டலும் நாட்டலும் வீடுற்று**
**மோனத்துள் வைத்தலும் முத்தன்றன் [1]செய்கையே.**

“ சிவடினயார்களே, ஆருயிர்களின் அறிவை பெருக்குதல் வேண்டும். அவற்றில் உள்ள மலங்களை நீக்குதல் வேண்டும். அதற்குக் குருவொருவன் வேண்டும். அவனே சிவபெருமான். மக்களைப் இறப்பினர், சிறப்பினர், விறப்பினர் என வகுக்கலாம். பிறப்பினர் மீண்டும் மீண்டும் பிறக்கும் வினையினர். இறப்பினர் வினையில் இருந்து நீங்கியவர் சிறப்பினர் வீடு பேறு பெற்று உயர்ந்தோர். மக்களுக்கு அகத்துள் இருப்பதோடு புறத்தும்

வெளிப்பட்டு முனைத்து நின்று துணைபுரிபவன் சிவன். அதனால் எல்லா வகையிலும் வல்லவராக நல்லவராக வாழப் பழக்குவதே. அதனால் நம்மைக் கொண்டே நம்மைச் செம்மைப்படுத்தி அருள்பவன் சிவன். இதற்காக அவன் ஆருயிர்களைத் தாழ்வான பிறவிகளில் பிறப்பிக்கின்றனன். இருவினைப் பயனை வருவினை பெருக்க ஊட்டுகின்றனன். அவற்றில் இருந்தும் மீட்பிக்கின்றனன். உயர்ந்த நிலையில் வைக்கின்றனன். தங்கச் செய்கின்றனன். ஞானப்பிறப்பினை நல்கின்றனன். பிறவாமையை அருள்கின்றனன். திருவடியில் அமரச் செய்கின்றனன். வீடுபேற்றைத் தருகின்றனன். இவையே இறப்பு உயிர்களுக்குச் சிவனார். செய்விக்கும் செய்கைகள் ஆகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2024. அத்த னருளின் விளையாட் டிடஞ்சடஞ்**
**சித்தொ டசித்தறத் தெளிவித்த சீவனைச்**
**சுத்தனு மாக்கித் துடைத்து மலத்தினைச்**
**சத்துட னைங்கரு மத்திடுந் தன்மையே.**

“ சிவடினயார்களே, சிவபெருமான் செய்தருளும் திருவைத்தொழிலின் திரு விளையாட்டிடம் ஆருயிர்களின் உடம்பாகும். அறிவுள்ளவை எவை அறிவில்லாதவை எவை என்று ஆருயிர்களுக்கு அறிவித்து அவ்வறிவினால் தெரிவிக்கப்பட்ட உயிரின் மலத்தை நீக்கி அருளுகின்றனன். உண்மைப் பொருளாகிய தன் வண்ணம் ஆக்குகின்றனன். இவையே திருவைந்தெழுத்தின் சிறப்பால் பெறப்படும் பேரின்பப் பேற்றினுக்கு வாயிலாகிய திருவைத்தொழிலாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2025. ஈசத்து வங்கடந் தில்லையென் றப்புறம்**
**பாசத்து ளேயென்றும் பாவியும் [2]அண்ணலை**
**நேசத்து ளேநின்ற நின்மலன் எம்மிறை**
**தேசத்தை யெல்லாந் தெளியவைத் தானே.**

“ சிவடினயார்களே, ஈசத்துவம் என்று சொல்லப்படும் ஐந்தொழில்களின் தன்மையையும் கடந்து அதற்கு மேல் ஒன்றும் இல்லையென்றும், அதன் பின்பு உற்று நோக்கும் போது எல்லாம் பாசமாகிய மாயையின் காரியத்துள்த்தான் என்று உயிர் நினைக்கும் எனக்கு அடியேனின் அன்புள்ள நெஞ்சத்து எழுந்தருளும் சிவபெருமான் அண்ணலாகிய தன்னையும், தன்னால் காக்கப்படும் உலகத்தையும் பிறவற்றையும் என்னுள்ளே தெரியக்காட்டி அருளினான். அச்சிவபெருமானே எம் தலைவனாவான். அவனே இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய தூயவனுமாவான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2026. மாணிக்க மாலை மலர்ந்தெழு மண்டலம்**
**ஆணிப்பொ னினறங் கமுதம் விளைந்தது**
**பேணிக்கொண் டுண்டார் பிறப்பற் றிருந்தார்கள்**
**அசத்தொடு சத்தும் அசத்சத்து நீங்க**

“ சிவடினயார்களே, செம்மணி ஒளிக்கற்களின் கதிர்கள் போல விரிந்து பரவி ஒளிவிடும் மண்டலம் புருவநடுவாகும். சிவபெருமான் அறிவுப்பெரு வெளியில் நின்று அருளுகின்றான். அதனால் திருவடிப் பேரமிழ்தம் பெருகிப் பாய்ந்தது. அவ்வமுதத்திருவருளால் சிவ சிவ என மறவாது உணர்விற் கணித்து உண்டு மகிழும் நற்றவத்தினர் பிறப்பற்ற நல்லோராவர். உண்மையை உணராது ஊனுண்டு வாழும் மக்கள் மாக்களே யாவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2027. அசத்தொடு சத்தும் அசத்சத்து நீங்க**
**இசைத்திடு பாசப்பற் றீங்கறு மாறே**
**அசைத்திரு மாயை அணுத்தானு மாங்கே**
**இசைத்தானு மொன்றறி விப்போன் [1]இறையே.**

“ சிவடினயார்களே, அசத்து என்று சொல்லப்படுகின்ற அறிவில்லாதவர்களும் அத்தாகிய அறிவுப் பொருளான உயிரும் தனித்தனியாக நிற்பின் பயன் எதுவும் உண்டாகாது. அவ் அசத்தாகிய அனைத்தும் அருளால் நீங்குதல் வேண்டும். நீங்கினால் பாசப்பற்றுக்கள் அகன்று போய்விடும். காரணமாயையில் இருந்து தோன்றிய காரிய மாயையாகும். அம்மாயை மலகன் மங்களோடு விரவாத தூமாயை. அவற்றுடன் விரவியபகுதி தூவாமாயை. இவ்விரு மாயைகளும் அணுவாகிய சிற்றுயிரும் பேருயிராகிய சிவனும் ஆகியவற்றை இசைத்தருளுபவன் சிவன். அத்துடன் திருவைத்தெழுத்தை அறிவித்து அருள்பவனும் சிவன். அவன் தான் தென்னாடுடைய சிவன். அவனே எந்நாட்டவர்களுக்கும் இறைவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2028. ஏறு நெறியே மலத்தை எரித்தலால்**
**ஈறில் உரையால் இருளை யறுத்தலான்**
**மாறில் பசுகபசம் வாட்டலால் வீடுக**
**கூறு பரனே குருவாம் இயம்பிலே.**

“ சிவடினயார்களே, சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்கின் மூலம் திருவடிக்கு ஏற்றவகையில் சிவகுருவானவன் ஆருயிர்களின் மலங்களை அறுத்தருளுகின்றான். இறுதியாக திருவைத்தெழுத்தின் மூலம் உயிரைப் பற்றியிருந்த

ஆணவத்தை அறுத்து அருள்கின்றான். பசுபாசத்தையும் தன் பணியில் நிறுத்தி வாட்டி அருள்கின்றான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 28. கூடாவொழுக்கம்

**2029. கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்**
**கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்**
**கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவொழிந் தாரே.**

“ சிவடினயார்களே, பாலசுந்தரம் பெருங்குடிகாரன். குடித்து விட்டுத் தகாத செயல்களில் ஈடுபடுபவன். அவனோடு அடிக்கடி முரண்படுபவன் நவராசா. பாலசுந்தரம் குடித்துவிட்டுக் கோவிலில் வந்து குழப்பம் செய்பவன். அது நவராசாவுக்குப் பிடிப்பதில்லை. அன்று பிரதோச விரதம். பாலசுந்தரம் குடித்து விட்டுக்கோவில் பக்கம் வந்தான். அங்கு அவனது எதிரியான பற்குணம் அர்ச்சனைத்தட்டுடன் நின்றான். அதைக் கண்ட நாகராசாவுக்குக் கோபம் வந்தது. கோபத்துடன் சென்று பற்குணத்தைக் தாக்கிவிட்டான். பற்குணம் பயந்தவன். கோவிலின் உள்ளே சென்று ஒரு மூலையில் நடுங்கியபடி நின்றான். அதைக் கண்ட நவராசா கோவிலுக்கு வெளியே வந்தபோது பாலசுந்தரம் வாய்க்கு வந்தபடி ஏசிக்கொண்டிருந்தான். அதைக்கண்ட நவராசாவுக்குக் கோபம் வந்தது. ஓடிச் சென்று அடித்துவிட்டான். அப்போது அங்கே வந்த கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னார், “ மகனே, நீ படித்தவன். அப்படியிருக்கப் பாலசுந்தரத்தைத் தாக்கியுள்ளாய். அவன் குடிகாரன். வெறிமுறிந்தால் நடந்தவை தெரியாது. இந்த நிலையில் உன்னில் பார்க்க அவன் பரவாயில்லை. நிதானமில்லாது பேசுபவனின் பேச்சைக்கேளாது விட்டால் அவன் சென்றுவிடுவான் என்று படித்த உனக்குத் தெரியாதா……? மகனே, உலகில் நடப்பவற்றையெல்லாம் சிவன் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்று புராணங்கள் சொல்கின்றன. இதை அறியாதவர்கள் தான் தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்களைக் கண்காணிக்க யாருமில்லை என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் சிவன் எங்கும் நிறைந்திருந்து எல்லாவற்றையும் கண்காணிக்கிறான் என்பதைப் பலர் உணர்வதில்லை. அதனால் தான் பல்வேறு விதமான தவறுகளைச் செய்கின்றனர். நல்லவர்கள் நற்றவத்தால் கண்காணித்துச் சிவனை அறிந்து தகாத செயல்களைச் செய்யமாட்டார்கள். நீ சிவனை நாள்தோறும் வணங்கியும் இதை உணரவில்லை என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2030. செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில்விண் ணோர்தொழச் செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே.**[1]

“ சிவடினயார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், “மகனே, கடலால் சூழப்பட்ட நிலவுலகத்தில் யாரும் அறியாது செய்யும் செயலைச் செய்பவன் அறிவான். அப்படியிருக்க உயிரைப்படைத்து உடலைக்கொடுத்து அதன் தேவைகளை அறிந்து அவற்றைக்கொடுத்தருளும் சிவன் உயிரோடு உயிராக கலந்து நிற்பவன். அதனால் அவனுக்குத்தெரியாது எதையும் செய்ய முடியாது. அவனுக்குத் தெரியாதென்று தவறு செய்பவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்பவர்களாவர். அச் செயல்கள் அவர்களைத் தண்டிக்கும் என்பதை யாரும் உணர்வதில்லை. தீயவழியில் வாழாது நன்நெறியில் வாழ்ந்தால் அவர்கள் சிவனடியாராவர். அவர்களைத் தேவர்களும் மதிப்பார்கள். நன்நெறியில் வாழ்வோரது நல்வாழ்விற்கு எப்போதும் சிவன் உறுதுணையாக இருப்பான். அவன் நீலநிறமிடலுடைய வேந்தன். இதை உணராது நீயும் தகாத செயல்களில் ஈடுபடுகிறாய். அது யாருக்கும் தெரியாது என்று நினைக்கிறாய் அது தவறு என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2031. பத்திவிற் றுண்டு பகலைக் கழிவிடு
மத்தகர்க் கன்றோ மறுபிறப் புள்ளது
வித்துக்குற் றுண்டு விளைபுலம் பாழ்செய்யும்
பித்தர்கட் கென்றும் பிறப்பில்லை தானே.**

“ சிவடினயார்களே, கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னார், “ மகனே, வேடமிட்டு சிவனை வணங்குவதால் பயனில்லை. நீ பெரும் பக்தி மான் போல வேடமிட்டு உன்னை நீயே ஏமாற்றுகிறாய். செய்யும் செயல்களைக் கண்காணிக்க ஒருவன் இருக்கிறான் என்ற நினைப்பில்லாதவர்கள் வேடதாரிகள். பொழுதை வீணாகக் கழிப்பவர்கள். அவர்கள் பித்துப்பிடித்தவர்களாவர். அவர்கள் பிறந்திறந்து துன்புறுவர். ஆச்சிரமத்திற்குத் தினமும் வருவதாலும் கோவிலில் தொண்டுகள் செய்வதாலும் பயனில்லை. ஆச்சிரமத்தில் குரு கூறுவதைக்கேட்டு நடப்பதால் தான் பயன் உண்டாகும். எஞ்சு வினையானது குருவின் அருட்பார்வையால் எரியுண்ட வித்துப்போல் அழிந்து விடும். அவ்வாறானவர்கள் கருப்பையை அழித்தவர்கள் ஆவர். அத்துடன் அவர் சிவப்பித்தருமாவர். இதையெல்லாம் அறிந்த நீ இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது எனக்குக் கவலையைத் தருகிறது. பாலசுந்தரம் கற்காதவன். அதனால் அறியாமையால் பல தீய செயல்களைச் செய்பவன். அவனோடு முரண்பட்டு வினையைப் பெருக்காதே என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2032. வடக்கு வடக்கென்பர் வைத்ததொன் றில்லை**
**நடக்க வுறுவரே ஞான மிலாதார்**
**வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்**
**அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே.**

'' சிவடினயார்களே, அண்மையில் நாகராசா என்ற வயோதிபர் கதிரேசனது வீட்டிற்கு வந்து தான் காசிக்குச் செல்லப் போவதாகவும் காசிக்குச் செல்வோர் முத்தியடைவதால் திரும்பி வரமாட்டார்கள் என்று கூறிய போது கதிரேசன் சொன்னார், '' வடக்கில் உள்ள காசி தான் மகிமையானது என்று நினைத்து அங்கு செல்பவர்கள் அனேகர். அவர்கள் தெற்கே இருக்கும் தமிழ் நாட்டின் பெருமையைச் சிறிதும் அறியாதவர்கள் இந்த மயக்கம் எப்போது தீரும் என்று தெரியவில்லை. தமிழ் நாட்டில் உள்ள சிறப்புக்கள் எவையும் வடநாட்டில் இல்லை. இதை உணராதவர்கள் சிவஞானம் இல்லாதவர்களாவர். உலகம் நிலையில்லாதது. இவ் உண்மையை மெய்யுணர்வுள்ளவர்களே அறிவார்கள். தெற்கே இருக்கும் சிவனின் பெருமை நிலையானது. அறிவின் வழியாக உணர்வால் புரிந்து கொள்வது. இதையறியாதவர்கள் தான் வடக்கே செல்கின்றனர் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2033. காயக் கழப்பனைக் காயநன் னாடனைக்**
**காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்**
**தேயத்து னேயெங்குந் தேடித் திரிவர்கள்**
**காயத்துள் நின்ற கருத்தறி [1]யாரே**

'' சிவடினயார்களே, கதிரேசன் நாகராசாவுக்குச் சொன்னார், '' நாகராசா தள்ளாத வயதில் தவறான எண்ணத்துடன் தொலைவில் இருக்கும் காசிக்குச் செல்வதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது. ஆருயிர்களை வினைக்கீடாகப் பொருத்தமான உடலில் சேர்த்து வைப்பவன் சிவன். அவ்உடம்பு சிவனது திருக்கோவிலாகும். அங்கு அவன் விருப்புடன் கோவில் கொண்டிருக்கின்றான். அவன் தான் நந்தி என்று அழைக்கப்படுகிறான். இதை அறியாது காசி காசியென்று கால்கடுக்கச் சென்று எங்கும் தேடித்திரிவதால் பயனில்லை. இவர்கள் தான் சிவபெருமான் ஆண்பெண்ணாக இணைந்து வாழும் உயிர்சேர் உடம்புகள் தோறும் வீற்றிருக்கும் அருள்தோற்றக் கருத்தை அறியாதவர்கள் என்றவர் '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2034. கண்காணி யாகவே கையகத் தேயெழுங்**
**கண்காணி யாகக் கருத்து ளிருந்திடுங்**
**கண்காணி யாகக் கலந்து வழிசெய்யுங்**
**கண்காணி யாகிய காதலன் தானே.**

“ சிவடினயார்களே, தனது பேச்சில் நம்பிக்கை இல்லாததைக்கண்ட கதிரேசன் சொன்னார், “ நாகராசா, கெடு குடி சொற் கேளாது என்பார்கள். தள்ளாத வயதில் எப்படி உன்னால் காசிக்குச் செல்லமுடியும். வீட்டில் இருந்து இங்கு வரவே சிரமப்படுகிறாய். வழிதெருவில் இறந்தாயேயானால் உனது ஆத்மா நிம்மதியின்றி அலையும். ஆருயிர்களின் உணர்வுக் கருத்தான கண்ணைத் தனது இருப்பிடமாகக் கொண்டு வீற்றிருந்து அருளும் சிவபெருமான் ஆருயிர்கள் நேரே காணும் படியாக நானெறி ஒடுக்கத்தில் வையகத்தே வந்து தோன்றி அருள்வான். அது போல கருத்துள்ளும் அமர்த்திடுவான். அது போல ஆருயிர்களுடன் உடன் கலந்து செந்நெறி செலுத்தித் திருவடிப்பேற்றிற்கும் வழிகாட்டியருள்வன். இவ்வாறிருக்கக் காசி காசியென்று அறிவில்லாதவர்கள் தான் பயனின்றி அலைந்து திரிந்து துன்பப்படுவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2035. கன்னி யொருசிறை கற்றோர் ஒருசிறை**
**மன்னிய மாதவஞ் செய்வோர் ஒருசிறை**
**தன்னியம் புன்னி யுணர்ந்தோர் ஒருசிறை**
**என்னி ஈசன் இயல்பறி யாரே.**

“ சிவடினயார்களே, கதிரேசனது உபதேசம் நவராசாவைக் சிந்திக்க வைத்தது. தான் பெரும் தவறு செய்து விட்டேன் என்று உணர்ந்து அவன் கதிரேசனது வீட்டுக்கு வந்து சொன்னான், “ சுவாமி, நான் அறியாமையால் தவறுகள் செய்யும் போது அதைச்சுட்டிக் காட்டுவது நீங்கள். இனிமேல் தவறுகள் நேராதபடி வாழத் தெண்டிக்கிறேன். ” என்ற போது கதிரேசன் சொன்னார், “ மகனே, அறிவு நெறியில் நின்று கன்னியாகிய திருவருள் வீழ்ச்சி பெற்றவர்கள் வீற்றிருப்பது ஒரு புறம் அந்நெறிக்கு வரும் வாயிலான செறிவு நெறியில் நின்று அகத்தவம் பயில்வோர் மிகப் பெருகி உறைவது ஒரு புறம். நோன்பு நெறியில் நின்று சிவபெருமானின் அருட்திருமேனியின் இயல்பினை உன்னித் திருமுறை வழியாக வழிபாடு செய்யும் அன்பானவர்கள் ஒருபுறம். திருக்கோவிலையும் சிவனையும் சீல நெறியில் நின்று சிவத்தொண்டு செய்யும் பெரும் பக்தர்கள் ஒரு புறம். இவ்வாறாக அவரவர் விருப்புக்கேற்ப வழிபடும்படி அமைந்தருளியவன் சிவபெருமான். இவ் உண்மையை உணராதவர்கள் இவையெல்லாம் தவறென்று சொல்வர். எம்முறையாலும் சிவனை வணங்கலாம். ஆனால் வணங்குவோர் மெய்யன்புடன் பற்றற்று வணங்கினால்

தான் பயன் பெறலாம். அதை உணர்த்துவதற்காகத்தான் உனக்கு உண்மையானதைச் சொன்னேன். மெய்யடியவர்கள் எக்காரணம் கொண்டும் குழப்பமடையக் கூடாது என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2036. காணாத கண்ணிற் கடலமே கண்ணொளி**
**காணாத வர்கட்குங் காணாத வவ்வொளி**
**காணாத வர்கட்குங் கண்ணாம் பெருங்கண்ணைக்**
**காணாது கண்டார் களவொழிந் [1]தாரே.**

'' சிவடினயார்களே, கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னார், '' மகனே, கண்ணிருந்தாலும் தவறான நினைவுடன் பார்த்தால் உண்மையான நிலை புரியாது. படலத்தால் காணும் தன்மை இல்லாத கண்ணிற்கு அப்படலமாகிய மறைப்பே கண்ணொளியாகும். சிவபெருமானைக் காண வேண்டும் என்ற நினைவு சிறிதும் இல்லாதவர்களுக்கு காணும் தன்மை இருந்தும் அவரும் படலத்தால் மறைக்கப்பட்டவராவர். உலகியற் பொருட்களைக் காண விரும்பாது சிவபெருமானையே காண வேண்டுமென்று விரும்புபவர்களுக்கு அருட்கண்ணால் அவனைப் பார்க்க முடியும். இவர்கள் காணாது கண்டவராவர். இது சிவன் தன்னைக் காடட்க் காண்பதாகும். அவ்வாறு காண்பவர்கள் தான் பிறப்பினை ஒழித்தவராவர். நீ சிவனடியவன். ஆனால் உணர்ச்சி வசப்படுகிறாய். மனக்கண்ணில் படலம் சூழ்ந்நுள்ளது. அதைச் சிவ நினைவால் தான் அகற்ற முடியும். அகற்றாவிட்டால் அது பார்ப்பவையெல்லாம் மாறுபாடு உடையனவாகவே இருக்கும். அதனால் சிவபக்தனாக இருந்தாலும் சாதாரண மனிதனாகி விடுவாய். அது தான் நடைபெறுகிறது. மனதை அடக்கு. புலன்களைச் சிவனில் ஒடுக்கு யாவும் நல்லதாகவே நடக்கும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2037. பித்தன் மருந்தால் தெளிந்து பிரகிருதி**
**உய்த்தொன்று மாபோல் விழியுந்தன் கண்ணொளி**
**அத்தன்மை யாதல்போல் நந்தி அருள்தரச்**
**சித்தந் தெளிந்தேன் செயலொழிந் தேனே.[2]**

'' சிவடினயார்களே, கதிரேசன் நவராசாவுக்குச் சொன்னார், '' மகனே, பித்துப்பிடித்தவனுக்கு அதற்குரிய மருந்தைக் குடிக்கக் கொடுப்பதன் மூலம் அவனது பித்தைக் குணப்படுத்தலாம். அவன் சுய நினைவடைந்து நல்ல செயல்களைச் செய்வான். அது போலக் கண்களை மூடிய படலத்தை அகற்றினால் அவனுக்குப் பார்வை தெளிவாகி விடும். இது போல நந்தி யெம் பெருமான் ஆருயிர்களின் இருசார்பான மருள் நீங்குவதற்கு அருள் செய்பவன். அதனால் உயிர்களுக்குத் தெளிவு உண்டாகும். அத்தெளிவு ஏற்பட்டால் செயல்களின் தன்மை புரியும். இன்னும் உனக்கு அத்தெளிவு

ஏற்படவில்லை. அதற்குக் காரணம் மனவொடுக்க மின்மையே. ஒருவன் உண்மையை உணர மறுத்தானேயானால் அவனுக்குத் தண்டனையளிப்பதால் பயனில்லை. தண்டனை அவனை வன் செயல்கள் புரிய ஊக்குவிக்கும். அவன் உண்மையை உணரவேண்டும். அதை நீ உணர வேண்டும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2038. பிரான்மய மாகப் பெயர்ந்தன எட்டும்**
**பராமய மென்றெண்ணிப் பள்ளி யுணரார்**
**சுராமய முன்னிய சூழ்வினை யாளர்**
**நிராமய மாக நினைப்பொழிந் தாரே.**

'' சிவடினயார்களே, கதிரேசன் சொன்னார், '' மகனே, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா ஆகிய எட்டு உறுப்புக்களும் சிவபெருமான் கலந்து நிற்கும் உறுப்புக்களாகும். அவ்வெட்டும் சிவனின் திருவாணைப் படியே செயற்படும். எல்லாம் சிவன் செயல் என்று எண்ணும் சிவயோகியர் அகத்தவமாகிய அறிதுயிற் பள்ளி நீங்கார். பேரறிவுப் பேரின்பப் பெருவடிவாம் திருவடி நிலையினை எய்தும் பொருட்டு நான்கு நெறிகளுள் மேலான நெறியான அறிவு நெறியைப் பின்பற்றும் திருவினையாளர் பிறப்பு இறப்புத் துன்பம் நீங்கி சிறப்புத் திருவடியின்பமாக ஓங்கி வேறு நினைப்புக்களின்றி இருப்பர். நீ கற்றவன், அதனால் அறிவுள்ளவன். சிவனை நாள் தோறும் வணங்குபவன் இருப்பினும் புலனடக்கமின்றி நடந்து கொள்வது எனக்கு வேதனையைத் தருகிறது. கற்காத ஒருவன் சிவனை வணங்குபவனாக இருந்தாலும் சில அறியாமைகள் இருக்கும். அதை மன்னிக்க வேண்டும். கற்றவர்கள் ஆராயாது நடப்பதை மன்னிக்க முடியாது என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2039. ஒன்றிரண் டாகிநின் றொன்றியொன் றாயினோர்க்கு**
**ஓன்றும் இரண்டும் ஒருகாலும் கூடிடா**
**ஓன்றிரண் டென்றே யுரைதரு வோர்க்கெலாம்**
**ஓன்றிரண் டாய்நிற்கும் ஒன்றோடொன் [1]றானதே.**

'' சிவடினயார்களே, கதிரேசன் சொன்னார், '' மகனே, ஆருயிர்கள் சிவனிறைவில் ஒன்றாக இருப்பினும் மலம் நீங்காவிட்டால் அவை பிறப்பெடுக்கும். அக்காலத்திலும் சிவனை விட்டு வேறுபடாது உயிர் ஒன்றியிருக்கும். பிறப்பை அழித்த பேருயிரான சிவனும், பிறப்புக்களை எடுக்கும் சிற்றுயிரான ஆருயிரும் எந்த இடத்திலும் பிரிந்து நிற்பதில்லை. இறைவனும் உயிரும் ஒன்றாய் இருந்தது. பின் ஒன்றாகி விட்டது என்று கூறின், அது பொருந்தாது. ஓன்று இரண்டாகி நிற்றல் என்பது கலப்பால் சிற்றுயிரும் பேருயிரும் ஒன்றாகவுள்ளன. பொருள் தன்மையில் அவ்விரண்டும் பெறுவானும் பேறுமாக நிற்கும்

பெறுவான் சிற்றுயிர் பேறு பேருயிர். அதனால் சிவமும் உயிரும் திருவருளால் வேறற நின்றும் இரண்டும் ஒன்று கூடும். அக்கூட்டத்தின் உண்மையை உணர்ந்தவர்கள் ஒன்றாயினோர் ஆவர். அவர்களுக்கு ஒன்றும் இரண்டும் வெவ்றோக இருந்தால் ஒரு காலத்தும் அவை ஒன்று சேராது என்ற உண்மை நன்கு புலனாகும். ஒன்று இரண்டு என்று பேசுவோர்க்கெல்லாம் ஒன்று இரண்டாகவே நிற்கும். திருவருளால் சிற்றுயிரும் பேருயிரும் ஒன்றென்பதும் இல்லை இரண்டென்பதும் இன்றி இரண்டிற்கும் பொது வாய்ப்புணர்ந்து வேறற நிற்கும். மெய்மை விளங்கும். இதுவே ஒன்டோறொன்று கூடிப்பெறுவதும் பேறுமாய் வாழ்வதொரு முறையாகும். இதுவே செம்பொருளை உணர்ந்தவர்கள் அடையும் சிறந்த திருவடிப் பேறாகும். அத்துடன் அதுவே சிவப் பணியுமாகும். சிவபெருமான் உயிரோடு வேறுபட்டு நின்று பின்னர் கூடி ஒன்றாகுமென்று கூறுவோமானால் அவ்விடத்தில் பெறுவானாகிய உயிர் இராது. அத்துடன் பேறு தருவோனாகிய சிவனும் இரான். உயிர்கள் தனித்தனி நின்று சிவத்துடன் கூடிச் சிவமாகுமென்றால் பெறுவான் இருக்கமாட்டான். உயிரும் சிவமும் வேறுவேறாக இருக்குமானால் முத்தியில்லை. தீயைச் சார்ந்த இரும்பு போல இருக்குமானால் உயிர்களே ஐந்தொழில்களையும் செய்தல் வேண்டும். அவ்வாறு இல்லை ஆதவால் சிவன் உயிரோடு கலந்திருக்கிறான் என்றும் , உயிரோ சிவமோ தனித்திருப்பதில்லை என்றும் புலனாகும். இதை நீ நன்கு உணரல் வேண்டும் என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2040. உயிரது நின்றால் உணர்வெங்கு நிற்கும்**
**அயரறி வில்லையா லாருடல் வீழும்**
**உயிரும் உடலும் ஒருங்கிக் கிடக்கும்**
**பயிருங் கிடந்துள்ளப் பாங்கறி [1]யாரே.**

“ சிவடினயார்களே, கதிரேசன் நவராசாவுக்குத் தொடர்ந்து சொன்னார், “ மகனே, உயிர்ப்பு உயிராகாது. உயிர்ப்பு ஆகிய உயிர் நின்றால் அவ் உடலில் உணர்வு எல்லா இடங்களிலும் இருத்தல் வேண்டும். நினைப்பும் மறப்பும் உண்டாகாது. உடலும் ஓற்றுமையுடன் வாழும் வாழ்வு சிவபெருமானின் திருவுளப்பாங்காகும். இவ்உண்மையைப் பலர் அறியமாட்டார்கள். நீயும் அதை அறியாததால் தான் மனம் குழப்புகிறாய். யாவும் சிவனின் செயல் என்று நினைப்பவர்கள் தீயவர்களின் செயல்களை வெறுத்துக் கோபம் கொண்டு செயல்களில் ஈடுபடார். ஏனென்றால் தீயவர்கள் அறியாமை காரணமாகவே தீய செயல்களைச் செய்கின்றனர். அவர்களின் அறியாமையை நீக்குமாறு சிவனை வேண்டுபவனே சிவனடியான். அதைவிட்டு விட்டுக் கோபம் கொள்பவன் வினையைப் பெருக்குகிறான் என்றார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2041. உயிரது வேறா யுணர்வெங்கு மாகும்**
**உயிரை யறியில் உணர்வறி வாகும்**
**உயிரன் றுடலை விழுங்கு முணர்வை**
**அயரும் பெரும்பொரு ளாங்கறி [1]யாரே.**

“ சிவடினயார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே, திருவருளால் உடல் வேறு உயிர் வேறு என்று உணா்ந்து கொண்டால் உணர்வுகள் சுட்டறியும் சிற்றறிவு கடந்து முற்றறிவு பெறும். அது போல உயிரின் உண்மையைத் திருவருளால் அறிந்தால் அவ்வுணர்வே மெய்யுணாாவாகும். உடலை நீங்கச் செய்வது உயிரன்று. அவ்வுண்மையை அறிவிகாமல் மறைத்து வைத்திருப்பது பெரும் பொருளான சிவன். இவ் உண்மையை அவனருளாளன்றி உணர முடியாது. அதனால் சிவனை மன அடக்கத்துடன் வணங்கு. மெய்யடியார்களுக்குத் தான் சிவநினைவு முற்றும் பெறும் என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2042. உலகாணி யொண்சுடர் உத்தம சித்தன்**
**நிலவாணி ஐந்தினுள் நேருற நிற்குஞ்**
**சிலவாணி யாகிய தேவர் பிரானைத்**
**தலைவாணி செய்வது தன்னை யறிவதே.**

“ சிவடினயார்களே, தேரினைத் தாங்கும் அச்சாணிபோல உலகினைத் தாங்கும் தலைவன் ஒண்சுடராகவும் வெண்சுடராகவும் மிளிர்கின்றவன். அவனே எல்லாம் கைகூடச் செய்யும் சித்தன். அவன் ஐம்பூதங்களுள்ளும் நுண்மையாய், வண்மையாய், திண்மையாய், கண்மையாய், எண்மையாய் நிற்பவன். நுண்ணிய உடலுடன் நிலவும் முத்தேவர் உள்ளிட்ட அத்தேவர்களும் வணங்கும் பெருமானைத் தன்னிடத்து வெளிப்பட்டு வாழ்பவனாகச் செய்வது தன்னை அறிவதென்னும் தலையறிவாகும். ஐந்தெழுத்தை நாம் மனம் மகிழ்ந்து ஒதினால் சிவபெருமான் நம் உயிரை இருப்பிடமாகக் கொண்டு விளங்கியருள்வான். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2043. தானந்த மாமென நின்ற தனிச்சுடர்**
**ஊனந்த மாயுல காய்நின்ற வொண்சுடர்**
**தேனந்த மாய்நின்ற சிற்றின்ப நீயொழி**
**கோனந்த மில்லாக் குணத்தரு ளாமே.**

“ சிவடினயார்களே, பேரறிவுண்மைப் பொருளான சிவபெருமான் எல்லாவற்றிற்கும் அந்தமாகிய தனிமுதற் சுடராவான். ஊடம்பின் இறுதியாக நிற்கும் ஒண்மைச்சுடரும்

அவனே. தேன்போன்ற இனிமை வாய்ந்த உலகியல் சிற்றின்பங்களை விட்டு விட்டால் சிவபெருமானின் முடிவு பேறில்லாத திருவருள்த் திருவடிப்பேறு கிட்டும். இது நிலையான பேரின்பமாகும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2044. உன்முத லாகிய வூனுயிர் உண்டெனுங்**
**கன்முத லீசன் கருத்தறி வாரில்லை**
**நன்முத லேறிய நாம மறநின்றால்**
**தன்முத லாகிய தத்துவ மாமே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் நவராசாவுடன் முரன்பட்ட பாலசுந்தரத்தின் வீட்டுக்கு விடியற் காலையில் சென்றார். பெரும் தனவந்தரும் ஊர்ப் பெரியவருமான அவரை அவன் எதிர் பார்க்கவில்லை. அவனது சிறிய ஓலை வீட்டின் முன் நின்ற வேப்பமரத்தின் கீழ் நின்றார். பாலசுந்தரம் ஒடோடி வந்து ‘‘ சுவாமி, தங்களை வரவேற்கக் கூடத் தகுதியில்லாதவன் நான் என்று சொல்லும் போது கதிரேசன் சொன்னார், ‘‘ சிவனின் கட்டளைக்கு அடி பணிந்து வந்தேன். நீ கோவிலில் அடிக்கடி குழப்பம் செய்கிறாய். அதனால் பக்தர்களின் மனம் துன்பப்படுகிறது. அதைச் சிவன் பொறுத்துக் கொள்ளமாட்டார். ஆருயிர் தங்கியிருக்கும் எண்ணும் கருவியாகிய மனம் இயங்கக் காரணமாக இருப்பவன் சிவன். அவனே மலைகளுக்கெல்லாம் முதன்மை வாய்ந்த திருவெள்ளி மலைச் செல்வன். இவ் உண்மையைப் பலர் அறிவதில்லை. மனம் நன்னெறியில் நிற்கவேண்டும். பிறப்புக்கு வித்தாகிய காமம் வெகுளி மயக்கம் ஆகியவற்றைத் தூண்டுவது மது. மதுவைக் குடித்தால் எதையும் அடையாளம் காணமுடியாது. அது சுற்றாடலையும் சூழ்நிலையையும் கருத்திற் கொள்ளாது. நிலைமையைப் புரிந்து கொள்ளாது. நல்லவற்றைச் செய்யவிடாது. மனத்தை நன்னெறிப்படுத்தாவிட்டால் பெரும் துன்பங்கள் வந்து சேரும். அதனால் மதுவைக் குடிக்காதே. அதை விட்டாயேயானால் மனம் தூய்மையடையும். சிவன் உனது மனதில் ஆசை தீரும் வரை குடி. பின் விட்டு விடு. அதனால் உனது குடும்பம் முன்னேறும்’’ என்ற போது பாலசுந்தரம் பெருங்குரலெடுத்து அழுதான். பின், ‘‘ நான் இனிமேல் குடிக்க மாட்டன் என்றவன். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2045. இந்தியம் அந்தக் கரண மிவையுயிர்**
**வந்தன சூக்க வுடலன்று மானது**
**தந்திடும் ஜவிதத் தால்தற் புருடனு**
**முந்துள மன்னும் ஆறாது[1] முடிவிலே.**

‘‘ சிவனடியார்களே, பாலசுந்தரம் மிகவும் பயந்து விட்டான். ‘‘ கதிரேசனிடத்தில் சிவன் கோவில் கொண்டுள்ளார். அவர் மிகவும் நல்லவர். துட்டர்களைச் சபித்தால் அவர்களுக்குச் சிவன் தண்டணை கொடுப்பான். அதையறியாது நீ கோவிலடியில் குழப்பம் செய்கிறாய். அதற்கான தண்டணையைப் பெறுவாய். நண்பன் என்ற முறையில் இதைச் சொல்கிறேன். தெய்வத்தோடு விளையாடாதே ’’ என்று அவனது நண்பன் நடேசன் அடிக்கடி சொல்வான். இருவரும் சேர்ந்து குடித்தாலும் நடேசன் விலகிவிடுவான். பாலசுந்தரம் கோவில் பக்கம் செல்லக்கூடாது என்று நினைப்பான். குடித்து விட்டால் அதை மறந்து விடுவான். நவராசாவோடு அவனுக்குக் குடும்பப் பகை இருந்தது. அதனால் அவனை எங்கு கண்டாலும் அவன் சண்டைக்குப் போவான் ‘‘சுவாமி, எனக்குத் தண்டணை தந்து விடாதீர்கள். நான் பிள்ளை குடிகாரன்’’ என்று கதிரேசனின் காலைப்பிடித்தவாறு அழுதான். கதிரேசன் சொன்னார், ‘‘ பூத முதலாகிய தன்மாத்திரை ஐந்தும், மனம் எழுச்சி இறுப்பு ஆகிய அகப்புறக் கலன்கள் மூன்றும் கூடினால் எட்டாகும். இவ்எட்டும் உயிரல்ல. அவை உயிர் உறையும் உடல் இவை திருவருளால் கொடுக்கப்பட்ட இயற்கைப்பிறப்புடல் இவை மான் என்று சொல்லப்படும். திருவருளால் தரப்படும் காலம், ஊழ், உழைப்பு, உணர்வு, விளைவு என்னும் ஐம்போர்வைகளால் சுற்றியது ஆருயிர். ஆருயிரே உடலை ஆள்கிறது. அவ்வுயிரை ஆள்பவன் சிவபெருமான். அச்சிவபெருமான் உயிரில் கலந்துள்ளான். ஆதலால் தீய செயல்களைச் செய்வது சிவனை அவமதிப்பதை ஒக்கும். சிவனால் தரப்பட்ட உறுதியான உடலைக் கொண்டு நன்றாக உழைக்கும் நீ சிவனுக்கு நன்றி சொல்லாவிட்டாலும் தீயவற்றை யாவது செய்யாமல் விடலாம் தானே. ஒரு வாரத்திற்குக் குடிப்பதை விட்டு விட்டுச் சிவனைத் தொழு உனது துன்பமெல்லாம் போய் விடும் என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஊரவர்கள் அவனைப் பல்வேறு விதத்தில் பயமுறுத்தினர் அதனால் பயந்த பாலசுந்தரம் குடியை நிறுத்தினான். பின் கதிரேசனது வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்தான். இப்போ அவன் குடிப்பதில்லை. ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 26. கேடுகண்டு இரங்கல்

**2046. வித்துப் பொதிவார் விரைவிட்டு நாற்றுவார்**
**அற்றதம் வாணாள் அறிகிலாப் பாவிகள்**
**உற்ற வினைத்துயா ஒன்றும் அறிகிலார்**
**முற்றொளி தீயின் முனிகின்ற வாறன்றே.**

‘‘ சிவனடியார்களே, இப்போது குடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டால் தனது வீட்டுக்கு வருமாறு கதிரேசன் சொன்னமையால் பாலசுந்தரம் மாலை வேளைகளில் கதிரேசனது வீட்டுக்கு வந்து விடுவான். குடிக்காததால் தான் இப்போது மிகுந்த

மகிழ்வுடன் வாழ்வதாகவும் மனைவியும் பிள்ளைகளும் உற்றார் உறவினரும் தன்னை மிகவும் விரும்புவதாகவும் பாலசுந்தரம் கதிரேசனுக்குக் கூறிய போது கதிரேசன் சொன்னார், “ இப்போது சிவனை வணங்குவதால் உண்டாகும் நன்மைகள் பற்றித் தெரிந்து கொண்டாய். சிவனைப்பற்றித் தெரியாமையால் தானே தவறுகளைச் செய்தாய் அது சிவனால் மன்னிக்கப்படும். நீ விவசாயி. வித்தின் பொருட்டு நெல்லை நன்கு பதப்படுத்தி பாதுகாத்து விதை விதைத்து நாற்றை உண்டாக்குவார்கள். பின் அதை உணவாக உண்பார்கள். இவர்களில் பலர் தமது வாழ்நாள் எவ்வளவு காலம் இருக்கும் என்று அறிவதற்கு எந்த முயற்சியும் எடுப்பதில்லை. அப்படி அறிவதற்கு முயல்பவர்கள் நன்னெறிப்படி வாழ்வர். அப்படி வாழாதவர் வாழ்க்கையின் தத்துவங்களை அறிவதில்லை. இவர்கள் முழுப்பாவிகள். அத்துடன் தமது ஒழுக்கமற்ற வாழ்வால் வந்து சேரும் இருவினைகளைப் பற்றியும் அறிவதில்லை. உலகின் மீது பற்றுக் கொண்டு உலக இன்பங்களை அனுபவிப்பதாக எண்ணித்துன்பத்தை அடைந்து மாண்டு மடிகின்றனர். இதற்கு வழி வகுப்பது மதுவும் காமமும். இவற்றை நீக்கி நன்னெறியில் வாழ்ந்தால் என்றும் இன்பமாக வாழலாம் என்பதைப் பலர் அறிவதில்லை. அறிந்தவர்கள் போலியான இன்பங்களை நாடமாட்டார்கள். உன்னில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதனால் உனது வேலைகளை ஒதுக்கி விட்டு வராதே என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2047. போது சடக்கெனப் போகின் றதுகண்டும்**
**வாதுசெய் தென்னோ மனிதர் பெறுவது**
**நீதியுளே நின்று நின்மலன் தாள்பணிந்து**
**ஆதியை அன்பில் அறியகில் லார்களே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் அப்படிச் சொன்னதும் பால சுந்தரத்தின் முகம் வாடிக்கறுத்தது. அவன் சொன்னான், “ சுவாமி, நான் எனது வேலைகளைச் செய்யாது விட்டு விட்டு இங்கு வரவில்லை. முன்பு கமத்தில் மூன்று நான்கு மணித்தியாலம் தான் வேலை செய்வேன். பின் கள்ளருந்தச் சென்றால் இரவு பத்து மணி வரை கள்விற்குமிடத்தில் இருப்பேன். இப்போ ஐந்து மணி வரை வேலை செய்கிறேன். அதன் பின்பு தான் இங்கு வருகிறேன். இங்கு வருவதால் எனக்கு மன அமைதியும் சாந்தியும் கிடைக்கிறது. சிவனின் அருகில் இருப்பதைப் போலவும் இருக்கிறது.” என்று நிறுத்தியவன் சில காணங்கள் கழித்து, “ சுவாமி, என்றான். பிறகு பேச முடியாது தவித்தான் அவனது கண்கள் கலங்கின. கதிரேசன் பதறிப்போனார், “ என்ன..? பயப்பாடாமல் சொல்? என்றார், “ சுவாமி, நான் இங்கு வருவது சிலருக்குப் பிடிப்பதில்லை. நேற்றுக் கோவிலடியில் ஒருவன், டேய், பாலா , கேடு கெட்ட சாதியில் பிறந்த நீ சாதி வேளாளனின் பூசையறைக்குள் இருக்கிறாய். இனி அந்தப் பக்கம் போகக் கூடாது “என்று எச்சரித்தவன்” என்ற போது கதிரேசன் சொன்னார், “ உனக்குச்

சிரமமாக இருக்கும் என்பதற்காகத்தான் சொன்னேன். மகனே, வாழ்நாளைத் தினமும் வரும் பொழுது அழித்துச் செல்கிறது. இதை அறியாத மூடர்கள் சாதி குலம் சமயம் என்று ஓயாமல் சண்டையிட்டு வாழ்கின்றனர். இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய சிவபெருமானுக்கு ஏது சாதி. அவர்கள் சிவனையும் அறியமாட்டார்கள். சிவனோடு கூட இருக்கும் அம்மையையும் அறியமாட்டார்கள். சிவனைப் பூசிக்கவும் மாட்டார்கள். சிவன்படைத்த ஆருயிர்களில் பேதம் கண்டு விவாதிப்பதும் சண்டையிடுவதுமே இவர்களது நாளாந்தத் தொழில் சிவனை வழிபடுவோரொல்லாம் சிவனடியார்களே தவிர இன்னதென்ற சாதிக்குரியவர்கள் அல்ல. நீ தினமும் வா என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2048. கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி**
**உடம்பினை யோம்பி உயிராத் திரிவார்**
**தடங்கொண்ட சாரல் தழல்முரு மேறி**
**இடங்கொண் டுடலார் கிடக்கின்ற வாறே.**[1]

“ சிவனடியார்களே, மிகுந்த துக்கத்துடன் கதிரேசன் சொன்னார், “ மகனே, ஒருவேளை உணவை உண்ணாதிருக்க முடியாதது வயிறு. வயிற்றுடன் கூடியது உடம்பு. அவ்உடம்பினுள் வஞ்சகம் நிறைந்த ஐந்து புலையர்கள் வாழ்கின்றனர். அவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டுக் கடன் பட்டு நெல்லைப் பெற்று அவற்றைக்குற்றி உண்கின்றனர். இவ் உடம்பு இனிமை வாய்ந்ததென்று நினைத்துக் கவனமாகப் பேணி வளர்க்கின்றனர். அவர்கள் உடல் பிணமாகும் என்று ஒரு போதும் நினைப்பதில்லை. பிணத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்று எரியூட்டுவர். அந்தவேளையிலும் உயிரோடு இருப்போர் உடம்பின் நிலையாமையை நினைப்பதில்லை. தம்முடல் எரியூட்டப்படாத உடலென்று நினைத்து இன்புறுகின்றனர். இவர்கள் தான் சாதி சமயம் உயர்வு தாழ்வு பார்ப்பவர்கள். அழகான இனிமையான உடலானது பிணமானால் யாரும் அதை உபயோகமான பொருள் என்று பாதுகாத்ததில்லை. நாயினது உடல் கூட பயன் தருமரத்திற்கு எருவாகும். ஆனால் உடம்பைத் தேடுவாரில்லை என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2049. விரைந்தன்று நால்வர்க்கு மெய்ப்பதி சூழ்ந்து**
**புரந்தகல் லால்நிழல் புண்ணியன் சொன்ன**
**பரந்தன்னை யோராப் பழிமொழி யாளர்**
**உரந்தன்மை யாக வொருங்கிநின் றாரே.**

“ சிவனடியார்களே, முன்னாளில் செம்பொருளை முழுமையாக அறிந்திருந்த நால்வர் சிவபெருமானிடம் வந்து வணங்கித் தமிழாமச் செழும் பொருளை செவியறிவுத்துமாறு வேண்டினர். அப்போது சிவபெருமான் மலை மீது விளங்கும் ஆல மர நிழலில்

தென்முகமாக வீற்றிருந்தனன். அவன் அருளிய நூலே மெய்கண்ட சாத்திரம். அந்நூலே முப்பொருள் உண்மையை விளக்கும் தமிழ் நூல். இந்நூலின் பொருளை மெய் கண்டரின் வழி நின்று திருவருட்கணணால் உணராதவர் பழி கொண்டவராவர். இத்தகையோர் மனம் போனவாறு நினைப்பர், சொல்லுவர், நடப்பர். இவர்கள் மெய்யுணராத மடமையராவர். சிவனிடம் செம்பொருளைக் கேட்டறிந்தவர்கள் நந்தி, சனற்குமரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2050. நின்ற புகழும் நிறைதவத் துண்மையும்**
**என்றும்எம் மீசன் அடியவர்க் கேநல்கும்**
**அன்றி யுலக மதுவிது தேவென்று**
**குன்றுகை யாலே குறைப்பட்ட வாறன்றே.**

“ சிவனடியார்களே, புகழ் ஒன்று தான் நிலைத்து நிற்பது அத்தகைய புகழ் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்று ஓதப்பெறும் நற்றவத்தின் உண்மையும் எந்நாளும் எம்மை ஆண்டு அருள் செய்யும் சிவபெருமானில் நீங்காத அன்பு பூண்டு ஒழுகும் மெய்யடியவர்களுக்குத்தான் நற்பயனளித்து நீங்காது அவர்களோடு நிலைத்து நிற்கும். இவ்வுலக வாழ்க்கையில் பற்றுக் கொண்டு செத்துச் செத்துப் பிறக்கும் உயிரினங்களுக்கும் , அது தெய்வம் இது தெய்வம் என்றும் இடி மின்னல் காற்று மழை தீ முதலிய அறிவில் பொருட்களைத் தெய்வங்கள் என்று அறிவுக்குறைவால் கூறுவோரிடத்தும் புகழும் சிவனருளும் தங்காது. இவர்கள் அறியாமையால் குறைபட்டவராவர். அதனால் அவர்கள் தாழ்ந்த பிறப்பையே எடுப்பார்கள்”

“ சிவனடியார்களே, சுந்தரலிங்கம் பெரும் வர்த்தகன். அவன் திடீரென்று பொருட்களின் விலையைக் குறைந்து விற்பனை செய்தான். அதனால் மக்கள் அவனிடமே பொருட்களை வாங்கினர். அத்துடன் அவனைப் போற்றித்துதித்தனர். வாழ்த்தினர். அவன் சில ஏழைகளுஞ்கும் உதவி செய்தான். சில காலம் செல்ல மக்கள் கூட்டம் அதிகரித்தது. அயலூரவரும் வந்து பொருட்களை வாங்கினர். அதனால் அவன் விலையைப் படிப்படியாக உயர்த்தினான். அந்த ஊரின் பெரியவரான சிவசம்பு சொன்னார், “ யாரும் தனக்கு நட்டம் ஏற்படுமாறு பொருட்களைவிற்கமாட்டார்கள். சிறிதளவாவது இலாபம் கிடைத்திருக்கும் மக்கள் அனைவரையும் கவரவே அவன் மலிவாக விற்றான். இப்போ கிராம மக்கள் அனைவரும் அவனது வர்த்தக நிலையத்தில் பொருட்களை வாங்குவதால் விலையை அதிகரித்து விட்டான் ” என்றவர் சிலர் சுந்தரலிங்கம் கலப் படம் செய்பவன் என்றனர். அதனால் அவனைப் புகழ்பபவரும் இகழத் தொடங்கினர். சிவ சம்பு சொன்னார் “புகழ் சிவனது அருளால் வருதல் வேண்டும்.

சந்தர்ப சூழ் நிலைகளால் வரக்கூடாது. கதிரேசனுக்குப் புகழ் சிவச் சேவையால் வந்தது. அது அழியாது வாழும் என்றவர் ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2051. இன்பத்து ளேபிறந் தின்பத்து ளேவளர்ந்து**
**இன்பத்து ளேநினைக் கின்ற [2]திதுமறந்**
**துன்பத்து ளேசிலர் சோறொடு கூறை[3]யென்**
**துன்பத்து ளேநின்று தூங்குகின் றார்களே.**

‘‘ சிவனடியார்களே, பிறவாத நிலையை அடைவதற்காகவே சிவபெரு மான் மக்கள்ப் பிறவியைக் கொடுத்தார். அவ் உயர்ந்த மக்கள் பிறப்பை எடுத்தவர்கள் மீண்டும் பிறப்பினுள்ப் புகாது சிவனை நினைத்துத் திரு வருளின் துணையால் சிவனது திருவடியை அடைய முயலுதல் வேண்டும். அதுவே இறவாத இன்ப நிலையாகும். அது தான் இன்பப்பிறப்பு. இன்பப் பிறப் பென்பது சிவனை மறவாது சிவ நினைவுடன் வாழ்வது. அவர்கள் தான் தொண்டர்கள். குணம்மிக்கவர்கள் ‘‘சிவனடியார்களே, சிவசம்பு சொன்னார், ‘‘சுந்தரலிங்கம் மலிவாகப் பொருட்களைக் கொடுத்தபோது நானும் அவன் சிவச்சேவை செய்து தனது பிறப்பைமேம் படுத்தப் போகிறான் என்று நினைத்தேன். ஆனால் அவன் வியாபர தந்திரத்திற்காக அதைச் சொய்கிறான் என்று அறிந்து மனம் வருந்தினேன். அவனிடம் பணம் பொருள் காணி பூமியாவும் இருக்கு. அது போதாதென்று அவாப் பட்டுச் செயற்படுகிறான். அதனால் அவனுக்குப் பிறப்புகள் பல உன்டாகிப் பெருந்துன்பாத்தைக் கொடுக்கும். வந்த புகழ் சென்று அசமானம் தான் எஞ்சியுள்ளது. சிவச் சேவை செய்யும் கதிரேசனது புகழ் வரவர அதிகரிக்கிறது. இதைக் கண்டும் கேட்டும் யாரும் பின் பற்றுவதில்லை என்று கவலைப்பட்டவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2052. பெறுதற் கரிய பிறவியைப் [1]பெற்றும்**
**பெறுதற் கரிய பிரானடி [2]பேணார்**
**பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்**
**பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.**

‘‘ சிவனடியார்களே, சிவசம்பு கதிரேசனின் இனந்தவர். பெரும் சிவ பக்தர். கதிரேசனுடன் தொண்டுகள் செய்பவர். மக்களுக்குத் தேவையாணவற்றைக் கொடுப் பவர். அவர் கவலையுடன் ஆச்சிரமத்தில் உள்ளவர்களுக்கு உரையாற்றும் போது சொன்னார், ‘‘ சிவனடியார்களே, பெறுதற்கரிய மானிடப் பிறவியினைப் பெற்றபலர் அதைக் கொடுத்த சிவபெருமானை போற்றுவதில்லை பலர் சிவனை ஒரு பொருட்டாகக் கூடநினைப்பதில்லை அதற்குக் காரணம் பொருள்தேடலே. இவர்கள் ஆறறிவோடு பிறந்தமையால் வேறு எவற்றோடும் ஒப்பிடமுடியாதவர்களாவார். ஆனால் ஆசை மிருதியால் இவர்கள் மிகவும்

கேவலமாக நடந்து கொள்கிறார்கள். அதற்காக அவர்கள் வெட்கப் படுவதில்லை. விலங்குகள் பல புத்திக் கூர்மையுடன் வாழ்கின்றன. பகிர்ந்து உண்கின்றன தம் இணத்தைக் காக்கின்றன. தமது தேவைக்கதிக மாக அவை உண்பதில்லை, சேமிப்பதில்லை, பிறரைக் கெடுப்பதில்லை, பொறாமைப்படுவதில்லை ஆசைப்படுவதில்லை. அதனால் மனிதர்கள் விலங்குகளை விடக்கேவலமானவர்கள் என்று திருமந்திரம் போன்ற உயர்ந்த நூல்கள் கூறுகின்றன. அப்படிக் கூறியும் மனிதன் சிந்திப்பதில்லை சிவனை நினைத்தால் போதும் அவனது குணங்கள்யாவும் மாறும் தேவையானவை யாவும் வந்து சேரும். ஆனால் அவற்றைப் பற்றி மனிதன் சிநதிப்பதில்லை என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2053. ஆர்வ மனமும் அளவில் இளமையும்**
**ஈரமும் நல்லவென் றின்புறு காலத்துத்**
**தீர வருவதோர் காமத் தொழில்நின்று**
**மாதவன் இன்ப மறந்தொழிந் தார்களே.**

“ சிவனடியார்களே, சிவசம்புவின் மகன் அருளானந்தன். அவனுக்கு இருபத்தைந்து வயது. அவன் திருமணம் செய்யாது பிரம்மச் சாரியாக வாழ விழும்பினான். அதை விரும்பாத சிவசம்பு மகனுக்குத் திருமணம் செய்து வைக்கவிரும்பினார். அவருக்கு அவன் ஒரே ஒரு மகன். அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால் தான் தனது குடும்பம் அழியாதிக்கும் என்று நினைத்துச் சிவ சம்பு தனது துயரத்தைக் கதிரேசனிடம் வெளிப்டுத்தினார். அருளானந்தன் கதிரேசனைத் தெய்வமாக மதிப்பவன். கதிரேசன் அருளானந்தனைத்தேடி வந்து சொன்னார், “ மகனே, இளமையில் காதல் செய்து வாழவேண்டியது அருளால் அமைந்த அருங்கடன். அக்காலம் இனிமையான காலம். பெண்ணுடன் இன்பம் அனுபவிக்கும் காலம். அத்துடன் நல்ல தொழிலைத்தேடி ஊக்கத்துடன் தொழில் புரியும் காலம். அளவில்லாத ஊக்கம் உள்ள காலம். ஈரமுள்ள காலம். கருதியதை மறவாத சிந்தனையுடன் செய்து முடிக்கும் காலம். மனைவியுடன் கூடி நல்ல பிள்ளைகளைப் பெறும் காலம். இன்பம் முழுவதையும் அனுபவிக்கும் காலம். அக்காலத்தில் எதிர்காலத்தில் வரவுள்ள துன்பங்களை நீக்குதல் வேண்டும். அத்துடன் சிவனைத் தொழுதல் வேண்டும். அத்துடன் மனைவியோடு இன்பம் அனுபவிக்கும் போது சிவனை மறவாத சிந்தையுடன் தொழுது தொண்டுகள் செய்யும் காலமும் இது. இவற்றைச் செய்விப்பது வனப்பாற்றல். நீ எல்லாம் செய்கிறாய் உனது தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2054. இப்பரி சேயிள ஞாயிறு போலுரு**
**அப்பரி சங்கியின் உள்ளுறை யம்மானை**

**இப்பரி சேகம லத்துறை யீசனை**
**மேய்ப்பரி சேவின வாதிருந் தோமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் அருளானந்தனுக்குச் சொன்னார், “ மகனே, யாவற்றையும் நல்லாரிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளல் வேண்டும். இன்பவடிவினனாய் என்றும் மறக்க முடியாதவனாக விளங்கும் சிவபெருமான் விடியற்காலை போல விளங்கும் மேனியை உடையவன். அதனால் அவனை இளஞாயிற்றோன் என நினைத்து வணங்குதல் வேண்டும். அவன் அகத்தீயில் உறைவான். அவனே அழகிய தலைவனாவான். அவன் தான் எமது நெஞ்சத்தாமரையில் உறைபவன். அவனே வராத செல்வத்தை வருவிக்கும் ஈசன். அவனை அவனருளால் வணங்குதல் வேண்டும். ஞான நூல்களைக் கற்க வேண்டும். கற்பிக்க வேண்டும். நற்பொருளைக் கேட்டல் வேண்டும். பொருட்களைத் தேடுதல், சிந்தித்தல் என்பன இறைவனது திருவடியை அடையவைக்கும். இல்லறம் தான் நல்லறம். அதனால் தான் மேற்கண்டவாறு வாழ முடியும். அதனால் உனது தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2055. கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு**
**நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்**
**பாடகில் லாரவன் செய்த பரிசறிந்து**
**ஆடவல் லாரவர் பேறெது வாகுமே.**

“ சிவனடியார்களே, இமயமலையில் இருந்து வந்த சுவாமியர் கதிரேசனை ஆசீர்வதித்துச் சிவதீக்கையினைத் திருமுறை வழிச் செய்து ஆட்கொண்ட பின் திருவைந் தெழுந்தால் புரியத் திருவருள் செய்வன். அதுவே குரு வைத்த குறியாகும். அவ்வுண்மையை நாடுவதே நமது கடனாகும். அதனைச் சிந்திக்காது தீய செயல்களைச் செய்து தீயவற்றைக் கதைத்து வாழ்வோர் என்றும் துன்பப்படுவர். அதன் பின் கதிரேசன் திருமுறைகளை முறைப்படி பாடுவார். ஆடுவார். திருவடியைப் பற்றிப் பேசுவார். இவற்றைச் செய்யாது வாழ்வதால் பயன் இல்லை என்று கூறிக்கோவிலுக்கு வரும் அடியவர்களை அழைத்து வந்து பாடிப் பரவசமாவார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2056. நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்**
**நஞ்செம் பிரானென்று நாதனை நாடொறுந்**
**துஞ்சு மளவுந் [2]தொழுமின் தொழாவிடில்**
**அஞ்சுற்று விட்டதோர் ஆனையு மாமே.**

“ சிவனடியார்களே, சிவதீக்கை பெற்ற பின்பு கதிரேசன் முற்றாக மாறிவிட்டார். எந்நேரமும் சிவனைப்பற்றியே பேசுவார். திருமுறைகளைப் பாடுவார். பரவசப்படுவார். ஊர்த்தொண்டுகள் செய்வதை விடுத்துச் சிவனை வழிபடுவதிலேயே கண்ணும் கருத்துமாக

இருப்பார். மாணவர்களுக்கு அவர் கூறுவார், “ எனது அருமைச் செல்வங்களே நெஞ்சில் நிறைந்திருந்து அருள் புரிபவன் சிவபெருமான். அவனே அனைருக்கும் தலைவன். அவனை நினைத்து திருவைத்தெழுத்தை ஓதித்தொழுங்கள். அவ்வாறு தொளாவிட்டால் ஐம்புலன்களும் தறிகெட்டு அலைந்து உங்களைச் கெடுத்து விடும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2057. மிருக மனிதர் மிக்கோர் பறவை**
**ஒருவர்செய் தன்புவைத் துன்னாத தில்லை**
**பருகுவ ரோடுவர் பார்ப்பயன் கொள்வர்**
**திருமரு மாதவஞ் சேர்ந்துணர்ந் தாரே.**

“ சிவனடியார்களே, மாணவர்களுக்குக் கதிரேசன் சொன்னார், “ மக்காள், சிவனை, மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் முதலிய அனைத்து உயிர்களும் அன்புடன் வணங்குகின்றன. அன்பு செய்யாத உயிர்களே இல்லை. மனிதர்கள் பெரும் பயனை அடைய வேண்டும் என்று நினைத்தால் பிறை சூடிய எம்பெருமானை வணங்குதல் வேண்டும். அப்படியானவர்கள் தான் பிறவிப்பெருங்கடலைச் சுலபமாக நீந்திக் கடப்பர். பெரும் பயனை அடைவர். அவர்கள் ஒழுக்கமாக வாழ்ந்து பெறவேண்டிய இன்பங்களையெல்லாம் பெற்று இன்பமாக வாழ்வார்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2058. நீதியி லோர்பெற்ற பொன்போல் இறைவனைச்**
**சோதியி லாருந் தொடர்ந்தறி வாரில்லை**
**ஆதி [2]பயனென் றமரர் பிரானென்று**
**நாதியே வைத்தது நாடுகின் றேனே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ தீய வழியில் தேடிய செல்வம் தமது பிற்சந்ததிக்கும் பயன்படாது தீயவர்களுக்கே பயனைக் கொடுக்கும். கிடைத்தற்கரிய பொன்னைவிட மதிப்பானது உடம்பு. இந்த உடம்பால் உத்தமனான சிவனைக் காணல் வேண்டும். அதுவே பயன்தரும் வாழ்க்கை யாகும். அதனால் தான் நான் சிவனைப் பாடிப் பணிந்து மேலான இன்பங்களைப் பெற்றேன். நீங்களும் என்னைப் பின்பற்றி வாழுங்கள். தினமும் திருவைத்தெழுத்தை ஓதுங்கள். அதனால் பெரும் பயனை அடைவீர்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2059. இருந்தேன் மலரளைந் தின்புற வண்டு**
**பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை யோரார்**
**வருந்தேன் நுகராது வாய்ப்புகு [1]தேனை**
**அருந்தேனை யாரும் அறியகி லாரே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், “ சிவனடியார்களே , வண்டுகள் இனிமையான தேனுள்ள மலர்களைத் தேடிச் சென்று இன்னிசை பாடி மகிழ்வுடன் தேனைச் சேகரித்து தமது கூட்டில் வைத்திருக்கின்றன. இத்தன்மையைக் கூட உலகோர் உணர்வதில்லை. ஐம்புலன்களால் வரும் இன்பத்தேனை நுகராது நன்நெறிகளால் வரும் திருவடியின்பத்தேனை நுகருங்கள். அதைத்தான் நான் நுகர்கின்றேன். அவ்வாறு திருவடியின்பத்தேனை உண்ணும் என்னை யாரும் அறிந்து கொள்ளவில்லை. தொண்டரைத் தூயதொண்டரும் தொண்டர் முதல்வரும் தான் அறிவார்கள். அது போலத்திருவடியின்பத்தைச் சாதாரணமானவர்கள் அறியமாட்டார்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2060. கருத்தறி யாது கழிந்தன காலம்**
**அருத்தியுள் ளான்அம ராபதி நாதன்**
**ஒருத்தனுள் ளானுல கத்துயிர்க் கெல்லாம்**
**வருத்திநில் லாது வழுக்குகின் றாரே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், “ சிவனடியார்களே, உண்மையான இன்பத்தைத் திருவருளின் துணையால் அறிய முடியாது காலத்தைக்கடத்துகிறோம். இது ஊழி ஊழியாக நடைபெறுகிறது. உண்மையான அன்பு கொண்டவர்களைத் தனது திருவடியில் சேர்த்துப் பேரின்பத்தை வழங்குபவன் சிவன். அவனைப் பற்றித் தொழுது இன்பமாக வாழ்வோர் ஒரு சிலரே. ஏனையோர் வணங்குவதாக நினைத்துப் பாவத்தைத் தேடுகிறார்கள். சிவனின் அடியவன் மது மாமிசம் உண்ணமாட்டான். சிலர் கோவிலுக்கு வந்து வணங்கி விட்டுத் தீய செயல்கள் என்று தெரிந்தே செய்கின்றனர். இவர்கள் துன்பங்களில் இருந்து மீளமாட்டார்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2061. குதித்தோடிப் போகின்ற கூற்றமுஞ் சார்வாய்**
**விதித்தன நாட்களும் வீழ்ந்து கழிந்த**
**அதிர்த்திருந் தென்செய்தீ ராறுதி ராகிற்**
**கொதிக்கின்ற கூழில் துடுப்பிட லாமே.**

“ சிவனடியார்களே, நாம் முன்பு செய்த வினைக்கீடாகவே எமக்குப் பிறவிகள் கிடைக்கின்றன. மனிதப் பிறப்பென்பது கிடைத்தற்கரிய பிறப்பாகும். அதை எமது முதல்வனான சிவன் தந்து வினைகளை நீக்கித் தன்னை வந்தடைந்து பேரின்பத்தை வாழ் நாள் முழுவதும் அனுபவிக்கத் தக்கவாறு எமக்குப் பல வழிகளை அருளியுள்ளான். அதை அறிந்தும் அறியாமை வசப்பட்ட மனிதர்கள் பயனில்லாத செயல்களைச் செய்தும், பயனில்லாத பேச்சுக்களைப் பேசியும் தம் வாழ் நாளை வீண்நாளாக்குகிறார்கள். அதை விடுத்து சிவன் மீது அன்பைச் செலுத்தி ஐம்புலன்களையும் அடக்கி ஒழுக்கமாக வாழ்ந்து திருவடியை அடையுங்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2062. கரையரு காறாக் கழனி விளைந்த**
**திரையரு காமுன்னம் சேர்ந்தின்பம் எய்தும்**
**வரையரு கூறிய மாதவ நோக்கின்**
**நரையுரு வாச்செல்லு நாளில வாமே.**

“ சிவனடியார்களே, சிவனை அன்பினால் அணைத்துக் கொண்டவர்கள் மனம் அடங்கித்திருவடிப்பேரின்ப நிழலை அடைந்து அங்கு விவரிக்க முடியாத பேரின்ப நிலையை அடைவர். முதுமை எய்து முன் திருவருளால் அவர்கள் இரண்டறக் கூடிக் கலந்து இன்புறுவதற்குப் பொருத்தமான பெருந்தவம் புரிவர். அதனால் அவர்களின் உள்ளத்தில் எல்லையில்லாத பேரின்பம் பொங்கிப்பெருகும். இதை உணராதவர்கள் உடல் தளர்ந்து முடி நரைத்துத் துன்பப்படுகின்றனர். “சிவனடியார்களே, கதிரேசனைப் பாருங்கள் எண்பது வயது கடந்தும் உடல் தளரவில்லை. முடி நரைக்கவில்லை. இருபது வயது இளைஞனை விடச் சுறுசுறுப்பாகச் செயற்படுகிறார். இவற்றைக்கண்டும் யாரும் சிந்திக்கிறார்களில்லை. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2063. வரவறி வானை மயங்கிருண் ஞாலத்து**
**இரவறி வானை யெழுஞ்சுடர்ச் சோதியை**
**அரவறி வார்முன் னொருதெய்வ [1]மென்று**
**விரவறி யாமலே மேல்வைத்த வாறே.**

“ சிவனடியார்களே, வினைக்கீடாகப் பிறப்பு உண்டாகும். அப்பிறப்பை உண்டாக்கிய வினையை அறுத்தால் பிறப்பும் அறும். இது எல்லோருக்கும் தெரியும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் தெரியும். ஓங்கியெழும் சுடர்ச் சோதியாகிய சிவபெருமானைச் செந்தமிழ்த் திருமுறை வழியாக உணருதல் வேண்டும். அப்படி உணராதவர்கள் நற்பேறில்லாதவர்கள் ஆவர். துரைசிங்கம் பெரியதொரு நிறுவனத்தில்

காவலாளியாகக் கடமை செய்கிறான். இரவில் அவன் விழித்திருக்க வேண்டும் என்பதற்காகத் திருமுறைகளைப் பண்ணோடு பாடுவான். திருவைத்தெழுத்தை ஓதுவான். அதனால் அவன் மிகவும் மகிழ்வுள்ளவனாக வாழ்கிறான். அன்பான மனைவி, அறிவான பிள்ளைகள், வருமாணம் குறைவானதால் ஆடம்பரமில்லாத வாழ்க்கை. அந்த நிறுவனத்தின் பொறியியலாளர். பெருங்குடிகாரன். தனது மனைவி கொடுமைக்காரி என்பான். பிள்ளைகள் தீயவர்களென்பான். ஆனால் துரைசிங்கம் ஒரு போதும் யாரையும் குறை சொல்வதில்லை. இது வினையால் வந்த பிறப்பு. அதனால் தீவினையை அகற்றினால் துன்பம் நீங்கும். இதைக்கற்றவர்கள் கூட உணர்வதில்லை. துரைசிங்கம் சொல்வான், “ சிவனை நினைத்து ஐந்தெழுத்தை ஓதுங்கள் துன்பம் பறந்து செல்லும் இன்பம் பறந்து வரும் ” என்பான் இதைத் தீவினையாளர் உணர்வதில்லை ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 30. இதோபதேசம்
## (இன்குருமொழி)

**2064. மறந்தொழி மணிமிசை மன்னாப் பிறவி**
**இறந்தொழி காலத்தும் ஈசனை உள்கும்**
**பறந்தல மந்து படுதுயர் தீர்ப்பான்**
**சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே.**

“ சிவனடியார்களே, துரைசிங்கம் இரவு காவல் வேலை செய்து கொண்டிருந்த போது பழனி வேல் வந்து சொன்னான், “ இந்தா , இதில் ஆயிரம் ரூபா உள்ளது. சாராயத் தவறனைக்குச் சென்று அரைப்போத்தல் சாராயம் வாங்கிவா மிச்சக்காசில் நீ குடி என்றதும் துரைசிங்கம் நடுங்கிப் போனான்., “ சிவனே, என்று பல முறை நினைத்தான் அவன் குடிப்பதில்லை, “ சீக்கிரம் போட்டு வா ” என்றான் பழனிவேலு. அதற்குப் துரைசிங்கம் சொன்னான், “ ஐயா, நான் உங்களின் தந்தையின் வயதை ஓத்தவன். கூலியாக வேலை செய்வதால் நீங்கள் என்னைக் குறைவாக நினைக்காதீர்கள். நான் சிவனடியான். மிக்க ஒழுக்கத்துடன் வாழும் என்னை இடர்கள் வந்த போது பல முறை சிவன் என்னைக்காப்பாற்றியுள்ளான். பழனிவேல் என்பது முருகனின் புனித நாமம் அதைக் கொண்ட நீங்கள் தவறாக வாழலாமா..? மண்ணை ஆளும் மன்னனாக இருந்தாலும் இறப்பு வரும் அதற்கு முன் பிறப்பைத் தொலைக்கச் சிவனை வணங்க வேண்டும். சிவனை அன்புடன் ஒரு கணம் நினைத்து ஐந்தெழுத்தை ஓதுங்கள். உங்கள் துன்பங்கள் எல்லாம் ஓடி மறைந்துவிடும். இப்போதே சொல்லுங்கள். நீங்கள் குடித்திருந்தாலும் பரவாயில்லை சொல்லுங்கள் எல்லாத்துன்பங்களும் செல்வதோடு ஆரோக்கியமும் உண்டாகும். ஐந்தெழுத்தை ஓதுவோர்க்குப் பிறப்பும் அறும். இது தான் வாழும் நன்னெறியாகும்” என்ற போது பழனி வேலு கோபங்கொள்ளாது தனக்கு

ஆலோசனை கூறிக்கொண்டிருக்கும் துரைசிங்கத்தை ஆச்சரியத்துடன் பார்த்தான் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2065. செல்லு மளவுஞ் செலுத்துமின் சந்தையை**
**வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை**
**இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை**
**நல்ல வரனெறி நாடுமி னீவிரே.**

“ சிவனடியார்களே, துரைசிங்கம் தொடர்ந்து சொன்னான், “ ஐயா, நன்றாகப் படித்துப் பெரும் உத்தியோகம் பார்க்கிறீர்கள். கை நிறையப் பணம் இருக்கு, சொத்திருக்கு, வாகனங்கள் இருக்கு, வசதியான வீடு வளவு இருக்கு பிறகேன் கவலை கொள்கிறீர்கள் நீங்கள் கற்றகல்வியால் உங்களுக்கு என்ன பயன் இருக்கிறது. கற்றவர்கள் கடவுளை வணங்கவேண்டும். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழவேண்டும். தயவு செய்து ஆச்சிரமத்திற்கு வாருங்கள். நான் படியாதவன் கூலி என்று என்னாதீர்கள். எனது வாக்குச் சிவனின் வாக்கு. ஒரு முறை சிவனை ஐந்தெழுத்தால்ஆராதியுங்கள் பிறகு சொல்லுங்கள். உங்களை ஆட்கொள்ளச் சிவன் என் மூலம் உணர்த்தியுள்ளார்என்று நினையுங்கள். மனதை வீணாண செயல்களில் ஈடுபடுத்தாது சிவனிடம் ஒப்படையுங்கள். திருவைத்தெழுத்தை ஓதுங்கள். சிலர் கற்றும் அறியாமையால் சிவன் இல்லை என்கிறார்கள். பலர் தாய் இருந்தும் தாயில்லை என்று சொல்கிறார்கள். அதைப்போன்றது தான் இதுவும். சிவனை நாடுங்கள். எல்லாம் இன்பமாக வரும். உங்களது சம்பளத்தில் பத்தில் ஒரு பகுதியைக் கூட நான் சம்பாதிப்பதில்லை. ஆனால் சிவனருளால் எனது மகன் மருத்துவபீடத்திற்கும், மகள் பெறியியல் பீடத்திற்கும் தெரிவாகியுள்ளனர். இதைச் தவிரச் சிவன் எனக்கு என்ன செய்ய வேண்டும்? யோசித்துப்பாருங்கள் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2066. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி யில்லை நுஞ் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.**

“ சிவனடியார்களே, துரைசிங்கம் தொடர்ந்து சொன்னான், “ ஐயா, ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்பார்கள். இது எல்லோரும் சிவனை வழிபடுபவர்கள். அதனால் எல்லோரும் சிவக்குலத்தைச் சேர்ந்தவர்கள். அது போலச் சிவனே ஒரே தெய்வம். தொழிலால் பல குலங்கள் இருந்தாலும் வழிபாட்டால் எல்லோரும் ஒரு குலத்தவராவர். சிவனை முழு அன்போடு நன்றாகத் தொ்ழுதால் சிவனது திருவருள் கை கூடும். அது கை

கூடினால் துன்பங்களே வராது. யமபயமும் வராது. அதனால் உயர்ந்தவராகிய நீங்கள் மேலும் உயர்வடையச் சிவனை வழிபடுங்கள் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2067. போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை**
**நாற்றிசைக் குந்நடு வாய்கின்ற நம்பனைக்**
**காற்றிசைக் குங்கமழ் ஆக்கையைக் கைக்கொண்டு**
**கூற்றுதைத் தான்றன்னைக் கூறிநின் [1]றுய்மினே.**

“ சிவனடியார்களே, மறு நாட் காலை பழனி வேலு ஆச்சிரமத்திற்கு வந்து சொன்னார், “ சுவாமி, எனறுமில்லாதவாறு துரைசிங்கம் எனக்குப் புத்திமதிகள் கூறினான். எனக்கு சரியான ஆத்திரம் வந்தது. எனினும் காட்டவில்லை வீட்டுக்குச் சென்று மனைவியிடம் அதைச் சொன்ன போது அவள் சொன்னாள், “ உங்களுக்குச் சரியான வெறி. வெறியில் நடந்தது என்னவென்று கூடத்தெரியாது. துரைசிங்கம் ஒரு வார காலம் விடு முறை எடுத்துக்கொண்டு மகளைப் பெறியியல்பீடத்திற்கு மூன்று நாட்களுக்கு முன் அழைத்துச் சென்று விட்டானென்று கூறினீர்கள். பகல் முழுக்கச் குடித்ததால் நீங்கள் வேலைக்கும் செல்லவில்லை” என்றவள் அதன் பின்பு தான் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது என்ற போது கதிரேசன் சொன்னார், “ இது சிவனின் திருவிளையாடல் உனது மனைவி சிவபக்தை. அவளின் வேண்டுதலுக்குச் சிவன் செவி சாய்த்திருக்கிறார். இனியாவது திருந்து. கற்ற நீ கேவலமாக வாழ்வது எல்லோருக்கும் அவமானம். அழகிய வெள்ளி மலையில் வாழும் சிவபெருமான் உனது மனைவியின் வேண்டுகோளை ஏற்று வந்தருளியுள்ளார். அவர் பக்தர்களுக்காக எதையும் செய்வார். அவர் யமனைப் பக்தனுக்காக உதைத்தவர். தனது திருவடியைக் கொடுத்தருள்பவர். காளையை வானமாகவும், நீற்றை அணிந்த மேனியையும், இடப்பாகத்தில் பெண்ணையும் கொண்டுள்ள சிவனை ஐந்தெழுத்தால் ஆராதித்தால் யாவும் நடக்கும். அது தான் நடந்துள்ளது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2068. இக்காய நீங்கி யினியொரு காயத்திற்**
**புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்**
**எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்று**
**அக்கால முன்ன அருள்பெற லாகுமே.[2]**

“ சிவனடியார்களே, கதிரேசன் பழனிவேலுக்குச் சொன்னார், “ மகனே, மனிதப்பிறவி கிடைக்க வொண்ணாதது. இருப்பினும் பிறவிகள் வந்தால் துன்பங்கள் தான் வரும். சிவனை நினையாத எல்லோரும் துன்பப்படுகின்றனர். சிவனை நினைப்போர் துன்பம் தரும்

பிறப்பை அறுக்க முயல்கின்றனர். இவ் உடம்பை விட்டு உயிர் நீங்கியதும் இன்னொரு உடலில் அது புகுந்து கொள்ளும். அதனால் பிறப்பில்லாத நிலையை அடைய முற்படல் வேண்டும். உடல்கள் பல ஊழிகளுக்கு முன்பிருந்தே சிவனால் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் பல ஊழிகளுக்கு உடல்கள் பெறும் நிலை உயிருக்கு உண்டு. இதை உணர்ந்தோர் சிவனின் அருளைப் பெற்றவராவர். மீண்டும் பிறப்பெடுப்பதற்கு முக்கிய காரணி பிறன் மனைவியை விரும்புதலாகும். நீ கற்றவன். நல்லது எது தீயது எது என்று உணராது வாழ்கிறாய். இன்னொருவனின் மனைவிமேல் கொண்ட மோகத்தால் தான் உனக்கு வாழ்க்கையில் நிம்மதி இல்லாமற்போனது. நல்ல குடும்பத்தில் பிறந்த நீ மதுமாமிசம் மாது எனக் கெட்டழிகிறாய். அதை விடு உனக்குச் சிவனருள் கிடைக்கும். இதை இன்னோர் உயிருக்கு வாய்க்கப் போகும் உடல் என்னும் கூறுவர். ஆனால் உனக்கு அது பொருந்தாது. இதை இப்போ ஏன் சொல்கிறேன் என்றால் இப்போ மனம் திருந்தி ஆச்சிரமத்திற்கு வந்துள்ளாய். இனித்தவறு செய்யக்கூடாது என்பதற்காகவே சொன்னேன் என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2069. போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்**
**ஆகின்ற போதும் அரனறி வானுளன்**
**சாகின்ற போதுந் தலைவனை நாடுமின்**
**ஆகின்ற அப்பொருள் அக்கரை யாகுமே**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ‘‘ மகனே, வினைப்படி ஆருயிர்கள் செயலாற்றும். அதன்படி சிவனும் செயற்படுவான். இது தந்தையின் கையைப் பற்றிப் பிடித்து நடைபழகும் மகவை ஒக்கும். எமது செயல்களை அறியும் அரனாகிய சிவபெருமான் எவ்வேளையிலும் நம்முடனே இருக்கிறான். அதனால் நாம் இறக்கின்ற போது வினைக்கீடாகச் செயற்படுத்தும் சிவனை நாடினால் இறப்பு முடிவுக்கு வரும். சிவனை உள்ளன்புடன் நினைத்தால் தீயசெயல்களைச் செய்ய மனம் இடங்கொடுக்காது மீறி ஏதாவது செய்ய நினைத்தால் மனதில் இருக்கும் சிவன் மனச்சாட்சியாகச் செயற்படுவார். அதனால் பாதிப்புக்கள் ஏற்படாது என்றவர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2070. பறக்கின்ற வொன்று பயனுற வேண்டின்**
**இறக்கின்ற காலத்தும் ஈசனை யுள்குஞ்**
**சிறப்பொடு சேருஞ் சிவகதி பின்னைப்**
**பிறப்பொன் றிலாமையும் பேருல [1]காமே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், ‘‘ மகனே, நீ செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் முன்பு ஐந்தெழுத்தை ஓது. அதை ஓதிப் பழகினால் இறக்கின்ற காலத்திலும்

பழக்கதேசத்தால் மனம் ஓதும். நாம் மறந்தாலும் நாக்கு மறவாது. அது பழக்கப்பட்ட மிருகத்தைப் போலச் செயலாற்றும். நான் எந்தச் செயலைக் செய்தாலும் “ சிவ சிவ ” என்று ஓதிய பின்பு தான் செய்வேன். அதனால் செய்யும் செயல்களெல்லாம் வெற்றியில் முடியும். ஒரு காலத்தில் நல்லை நாதன் பெருங்குடிகாரன். அவனுக்குக் குடிக்க வேண்டுமென்ற நினைவு வந்தால் “சிவ சிவ” என்று ஓதும் படி கூறினேன். அப்படி ஓதியதால் அவன் குடியை மறந்து விட்டான் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2071. கூடியும் நின்றும் தொழுதெம் மிறைவனைப்**
**பாடியு ளேநின்று பாதம் பணிமின்கள்**
**ஆடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு**
**நீடிய வீற்றுப் பசுவது வாகுமே.**

“ சிவனடியார்களே, பழனி வேலு, கதிரேசனுக்குச் சொன்னார், “ ஐயா, அறியாமை காரணமாக நான் வழிதவறிச் சென்றது எனது மனைவிக்குப் பிடிக்காததால் அவள் சிவனைத் தஞ்சம் என்றிருப்பாள். வெள்ளிக்கிழமைகளில் தனியே இருந்து திருமுறைகளைப்படிப்பாள். பிரதோசம் போன்ற விசேட தினங்களில் அயலில் உள்ள அடியவர்களை அழைத்து வந்து கூட்டுப் பிரார்த்தனை செய்வாள். நான் எப்போதும் அதற்கு இடைஞ்சலாகவே இருப்பேன். நான்அன்று மாமிசம் வாங்கிவந்து கொடுப்பேன். அவள் சமைத்துத் தந்து விட்டுத்தான் விரதம் பிடிப்பாள். அப்போது சொல்வாள், “ கொடுமைகள் செய்த அசுரர்களை அழிக்காது காத்தருளிய சிவபெருமான் உங்களைத் திருத்துவார். பிரார்த்தனை செய்யும் அடியவர்களைக் கன்று ஈன்ற பசுப்போலத் தாய்மை உணர்வுடன் அவரின் உள் நின்று அருளுவான். அவனது திருவடியை வணங்கிச் “ சிவ சிவ ” என்று சொன்னால் அவன் உருகிவிடுவான். எல்லாம் சிவன் செயல். எல்லாம் அவன் அருளால் நடை பெறும் என்று நம்பிச் செயற்படுவோரின் நம்பிக்கையை அவன் கெடுத்ததில்லை. அதற்காகத் தான் நான் தனியேயும், அடியார்களுடன் சேர்ந்து திருமுறைகளைப் படித்து வருகிறேன் என்றவள்.அதனால் தான் அப்படியான தெரு சம்பவம் நடந்தது. இனிமேலும் நான் தவறு செய்தால் தண்டிக்கப்படுவேன் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2072. விடுகின்ற சீவனார் மேலெழும் போது**
**நடுநின்று நாடுமின் நாதன்தன் பாதங்**
**கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்**
**இடுகின்றான் உம்மை இமையவ ரோடே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ பழனி, இப்போதாவது நீ திருந்தியதையிட்டு மகிழ்வடைகிறேன். உனது பெற்றோரும், குடும்பத்தினரும் உனது செயலால் பெருந்துன்பப்பட்டனர். அது இப்போதாவது நீங்கியது மகிழ்வுக்குரியது. உடலை விட்டு உயிர் நீங்கிச் செல்லும் போது வினைகளைத்தான் கொண்டு செல்லும் அவ்வினைகளை அகற்றும் சக்தி “ சிவயநம ” என்ற தமிழ் மந்திரத்திற்குத்தான் உண்டு. இறக்கும் போது யாரும் கடவுளை நினைப்பதில்லை. நிறைவேறாத ஆசைகளையே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அப்படி நினைத்தால் நினைப்பவனைச் சிவன் தேவர்களின் நடுவில் இருத்திவைப்பான். சிவபெருமானின் திருவடி நிழலில் வாழும் பெரு வாழ்வு பெற்ற திருவினர் இமயத்தில் வாழ்வர் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2073. இன்புறு வீர்அறிந் தேயெம் இறைவனை**
**அன்புறு வீர்தவஞ் செய்யுமெய்ஞ் ஞானத்துப்**
**பண்புறு வீர்பிற வித்தொழி லேநின்று**
**துன்புறு பாசத் துழைத்தொழிந் [1]தீரன்றே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ பழனி, உனது தந்தை சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவர். அவர் உன்னையும் உனது சகோதரர்களையும் பெரும் சிரமப்பட்டு உழைத்து உழைத்து உங்களை வளர்த்து ஆளாக்கியவர். அவர் சொல்வார், “ ஐயா, நான் எந்தப்பாவமும் செய்யவில்லை. சிவனை மறவாது ஐந்தெழுத்தை ஓதி அவனை வணங்கிவந்தேன். எனது ஏனைய நான்கு பிள்ளைகளும் நன்றாக வாழ்கிறார்கள். என்னையும் மனைவியையும் நல்ல முறையில் கவனிக்கிறார்கள். எந்தக் குறைகளும் இல்லாமல் வாழவேண்டிய நான் இப்போது பழனியால் பெருந்துன்பப்படுகிறேன். சிவனையும் ஐந்தெழுத்தையும் மறவாததால் செத்துச் செத்துப் பிறக்கும் நிலை அகலும் என்று நினைக்கிறேன். இருந்தும் அவனைப் பற்றிய கவலை தான். அதைச் சிவனுக்குச் சொல்லிச் சொல்லி அழுவேன். அதை அவர் கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நாள்தோறும் சிவ நாமத்தைச் சொல்லி அவனைப் போற்றி வருகிறேன். அவனது திருவடியைப் போற்றி வாழ்கிறேன். அதனால் மெய்ஞ்ஞானப் பண்புடன் வாழ்ந்து இன்பு அன்பு காதல் பன்பு என்ற நான்கையும் கைக் கொள்வதால் சிவனைப் பற்றிக் கேட்கிறேன். அவனைப் பற்றிச் சிந்திக்கிறேன். அதில் தெளிவடைகிறேன். நிட்டையில் இருக்கிறேன்.அவன் பழனியை மனிதனாக்கினால் சரி என்றவர். இப்போ உனது மாற்றத்தைக் கண்டு எனக்குத் தெரியும் சிவன் அவனைத் திருத்துவான் என்று சொன்னவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2074. **மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு**
**மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு**
**மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி ஒன்றுண்டு**
**மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் றோருக்கே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சென்னார், “ மகனே, உனது தந்தை நீ திருந்தி விட்டாயென்று மிகுந்த மகிழ்வுடன் இருக்கிறார். அதைக் கொடுத்து விடாதே. உனது தந்தை மெய்ம்மைத் தவம் செய்பவர். அத்தவத்தால் சிவத்தைப் பேணுபவர். இத்தவம் சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நன்னெறிகளைக் கொண்டது. இதன் மூலம் மெய்யறிவு உண்டாகும். இதைச் செய்து முடிப்பவர்களை சிவகிழமையராவர் என்பர். இவர்களுக்குச் சிவன் எல்லாவற்றையும் எளிதாகவும் அரிதாகவும் கொடுத்தருள்வான். உனது நடத்தையைத் தவிர மற்றெல்லாம் நல்லனவாகவே நடந்து என்று சொல்லும் உனது தந்தை இப்போது நீயும் சிவனடியானாகி விட்டாய் என்று மகிழ்ந்தவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

2075. **சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்**
**பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடுங்**
**கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடுஞ்**
**சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் [1]வாரன்றே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ மகனே, திருவருளின் துணையால் திருவடியைச் சேர்ந்தவர்களுக்கு பேரின்பம் கொடுத்தருளும் சிவபெருமான், நன்னெறியை நாடாது தீய வழியில் செல்வோர்க்குத் துன்பப்பிறவியையே கொடுத்தருள்வான். அதனால் பழனிக்குத் துன்பங்களைக் கொடுத்து விடுவானோ எனக் கலங்கினேன். இப்போ அக் கலக்கம் தீர்ந்து விட்டது. சிவனை நினைத்து மேனெறிச் சென்றவர் கூர்ந்தவராவர். அவர்கள் சிவனின் அன்புக்கு ஆட்பட்டவர்கள். அவர்களுக்குச் சிவன் தனது திருவடியைக் காட்டியருள்வான். அப்படியானவர்கள் சிவனை உணர்ந்தவர்களாவர். அவர்களுக்கு எக்குறைகளும் உண்டாகாது. ஆதனால் பழனி நன்நிலை அடைவான் என மகிழ்ந்தவர் என்று கதிரேசன் சொன்னவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

2076. **முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை**
**எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை**
**நெய்த்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்**
**அத்தகு சோதி யதுவிரும் பாரன்றே.[2]**

“ சிவனடியார்களே, கதிரேசன் பழனிக்குச் சொன்னார், “ மகனே, வீடுபேறாய், திருவடியுணர்வாய் அவற்றை அருளும் முத்தமிழ் மறையாய்த் திகழ்பவன் சிவன். அவனை மகிழ்வுடன் திருமுறைகளைப் பாடித் தொழுதால் அவர்களுக்குத் தயிரின் கண் நெய் போலவும், மலரின கண் மணம் போலவும் விளங்கித் தோன்றுவான். அவனை அறியாமை காரணமாகச் சிலர் விரும்புவதில்லை. அவர்களது மனதில் சிவன் பாலில் நெய் போலவும், மலராத மொட்டில் மணம் போலவும் மறைந்து நிற்பான். இவ்வளவு காலமும் மறைந்து நின்ற சிவன் இப்போது வெளிப்பட்டு நிற்கிறான் என்பதை உணர்ந்து ஒழுக்கமாக வாழ்ந்து சிவனைத்துதித்து இன்பங்களைப் பெறு என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2077. நியமத்த னாகிய நின்மலன் வைத்த**
**உகமெத் தனையென் றொருவருந் தேறார்**
**பவமத்தி லேவந்து பாய்கின்ற தல்லாற்**
**சிவமத்தை யொன்றுந் தெளியகில் லாரே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் பழனிக்குச் சொன்னார், “ மகனே, உயிர்களையும், உலகங்களையும் படைத்து அருளுபவன் சிவன். அவன் படைத்த உலகங்கள் பல ஊழிகள் சென்றும் நிலைத்திருக்கிறது. இன்னும் பல ஊழிகள் நிலைத்திருக்கும். இதையாரும் அளவிட்டுக் கூறமுடியாது. உயிர்கள் படைக்கப்பட்ட காலத்தில் இருந்தே பிறந்து பிறந்து இறந்து தடுமாறிக் கொண்டே இருக்கின்றன. மக்கள் இதை உணர்வதில்லை அத்துடன் சிவனைப் பற்றியோ அவனது அருள் நிலையைப் பறறியோ எதுவும் தெரியாதவர்களாகவே வாழ்கின்றனர். சிலர் தம்மறிவால் உணர்ந்து மேலான வாழ்வைப் பெறுகின்றனர். இப்போது நீ உணர்ந்தமை மகிழ்ச்சியைத் தருகிறது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2078. இங்கித்தை [1]வாழ்வு மெனைத்தோ ரகிதமுந்**
**துஞ்சொத்த காலத்துத் தூய்மணி வண்ணனை**
**விஞ்சத் துறையும் விகிர்தா எனநின்னை**
**நஞ்சற் றவர்க்கன்றி நாடவொண் ணாதன்றே.**

“ சிவனடியார்களே, அன்று காலை ஆச்சிரமத்தில் கற்றுப்புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்று கற்று அங்கு சில வருடங்கள் பணியாற்றி விட்டு ஊருக்கு வந்திருந்த இராகுலன் என்பவன் கதிரேசனையும் அழைத்துக் கொண்டு ஆச்சிரமத்திற்கு வந்து சொன்னான், “ வெளிநாட்டில் எல்லாம் இருக்கிறது. ஆனால் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை. கதிரேசன் முன்பு கூறுவார், “ நிலையில்லாத இவ்வுலக வாழ்க்கை புல் நுனியில்

இருக்கும் பனித்துளியை விடச் சிறியதாகும். இதை மலையை விடப் பெரியதென்று எண்ணி மகிழ்வடைவதை நான் விரும்பவில்லை. அது பேதைமையாகும். அதை நினைத்துச் சிறு துனபங்கள் கூட மற்றவர்களுக்குச் செய்யாமல் வாழ்வதே அறமும் முறையும் அறிவுமாகும். சிவனைத் தத்துவங்கள் சிவமெய் என்றும், சிவனைத் திருவருளால் ஆணவ மற்ற நல்லோர் உள்ளவாறு அறிந்து கொள்வாரென்றும், ஏனையோர் அறியமாட்டார்கள் என்றும் சொல்வார். அது உண்மை. பணம் பொருள் இருக்கு. விஞ்ஞானம் மிகவும் உன்னத நிலையில் இருக்கு. எதையும் செய்யலாம் என்ற வசதியிருக்கு. ஆனால் எதையும் செய்ய முடியாத நிலை தான் இருக்கு. அதனால் நான் இங்கு வந்துவிட்டேன். எம்பெருமானான சிவனை வழிபடுவதில் உள்ள இன்பம் வேறு எதிலும் இல்லை என்று சொன்னவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2079. பஞ்சமு மாம்புவி சற்குரு பால்முன்னி**
**வஞ்சக ரானவர் வைகில் அவர்தம்மை**
**அஞ்சுவன் நாதன் அருநர கத்திடுஞ்**
**செஞ்சநிற் போரைத் தெரிசிக்கச் [1]சித்தியே.**

“ சிவனடியார்களே, இராகுலன் சொன்னான், “ சிவகுருவாகிய சற்குருவைச் சார்ந்து தீயவர்கள் இருப்பார்களேயானால் அவரைக் கண்டு சிவபெருமானும் அஞ்சுவான் என்று கதிரேசன் சொல்வார். அதனால் உலகத்தில் பஞ்சம் உண்டாகும். அப்பெரும் பாவிகளைச் சிவன் இருள் உலகத்தில் தள்ளுவான் என்றும் சொல்வார். அவர்களைக் காண்பதே பாவம் சிவகுருவிற்குப் பணிவிடை செய்து வாழ்பவர்களே சிவனுக்கு விருப்பமானவர்களாவர். அவர்களைக் காண்பது அரிது. கண்டால் கைகூப்பித்தொழுதல் வேண்டும். அதனால் வேண்டியவை யாவும் கைகூடும். இவ்வளவு காலமும் நான் இருள் உலகில் வாழ்ந்தேன். இனியும் அப்படி வாழவிரும்பாது இங்கு வந்துள்ளேன். எனது மிகுதி நாட்களைச் சிவசேவை செய்து வாழ முடிவு செய்துள்ளேன் என்றவன். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**2080. சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்**
**அவனை வழிபட்டங் காமாறொன் றில்லை**
**அவனை வழிபட்டங் காமாறு காட்டுங்**
**குருவை வழிபடிற் கூடலு [2]மாமே.**

“ சிவனடியார்களே, தமக்குப் பயன்தேவையென்று கருதித் தேவர்கள் சிவ பெருமானை வழிபட்டனர். அதனால் அவர்களுக்குத் திருவடிப்பேறு உண்டாகும் வாய்ப்பு உண்டாகவில்லை. திருவடிப்பேறு எய்துவதற்குரிய நன்னெறி நான்கினையும்

காட்டியருள்பவன் சிவகுரு. அச்சிவகுருவை வழிபட்டாலே திருவடிப்பேறு கிடைக்கும். அதனால் சிவகுருவை வணங்கி அவரின் வழிகாட்டலால் திருவடிப்பேற்றைப் பெறுங்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2081. நாருஞ் சுரரும் பசுபாச நண்ணிக்**
**கருமங்க ளாலே கழிதலிற் கண்டு**
**குருவென் பவன்ஞானி கோதில னானாற்**
**பரமென்றல் அன்றிப் பகர்வொன்று [3]மின்றே.**

“ சிவனடியார்களே, தமது நற்பயன் கருதி ஏராளமான தேவர்கள் சிவபெருமானை வழிபட்ட போதும் அவர்களுக்குத் திருவடிப்பேறு கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் சிவகுருவை நாடாமையே யாகும். நரராகிய மண்ணுலகத்தவரும், சுரர் ஆகிய விண்ணுலகத்தவரும் யான் என்னும் பசுத்தன்மையும், எனது என்னும் பாசத்தன்மையும் பொருந்தியவராய்ப் பிறப்பு இறப்புக் கருமங்களிலே ஈடுபட்டுத்தம் வாழ் நாளை வீண் நாளாகக் கழிப்பதைக் கண்டு இரக்கம் கொண்டு சிவபெருமான் சிவகுருவாகத் தோன்றி நன்னெறி காட்டி ஆட்கொள்வான். அங்ஙனம் ஆட்கொண்டருளும் சிவகுருவைச் சிவனென்று நினைத்து வழிபடுதல் வேண்டும். சிவ குரு குற்றமற்ற திருவடியுணர்வுடைய மெய்ஞ்ஞானியாவார். அவரைச் சிவபெருமான் என்று நினைத்து வழிபடுவோரே திருவடி நிழலை அடைவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2082. ஆட்கொண் டவர்தனி நாயகன் அன்புற**
**மேற்கொண் டவர்வினை போயற நாடொறும்**
**நீக்கின்ற செஞ்சடை நீளன் உருவத்தின்**
**மேற்கொண்ட வாறலை வீவித்து ளானே.**

“ சிவனடியார்களே, சிவகுருவானவர் பொருத்தமான நல்லவர்களை ஆட்கொண்டருள்வார். அச்சிவகுருவினை ஒப்பில்லா முழு முதன்வனாகிய சிவபெருமான் என்று நினைத்து வணங்கித் துதித்து மகிழ்பவர்களே மாணவராவர். அவர்களின் வினைகளை தினந்தோறும் அறுத்தழிப்பவன் சிவன். அம்மாணவர்கள் சுட்டியுணரும் உலகியற் பொருட்களின் மேல் கொண்ட மன உணர்வுகளை அகற்றியருள்பவன் சிவன். நீங்களே பாருங்கள் கதிரேசனின் நிலையை. அவர் சிவனையும் இமயமலையில் இருந்து வந்த சிவகுருவையும் தரிசித்தமையால் உலகியல் பொருட்கள் அனைத்தையும் துறந்து ஆச்சிரமத்தில் வாழ்கிறார். அவருக்கு வீட்டு நினைவுகள் ஒருபோதும் வந்ததில்லை. வீட்டார் ஆச்சிரமத்திற்கு வந்தாலும் அவர் அவர்களைப் பெரிதாக நினைத்ததில்லை. ஏனைய மனிதர்களைப் போலவே நினைத்துப் பேசுவார். அது அவர்களுக்குப் பெருத்துன்பத்தைக் கொடுக்கும். அவர்கள் அதைப்பற்றிக் கதைத்துத் துக்கப்பட்டால் அவர் சிரிப்பார்.

சிவனிருக்கிறான். அவன் உங்களைக் கவனிப்பான் என்பார். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# 7ம் தந்திரம் முற்றுகை